# அழகப்பா பல்கலைக்கழகம்

தேசியத் தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுத் தர மதிப்பீட்டில் **A+(CGPA: 3.64)** தகுதியும்
மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் - பல்கலைக்கழக மானியக்குழுவின் முதல் தரப்
பல்கலைக்கழகம் மற்றும் தன்னாட்சித் தகுதியும் பெற்றது)

காரைக்குடி - 630003

## தொலைநிலைக்கல்வி இயக்ககம்

## இளங்கலைத் தமிழ் - பி.லிட்.,

## முதலாமாண்டு - முதற்பருவம்

# தாள் : 10713 - தமிழக வரலாறு

**Author:**
**Dr.P. BAGAVATHGEETHA**, *Assitant Professor in Tamil,*
*Govt Arts College, Tiruchirapalli - 620022*

"The copyright shall be vested with Alagappa University"

All rights reserved. No part of this publication which is material protected by this copyright notice may be reproduced or transmitted or utilized or stored in any form or by any means now known or hereinafter invented, electronic, digital or mechanical, including photocopying, scanning, recording or by any information storage or retrieval system, without prior written permission from the Alagappa University, Karaikudi, Tamil Nadu.

Information contained in this book has been published by VIKAS® Publishing House Pvt. Ltd. and has been obtained by its Authors from sources believed to be reliable and are correct to the best of their knowledge. However, the Alagappa University, Publisher and its Authors shall in no event be liable for any errors, omissions or damages arising out of use of this information and specifically disclaim any implied warranties or merchantability or fitness for any particular use.

**Reviewer : Dr. V.Thiruveni,** *Assistant Professor in Tamil & Research Supervisor, PPR- Coordinator- All Tamil Programmes- DDE Directorate of Distance Education, Alagappa University- Karaikudi-630003, Tamilnadu.India.*

VIKAS®

Vikas® is the registered trademark of Vikas® Publishing House Pvt. Ltd.

VIKAS® PUBLISHING HOUSE PVT. LTD.
E-28, Sector-8, Noida - 201301 (UP)
Phone: 0120-4078900 • Fax: 0120-4078999
Regd. Office: A-27, 2nd Floor, Mohan Co-operative Industrial Estate, New Delhi-110044
• Website: www.vikaspublishing.com • Email: helpline@vikaspublishing.com

**Work Order No. AU/DDE/DE1-484/Preparation and Printing of Course Materials/2019 Dared 08.07.2019 Copies 1000**

## இளங்கலைத் தமிழ் - பி.லிட் - முதலாமாண்டு
## முதற்பருவம்
## தாள் : 10713 - தமிழக வரலாறு
## பாடத்திட்டம் - பொருளடக்கம்

நோக்கம் : தமிழக வரலாற்றைச் சான்றுகள், அயல் நாட்டார் குறிப்புகள் மூலம் தெளிவாக எடுத்துரைத்தல்.

### பிரிவு -1 தமிழகம் - தொன்மை

**கூ**று 1: தமிழக வரலாற்றுக்குரிய சான்றுகள் - பல்லவர்

சோழர் பாண்டியர் செப்பேடுகள், கல்வெட்டுகள்

கூறு 2 : இலக்கியங்கள் - அயல் நாட்டார் குறிப்புகள் - சிந்துவெளி நாகரிகங்கள் - தமிழகத்தின் தொன்மை – தமிழர்யார்? -சங்ககாலச் சேர சோழ பாண்டியர் - சங்க கால அரசியல்

கூறு 3: சங்ககாலக் கல்வி நிலை – பெண்டிர் நிலை –ஐந்திணைப் பகுப்பு அமைப்பு.

### பிரிவு-2 :களப்பிரர், பல்லவர்

கூறு 4: பாண்டிய நாட்டில் களப்பிரர் - களப்பிரர் வரலாறு - களப்பிரர்ஆட்சியால் தமிழகம் பெற்ற நன்மைதீமை.

கூறு 5: பல்லவர் தோற்றம் - முற்கால இடைக்கால பிற்காலப் பல்லவர்கள் வரலாறு – புதிய பல்லவர் மரபு – பல்லவரின் வீழ்ச்சியும் மறைவும் -

பல்லவர் பாண்டியர் போர் - பல்லவர் சாளுக்கிய தொடர்பு கூறு 6: பல்லவராட்சி முறை – பல்லவர் காலக்கல்வி நிலை – பெண்டிர் நிலை – சமூக வாழ்க்கை – பல்லவர் காலக் கட்டிடக்கலை - இசைக்கலை

## பிரிவு –3 சோழர், பாண்டியர்

கூறு 7 : பிற்காலச் சோழப் பேரரசின் தோற்றம் - திரும்புறம்பயம் போர் - பிற்காலச் சோழர் வரலாறு

கூறு 8: முதல் இராசராசன ் முதல்இராசேந்திரன ் தனிச்சிறப்பு – சோழராட்சியில் புதிய மரபு தோன்றல் - அம்மரபினர் வரலாறு – சோழரின் வீழ்ச்சியும் பாண்டியர் எழுச்சியும்

கூறு 9: சோழராட்சி முறை – ஊராட்சி முறை – சமூக வாழ்க்கை – சோழர்களின் கடல் கடந்த வெற்றி – சோழர்களின் கட்டிடக் கலை வளர்ச்சி – கல்வி நிலை – பெண்டிர் நிலை – இசை வளர்ச்சி.

கூறு 10 : இரண்டாம் பாண்டியப் பேரரசு – பாண்டியர் சோழர் தொடர்பு -பாண்டியர் வீழ்ச்சியில் இசுலாமியர் எழுச்சி

## பிரிவு – 4: இந்திய விடுதலை – தமிழகத்தின் பங்கு

கூறு 11 : மார்க்கோபோலோவின் குறிப்புகள் - மதுரை நாயக்கர் வரலாறு – பாளையப்பட்டு ஆட்சி முறை

கூறு 12: மராட்டியர் ஆட்சியும் தமிழகமும் - பூலித்தேவன் கட்டபொம்மன் -மருதுபாண்டியர் ஆகியோரின் விடுதலைப்போர்.

கூறு 13 : இந்திய விடுதலைப் போரும் தமிழ்நாடும் - வேதாரண்யம் உப்புச் சத்தியாகிரகம் - தமிழகக் கலைஞர்கள் - கவிஞர்கள் இந்திய விடுதலைப்

போரில் பங்கு பெறலும் தூண்டலும்.

கூறு 14 : ஆங்கிலேயராட்சியால் தமிழகத்துக்குக் கிடைத்த

நன்மைகள் தீமைகள் - பெண்ணிய இயக்கம்.

# பிரிவு -1

## தமிழகம் - தொன்மை

குறிப்புகள்

**1.தோற்றுவாய்**

1.1. **அறிமுகம்**

1.2. **நோக்கம்**

1.3. **தமிழகம்**

**1.3.1.வரலாற்றுக்கு முந்திய தமிழகம்**

**1.3.1.1. பழங்கற்காலம்**

**1.3.1.2. புதிய கற்காலம்**

**1.3.1.3. பெருங்கற் புதைவுக்காலம்**

**1.3.2. தமிழக இயற்கை அமைப்புகள்**

**1.3.2.1.ஐவகை நிலப்பகுதி**

**1.3.2.2 ஆறுகளும் மலைத்தொடர்களும்**

**1.3.2.3. பருவக்காற்று**

**1.3.3. தமிழக எல்லை**

**1.3.3.1. முச்சங்கத்திற்கு முன் தமிழக எல்லை**

**1.3.3.2. முச்சங்கத்திற்குப் பின் தமிழக எல்லை**

**1.4. தொன்மை**

### 1.1 அறிமுகம்

‘‘கல்தோன்றி மண் தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்தகுடி’’ என்னும் பெருமைக்கும் சிறப்பிற்கும் உரிய இனமாக தமிழினமும் நாடாக தமிழ்நாடும் மொழியாக தமிழ்மொழியும்

குறிப்புகள்

விளங்குகிறது. மனிதன் தோன்றிய நிலமாக இந்தியக் துணைக் கண்டத்தில் தென்னிந்தியா குறிப்பிடப்படுகிறது. இதனைப் புவியியல், மானுடவியல் அறிஞர்கள் ஆராய்ந்துக் கூறியுள்ளனர். பலகோடி ஆண்டுகளுக்கு முன்பு உருவாகிய பழைய கற்படிவுகள் தென்னிந்தியாவில் தான் காணப்படுகின்றன. காடுகளும் மலைகளும் ஆதிமனிதன் வாழ்வதற்கு ஏற்ற நிலமாக இருந்துள்ளன. அப்பகுதியே பிற்காலத்து குமரிக்கண்டம், லெமூரியா என வழங்கலாயிற்று. அந்நிலப்பகுதியில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்திணைப் பகுப்புகளும் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையும் நிலவியது. அக்காலத்தில் ப.ஂறுளியாற்றுடன் பன்மலை அடுக்கமாக தமிழகம் விளங்கியது. காலப் போக்கில் நிகழ்ந்த கடற்கோள்களால் நிலவியல் மாற்றங்கள் நிகழ்ந்தன. கடற்கோள்களால் மறைந்த நிலப்பகுதிகள் தமிழ்மொழிக்கு சங்கம் அமைத்து தமிழ்மொழியினை மன்னர்கள் சிறப்புற வளர்த்த நிலையிலேயே தமிழகத்தின் தொன்மையினையும் தமிழ்மொழியின் தொன்மையினையும் வரலாற்றுச் சான்றாதாரங்கள் மூலம் ஆய்வாளர்கள் கல்லில் பொறித்த மொழியென உரைத்துள்ளனர். கல்வெட்டுகள், செப்பேடுகள், அயல் நாட்டார் குறிப்புகள் தமிழகத்தை அறிய உதவும் சான்றாதாரங்கள் மட்டுமல்ல தமிழகத்தின் தொன்மையையும் தமிழன் யார் என்னும் அடையாளத்தையும் மையமிட்டு உறுதிப்படுத்துவன.

சங்கம் வைத்து பெருமிதம் கொண்டு தமிழ்மொழியினை வீறு நடை போட்டு வளர்த்த சேர, சோழ, பாண்டியர்களின் காலத்தில் மன்னன் உயிர்த்தே மலர்த்தலை உலகமாக விளங்கியது. மன்னர்களும் தன் நாட்டிற்கும் மக்களிற்கும் தான் உயிர் என்று அறிந்து செங்கோலாட்சி நடத்தினர். முடியுடை வேந்தனும் படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என வேந்தனாகச் சிறந்திருந்தான். அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகுமென சங்ககால அரசியல் வாழ்ந்து சிறந்திருந்தது.

## 1.2 நோக்கம்

1. ஆதி தமிழன், நாடு, இனம், மொழி சிறப்புகளை அறிதல்.
2. தமிழகத்தின் தொன்மை சான்றாதாரங்கள் - அறிதல்.
3. மூவேந்தர்களின் அரசியல் திறன் ஆட்சிச் சிறப்பினை அறிதல்.

குறிப்புகள்

## 1.3 தமிழகம்

**“உலகின் பழம் பெருநாடுகளில் தென்னாடு ஒன்று. அதுவே மனித இனத்தின் பிறப்பிடம் என்றும் மண்ணூலார் சாற்றுகின்றனர். வரலாறு தரும் சான்றுகள் இந்நாட்டுக்குத் தனிப்பெருஞ் சிறப்புகளை வழங்குகின்றன. பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக, இந்நாடே மனித நாகரிகத்தின் தொட்டிலாகவும் பண்ணையாகவும் இருந்திருக்கிறது”** என்பர். கா.அப்பாத்துரை கிரேக்க, உரோம நாகரிகங்களைவிட தொன்மை நாகரிகமாக தென்னாடு என்று குறிப்பிடப் பெறும் தமிழகம் இருந்துள்ளது. எகிப்து, பாலத்தீனம்,பாபிலோன், சால்டியா, சிறிய, ஆசியா, சுமேர், ஏலம் முதலிய நாடுகளிலும் சான்றாதாரங்கள் சிந்துவெளியிலும் கிடைத்துள்ளன. இவை யாவும் தென்னாட்டுடன் தொடர்பு கொண்ட நாடுகளாகும். இவை 5000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்றால் தென்னாடு என்னும் தமிழகம் அதற்கும் முற்பட்ட பழமையான ஒன்றாகும் என்பதில் தமிழகத்தின் சிறப்பினை அறியலாம்.

### 1.3.1 வரலாற்றுக்கு முந்திய தமிழகம்

விந்திய மலைத் தொடருக்கு வடக்கே கங்கை ஆறும் இமயமலைத்தொடரும் இருந்தன. அவை கடலுள் மூழ்கிக் கிடந்தன. வடஇந்தியா கடலுள் மூழ்கிக் கிடந்த அக்காலத்தில் தென்னிந்தியா காடும் மலையும் செறிந்து மக்களினம் வாழ்வதற்கேற்ற இடமாக விளங்கியதை வரலாற்று ஆய்வாளர்கள் கணித்து ஏறக்குறைய ஐந்துகோடி ஆண்டுகளுக்கு முன்னர் அவ்வாறு இருந்திருக்க வேண்டும் என்று கூறியுள்ளனர். தென்னிந்தியாவிற்குத் தெற்கில் அமைந்த

லெமூரியா தான் முதன்முதலில் மக்களினம் தோன்றிய பகுதியாகும். அந்த இனமே தமிழ்நாட்டின் ஆதி குடிகள் என்றும் லெமூரியக் கொள்கையினர் என்றும் குறிப்பிடப்படுகின்றனர். லெமூரியக் கண்டத்தில் வாழ்ந்து வந்த மக்களின் வழி வந்தவர்களே தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் கிழக்கிந்தியத் தீவுகளிலும் வாழும் மனித இனமாவர்.

அப்பகுதி மாபெரும் கண்டமாயிருந்து தென் ஆப்பிரிக்கா, பர்மா, மலாயாகிழக்கு இந்தியத்தீவுகள், ஆஸ்திரேலியா, வடமேற்கு அமெரிக்கா ஆகிய நிலப்பகுதிகள் இக்கண்டத்துடன் ஒட்டியிருந்து பிறகு நீங்கியதாக வரலாற்று அறிஞர்கள் குறிப்பிட்டு உள்ளனர். இம்மாபெரும் நிலப்பகுதியையே 'குமரிக்கண்டம்' என்று வழங்கினர்.

"இம்மாபெரும் நிலப்பகுதியைத் தமிழ் மரபு குமரிக்கண்டம்" என்று வழங்குகின்றது. ஆராய்ச்சியாளர். இதனை 'இலெமூரியா' என்று குறிக்கின்றனர். உயிரினங்கள் முதன்முதல் இங்கேயே தோன்றின. மனித இனத்திற்கும் அதனை அடுத்த உயிரினமாகிய குரங்கு இனத்துக்கும் பொது மூல இனமான'இலெமு' இம்மாநிலத்தின் சிதறிய பகுதிகளிலேயே வாழ்ந்திருந்ததாகத் தெரிகிறது என்று கா. அப்பாத்துரை 'தென்னாடு' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

வரலாற்றிற்கு முற்பட்ட காலத்தினை ஆய்வு செய்யும் பொழுது மக்கள் இன வரலாற்றை மூவகையாகப் பிரித்துத் தொகுத்து கூறும் மரபில்

1. பழங்கற்காலம்
2. புதியகற்காலம்
3. பெருங்கற் புதைவுக் காலம் எனப்பிரிப்பர்.

### 1.3.1.1.பழங்கற்காலம்

பழங்கற்காலத்தின் காலத்தினை கி.மு. 35000 முதல் கி.மு.10000 வரையிலான காலப்பகுதி என்று வரையறுப்பர். பழைய கற்காலத்தை அக்காலத்தினர் பயன்படுத்திக் கண்டெடுக்கப்பட்ட அகழ்வராய்ச்சிப் பொருட்களிலிருந்து அறுதியிட்டுக் கூறலாம். பழைய

கற்கால மக்கள் சமவெளிகளிலும் பீடபூமிகளிலும் வாழ்ந்திருக்கலாம். நாடோடிகளாக ஓரிடம் விட்டு ஓரிடம் நகர்ந்து சென்று வாழ்ந்திருப்பர். உணவைப் பொறுக்கிச் சேமித்து உண்ணும் வழக்கம் கொண்டிருக்கலாம். பழங்கற்காலக் கருவிகள் பல்லாவரம், வல்லம்,வடஆர்க்காடு, தென் ஆர்க்காடு மாவட்டங்களிலும் காவிரி, வையை வடிநிலங்களிலும் கண்டு எடுக்கப்பட்டுள்ளன. பெரும்பாலும் கரடுமுரடான கோடரிகளையும், கற்கருவிகள் சிலவற்றையும்,ஈட்டிகள், தோண்டுகருவிகள், வெட்டுக் கருவிகள், சம்மட்டிகள் போன்றவற்றையும் பழைய கற்காலக் கருவிகளாகக் கருதலாம். பழைய கற்காலத்தை குறித்து ஜொய்னர், புருஸ்.ஃ.பூட் போன்றோர் ஆய்வு செய்துள்ளனர்.

### 1.3.1.2 புதியகற்காலம்

புதியகற்காலத்தில் மக்கள் பல புதிய கருவிகளை உருவாக்கவும் நாகரிகநிலையை அடைந்தவர்களாகவும் விளங்கினர். ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் குடியேறி நிலையான வாழ்க்கையை அமைத்துக் கொண்டனர். உழவுத்தொழில் ஆடு, மாடுகளை வளர்த்தல், படகினை உருவாக்கிக் கடலில் செலுத்துதல், மீன்பிடித்தல், மண்பாண்டங்களை வனைதல், பஞ்சாலும் விலங்குகளின் முடியினால் ஆடைகளைத் தயாரித்தல், வேட்டையாடுதல், ஓவியங்களைத் தம் வீட்டுச் சுவர்களில் தீட்டுதல் போன்ற பல தொழில்களை உருவாக்கி முன்னேற்றம் பெற்றிருந்தனர். சிக்கிமுக்கிக் கற்களைக் கொண்டு நெருப்பினை உருவாக்கவும் தெரிந்திருந்தனர்.

**புதியகற்காலக்கருவிகள்** திருநெல்வேலி, மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், வடஆர்க்காடு, தென்னார்க்காடு, புதுக்கோட்டை, சேர்வாராயன் மலைப்பகுதி, புதுச்சேரி, சாயர்புரம் போன்ற இடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. கற்கருவிகளை வழுவழுப்பாக, படிக்கட்டுக்கல் (Trap Rock) என்ற ஒரு வகைக் கல்லினால் உருவாக்கியுள்ளனர். உளிகள், சம்மட்டிகள் நன்றாக செதுக்கப்பெற்று பளப்பளப்பாக உருவாக்கப்பெற்றுள்ளன. பன்னிரண்டு வகைக் கோடரித் தலைகளும், இருவகையான கொத்துக்கருவிகளும், அறுவகை உளிகளும், உரல்கள், உலக்கைகள்,தட்டுகள், தண்டுகள், அம்மிகுழவிகள்,தீட்டுக்கற்கள், எடைக்கற்கள், கற்சட்டிகள், இருவகை

குறிப்புகள்

எந்திரக்கற்கள், அம்புத்தலைகள் போன்ற கருவிகள் அகழ்வாராய்ச்சியில் கண்டெடுக்கப்பெற்ற கருவிகளாகும்.

**1.3.1.3.பெருங்கற்புதைவுக்காலம்**

புதியகற்காலத்தை அடுத்து வரலாற்றுக்கு முற்பட்ட தமிழ் மக்கள் மிகவும் அகன்ற குழிகளில் பிணங்களைப் புதைக்கும் வழக்கத்தை மேற்கொண்டு இருந்தனர். இக்குழிகள் பெருங்கற் புதைவுகள் என்று அழைக்கப்படுவதால் இக்காலத்திற்குப் பெருங்கற் புதைவுக்காலம் என்று வழங்கப்பெற்றது.

புதியகற்காலம் முடிவுற்றபின் தோன்றிய பெருங்கற்புதைவுகளில் கற்காலப்பிணக்குழிகள் காணாத பல புதுமைகளை இக்குழிகள் கொண்டிருந்தன. பெருங்கற்புதைவுகள் கி.மு.2500-1500 ஆண்டுகளில் தோன்றியிருக்கலாம் என்று புதைபொருள் ஆய்வாளர்கள் குறிப்பிட்டு உள்ளனர். பெருங்கற்புதைகுழிகளை அவற்றின் அமைப்பு சார்ந்து இரு வகையாக குறிப்பிடுவர்.

1. குகைவட்டங்கள்
2. குழிவட்டங்கள்

**குகை வட்டங்கள் :**

குகை வட்டங்களில் அமையும் குழிகள் ஓர் அறையைப் போல அமைந்துள்ளன. குகை வட்டத்தின் அடியில் பலகை போன்ற கற்கள் அமைக்கப்பெற்று மேற்பகுதியிலும் பலகைக்கல் ஒன்று மூடப்பெற்றுள்ளது. தரை மட்டத்தில் குழிவாயினைச் சுற்றி ஒற்றை வட்டமாகவோ அன்றி ஒன்றுக்குள் ஒன்றாக இரு வட்டங்களாகவோ கற்கள் செங்குத்தாக ஊன்றப்பட்டு உள்ளன.

**குழிவட்டங்கள் :**

இக்குழிகளில் முதுமக்கள் தாழியில் வைத்துப் பிணங்கள் புதைக்கப்பட்டு உள்ளன. ஒரு குழி வட்டத்தில் ஒரு தாழியோ பல தாழிகளோ அமைந்து உள்ளன. தாழிகள்யாவும் மண்ணால் ஆனவை. தாழிகளுக்கு கால்கள் அமைக்கப்பட்டு உள்ளன. குழி வட்டங்களைச் சுற்றி ஒற்றை வட்டக் கற்களை நாட்டி உள்ளனர்.

இறந்தவர்களின் நினைவுச்சின்னங்களாகவும் விளங்கும் பெருங்கற் புதைவுகளை கல்மாடங்கள் என்றும் குரங்குக்கற்கள் என்றும் அழைக்கும் வழக்காறும் உள்ளது. கேரளத்தில் பாண்டுக்கற்கள் என அழைக்கப்படுகின்றன. குடைக்கல் அல்லது தொப்பிக்கல் என்ற குழிகளை கண்டெடுத்து உள்ளனர். இக்குழிகள் பெரும்பாலும் உழவு நிலங்களை அடுத்துள்ள மலைச்சரிவுகளிலும், மேட்டுப்பாங்கான இடங்களிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. கோவை மாவட்டத்தில் களியாப்பூண்டி, சிறுமுகை ஆகிய இடங்களிலும் செங்கற்பட்டு மாவட்டத்தில் அமிர்தமங்கலம், சானூர், குன்றத்தூர் ஆகிய இடங்களிலும் திருச்சி மாவட்டத்தில் அலகரை,உறையூர், திருக்கம்புளியூர் ஆகிய இடங்களிலும் திருநெல்வேலி மாவட்டத்தில் ஆதிச்சநநல்லூரிலும் தென்னார்க்காடு மாவட்டத்தில் செங்கமேட்டிலும் புதுக்கோட்டையில் சித்தன்னவாசலிலும் புதுச்சேரியில் அரிக்கமேட்டிலும் மற்றும் காஞ்சி, நீலகிரி, பழநி, மானாமதுரை ஆகிய இடங்களிலும் கண்டெடுக்கப்பட்டு உள்ளன. செங்கற்பட்டு மாவட்டத்தில் மட்டும் இருநூறு பெருங்கற்புதைவுகள் இருந்ததாக ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். இக்குழிகள் மக்கள் பயன்படுத்திய அம்புகள், வெட்டும் கருவிகள்,மட்பாண்டங்கள், நீர்அருந்தும்குவளைகள், தலையணைகள் ஆகியனவும் இருந்ததாகவும் அதனால் அவை நினைவுச் சின்னங்களாகவும் குறிப்பிடப்பட்டுள்ளன. இறந்த பிறகும் மனிதன் வாழ்கிறான் என்னும் நம்பிக்கையும் இதன் வழியே வெளிப்படுகின்றது.

பெருங்கற்புதைவுக்காலத்தின் இறுதியில் மக்கள் கற்கருவிகளைக் கைவிட்டு இரும்புக்கருவிகளைப் பயன்படுத்த தொடங்கியதால் பெருங்கற்புதைவுக்காலத்தின் அடுத்த காலமாக இரும்புக்காலம் விளங்கியது எனலாம். இரும்புக்காலப் புதைப்பொருள்கள் ஆதிச்சநல்லூர், கரடியூர், கோயம்புத்தூர், தலைச்சேரி, பிரமகிரி, பெரம்பூர், போடிநாயக்கனூர்,மந்தம்பட்டி. மோகனூர், வல்லம் ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்டு உள்ளன.

### 1.3.2 தமிழக இயற்கைஅமைப்புகள்

‘‘மக்களின் இயல்பு அவர்கள் வாழும் இடங்களுக்கேற்ப அமைகிறது என அரிஸ்டாட்டில், கோபினாபோடின், மாண்டஸ்கியூ

ஆகியோர் குறிப்பிடுவர்'' எனத்தமிழகவரலாறும்தமிழர்பண்பாடும் என்னும் நூலில் டாக்டர்.ஆ.ராமகிருட்டினன் குறிப்பிட்டுள்ளார். அவ்வகையில் தமிழக இயற்கை அமைப்பினை வரலாற்றுடன் இயைத்து ஆய்வு செய்தவர்களாக நீலகண்டசாஸ்த்திரி, கே.கே.பிள்ளை, அ.மு.பரமசிவானந்தம் ஆகியோர் முதன்மையானவர்கள்.

### 1.3.2.1 ஐவகைநிலப்பகுதி

தமிழ்மொழி பேசும் தமிழினமக்கள் பழங்காலத்தில் தங்கள் இயற்கை அமைப்பிற்கேற்ப ஐவகை நிலப்பாகுபாடுகளைக் கொண்டு வாழ்ந்திருந்ததாக தமிழின் முதல் இலக்கண நூலாகிய தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய நிலப்பகுதிகள் மலையும் மலைசார்ந்த பகுதி, காடும் காடு சார்ந்த பகுதி, வயலும் வயல் சார்ந்த பகுதி, கடலும் கடல் சார்ந்த பகுதி, முல்லையும், குறிஞ்சியும் வறண்டு மணல்பகுதியாகும் பாலைநிலப்பகுதி என வரையறுக்கப்பட்டு உள்ளன. அந்தந்த நிலப்பகுதிகளில் கிடைக்கும் உணவு, தொழில், வாழ்க்கை முறை அவை சார்ந்த ஆட்சி அதிகாரம் போன்றன மாறுபட்டு விளங்கின.

''தமிழகம் பல நூறு ஆண்டுகள் பாண்டியநாடு, சோழநாடு, சேரநாடு, கொங்குநாடு முதலிய அரசியல் பிரிவுகளுக்கு உட்பட்டுக் கிடந்ததற்கு அதன் இயற்கை அமைப்பு தான் காரணம் என்பது தெளிவு'' எனத் தமிழகவரலாறும்மக்களும்பண்பாடும் என்னும் நூலில் கே.கே. பிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

### 1.3.2.2.ஆறுகள்

தமிழ்நாட்டு ஆறுகள் காவிரி, வைகை, தாமிரவருணி, தென் பெண்ணை, பாலாறு, செய்யாறு ஆகியன. மேற்கு மலைத்தொடருக்கும் கிழக்கு மலைத்தொடருக்கும் இடையிட்ட சமநிலப்பகுதியானது மேற்கு கிழக்காகச் சரிந்து காணப்படுகிறது. இக்காரணம் பற்றி மேற்கு மலைத்தொடரில் தோன்றும் ஆறுகள் யாவும் மேற்கினின்றும் கிழக்காக ஓடி வங்கக்கடலில் கலக்கின்றது. மதுரையை வைகை வளப்படுத்துகிறது. தென்பாண்டிநாட்டைத் தாமிரவருணி

வளப்படுத்துகிறது. தஞ்சையைக் காவிரி வளப்படுத்துகிறது. வரலாற்றுப் புகழ்பெற்ற பல நகரங்கள் ஆற்றங்கரையின் அருகிலே அமைந்துள்ளன.



‘‘மேற்குமலைத்தொடர் போலக் கிழக்குமலைத்தொடர் உயரமும் வனப்பும் வனவளமும் உடையது அன்று. அது தொடர்ந்து இடைவெளியின்றியும் அமையவில்லை. பல இடங்களில் அது சிதறுண்டு காணப்படுகிறது. மேற்குமலைத்தொடரை விடக் கிழக்கு மலைத்தொடர் மிகவும் பழமையானதென்று புவியிலார் கூறுவர்’’ என கே.கே.பிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

மேற்குமலைத்தொடரானது மேற்குக்கடற்கரையை ஒட்டி 80 கிலோ மீட்டர் நீளமுடையது. மேற்குமலைத்தொடரில் ஆனைமலைகள் சிறப்பானவை. இத்தொடர் முழுவதும் காடுகள் நிறைந்து காணப்படுகின்றன. விரிந்து ஆழ்ந்த பள்ளத்தாக்குகளும் முகில் தவழும் குவடுகளும் துள்ளிவிழும் அருவிகளும் மேற்கு மலைத்தொடரை அழகுக்கு அழகு சேர்க்கும் விதமாக அணி செய்கின்றன. பலவகையான உயிர்வாழ் விலங்குகள் வாழ்வதற்கு ஏற்ற இடமாக உள்ளன. கிழக்கு மலைத்தொடர் ஓரிஸ்ஸா (ஓடிஸா) மாநிலத்தில் தொடங்கித் தெற்கு நோக்கி, சென்னைக்கு வடக்கே சுமார் 320 கிலோமீட்டர் நீளத்திற்கு சுமார் எண்பது கிலோமீட்டருக்கு மேல் கடற்கரையை விட்டு விலகிச் செல்லாது,தென்மேற்காக நீலகிரி மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையுடன் இணைகிறது.

### 1.3.2.3 பருவக்காற்றுகள் :

தமிழகத்திற்கு மழையைத் தரும் பருவக்காற்றுகளாக ஜீன் மாதம் தொடங்கி அக்டோபர் மாதம் வரையில் தென்மேற்குப் பருவக்காற்றும் வடகிழக்குப் பருவக்காற்று அக்டோபர் மாதம் தொடங்கி டிசம்பர் மாதம் வரையில் வீசும் . தென்மேற்குப்பருவக்காற்று இந்துமாக்கடலையும் அரபிக்கடலையும் கடந்து வந்து மேற்குமலைத்தொடரின் மேற்புறத்தைத் தாக்குகிறது. அப்பகுதிகளெல்லாம் மழை பெய்கின்றது. இப்பருவத்தில் கேரளா போன்ற பகுதிகளில் மழை பெருமளவும் சேர்வராயன் மலை, சவ்வாது மலை, பட்டுக்கோட்டை, தஞ்சை. கோவை, பொள்ளாச்சி, மதுரை, தென்காசி, கன்னியாகுமரி போன்ற இடத்தில் ஓரளவு மழை

பெய்கின்றது. ஆகஸ்டு பிற்பகுதியிலிருந்து காவிரி கரையோரப் பகுதிகளில் காஞ்சிபுரம், மரக்காணம், ஆம்பூர், வாணியம்பாடி, நாமக்கல், கரூர், திருச்சிராப்பள்ளி போன்ற இடங்களில் மழை பெய்வதற்கு உண்டு. வடகிழக்குப்பருவக்காற்றினால் தமிழ்நாட்டில் அக்டோபர், நவம்பர் மாதங்களில் நல்ல மழை பொழிவதுண்டு. வடகிழக்குப் பருவக்காற்று பொய்ப்பதும் உண்டு. அளவுக்கு மீறிப் பெய்வதும் உண்டு. மக்களின் வாழ்க்கையை மாற்றியமைக்கும் நிலை இயற்கைக்கு உண்டு என்பதால் இயற்கையைப் பாதுகாப்பது மனிதனின் முதற்கடமை என்பதை தமிழகத்தின் இயற்கை அமைப்புகள் என்றுமே எடுத்துச் சொல்லி கொண்டே இருக்கின்றன.

### 1.3.3 தமிழக எல்லை :

தமிழக எல்லைகள் பலவகையில் மாறுபட்டு வந்துள்ளன. கடல் கொள்வதற்கு முன்பிருந்த தமிழக எல்லையும், முச்சங்கங்கள் இருந்த காலத்து தமிழக எல்லையும் வேறுபட்டன.

#### 1.3.3.1 முச்சங்கத்திற்கு முன் தமிழக எல்லை :

குமரிமுனைக்குத் தெற்கே இன்று குமரி என்னும் கன்னியாகுமரி கடல் உள்ள இடத்தில் பெரிய நிலப்பரப்பு இருந்தது. அவ்விடத்தில் குமரிக்கோடு என்னும் மலையும் பலவிதமான மலைகளும், குமரி ஆறும் ப.ஃறுளிஆறும் இருந்தன என்று வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். அவ்விடங்களில் மொத்தம் 52 நாடுகள் இருந்தன என்றும் அவை.

“ப.ஃறுளியாற்றுக்குத் தெற்கே தென் பாலிமுகம் என்ற நாடும் ப.ஃறுளி குமரி ஆறுகளுக்கிடையில் ஏழ்தெங்கநாடு, ஏழ்மதுரைநாடு, ஏழ்முன்பாலைநாடு, ஏழ்பின்பாலைநாடு, ஏழ்குன்ற நாடு, ஏழ்குணகாரை நடு, ஏழ் குறும்பனை நாடு ஆகிய 49 நாடுகளும் குமரியாற்றுக்கு வடக்கே பன்மலையை அடுத்தும் குமரி கொல்லம் நாடுகளும் ஆக மொத்தம் 52 நாடுகள் இருந்தன” என்று கா. அப்பாத்துரை குறிப்பிட்டுள்ளார்.

49 நாடுகள் இருந்தன என்பதை இறையனார் அகப்பொருள் என்னும் தமிழ் இலக்கண நூலின் உரையாசிரியர் குறிப்பிட்டுள்ளார். ப.ஃறுளி ஆற்றின் கரையில் முதற்சங்கமான தென் மதுரையும்

குமரியாற்றின் கடல் முகத்தில் இரண்டாம் தலைநகரமான கபாடபுரமும் இருந்தன என்றும் அவை யாவும் கடற்கோள்களால் (ஆழிப்பேரலை – சுனாமி) அழிந்தன என்றும் கடைச்சங்கமானது வைகை ஆற்றின் கரையிலுள்ள மதுரையில் நிலவியது என்றும் ஆய்வாளர்கள் அறுதியிட்டுக் கூறியுள்ளனர்.

குறிப்புகள்

**1.3.3.2.1 முச்சங்கத்திற்குப்பின் தமிழக எல்லை :**

‘‘வடவேங்கடம் தென்குமரி

ஆயிடை தமிழ் கூறு நல்லுலகம்’’

என்னும் தொல்காப்பியப்பாயிரத்தில் கிழக்கும் மேற்கும் கடல்கள் எல்லையாக இருந்துள்ளன. வடக்கில் வேங்கடமும் தெற்கில் குமரியும் நிலப்பரப்பாக விளங்கின. இதனை இலக்கியச்சான்றுகள் வழி அறியலாம்.

‘‘ப.்.றுளியாற்றுடன் பன்மலைஅடுக்கத்துக்

குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள’’

எனச் சிலப்பதிகாரமும் கடற்கோள்களால் அழிந்தன என்கிறது. இவ்வரிகளிலிருந்து பாண்டியனின் நாடு குமரி முனைக்குத் தெற்கே நெடுந்தொலைவு பரவியிருந்தது என்றும் அந்நாட்டில் ப.்.றுளி ஆற்றையும் பன்மலை அடுக்கத்துக்குமரிமலையையும் கடல் கொண்டு சென்றுவிட்டது. இதனால் தன் நாட்டின் பரப்பளவு சுருங்கி விட்டதையும் பாண்டியமன்னன் தெற்குதிசையில் கடற்கோள் நிகழ்ந்ததால் வடக்கு திசையில் தன் படையைச் செலுத்தி ப..். றுளி ஆற்றிற்குப் பதிலாக கங்கையையும் குமரிமலைக்குப் பதிலாக இமயத்தையும் கைக்கொண்டான்என்று முல்லைக்கலியில் குறிப்பிடுவதிலிருந்து தொல்காப்பியர் காலத்திற்கு முன்பாக ஒரு கடற்கோளும் அதற்கடுத்துஒரு கடற்கோளும் நிகழ்ந்ததாக வரலாற்று அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

சங்க காலத்திற்கு முன்பு கன்னியாகுமரிக்குத் தெற்கிலும் பரவியிருந்த தமிழகம் சங்க காலத்தில் வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறுநல் உலகமாகக் சுருங்கிவிட்டதை

அறிகின்றோம். பிற்காலத்தில் நன்னூல் என்னும் இலக்கணநூலானது குணகடல், குமரி, வேங்கடம், குடகம் என்னும் நான்கு எல்லையைத் தமிழகத்தின் எல்லையாக வகுத்துள்ளது.



தமிழ்நாடு என்பது சேர, சோழ, பாண்டிய நாடுகளாகும். அவை முதன்மையானவை. அவற்றுள் பல சிற்றரசுகளும் அடங்கியிருந்தன. இவற்றுள் சேரநாடு என்பது இன்றைய கொச்சி – திருவிதாங்கூர் நாடுகளுடன் மலையாளமாவட்டமும் சேர்ந்த நிலப்பகுதியாகும். சோழநாடு என்பது சிதம்பரத்திற்கு வடக்கே உள்ள வெள்ளாற்றை வடஎல்லையாகவும் புதுக்கோட்டைக்கு அருகே உள்ள தென் வெள்ளாற்றைத் தெற்கு எல்லையாகவும் கொண்டுள்ள நிலப்பகுதியாகும். இன்றைய தஞ்சாவூர் திருச்சி மாவட்டங்களிலும் தென்ஆற்காடு மாவட்டத்துத் தென் பகுதியிலும் உள்ள நிலப்பகுதியாகும். பாண்டிய நாடு என்பது இன்றுள்ள மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களைக் கொண்ட நிலப்பகுதியாகும். இவ்வகையில் தமிழகத்தின் எல்லைப் பகுதி மன்னராட்சிக் காலத்தில் பரந்து விரிந்த பகுதியாக விளங்கியுள்ளதை வரலாறு நமக்கு எடுத்துக் காட்டியுள்ளது.

## 1.4 தொன்மை

தமிழகம் பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய பழமையான நிலப்பகுதி என்றஅளவில் தமிழின் தொன்மை உலக நிலவியல் ஆய்வாளர்களும் ஆழ்கடல் ஆய்வு வல்லுநர்களும்தொல்லியல் ஆராய்ச்சியாளர்களும் கண்டறிந்து புலப்படுத்திய உண்மை வரலாறாகும் . உலகின் ஆதிமனிதன் தோன்றிய நாகரிகம்சிந்துசமவெளி நாகரிகத்திற்கு முற்பட்ட நாகரிகம் என்பது வரலாற்றுஆய்வாளர்களின் துணிந்த முடிவாகும் . குமரிக்கண்டம்‘லெமூரியாக்கண்டம் ‘ உலக தொல் ஆதி இன மக்களின் தொட்டில் எனச் சிறப்பிக்கப்பெறுவது . தமிழின் தொன்மைக்கு வரலாற்றுச் சான்றாதரங்களுடன் தமிழக எல்லைகளும் முச்சங்கங்களும் தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களும் சான்றாதாரங்களாகின்றன .

## கூறு -1

## தமிழக வரலாற்றுக்குரிய சான்றுகள் - பல்லவர் சோழர் பாண்டியர் செப்பேடுகள், கல்வெட்டுகள்

### தமிழக வரலாற்றுக்குரிய சான்றுகள்

1. பாடஅமைப்பு

1.1அறிமுகம்

1.2நோக்கம்

1.3.தமிழக வரலாற்றுக்குரிய சான்றுகள்

1.3.1.கல்வெட்டுகள்

1.3.2.செப்பேடுகள்

1.3.3. புதைபொருள் ஆய்வுகள்

1.3.4. நாணயங்கள்

1.3.5. மெய்க்கீர்த்திகள்

1.4.பல்லவர், சோழர், பாண்டியர் செப்பேடுகள், கல்வெட்டுகள்

1.4.1.பல்லவர் செப்பேடுகள்

1.4.2.சோழர் செப்பேடுகள்

1.4.3. பாண்டியர் செப்பேடுகள்

1.4.4. பல்லவர் கல்வெட்டுகள்

1.4.5. சோழர் கல்வெட்டுகள்

1.4.6. பாண்டியர் கல்வெட்டுகள்

1.5 தொகுப்புரை

1.6 மாதிரி வினாக்கள்

1.7 பயிற்சி வினா

1.8 மேலும் படித்து அறிக



## 1.1அறிமுகம்

தமிழக வரலாற்றினை அறிவதற்குரிய சான்றுகளாக கல்வெட்டுகள் செப்பேடுகள் புதைபொருள் ஆய்வுகள் நாணயங்கள் மெய்க்கீர்த்திகள் போன்றன குறித்து அறிவதற்கும் கால அடிப்படையில் வரலாற்றுத்தரவுகளை மெய்மைப்படுத்துவதற்கும் மூலகாரணிகளாக அவை அமைகின்றன . பல்லவர் சோழர் பாண்டியர் மன்னர்களின் காலம் போர்கள் வெற்றிகள் சிறப்புகள் ஆட்சி மற்றும் சமுதாய அமைப்பின் கட்டமைப்பு குறித்து அறிவதற்கும் காலமாற்றங்கள் தமிழகத்தில் ஏற்படுத்திய தாக்கங்கள் குறித்தும் அறிவதற்கும் இயலும் .

## 1.2 நோக்கம் :

**வரலாற்றுச் சான்றுகளை அறிதல் மன்னராட்சி முறைமை தெரிதல்தமிழக வரலாற்றில் நிகழ்ந்த மாற்றங்களைகூர்ந்து தெளிதல்அரசியலறிவு அறிதல்மன்னர்களின் நிர்வாகத்திறம் தற்கால நடைமுறை நிர்வாகச்சிக்கல்களுக்குத் தீர்வுகாண அறிதல்**

## 1.3. தமிழக வரலாற்றுக்குரிய சான்றுகள்



தமிழக வரலாற்றினை ஏட்டிலே பழங்காலத்தில் எழுதி வைக்கும் வழக்கம் இல்லை என்பதால் பழந்தமிழக வரலாற்றினை அறிய இயலவில்லை. கடுமையான தேடுதலும் ஆய்வும் நிகழ்ந்த

பிறகே தமிழக வரலாறு உருவாக்கப்பெற்றுள்ளது. வரலாற்றுக்குறிப்புகள் ஏதுமற்ற நிலையில் புதைபொருள்சின்னங்கள், இலக்கியங்கள், அயல்நாட்டு வரலாற்று ஆசிரியர்கள், பயணிகள் எழுதி வைத்த குறிப்புகள் கொண்டே அறியமுடிகின்றது.

"தமிழக வரலாற்றை அறிய உதவும் சான்றுகளைக் காலவாரியாகவும் சான்றுகள் வாரியாகவும் என இருவகையாகப் பகுத்து நோக்கும் முறை காணப்படுகிறது. கால வாரியாகப் பகுப்போர், வரலாற்றுக்கு முற்பட்ட காலம், சங்ககாலம், பல்லவர் காலம், சோழர் காலம், பாண்டியர் காலம், நாயக்கர் காலம், ஐரோப்பியர் காலம், இக்காலக் எனக் காலங்களை முறைப்படுத்துவர். வரலாற்று மூலங்களின் அடிப்படையில் சான்றுகள் வாரியாகப் பகுப்போர் புதைபொருள் ஆய்வுகள், இலக்கியங்கள், மொழியியல் பின்புலம், கல்வெட்டுகள், செப்பேடுகள், நாணயங்கள், வெளிநாட்டார் பயணக் குறிப்புகள், இந்தியாவை ஆண்ட அயல்நாட்டு அரசு ஆவணங்கள், அறிக்கைகள்,சமய, அரசியலார் நாட்குறிப்புகள், கடிதங்கள், இக்கால அரசு பதிவேடுகள், ஊர்ப்பெயர் வழக்கு, ஆலைப்பொருள் அமைப்பு எனச் சான்றுகளை முறைப்படுத்துவர்." என்று டாக்டர். ஆ. இராமகிருட்டினன் தமிழகவரலாறும்தமிழர்பண்பாடும்" என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

### 1.3.1 கல்வெட்டுகள்

இலக்கியங்கள், மொழியியல்பின்புலம், அயல் நாட்டார் குறிப்புகள் போன்றவற்றை விட கல்வெட்டுகள், நாணயங்கள், புதைபொருள்கள் அளிக்கும் சான்றுகள் பெரிதும் நம்பத்தகுந்தவையாக உள்ளன. தமிழகத்தில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுகளில் முப்பதினாயிரத்திற்கும் மேற்பட்டவை இன்னும் பதிப்பிக்கப்படாமலே உள்ளது.

தமிழகத்தில் வரலாற்றைத் தொகுக்க உதவும் கல்வெட்டுகள் பல்லவர் காலத்தில் தான் தொடங்குகின்றன. அதற்கு முன்பு நடுகற்கள் ஆங்கிருந்த தமிழகத்தில் இருந்தன என்றும் மக்கள் அவற்றை வழிபட்டு வந்தனர் என்றும் சங்க இலக்கியங்கள் வழி அறிவதற்கு முடிகின்றது. எனினும் அவை கிடைக்கவில்லை என்பதால் வரலாற்றுக் கால தமிழகத்தைக் கல்வெட்டுகள் மூலம் அறிவதற்கு



குறிப்புகள்

பல்லவர் காலமே அடிப்படையாகிறது. பல்லவர் காலத்தில் கல்வெட்டுகள் தமிழக வரலாற்றை அறிய உதவும் முதன்மைச் சான்றுகளாகின்றன.



கல்வெட்டுகள் தமிழகத்தில் ஏறத்தாழ கி.மு.2ம் நூற்றாண்டு முதல் கிடைத்துள்ளன. ‘பிராமிக்கல்வெட்டுகள்’ கி.பி.5ம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என்று வரலாற்று ஆசிரியர்கள் குறித்துள்ளனர். இக்கல்வெட்டுகள் பெரும்பாலும் தென் ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களிலும் கேரள நாட்டின் மேற்குப் பகுதிகளிலும் கண்டறியப்பட்டுள்ளன.

தமிழகத்தில் கிடைக்கப்பெற்றுள்ள கல்வெட்டுகள் அரிட்டாபட்டி, அழகர் மலை, கழுகுமலை, திருப்பரங்குன்றம், புளியங்குளம். மாங்குளம், மேட்டுப்பட்டி, யானைமலை, திருச்சி, புகழூர், புதுக்கோட்டை, குடுமியான்மலை,சித்தன்னவாசல்,குன்றக்குடி, பிள்ளையார்பட்டி, உத்தரமேரூர், திருமுக்கூடல், திருவொற்றி□ர் மண்டகப்பட்டு ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்டு உள்ளன.

### 1.3.2 செப்பேடுகள் :

தமிழக வரலாற்றை அறிய உதவும் சான்றுகளில் செப்புத்தகடுகளில் அரசனின் இலச்சினையுடன் மன்னர் அளித்த மானியம், கொடை மன்னர் பெற்ற சிறப்புகள் ஆகியன பொறிக்கப்பெற்று வெளியிடப்படுபவை செப்பேடுகள் என்று பெயரிடப்பட்டுள்ளன.

செப்பேடுகள் சாதவாகனர் காலத்திற்குப் பின்னரே அதிக அளவில் பயன்பாட்டிற்கு வந்தன. செப்பேடுகளில் இரு மொழிகளிலும் பொறிக்கப்பெற்ற சாசனங்கள் பல. செப்பேடுகள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை. கி.பி.8,9ம் நூற்றாண்டுகளில் வெளியிடப்பட்ட செப்பேடுகளில் சின்னமனூர்ச்செப்பேடுகள், குறிப்பிடத்தக்கவை. செப்பேடுகளில் சின்னமனூர்ச்செப்பேடுகள், வேள்விக்குடிச் செப்பேடுகள் முக்கிய நிகழ்வுகளை, வரலாற்றுச் செய்திகளை எடுத்துரைத்து உள்ளன.

### 1.3.3.புதைபொருள் ஆய்வுகள்



சிந்துவெளி நாகரித்திலிருந்தும் அதற்கு முற்பட்ட காலத்திலும் கண்டெடுக்கப்பட்ட புதைபொருள் ஆய்வுகள் தமிழக வரலாற்றினை அறிவதற்கு உறுதுணையாக விளங்குவன. தமிழகத்தில் பழையகற்காலம், புதியகற்காலம், பெருங்கற்புதைவுக்காலம் ஆகிய காலங்களில் கிடைக்கப்பெற்றுள்ள கருவிகள், மட்பாண்டங்கள், புதைகுழிகள் போன்றன சான்றுகளாக உள்ளன. தமிழகத்தில் பழைய கற்காலக்கருவிகள் காவிரி, வைகை போன்ற ஆற்றங்கரையிலும்,உடையாாப்பாளையம், தூத்துக்குடி, பல்லாவரம், வல்லம், போன்ற இடங்களிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. கொடைக்கானல், வட்டாரம், சாயர்புரம், சேர்வராயன் மலை, சேலம்,பழநி ஆகிய இடங்களில் புதிய கற்காலக்கருவிகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பெருங்கற் புதைவுக்காலத்தில் குழிவட்டங்கள், குகை வட்டங்கள் மற்றும் மக்கள் பயன்படுத்திய முதுமக்களின் தாழிகள், சிப்பி, மணி. யானைத்தந்தம், அம்புகள், வெட்டும் கருவிகள், மட்பாண்டங்கள், நீா் அருந்தும் குவளைகள். தலையணைகள் போன்ற பொருட்கள் சான்று ஆதாரங்களாக கிடைக்கப்பெற்றுள்ளன. அமிர்தமங்கலம், சானூர்,குன்றத்தூர், அலகரை, உறையூர், திருக்கம்புளியூர், ஆதிச்சநல்லூர், செங்கமேடு, சித்தன்னவாசல், அரிக்கமேடு, காஞ்சி, நீலகிரி, பழநி மானாமதுரை போன்ற இடங்களில் பெருங்கற்புதைவுக்குழிகள் இருந்ததாக ஆய்வாளர்கள் கண்டறிந்து கூறியுள்ளனர்.

### 1.3.4 நாணயங்கள்

நாணயங்கள் வரலாற்றுத் தரவுகளுக்கு மூலச்சான்றாக விளங்குவன. அவற்றை

1. தமிழ்நாட்டில் கிடைத்துள்ள அயல்நாட்டு நாணயங்கள்
2. தமிழ்நாட்டு அரசர்கள் வெளியிட்ட நாணயங்கள் என வகைப்படுத்துவா் டாக்டர் ஆ. இராமகிருட்டினன் . உரோமபுரி நாணயங்கள் பொன், வெள்ளி, செம்பு, ஆகிய உலோகங்களால்

குறிப்புகள்

ஆனவை. தமிழ் அரசர்கள் வெளியிட்ட நாணயங்கள் காவிரிப்பூட்டினம், செங்கம் ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்டு உள்ளன. உரோம நாணயங்களில் அரசனின் தலை பொறிக்கப்பெற்றுள்ளது. தமிழ் நாட்டு நாணயங்களில் அரசன் தலை அல்லது உருவம் பொறிக்கப்படவில்லை. நாணயங்களில் அரசன் உருவம் அல்லது அடையாளச் சின்னங்கள், பெயர் அல்லது சிறப்புப்பெயர்கள் பொறிக்கப்பெற்றுள்ளன. நாணயங்கள் காலத்திற்கு ஏற்ப, மன்னர்களுக்கு ஏற்ப மாற்றம் அடைந்து வந்துள்ளன. அவை அரிக்கமேடு, கோவை, சேலம், திருச்சிராப்பள்ளி, காவிரிப்பூம்பட்டினம், செங்கம் ஆகிய இடங்களில் கண்டெடுக்கபப்பட்டுள்ளன. நாணயங்களில் அதிகமான செய்திகள் கிடைக்கப் பெறவில்லை என்பது முக்கிய சான்றாகவும் உள்ளது.

### 1.3.5 மெய்க்கீர்த்திகள்

மெய்க்கீர்த்திகள் அரசன் பெற்ற வெற்றியையும் அளித்த கொடைச்சிறப்புகளையும் ஆண்டுதோறும் கல்வெட்டுகளில் பொறிக்கும் வழக்கத்தை மேற்கொண்டு இருந்ததை வரலாறுகள் தெரியப்படுத்துகின்றன. மன்னன் புகழ் பாடுவது எனினும் வரலாற்றுக் குறிப்புகள் மிகுதியாக கிடைப்பதற்கு வாய்ப்புண்டு. முதல் இராசராசன் காலத்திலிருந்து மெய்க்கீர்த்திகள் கல்வெட்டில் பொறிக்கப்பெறும் வழக்கம் ஏற்பட்டது. அவை அகவற்பாவால் எழுதப்பெற்றுள்ளன.

‘திருமகள் போலப் பெருநிலச் செல்வியும்’

‘திருமன்னி வளர இருநில மடந்தையும்’

‘பூமடந்தையும் சயமடந்தையும்’

‘பூ மலர வளர்திகழ் திருமகள்’ எனத் தொடங்கும் மெய்க்கீர்த்திகள் மன்னர்களுக்காகவே பொறிக்கப்பெற்றவை. சில அரசர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட மெய்க்கீர்த்திகளைக் கொண்டுள்ளனர் என்று வரலாறு தெரிவிக்கின்றது.

## 1.4. பல்லவர், சோழர், பாண்டியர் செப்பேடுகள் கல்வெட்டுகள்

குறிப்புகள்

செப்பேடுகளும் கல்வெட்டுகளும் மன்னராட்சிக் காலத்தில் மன்னர்களின் பெருமைகளையும் சிறப்புகளையும் எடுத்துரைக்கும் தகவல்பதிவேட்டுக்கருவியாக விளங்கி வந்துள்ளன. அவற்றில் மக்களின் வாழ்வியல் சார்ந்த செய்திகளும் நிலமானியம், வரி, ஊராட்சி, மருத்துவமனை, இசை, போர், போர்வெற்றிகள், கொடைகள், போன்றன குறிப்புகளாகவும் சிலவற்றில் விரிவாகவும் பதியப்பெற்று உள்ளன.

### 1.4.1 பல்லவர் செப்பேடுகள்

பல்லவர்கள் தமிழகத்தை ஏழு நூறு ஆண்டுகள் ஆண்ட காலத்தை செப்பேட்டுப்பட்டயங்கள் அடிப்படையில் மூன்றாகப் பிரித்துள்ளனர்.

1. பிராகிருதப் பட்டயங்களை வெளியிட்ட முற்காலப் பல்லவர்கள்
2. வடமொழிப் பட்டயங்களை வெளியிட்ட இடைக்காலப்பல்லவர்கள்
3. கிரந்தப் பட்டயங்களை வெளியிட்ட பிற்காலப் பல்லவர்கள்,

பிறநாட்டு மன்னர் எழுதி வைத்த பட்டயங்களிலிருந்தும் பல்லவர்களின் வரலாற்றினை அறியலாம். கதம்பர், இரட்டர், சாளுக்கியர், நாகர், கங்கர், பாண்டியர், முத்தரையர் ஆகிய அரசமரபினரின் பட்டயங்கள் **முக்கியத்துவம்** வாய்ந்தவை. இவற்றில் அரசர்கள் தானம் செய்த செய்திகளும் - அரசனின் முன்னோர் பெயர்களும், விருதுப் பெயர்களும் அறச்செயல்களும் குறிப்பிடப்பெற்றுள்ளன. காசக்குடிசெப்பேடுகள் விக்கிரமாதித்தனின் கடவால்செப்பேடுகள், கூரம்செப்பேடுகள், உதயேந்திரம்செப்பேடுகள் வேலூர்பாளையம்செப்பேடுகள் பாகூர்செப்பேடுகள் போன்றன பல்லவர் வரலாற்றை அறிய உதவுவன.

### 1.4.2. சோழர் செப்பேடுகள்

ஆதித்த சோழன் பல்லவரை வென்று சோழப் பேரரசு ஏற்படுத்திய 3ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 9ஆம் நூற்றாண்டு

வரை சோழ நாட்டை பற்றியும் சோழரைப்பற்றியும் பல்லவர்பட்டயங்கள், பாண்டியர் பட்டயங்கள், சாளுக்கியர், கங்கர், இராட்டிரகூடர் பட்டயங்கள் சான்றாக உள்ளன. விஜயாலயன் சோழ மன்னனின் ஆட்சியிலிருந்து கி.பி.13ஆம் நூற்றாண்டு வரை இருந்த பிற்காலச்சோழன் வரலாற்றை அறிவதற்கு ஆயிரக்கணக்கான செப்பேடுகள் பெருந்துணையாக இருந்துள்ளன. அன்பில்செப்பேடு, ஆனைமங்கலச்செப்பேடு, திருவாலங்காட்டுச் செப்பேடு, திருப்புறம்பயப்போர்செப்பேடு ஆகியனவும் சான்றாதாரங்களாக உள்ளன.

### 1.4.3. பாண்டியர் செப்பேடுகள்

பாண்டிய மன்னர்களின் வரலாற்றினை அறிவதற்கு வேள்விக்குடிச் செப்பேடுகள், சீவரமங்கலத்துச் செப்பேடுகள், சின்னமனூர், தளவாய்புரச் செப்பேடுகள் போன்றன உற்று துணையாக விளங்கி உள்ளதை வரலாறு எடுத்துரைக்கின்றது. வேள்விக்குடிச்செப்பேடுகளும், சின்னமனூர்ச்செப்பேடுகளும் பாண்டியர்கள் களப்பிரரை வென்ற செய்தியை விளக்கி உள்ளன.

### 1.4.4. பல்லவர் கல்வெட்டுகள்

பல்லவர் காலக்கல்வெட்டுகள் பற்றி ஆய்வாளர்கள் குறிப்பிடும் பொழுது,''இந்திய வரலாற்று ஆராய்ச்சியில் நமது நம்பிக்கை கல்வெட்டுகளையே பெரிதும் சார்ந்துள்ளது என்பர் டாக்டர் ஃபிளீட் ''என்று டாக்டர் ஆ.இராமகிருட்டினன் தமது தமிழகவரலாறும் தமிழர் பண்பாடும் என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். அக்கூற்று பல்லவர் காலக்கல்வெட்டுகள் வரலாற்று ஆய்விற்கு உதவும் நம்பகத்தன்மையை உணர்த்துகின்றது. பல்லவர் காலக்கல்வெட்டுகள் சித்தன்னவாசல், தளவானூர், திருக்கழுக்குன்றம், திருச்சிராப்பள்ளி, பல்லாவரம், மண்டகப்பட்டு, மகேந்திரவாடி, மாமண்டூர் மாமல்லபுரம் போன்ற இடங்களில் கண்டெடுக்கப்பட்டவை குறிப்பிடத்தக்கவை.



### 1.4.5 சோழர் கல்வெட்டுகள்

ஆதித்தன் கல்வெட்டுகள், உத்தரமேரூர் கல்வெட்டுகள், திருமுக்கூடல் கல்வெட்டுகள், திருவொற்றியூர்,கல்வெட்டுகள்,

தஞ்சைப்பெரிய கோவில் கல்வெட்டுகள்,புத்தூர்க் கல்வெட்டுகள், திருப்பூந்துருத்திக் கல்வெட்டுகள், திருமலைக் கல்வெட்டுகள், மானூர்க் கல்வெட்டுகள், திருப்பனந்தாள் கல்வெட்டுகள் தழையனூர்க் கல்வெட்டுகள், ஆலங்குடிக் கல்வெட்டுகள் எனப் பல ஆயிரக்கணகான கல்வெட்டுகள் சோழர் வரலாற்றினை அறிய உதவுகின்றன.

கல்வெட்டில் மெய்க்கீர்த்திகள் எழுதும் வழக்கத்தை முதலாம் இராசராசசோழன் கொண்டுவந்தான். கல்வெட்டின் தொடக்கத்தில் இடம் பெறும் இம்மெய்க்கீர்த்திகள் அரசன் பெற்ற வெற்றியையும் செய்த கொடைகளையும் அறிவிக்கின்றன. அம்மெய்க்கீர்த்திகள் 'திருமகள் போலப் பெருநிலச் செல்வியும்' பூமடந்தையும் சயமடந்தையும்' எனத் தொடங்குகின்றன.

கல்வெட்டுகளில் அரசியல் தொடர்பானநிகழ்வுகள் மட்டுமின்றி வரி விதித்தல், நிலவரி, தொழில்வரி, ஊரவைகளின் முடிவுகள், தொழில்முறைகள், அரசியல் முறைகள் போன்றனவும் விளக்கப்பெற்றுள்ளன. பல கோவில்களில் உள்ள கல்வெட்டுகள் ஊர் மக்களுடைய நிலம் விற்றல், வீடுவிற்றல் மனைவிற்றல், வாங்கல் முதலிய செய்திகளும், குறிப்பிடப்பெற்றுள்ளன. கோவில் சுவர்களில் உள்ள கல்வெட்டுகளில் தேவார நூல்களில் இல்லாத பாக்கள் (பாடல்கள்) செதுக்கப்பெற்றுள்ளன. கல்வெட்டுகளில் வட்டெழுத்து, பல்லவர்கிரந்தஎழுத்து, சோழர்காலத் தமிழ்எழுத்து ஆகிய மூன்று தமிழ் எழுத்து வடிவங்களைக் காணமுடியும்.

### 1.4.6. பாண்டியர் கல்வெட்டுகள்

முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன் கல்வெட்டில் உள்ள மெய்க்கீர்த்தி சோழர்களின் வீழ்ச்சியையும் பாண்டியர்களின் எழுச்சியையும் குறிப்பிட்டுள்ளன. மன்னர்கள் தம் ஆட்சியாண்டிற்கேற்ப ஒவ்வொரு ஆண்டும் தங்கள் அரசியல் நிகழ்வுகளையும் கல்வெட்டில் பொறித்து வைத்துள்ளனர். பல சோழர்களின் கல்வெட்டுகளில் பாண்டியமன்னர்களின் போர்களைப் பற்றி அறியலாம்.

குறிப்புகள்

## 1.5 தொகுப்புரை

தமிழக வரலாற்றுக்குரிய சான்றுகளாக பிராமிக் கல்வெட்டுகள் அவை கிடைக்கப்பெற்ற இடங்கள் மன்னர்களின் இலச்சினையுடன் உள்ள செப்பேடுகள் சிந்துசமவெளி நாகரிகம் பழையகற்காலம் புதியகற்காலம் பெருங்கற்புதைவுக்காலம் ஆகிய காலங்களில் கண்டெடுக்கப்பட்ட தாழிகள் முத்துகள் சிப்பிகள் மணிகள் நாணயங்கள் போன்றன குறித்தும் பல்லவர் சோழர் சேரர் பாண்டியர் கல்வெட்டுகள் செப்பேடுகள் குறித்தும் கூறப்பெற்றுள்ளன .

## 1.6. மாதிரி வினாக்கள்

1. வரலாற்றினை அறிய உதவும் சான்றுகள் யாவை ?

   வரலாற்றினை அறிய உதவும் சான்றுகளாக கல்வெட்டுகள் செப்பேடுகள் மெய்க்கீர்த்திகள் நாணயங்கள் அயல்நாட்டார் குறிப்புகள் போன்றன முக்கியத்துவம் உடையன .

2. தமிழகத்தில் எவ்வெவ்விடங்களில் கல்வெட்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன ?

   தமிழகத்தில் அரிட்டாப்பட்டி அழகர்மலை திருப்பரங்குன்றம் சித்தன்னவாசல் குடுமியான்மலை போன்ற இடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன .

3. செப்பேடுகள் என்றால் என்ன ?

   செப்புத்தகடுகளில் இலச்சினையுடன் மன்னர்களின் கொடை சிறப்புகள் வெற்றிகள் குறித்து பொறிக்கப்பெறுவது .

4. பல்லவர் செப்பேட்டுப்பட்டயங்களை எவ்வகையாகப் பிரித்துள்ளனர் ?

பல்லவர் செப்பேட்டுப் பட்டயங்களை மூவகையாகப் பிரித்துள்ளனர் . அவை

1. பிராகிருதப்பட்டயங்கள் -முற்காலப்பட்டயங்கள்
2. வடமொழிப்பட்டயங்கள்-இடைக்காலப்பட்டயங்கள்
3. கிரந்தப்பட்டயங்கள் - பிற்காலப்பட்டயங்கள் ஆகியன.



குறிப்புகள்

5. நாணயங்கள் இருவகை யாது ?

1. தமிழ்நாட்டில் கிடைத்துள்ள அயல்நாட்டு நாணயங்கள் .
2. தமிழ்நாட்டு அரசர்கள் வெளியிட்ட நாணயங்கள்

என நாணயங்கள் இருவகைப்படும் .

6. கல்வெட்டுகளில் மெய்க்கீர்த்திகள் எழுதும் வழக்கத்தைக் கொண்டு வந்த மன்னர் யார் ?

முதலாம் இராசராச சோழன் .

1.7 பயிற்சி வினா

1. மன்னர்களின் கல்வெட்டுகள் உணர்த்தும் வரலாற்றுப்பின்னணிகள் எவை ?

1.8 மேலும் படித்தறிக

1.கே.கே.பிள்ளை தமிழகவரலாறும் மக்களும்

உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை -600113

பதிப்பு - 2002

**கூறு – 2**

## இலக்கியங்கள் - அயல் நாட்டார் குறிப்புகள் - சிந்துவெளி நாகரிகங்கள் - தமிழகத்தின் தொன்மை - தமிழர் யார்? -சங்ககாலச் சேர சோழ பாண்டியர் - சங்க கால அரசியல்

**2.பாடஅமைப்பு**

2.1 அறிமுகம்

2.2 நோக்கம்

2.3 இலக்கியங்கள்

2.4 அயல்நாட்டார் குறிப்புகள்

2.5 சிந்து வெளி நாகரிகங்கள்

2.6 தமிழத்தின் தொன்மை

2.7 தமிழர் யார்?

2.8 சங்காலச் சேர சோழ பாண்டியர்

2.8.1 சேரர்கள்

2.8.2 சோழர்கள்

2.8.3 பாண்டியர்கள்

2.9 சங்ககால அரசியல்

2.10 தொகுப்புரை

2.11 மாதிரி வினாக்கள்

2.12 மேலும் படித்தறிக

## 2.1 அறிமுகம்

இப்பாடப்பகுதியில் தமிழகத்தின் வரலாற்றை அறிவதற்கு இலக்கியங்கள் அயல்நாட்டார் குறிப்புகள்- சிந்துவெளி நாகரிகங்கள்- தமிழகத்தின் தொன்மை- தமிழர் யார் ? –

சங்ககாலச் சேர சோழ பாண்டியர்கள் - சங்ககால அரசியல்

போன்றவை குறித்த வரலாற்றுப்பதிவுகள் தமிழக மன்னர்கள்

ஆட்சிகளையும் தனித்தன்மைகளையும் சிறப்புகளையும்

எடுத்துரைப்பதோடு தமிழகத்தின் ஏற்றங்களையும்

இறக்கங்களையும் பெருமைகளையும் குறிப்பதாக உள்ளன .

## 2.2 நோக்கம்

1. தமிழகத்தின் தொன்மையை அறிதல்
2. தமிழக மன்னர்களைப் பற்றி தெரிதல்
3. ஆரிய திராவிட நாகரிகத்தின் வேர்களைத்தெளிதல்
4. தமிழரின் தமிழ் மன்னர்களின் சிறப்புகளைப் பிற நாட்டார் பிறமொழி இலக்கியங்கள் மூலம் அறிதல்
5. தொல்லியல் தொடர்பான அறிவினைப் பெறுதல்

## 2.3. இலக்கியங்கள்

‘‘இலக்கியம் என்பது மக்களுக்கெல்லாம் பொதுவாகப் பயன்படும் பொருளை உடையதாய் இனிய வகையில்



குறிப்புகள்

சொல்லப்படுவதாய் இருத்தல் வேண்டும். சொற்கட்டுச் சிறந்து இன்பம் பயத்தலைக் குறிக்கோளாகப் பெற்றிருத்தல் வேண்டும்''. மக்களுடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறும் செய்யுட்களோ நூல்களோ படிப்போரது உள்ளத்தைக் கொள்ளை கொண்டு, அவரது வாழ்க்கையையும் வழிப்படுத்தவல்லன. இவையே இலக்கியம் எனப்படும்''(Literature is thus fundamentally an expression of life through the medium of language – An introduction to the study of literature, hudson, P.11) என்று டாக்டர் மா. இராசமாணிக்கனார் தமிழ்மொழி இலக்கிய வரலாறு என்னும் நூலில் குறிப்பிட்டு உள்ளார். அவ்வகையில் உண்மையும் கற்பனையும் இயைந்த இலக்கியங்கள் வரலாற்றை அறிய உதவும் சான்றுகளாகவும் புனைந்துரைகளாகவும் உள்ளன. அவற்றை

1. சமுதாயப் பின்னணியை மையமாகக் கொண்டு படைக்கப்படும் இலக்கியங்கள்.
2. அரசியல் பின்னணியை மையமாகக் கொண்டு படைக்கப்படும் இலக்கியங்கள்

என இரு வகைப்படுத்துவர் டாக்டர் ஆ. இராமகிருட்டினன் . சங்க வரலாற்றை அறிய தொல்காப்பியம் என்னும் இக்கணநூலும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய இலக்கிய நூல்களும் சான்றாகின்றன. ஐவகை நிலப்பாகுபாடும், மக்களின் வாழ்வியலும் அவ்விலக்கியங்கள் இலக்கணநூல்களின் மூலம் அறிந்துகொள்வதற்கு உதவியாகின்றன.

அரசியல் பின்னணியை மையமாகக் கொண்டு படைக்கப்படும் இலக்கியங்கள் சிலப்பதிகாரம்,கலிங்கத்துப்பரணி, மூவருலா, குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ், பெரியபுரணம், மத்தவிலாச பிரகசனம்,கேரளோற்பத்தி,மதுராவிஜயம், தலபுரணங்கள் போன்றன. மன்னர்களின் அரசியல் தொடர்பு,போர் பற்றிய செய்திகள் விவரிக்கப்படுவதில் மன்னர்களின் பரம்பரை, ஆட்சிமுறை, மாற்றங்கள் அறிவதற்கு ஏதுவாகின்றன.

## 2.4 அயல்நாட்டார் குறிப்புகள்

குறிப்புகள்

கி.பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளில் பிளைனியின்'இயற்கை வரலாறு' என்னும் நூலும் தாலமியின் "பூகோளவிளக்கம்" ,நூலும் வெளிநாட்டுப் பயணியர் தமிழகத்தில் தாம் நேரில் கண்ட கடல் வணிகத்தைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளனர். கி.பி.7ஆம் நூற்றாண்டில் தமிழ் நாட்டை நேரில் பார்த்த யுவான்சுவாங்கு என்னும் சீன யாத்திரிகரும் தமிழகத்தினைப் பற்றிப் பல செய்திகளை எழுதியுள்ளனர். பிற்காலச்சோழர் காலத்தில் தமிழகத்தைப் பார்வையிட்ட 'இடைக்கால உலகப் பயணிகளின் இளவரசர்' மார்கோ போலோ என்னும் மேல்நாட்டுயாத்திகரும் சீன அரசியல் தூதர்களின் குறிப்புகளும் வரலாற்றினை அறிவதற்கு உற்ற துணையாகின்றன. விசயநகர ஆட்சிக் காலத்தில் விசயநகரத்துக்கு வந்து தங்கிருந்த 'அப்துல்ரசாத்'என்னும் அயல்நாட்டுத்தூதரும் அறிஞரும் நிக்கலோ காண்டி என்ற இத்தாலிய அறிஞரின் குறிப்புகளும் நாயக்கர் ஆட்சியில் பாதிரிமார்கள் அரசர்களை பற்றியும் நாட்டு நிகழ்ச்சிகளைப் பற்றியும் எழுதியிருக்கும் குறிப்புகள் தமிழகத்தில் வாணிபநிலை, அரசியல்நிலை குறித்த செய்திகளைச்சுட்டுகின்றன. இபின்பதூதாவின் பயணக்குறிப்புகள் விசயநகரப் பேரரசின் எழுச்சி, பாண்டியரின் வீழ்ச்சி, நாயக்கரின் தோற்றம் ஆகியன குறித்து அறியமுடிகின்றது. கிரேக்க ரோமானிய பற்றிய குறிப்புகளில் 'மெகஸ்தனிசு' எழுதிய குறிப்புகளே முதன் முதலில் தமிழகத்தை அறிய உதவும் குறிப்புகளாக உள்ளன.

## 2.5. சிந்துவெளி நாகரிகங்கள்

சிந்துவெளியில் ஹரப்பா, மொகஞ்சதரோ ஆகிய இரு நகரங்கள் முறையே 1920 ஆம் ஆண்டு 1922 ஆம் ஆண்டு ராவி – சட்லெஜ் ஆறுகளுக்கு இடையிலும், சிந்து மண்டலத்தில் உள்ள கோட்டத்தில் 2100 செ.மீ உயரமுடைய மண்மேட்டில் புதைந்த நகரமாகவும் கண்டறியப்பட்டன. இதனை ஸர்.ஜான்மார்'ல் என்பவர் ஆய்வு மேற்கொண்டு முடிவினை வழங்கினார். ஸர்.அலெக்ஸாண்டர் கன்னிஙஹாம் என்னும் ஆராய்ச்சியாளருக்கு சித்திர எழுத்துக்களைக் கொண்ட சில முத்திரைகளைக் கண்டெடுத்தார். மேலும் ஆய்வு செய்தபொழுது மக்களின் கல்லறை ஒன்றும் மட்பாண்டங்களும்

விலங்குகளின் எலும்புகளும் வேறு சில முத்திரைகளும் கிடைத்துள்ளன.



மொகஞ்சதாரோ பகுதியில் அகழ்வாய்வு செய்து கிடைத்த பொருட்களும் ஹரப்பா நகரம் எட்டுஅடுக்குகளை உடைய நகரம் என்றும் அதாவது எட்டுமுறை புதுப்பிக்கப்பட்ட நகரம் என்றும் கி.மு.3250– கி.மு.2750 காலக்கட்டத்தைச் சேர்ந்தது என்றும் கூறியுள்ளனர். மொகஞ்சதாரோ என்னும் பகுதியில் ஆய்வு செய்த பொழுது பௌத்த ஸ்தூபிஒன்றினைக் கண்டுபிடித்து உள்ளனர். மேற்கொண்டு அப்பகுதியை அகழ்வு செய்த பொழுது நாற்கோணமுள்ள முற்றமும் அதில் முப்பது சிற்றறைகள் சுற்றிலும் இருந்தன என்றும் அதில் சில நாணயங்கள் ஓர் அறையிலிருந்து கண்டெடுக்கப்பட்டதாகவும் பானர்ஜி என்னும் ஆராய்ச்சியாளரின் ஆய்விலிருந்து அறியமுடிகிறது. மேலும் மூன்று முத்திரைகளையும் கண்டெடுத்து உள்ளனர். கி.மு.3250 முதல் கி.மு.2750 ஆண்டுகளில் இந்நகரம் இருந்திருக்கலாம் என்று ஆய்வாளர்கள் தமக்குக் கிடைத்த புதைபொருட்களிலிருந்து கண்டறிந்து கூறியுள்ளனர். நகர அமைப்பு, தெருக்களின் அமைப்பு, இல்லங்களின் அமைப்பு, மண்டபங்கள், நீராடும் குளம், வழிநீர்ப்பாதை, ஓவியங்கள், சித்திரக்குறியோடு கூடிய எழுத்துகள், கணக்கற்ற முத்திரைகள், பொம்மைகள், விளையாட்டுக்கருவிகள், பண்பட்ட மண்ணாலும், சுண்ணாம்புக் கல்லாலும் அமைந்த பலவகைப் பொருள்கள் சங்கு – சிப்பி – பண்பட்டமண் - உயர்ந்த கற்கள் இவற்றாலமைந்த அணிவகைகள் கண்டெடுக்கப்பெற்றவையாகும்.

பரந்த சமவெளியில் அமைந்த மொகஞ்சதாரோ தெருக்கள் கிழக்கு மேற்காகவும் தெற்கு வடக்காகவும் அமைந்து பருவக்காற்றுகள் வரும் காற்றோட்டத்தை எதிர்பார்த்தே தெருக்கள் அமைக்கப்பெற்று காற்று நகரின் அகன்ற தெருக்களில் வீசும் பொழுது குறுக்கேயுள்ள சிறிய தெருக்களிலும் புகுந்து எல்லா மக்களிற்கும் காற்றோட்டம் கிடைக்குமாறு தெருக்களை அமைத்து உள்ளனர். நாகரிகத்தில் சிறந்த சிந்துசமவெளியில் பெண் தெய்வ வணக்கமும் சிவ வணக்கமும் லிங்க வழிபாடும் இருந்ததாக முத்திரையின் வழி ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

இத்தகைய நாகரிகத்தில் ஆரியர்கள் இப்பகுதியில் வாழ்ந்திருந்தனர் என்றும் அவர்களுக்கு முன் திராவிட இனமக்கள் வாழ்ந்திருந்தனர் என்றும் பர்ரோ ரிக்வேத்தில் திராவிடச்சொற்கள் இருபதுக்கும் மேற்பட்டு இருப்பதாக சுட்டிக் காட்டியுள்ளார். திராவிட நாகரிகமும் அல்ல ஆரிய நாகரிகமும் அல்ல சிந்து சமவெளி நாகரிகம் தனிப்பட்ட நாகரிகம். அங்கு சென்று குடியேறிவர்களே ஆரியர்கள், திராவிடர்கள் என்றும் சில ஆய்வாளர்கள் குறிப்பிட்டு உள்ளனர். எனினும் சிந்துசமவெளி நாகரிகத்தை வரலாற்று அறிஞர்கள் சிறந்த நாகரிகமாக குறிப்பிட்டு உள்ளனர் என்பதற்கு மாற்றுக்கருத்து இல்லை.

## 2.6. தமிழகத்தின் தொன்மை

தமிழகத்தின் தொன்மை உலகத்தோற்றத்திலிருந்து தோன்றிய நிலப்பகுதியாக கூறப்பெறுவதிலிருந்து அறியலாம். ஆதித்தமிழன் தோன்றிய நிலப்பகுதி லெமூரியா கண்டம் என அழைக்கப்பட்ட நிலையில் அங்கு பேசப்பட்ட மொழி தமிழ்மொழி என்றநிலையிலும் நிலமும் மொழியும் தமிழனின் தமிழகத்தின் பழமையைப் பறை சாற்றுவன . சிந்துசமவெளி நாகரிகத்தின் தொடக்கப்புள்ளியாக தமிழினம் ஆய்வாளர்களால் கூறப்பெறும் உயர்நிலையிலும் தமிழின் தொன்மை அடங்கியுள்ளது அதற்கு சான்றாதாரங்களாக உள்ள புதைப்பொருளாய்வுகள் தொல்லியல் ஆய்வுகள் தமிழகத்தின் பெருமையை எடுத்துரைப்பன. கடற்கோள்களால் அழிந்துப்போன குமரிக்கண்டமும் தமிழகத்தின் தொன்மைக்குச் சான்றாகும்.

## 2.7. தமிழர் யார்?

தமிழைத் தாய்மொழியாக கொண்டவர் ‘தமிழர்’ என வழங்கப்பெறுவர். தமிழர் வாழ்ந்து வரும் நிலப்பகுதி ‘தமிழகம்’ எனப்படும். தமிழர் தொன்று தொட்டு வாழ்ந்து வரும் நிலப்பகுதி ‘தமிழகம்’ எனவும் வடக்கே வேங்கடமலையும், தெற்கே குமரியாறும், மேற்கும், கிழக்கும் கடலும் தமிழ்நாட்டின் எல்லையாக இருந்தன என்று தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்களும் சிலப்பதிகாரம் போன்ற இலக்கிய நூல்களும் குறிப்பிட்டு உள்ளன. இந்த எல்லைகளில் தமிழ்மொழி பேசும் மக்களே தமிழர்கள் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. நாவலந்தீவு என்று அழைக்கப்பட்ட

பகுதியிலும் பல்வேறு வாழிடங்களிலும் தமிழர்கள் சென்று வாழ்ந்திருந்தார்கள்.

## 2.8. சங்க காலச் சேர சோழ பாண்டியர்



சங்க காலத்தில் சேர, சோழ, பாண்டியர்கள் தமிழகத்தின் பரப்பளவில் மேற்குப்பகுதியையும் கிழக்குப்பகுதியையும் தெற்குப்பகுதியையும் ஆண்டு கொண்டிருந்தனர். தமிழகத்தின் மேலைக் கடற்கரையில் அமைந்த மலைநாட்டுப் பகுதியினை ஆண்ட மன்னர்கள் சேர மன்னர்கள். வடக்கே வேங்கட மலையினையும் தெற்கே திருச்சிராப்பள்ளி வளநாட்டையும் உள்ளிட்ட நிலப்பகுதியினை ஆண்ட மன்னர்கள் சோழமன்னர்கள். தெற்குப் பகுதி முழுமையும் ஆண்டவர்கள் பாண்டிய மன்னர்கள். இம்மூவேந்தரும் தமிழகத்தை ஆட்சி புரிந்த பழங்குடியினர் என்று சிறப்பிக்கப்படுகின்றவர்கள். தொல்காப்பியர் ஷவண்புகழ் மூவர்’ என்று சிறப்பித்துள்ளார். அவர்களுக்கான சேரன் - பனம்பூமாலை சோழன் - ஆத்திமாலை பாண்டியன் - வேப்பம்பூமாலை என்னும் அடையாளத்தை

‘‘போந்தை வேம்பே ஆர்வெனவரூஉம்

மாபெருந்தானையர் மலைந்த பூவும்’’

எனத் தொல்காப்பியம் எடுத்துரைத்துள்ளது. சேரநாடு, பாண்டிநாடு, சோழநாடு என மூன்று பகுதிகளாகப் பிரித்துக் கொண்டாலும் அம்மூவேந்தர்களும் தமிழக அரசியலைக் கூட்டரசாக ஒருங்கிணைத்த நிகழ்ச்சிகள் உள்ளன என்பதை

‘‘வடதிசை மருங்கின் மன்னர்க்கெல்லாம்

தென்றமிழ் நன்னாட்டுச் செழுவில் கயல்புலி

மண்தலையேற்ற வரைக ஈங்கென’’

எனச் சிலப்பதிகாரத்தில் காட்சிக்காதையில் இடம் பெற்றுள்ள வரிகள் குறிப்பிடப்பெற்றுள்ளன. அயல்நாட்டினருக்கு அனுப்பும் அரசாணையில் வில், கயல், புலி ஆகிய மூன்று அடையாளங்களும் ஒரு சேரப் பொறிக்கப்பெற்றுச் செல்லும் வழக்கத்தை அறியமுடிகின்றது.

குடபுலம், குணபுலம், தென்புலம் எனக் குறிப்பிடப்படும் வழக்கமும் இருந்துள்ளது.

### 2.8.1.சேரர்கள்



செந்தமிழ் மொழி வழங்கும் பன்னிரெண்டு நாடுகளுள் குட்டம், குடம், கற்கா, பூழி,மலாடு ஆகிய ஐஞ்சிறு நாடுகளை உள்ளடக்கிய நிலமே குடபுலம் என்று வழங்கிய சேரநாடு என்பர். சேரவேந்தர்கள் ஆதன், இரும்பொறை, கடுங்கோ, வேட்டுவன், குடவர், கோதை, சேரர், சேரலர் போன்ற பெயர்களால் அழைக்கப் பெற்றனர். சேரநாட்டை ஆட்சி புரிந்த சேரவேந்தர் இரு மரபினராக உள்ளனர். ஒருவர் ‘உதியன் சேரலாதன்’வழி வந்தோர். மற்றொருவர் ‘இரும்பொறை’ என்ற பெயரால் அழைக்கப்பெற்று வந்தோர்.

உதியன் சேரலாதன், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், பல்யானைச் செல்கெழுகுட்டுவன், கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன், களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல்,ஆடுகோட்பாட்டுச்சேரலாதன், அந்துவஞ்சேரல், இரும்பொறை, செல்வக்கடுங்கோ வாழியாதன், தகடூர் எறிந்த பெருஞ்சேரல்இரும்பொறை, இளஞ்சேரல்இரும்பொறை, குட்டுவன் கோதை, கோக்கோதைமார்பன், சோழியஏனாதி திருக்குட்டுவன், மாந்தரம்பொறையக்கடுங்கோ, மாரிவெண்கோ, யானைக்கண்சேய்மாந்தரஞ்சேரல்இரும்பொறை, வஞ்சன் போன்றோர் சங்ககாலச் சேரமன்னர்களாக வரலாற்றில் குறிப்பிடுப்படுகின்றனர். இம்மன்னர்களில் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதனும் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனும் சேரன்செங்குட்டுவனும் முதன்மையானவர்களாக பல தனிச்சிறப்புகளைக் கொண்டவர். பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன் பாரதப்போரில் படைகளுக்குப் பெருஞ்சோறு வழங்கியவன். இதனைப் புறநானூற்றுப் 2வது பாடலில்

‘‘அலங்கு உளை இப்புரவி ஐவரெடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந்தும்பை
ஈரைம் பதின்மரும் பொருது களத்து ஒமியப்
பெருஞ் சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்’’

எனப் புலவர் முடிநாகராயர் புகழ்ந்து பாடியுள்ளார்.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் இமயம் வரைபடை கொண்டு சென்று ஆரியரை வென்றதாகவும் அவர்கள் அளித்த பொன்னையும் பொருளையும் பெற்றுத் திரும்பியதாகவும் பதிற்றுப்பத்து குறிப்பிட்டுள்ளது.

“ஆரியர்துவன்றிய பேரிசை இன்பம்

தென்னங் குமரியோடு ஆயிடை

மன்மீக் கூறுநர் மநந்தபக் கடந்தே”

என்னும் பாடலில் ஆரியரை வென்ற செய்திகுறிப்பிடப் பெற்றுள்ளது.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் கடம்பர்களை வென்று அவர்களுடைய காவல்மரத்தில் முரசம் செய்த செய்தி சேரனின் வெற்றியின் அடையாளமாகக் கருதப்பெறுவது. அயல்நாட்டினருடன் வணிகம் செய்த சேரர்களின் வாணிபத்திற்குத் தடையாக இருந்த கடம்பர்களை அழிப்பதன் மூலம் கடல்கடந்த வாணிபம் செழிப்பதற்குக் காரணமாக இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் விளங்கினான்.

சேரன் செங்குட்டுவன் இமயம் வரை சென்று கண்ணகிக்குக் கல்லெடுத்து கங்கையில் குடமுழுக்கு செய்து சிலை வைத்து பத்தினி வழிபாடு நிகழச் செய்தவன். கிள்ளிவளவனுக்கு உதவியாக நேரிவாயில் என்னுமிடத்தில் நிகழ்ந்தபோரில் ஒன்பது சோழ இளவரசர்களை வெல்வதற்கு சேரன் செங்குட்டுவன் துணையாக நின்றான். ‘கடம்பர்களைவென்று கடல்பிறக்கோட்டிய குட்டுவன்’என்னும் பெயர் பெற்றான். கண்ணகிக்குக் கல்லெடுக்க இமயம் வரை சென்ற செங்குட்டுவன் வடதிசை மன்னர்களாகிய கனகவிசயரை வென்று இமயத்தில் வில், புலி, கயல் சின்னங்களைப் பொறித்தான் என்று சிலப்பதிகாரம் குறிப்பிட்டுள்ளது.

இவ்வகையில் சேரமன்னர்களின் சிறப்பினைப் ‘பதிற்றுப்பத்து’ என்னும் தொகுப்பு நூல் ஒவ்வொரு மன்னருக்கு ஒவ்வொரு புலவர் என்ற வகையில் பாடியுள்ளனர். சேர மன்னர்களின் வரலாற்றுப் பெட்டகமாக விளங்கும் பதிற்றுப்பத்தில் முதற்பத்தும் கடைசிப்பத்தும்

இல்லை என்பதால் ஆதியும் அந்தமும் இல்லாத நூல் என்னும் சிறப்பினையும் பெற்றுள்ளது.

### 2.8.2. சோழர்கள்



மூவேந்தர்களிலே நடுவிலே வைத்துப் போற்றப் பெறுபவர் சோழர். கிள்ளி, கிள்ளிவளவன், செம்பியன், சென்னி, வளவன் போன்ற பெயர்களால் அழைக்கப்பெறுபவர். சங்கம் வைத்து தமிழ் வளர்த்த பெருமை பாண்டிருக்கு உரியது போன்றே சோழருக்கும் உரியது. செந்தமிழ்நாட்டினைச் சேர்ந்த பன்னிரு நாடுகளில் புனல் நாடு,பன்றி நாடு, அருவாநாடு என்ற நாடுகளை உள்ளடக்கிய இன்றைய தஞ்சை, திருச்சி, வட, தென்னார்க்காடு மாவட்டங்களை உள்ளடக்கிய நாடாகும். சோழ நாட்டின் தலைநகரமாக உறையூரும் புகாரும் சிறப்புற்று விளங்கின. சோழ நாடு காவிரி நாடு, காவிரி சூழ்நாடு, காவிரிபுரக்கும் நாடு, பொன்னி வளநாடு எனச் சிறப்பினைப் பெற்று விளங்குவது. இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளி, இலவந்திகைப்பள்ளித்துஞ்சிய நலங்கிள்ளிசேட்சென்னி, உருவப்ப∴றேர்இளஞ்சேட்சென்னி, கரிகாற் பெருவளத்தான், குராப்பள்ளித்துஞ்சியபெருந்திருமாவளவன், குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவன், கோப்பெருஞ்சோழன், செங்கண்ணான், தித்தன், நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னி, போரவைக்கோப்பெருநற்கிள்ளி, மாவளத்தான், முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி, வேல்ப∴றடக்கைப்பெருவிறற்கிள்ளி ஆகியோர் சங்ககாலச்சோழ மன்னர்களாகக் குறிப்பிடப்பெற்றுள்ளனர். இவர்களில் கரிகாற்சோழன் தனிச்சிறப்பு கொண்ட மன்னனாகச் சங்க இலக்கியங்களிலும் வரலாற்றிலும் புகழப்படுகின்றான்.

சங்ககாலத்தில் வாழ்ந்த சோழப்பேரரசர்களுள் சிறந்து விளங்கிய கரிகாற்சோழன் கி.மு.60 முதல் கி.மு.10வரை ஆட்சி புரிந்ததாக வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிட்டு உள்ளனர். இம்மன்னனைப் பாட்டுடைத்தலைவனாக பட்டினப்பாலை, பொருநராற்றுப்படை ஆகிய இரு நூல்கள் சிறப்பித்துப் பாடியுள்ளன. கல்லணையைக் கட்டி தமிழர்களின் அறிவியல் நுட்பத்தை உலகிற்குப் பறைசாற்றிய மன்னன். புலவர்களையும் கலைஞர்களையும் ஆதரித்தவன். இம்மன்னனின் போராற்றலையும்

வீரத்தையும் வெண்ணிப்போர், வாகைப்போர், வடநாட்டுப் படையெடுப்பு, இலங்கைப்படையெடுப்பு போன்றவற்றால் அறியலாம். **கரிகாற்சோழனை** பரணர், நக்கீரர், மதுரைக் குமரனார், உருத்திரக்கண்ணனார் காரிக்கண்ணனார், முடத்தாமக் கண்ணியன், இளங்கோவடிகள், ஜெயங்கொண்டார், சேக்கிழார் போன்ற புலவர்கள் பாடியுள்ளனர்.

### 2.8.3 பாண்டியர்கள்

பாண்டியநாடு 'தென்புலம்' என்று அழைக்கப்பெறும் சிறப்பினைப் பெற்றது. இப்பகுதி பழநிமலைக்குத் தெற்கேஉள்ள நிலப்பகுதியாகும். பாண்டியநாடு தென்மதுரையில் வீற்றிருந்த முதற்சங்கமும், கபாடபுரத்தில் இருந்த இடைச்சங்கமும், மதுரையில் வீற்றிருந்த கடைச்சங்கமும் தமிழ் வளர்த்த பெருமையைப் பெற்றதாக விளங்குகின்றன. எனினும் வால்மீகி இராமாயணத்திலும் மகாவம்சத்திலும்,உரோம்நாட்டு வரலாற்றிலும் உரோம் நாட்டுப் பொன் நாணயங்கள் பாண்டிய நாட்டில் கிடைத்தமையாலும் பாண்டியர்களின் பழம்பெருமையை அச்சான்றுகள் மூலம் அறிந்து கொள்ளலாம். இவ்வகையில் பாண்டியநாட்டின் சிறப்புகளை எடுத்துரைக்கும் வரலாற்றுச்செய்திகள் பாண்டிய நாட்டோடு பாண்டிய மன்னர்களின் பரந்துபட்ட புகழினையும் எடுத்தியம்புகின்றன.

வடிவலம்பநின்றபாண்டியன், பொற்கைப்பாண்டியன், ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன், இலவந்திகைப் பள்ளித் துஞ்சியநன்மாறன், ஓல்லையூர் தந்த பூதப்பாண்டியன், கருங்கை ஒள்வாள் பெரும்பெயர்வழுதி, கானப்பேரெயில்கடந்த உக்கிரப்பெருவழுதி, சீரஞ்சாத்தன், கடாரத்துத்துஞ்சியமாறன் வழுதி, சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதி, மதிவாணன், மாலைமாறன், மாறன்வழுதி, முடத்திருமாறன், வெள்ளி அம்பலத்துத்துஞ்சிய பெருவழுதி, வெற்றிவேற்செழியன் போன்ற பாண்டியமன்னர்கள் சங்க காலத்தில் ஆட்சி புரிந்த மன்னர்கள் என வரலாற்றுச் சான்றுகள், சங்க இலக்கியங்கள் மூலம் அறிய இயலுகின்றது.

பாண்டிய மன்னர்களுள் வடிம்பலம்பநின்ற பாண்டியனாகிய நிலந்தருதிருவிற்பாண்டியனும் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனும் தம் வீரம், போர்த்திறத்தால், ஆட்சியால் சிறந்து விளங்கிய மன்னர்கள்.நிலத்தருதிருவிற்பாண்டியன் என்று அழைக்கப்பெறும் வடிம்பலம்பநின்றபாண்டியன் சங்கப்புலவர்களால் ‘நெடியோன்’ என்னும் சிறப்புப்பெயரும் பெற்றவன். இம்மன்னன் 24 ஆயிரம் ஆண்டுகள் ஆட்சி புரிந்ததால் அப்பெயர் பெற்றதாக நச்சினார்க்கினியர் குறிப்பிடுவர். கடைச்சங்கமன்னன், தொல்காப்பியம் இம்மன்னன் அவையில் அரங்கேற்றம் செய்யப்பெற்றது. குமரிக்கண்டம் கடலால் கொள்ளப் பெறுவதற்கு முன்னர் அங்கிருந்து ப∴றுளி ஆற்றை உருவாக்கிக் கடல் தெய்வத்திற்கு விழா கொண்டாடியதாக புறநானூற்றுப் பாடல் (9) தெரிவிக்கின்றது.

தலையாலங்கானத்துச் செருவென்றபாண்டிய நெடுஞ்செழியன் கடைச்சங்கப்பாண்டியர்களில் சிறந்து விளங்கிய மன்னன்களில் ஒருவன் இம்மன்னனைப் பாட்டுடைத்தலைவனாகக்கொண்டு மதுரைகாஞ்சி, நெடுநல்வாடை ஆகிய இரு நூல்கள் பாடப்பெற்றுள்ளன. மாங்குடிமருதன் தலைவனாகக் கொண்ட புலவர் அவை ஒன்று தான் போரில் வெற்றியைப் பெறவில்லையெனில் பாடாது போகட்டும் என்று வஞ்சினம் உரைத்ததை

“ஓங்கிய சிறப்பின் உயர்ந்த வேள்வி
மாங்குடி மருதன் தலைவன் ஆக
உலகமோடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைகஎன் நிலவரை”

என்னும் பாடல்வரிகள் எடுத்துரைக்கின்றன.

தலையாலங்கானத்துப் போர் நெடுஞ்செழியனைச் சோழன் இராயசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, சேரன் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பாறை ஆகிய பேரரசர்களும் திதியன், எழினி,எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன் ஆகிய வேளிர்களும் பாண்டியனைப் பகைத்துப் போரிட்டனர் என்று புறநானூற்றில் 72வது பாடல் குறிப்பிட்டுள்ளது. இடைக்குன்றூர்



குறிப்புகள்

கிழார் பாடிய புறநானூற்றில் 78வது பாடலும் சின்மைனூர்ச் செப்பேட்டிலும் தலையாலங்கனாத்து வெற்றியைச் சிறப்பித்து உள்ளன.

## 2.9. சங்ககால அரசியல்



சங்ககாலம் சங்கம் வைத்து தமிழ் வளர்த்த காலமாகும். முச்சங்கங்கள் தமிழ் மொழியினை மேம்படுத்தி இலக்கண இலக்கிய நூல்கள் பலவற்றை தமிழிற்குத் தந்துள்ளன. சங்ககால அரசியல் என்பதும் சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை சார்ந்தே கட்டமைக்கப்பெறும். சேர மன்னர்களின் வில்லாற்றலும், பாண்டியர்களின் கல்வித்திறனும், சோழர்களின் உணவால் விளைந்த அறத்தின் வழிப்பட்ட பெருஞ்செல்வமும் ஒன்று சேர்ந்து துணையாகியதாய்த் தமிழ் மக்களின் அரசியல் வாழ்வு திறம்பெற்று மேம்பட்டு நின்றன. தமிழ் வேந்தர்கள் தமிழகமாகிய உடம்பிற்கு உயிர் போன்று இன்றியமையாதவர்கள். அதனாலாயே ''வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு'என தொல்காப்பியம் குறிப்பிட்டுள்ளது. நாடு வளம் பல பெற்றிருப்பினும் ஒரு நாட்டிற்கு முதற்தேவையாக அமைவது அரசியலமைதியே ஒரு நாட்டினை அடையாளம் காட்டுவது ஆட்சித்திறமும், ஆட்சித்திறத்தினால் சுட்டிக்காட்டப்பெறும் மன்னனுமே. இதனையே 'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்று புறநானூறு 186வது பாடல் உரைத்துள்ளது. இதனை

''நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே  
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்  
அதனால் யான் உயிர் என்பது அறிகை  
வேன்மிகுதானை வேந்தற்குக் கடனே''

என்பது அப்பாடல்.முடியாட்சி முறை வழக்கிலிருப்பினும் அறத்திற்கு அஞ்சியே அரசர்கள் ஆட்சி புரிந்தனர். ''அறம்துஞ்சும் செங்கோல்'' என சங்ககால அரசியலமைப்பு நிலவியது.

‘‘அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்’’

(புறநானூறு – 183)

‘‘அறநெறி முதற்றே அரசின் கொற்றம்

(புறநானூறு-56)

‘‘மாரி பொய்ப்பினும் வாரிகுன்றினும்

இயற்கையல்லன செயற்கையில் தோன்றினும்

காவலா் பழிக்கும் இக்கண்ணாகன் ஞாலம்’’

(புறநானூறு-35)

போன்ற பாடல்கள் அரசின் கடமையை எடுத்துரைக்கும் வரிகள். மழை பொய்த்துப் போனால் நாடாளும் மன்னனே பொறுப்பு இல்லையெனில் மக்கள் பழி தூற்றுவார்கள் என்று பொறுப்புணர்ந்து ஆட்சி செலுத்தினர் மன்னர்கள். இதனை சிலப்பதிகாரமும் காட்சிக்காதையில்

‘‘மழைவளங்கரப்பின் வான்பேரச்சம்

பிழையுயி ரெய்திற் பெரும் பேரச்சம்

குடிபுரவு உண்டுங் கொடுங்கோல் அஞ்சி

மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்

துன்பமல்லது தொழுதகவு இல்’’

எனப் பாடியுள்ளது. ‘‘அரசன் தவறு செய்தால் அதனை இடித்துரைத்துத் திருத்தும் உரிமையும் தம் உள்ளக்கருத்தினை அஞ்சாது எடுத்துரைக்கும் பேச்சுரிமையும், தாம் விரும்பிய முறையில் கடவுள் வழிபாட்டினை அமைத்துக் கொள்ளும் சமயஉரிமையும், விரும்பிய இடங்களுக்குத் தடையின்றிச் செல்லும் போக்குவரத்துரிமையும், தமக்கு இயன்ற தொழில்களைச் செய்து பொருளீட்டுவதற்குரிய தொழிலுரிமையும் ஆகிய இவைகௌளல்லாம் குடி மக்களின் உரிமைகளாகவே கருதப்பட்டு அக்காலத் தமிழ்

வேந்தர்களால் காக்கப்பெற்றது. நுணுகி நோக்குங்கால், அக்காலத் தமிழர் அரசியல் 'முடியாட்சி'என்ற பெயரால் நடைபெற்ற குடியாட்சியாகவே விளங்கினமை இனிது புலனாகும்'' என்று க. வெள்ளை வாரணார் அவர்கள் 'சங்க காலத்தமிழ் மக்கள்'என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

அரசுரிமையும் வழிவழியாக வந்து தந்தைக்கு பிறகு மகன் அரசுரிமை பெறும் மரபினை,

''மூத்தோர் முத்தோர் கூற்றம் உய்த்தென

பால்தரவந்த பழவிறல் தாயம்'' என்னும்

புறநானூற்று 75வது பாடல்வரிகள் மூலம் அறியலாம்.

சங்க கால அரசியலில் போர்கள் முக்கிய இடம் பெற்றுள்ளன. வீரத்தின் விளைநிலமாகக் கூறப்பெறும் தமிழக மண்ணில் அரசுரிமைப் போர்கள் சேர பாண்டியர் ஆட்சியில் இருந்தற்கான சங்க இலக்கியச் சான்றுகள் இல்லை. ஆனால் சோழர் ஆட்சியில் நலங்கிள்ளியும் நெடுங்கிள்ளியும் அரசுரிமைக்காக போர் முயற்சியில் ஈடுபட்டனர். அவர்களைச் சந்து செய்ய புலவர் முயற்சித்ததும் புறநானூற்றில் 45வது பாடல் சுட்டியுள்ளது. கரிகாலன் அரசுரிமையைப் பெற சிறைச்சாலையிலிருந்து தப்பிச் சென்றான் என்பதை பட்டினப்பாலை குறிப்பிட்டுள்ளது. போரின் நெறிமுறைகளைப் 'புறத்திணையியல்' இலக்கணமாக வகுத்துத் தந்துள்ளது. அறத்தின் வழியே போர் நிகழவேண்டுமென்பதை தொல்காப்பியம் எடுத்துரைத்துள்ளதை சங்க இலக்கியப்பாடல்களிலும் காணமுடிகின்றது. தமிழர்கள் போரிலும் அறத்தினைப் பின்பற்றும் சிறப்பிலிருந்து சங்க கால அரசியல் செவ்வியினையும் மக்கள் நலம் நாடும் உயர்ச்சிந்தனையையும் நாடாள்வோர் கொண்டிருந்ததை அறியமுடிகின்றது.

## 2.10 தொகுப்புரை

உண்மையும் கற்பனையும் கலந்த இலக்கியங்களில் சமுதாயப்பின்னணியும் அரசியல் பின்னணியும் கொண்டவை வரலாற்றில் பொய்களையும் உள்ளடக்கியது .மெய்ம்மை சார்ந்த அயல்நாட்டார் குறிப்புகளும் அகழ்வாய்வுகளும் வேரினை அறிய

உதவும் சான்றாதாரங்கள் . ஹரப்பா மொகஞ்சதாரோ பகுதிகளில் சர்.ஜான்மார்'ல் மூலம் ஆய்வுகள் கண்டறியப்பட்டுள்ளன. அவை நாகரிக வாழ்க்கையின் எச்சங்கள்.அந்த எச்சங்களே ஆதித்தமிழனின் உச்சமாகவும் இருக்கலாம் என்னும் வரலாற்று அறிஞர்களின் சிந்தனைகளை அறியமுடிகின்றது . சங்ககாலச் சேர சோழ பாண்டியர்களில் சிறந்த மன்னர்களை அறிவது அம்மன்னர்களின் ஆட்சிச்சிறப்பின் வெளிப்பாடே. சேரர்களில் பெருஞ்சோற்றுதியஞ்சேரலாதன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் சேரன் செங்குட்டுவன் சோழமன்னர்களில் கரிகாற்சோழன் பாண்டிய மன்னர்களில் தலையாலங்கானத்துச்செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியன் போன்ற மன்னர்களின் சிறப்புகளையும் சங்ககால அரசியலில் மன்னன் உயிர்த்தே மலர்த்தலையுலகம் என்பதால் மக்களைக் காக்க வேண்டிய தவத்தினையும் அறியமுடிகின்றது .

குறிப்புகள்

### 2.11மாதிரி வினாக்கள்

1. உண்மையும் கற்பனையும் கலந்த படைப்புகள் மொழி சார்ந்து எவ்வாறு அழைக்கப்படும் ?

   இலக்கியம் என்று அழைக்கப்படும் .

2. 'இடைக்கால உலகப்பயணிகளின் இளவரசர்' என்று அழைக்கப்படுகின்றவர் யார் ?

   மார்கோபோலோ

3. சிந்து சமவெளி நகரங்கள் எவை ?

   ஹரப்பா மொகஞ்சதாரோ நகரங்கள் சிந்துசமவெளி நகரங்களாகும்.

4. சிந்துசமவெளியில் ஆய்வு மேற்கொண்ட அறிஞர்கள் இருவரைக் குறிப்பிடுக.

   சர்.ஜான்மார்'ல் சர்.அலெக்ஸாண்டர் கன்னிங்ஹாம் .

5. "போந்தை வேம்பே ஆர்வெனவரூஉம்

குறிப்புகள்

மாபெருந்தானையர் மலைந்த பூவும் “என்னும் பாடல்வரிகள் எம்மன்னர்களைக் குறிக்கின்றன ?

போந்தை – சேரன்

வேம்பு – பாண்டியன்

ஆர் - சோழன்

6. “குடபுலம் “ என்று வழங்கப்பெறும் நாடு எது ?

   குட்டம் குடம் கற்கா பூழி மலாடு ஆகிய ஐந்து சிறுநாடுகள் சேரநாடு என்று வழங்கப்பெற்றது .

7. பட்டினப்பாலை பொருநராற்றுப்படை ஆகிய நூல்களின் பாட்டுடைத்தலைவனாக எம்மன்னன் பாடப்பெற்றுள்ளான் ?

   கரிகாற்சோழன்

8. ‘தென்புலம்’ என்று அழைக்கப்பெறும் சிறப்பினைப் பெற்ற நாடு எது ?

   பாண்டியநாடு

9. ‘மன்னன் உயிர்த்தே மலர்த்தலையுலகம் ‘ எனக் குறிப்பிடப்படும் நூல் எது?

   புறநானூறு

10. மக்களின் அகப்புற வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்த நூல் எது **?**

தொல்காப்பியம்

## 2.13 பயிற்சி வினா

1. சங்ககால அரசியலில் மன்னர்களின் முதன்மையையும்

   கடமையையும் விளக்குக

## 2.14 மேலும் படித்தறிக

டாக்டர். மா. இராசமாணிக்கனார்
மொகஞ்சதரோசிந்துசமவெளி நாகரிகம்
சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்
திருநெல்வேலி லிமிடெட்
திருநெல்வேலி 1999

குறிப்புகள்

## கூறு – 3
## சங்ககாலக் கல்வி நிலை –
## பெண்டிர் நிலை –
## ஐந்து திணைப்பகுப்பும் அமைப்பும்

**3.பாடஅமைப்பு**

3.1 அறிமுகம்
3.2 நோக்கம்
3.3 சங்ககாலக் கல்விநிலை
3.3.1 சங்க காலக் கல்வியும் ஆசிரியரும்
3.3.2 வானியல் அறிவு
3.4 பெண்டிர் நிலை
3.4.1 மனையுறை மகளிர்
3.4.2 மூதின் மகளிர்
3.4.3 பெண்பாற்புலவர்கள்

3.5 ஐந்திணைப் பகுப்பும் அமைப்பும்

3.5.1 குறிஞ்சி

3.5.2 முல்லை

3.5.3 மருதம்

3.5.4 நெய்தல்

3.5.5 பாலை

3.6 தொகுப்புரை

3.7 மாதிரி வினாக்கள்

3.8 பயிற்சி வினா

3.9 மேலும் படித்தறிக

குறிப்புகள்

## 3.1அறிமுகம்

சங்கக்கால மக்களின் வாழ்வியலில் கல்வி

ஆடவரும் பெண்டிரும் கற்கும் நிலையில் கல்வி கற்றவருக்கே முன்னுரிமை . கற்றோன் சொல் மூத்தோன் சொல்லை விட மேலானது என்ற வகையில் கல்வியின் தேவையை சங்ககால மக்கள்

உணர்த்திருந்தனர் சங்ககாலப் பெண்கள் கற்று

கவி பாடும் நிலையில் சிறந்திருந்தனர் . மனையுறை மகளிராகவும் மூதின்மகளிராகவும் அகவாழ்வில் சிறந்து விளங்கினர் . சங்ககால மக்களின் வாழ்வியலில் ஐந்திணைப் பாகுபாடு

இயற்கை சார்ந்த வாழ்வியலைக் கூறுவது .

*Self -Instructional Material*

## 3.2 நோக்கம்



1. சங்ககால மக்களின் வாழ்வியலை அறிதல் .
2. வாழ்வியலின் பின்புலத்தினை அறிவதன் மூலம் தற்கால வாழ்வியலைத் தெளிதல் .
3. தமிழ்ச்சமூகத்தின் அடையாளங்களை உணர்தல்.

## 3.3.சங்க காலக் கல்விநிலை

### 3.3.1. சங்ககாலக் கல்வியும் ஆசிரியரும்

சங்ககாலக்கல்வி நிலை சிறப்புற்று விளங்கியதற்கு

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே
ஒரு குடிப்பிறந்த பல்லோருள்ளும்
முத்தோன் வருக எண்ணாது
அறிவுடையோன் ஆறு அரசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே"

என்னும் புறநானூற்று 183வது பாடலே சான்றாக விளங்குகின்றது. ஒரு குடும்பத்திலே பிறந்தவரில் மூத்தவனை விட கல்வி கற்றவனையே அரசும் கூட அவன் சொல்படி கேட்டு நடக்கும். நாற்சாதிப்பிரிவிலே கீழ்ச்சாதியில் ஒருவன் கல்வி கற்றால் மேற்சாதியைச் சேர்ந்தவனும் அவனைப் போற்றுவான் என்பதால் ஆசிரியருக்குக் கொடுக்க வேண்டிய உறுபொருளினை (குருதட்சணை)

கொடுத்தும் அவருக்குக் செய்யவேண்டிய பணிவிடைகள் செய்தும் கல்வியைக் கற்பதே சாலப்பெரிது என்கிறது அப்பாடல் .

குறிப்புகள்

சங்க காலத்தில் தெற்றிப் பள்ளிக்கூடங்கள் (திண்ணைப் பள்ளிக் கூடங்கள்) இருந்தன. இளம்பருவ மாணவர்களைப் பயிற்றும் ஆசிரியர்கள் ‘இளம்பாலாசிரியர்’ (தொடக்கப்பள்ளி ஆசிரியர் என வழங்கப்பெற்றார். மதுரை இளம்பாலாசிரியன் சேந்தன் கூத்தனார் என்னும் புலவருக்குரிய பெயரால் அச்செய்தி அறிவதற்கு உரியதாகின்றது. அங்குப் பயிலும் மாணவர்களை ‘மையாடல் மழ புலவர்’ எனப்பரிபாடல் குறிப்பிடுகின்றது. ‘கிடங்கில் குலபதி நக்கண்ணன்னார் ‘என்றொரு சங்கப்புலவர் ஆயிரம் மாணவர்களுக்கு மேல் ஒன்று கூட்டி கல்வி பயிற்றுவித்தார் என்றும் பதினாயிரம் மாணவர்களுக்கு மேல் கற்பித்தவர்களுக்கே ‘குலபதி’என்னும் பட்டம் கிடைப்பதற்கு உரியதாகும் என்றும் அறியமுடிகின்றது .நெடுங்கணக்கு முதலியன கற்பிக்கும் ஆசிரியர் ‘கணக்காயர்’ என்னும் பெயரால் அழைக்கப்பெற்றார். உயர்ந்த கல்வியைக் கற்றுக் கொடுப்போர் ‘ஆசிரியர்’ என வழங்கப்பெற்றனர். உயர்கல்வியினைப் பெற, திருமணத்திற்குப்பிறகும் மனைவியை விட்டுப்பிரிந்து செல்லும் ஆடவர் இருந்தனர் என்றும் அதற்கு ‘ஓதற்பிரிவு’ என அகப்பொருள் இலக்கணமும் வரையறை செய்யப்பெற்றுள்ளது.

காவிரிப்பூம்பட்டினத்தில் ‘தருக்கவாதம்’ செய்தவற்கான கொடியானது பறக்கவிடப்பெற்று, அவ்விடத்தில் பல்துறை தருக்கமும் இடம்பெற்றது என்பதை ‘பட்டினப்பாலை’ குறிப்பிடுகிறது.

“பல்கேள்வித் துறை போகிய

தொல்லாணை நல்லாசிரியர்

உறழ்குறித் தெடுத்த உயர்கெழுகொடி”

என்னும் வரிகள் பலவாகிய நூற்கேள்வியினையும், முற்றுக்கற்றுச் சொல்லியபடி நடக்கும் பழைய ஆணைமொழியினையும் உடைய நல்லாசிரியர்கள் வாது செய்யக் கருதிக் கட்டின அச்சம் பொருந்தின கொடி என விளக்கம் பெறுகின்றது. ஆசிரியர்களுக்கிடையே பல்துறை சார்ந்த கருத்து மோதல்கள் நிகழ்ந்துள்ளன.

### 3.3.2. வானியல் அறிவு

சங்ககால மக்கள் வானியல் அறிவு பெற்று விளங்கினா் என்பதையும் பிரபஞ்சத்தின் தோற்றத்தையும் தன் அறிவின் மூலம் பாடல்களில் வெளிப்படுத்தி உள்ளதை ஐந்திணைப் பாகுபாடு தட்பவெப்பநிலை சார்ந்து பகுக்கப்பெற்ற நிலவியல் பாகுபாடு சங்ககால மக்களின் நுட்ப அறிவினை வெளிப்படுத்துவது.நிலம், நீர், தீ. காற்று, ஆகாயம் என்னும் ஐம்பெரும்பூதங்களால் ஆகியது இவ்வுலகம் என்னும் உண்மையினைக் கண்டறிந்து கூறியுள்ளனா். உலகம் தோன்றின நிகழ்வினைத் தற்கால அறிவியல் விண்ணுலக ஆய்வாளா் கூறியுள்ளதை உறையூா் முதுகண்ணன் சாத்தனாா் என்னும் புலவா் புறநானூற்றில் 30வது பாடலில் பாடியுள்ளாா்.

ஞாயிற்றின் தீப்பிழம்பு தெறித்து விழுந்து பூமியாகி, அதிலிருந்து தெறித்து விழுந்த ஒரு பகுதியே சந்திரனாகி, ஞாயிற்றிலிருந்து தெறித்து விழுந்த பூமி அதனது கவா்ச்சியால் இழுக்கப்பட்டு ஞாயிற்றினைச் சுற்றி வருகிறது என்றும், அவ்வாறே சந்திரன் ஞாயிற்றையும் பூமியையும் ஒருங்கே சுற்றிவருகிறது என்று கூறப்பெறும் அறிவியல் உண்மையையும் ஆகாயத்தில் மேலே செல்லச் செல்ல காற்றின் இயக்கம் குறையும் என்பதும் ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு மேல் காற்று அறவே இயங்குவது இல்லை என்பதையும் புறநானூற்றுப்பாடல் எடுத்துரைத்துள்ளது அப்பாடல்

‘‘செஞ்ஞாயிற்றுச் செலவும் அஞ்ஞாயிற்றுப்

பரிப்பும் பரிப்புச் சூழ்ந்த மண்டலமும்

வளிதிரிதரு திசையும்

வறிது நிலைஇய காயமும் என்றிவை

சென்றனற் அறிந்தோா் போல வென்றும்

இனைத்தென் போரும் உளரே’’

என்பது ஞாயிற்றின் பரிப்பினால் (இழுப்பாற்றலால்) பூமி அதனைச் சூழ்ந்து வருதலும், வானம் காற்றின்றி இருத்தலும் ஆகிய

உண்மைகள் சங்ககால மக்களின் கல்வி அறிவின் நுட்பத்தினை எடுத்துரைப்பது.



விண்மீன் இயக்கத்தைக் கொண்டு யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை இறந்துபடும் நாளை முன் கூட்டியே கணித்துப் பாடியுள்ளார் கூடலூர் கிழார் என்னும் புலவர். வெள்ளி வடக்கு இறைஞ்சின் மழை பொழியும் எனவும் தெற்கு எழின் மழைபொழியாது என்றும் சனி புதைதல்,வெள்ளி தென்திசை ஓடுதல் போன்ற பல வானியல் நிகழ்வுகள் பூமியில் நிகழவிருக்கும் நிகழ்வுகளுக்கு முன்னெச்சரிக்கையாக, முன்னறிவிப்பாக இருந்துள்ளதை சங்ககால வானியல் அறிவினைக் கொண்டிருந்த புலவர்களின் பாடல்கள் குறிப்பிட்டு உள்ளன. இவ்வாறு பகலும், இரவும் இடைவிடாமல் ஆகாயத்தைப் பார்த்து அங்கே நிகழும் வானவில், மின்னல், ஊர்கோள் (பரிவேடம்),தூமம், மீன் வீழ்தல், கோள்நிலை,மழைநிலை முதலியவற்றை ஆராய்ந்து(கண்ணி) கருதி பயன் கூறுவார்.அவர்களை‘கணி’என அழைக்கப்பெற்றனர். கணியன் பூங்குன்றனார், கணி மேதாவியார் போன்றபுலவர்கள் வானியல் அறிவு கொண்டிருந்தனர்.

## 3.4.சங்ககாலப் பெண்டிர் நிலை

சங்ககாலப் பெண்கள் நிலை மன்னரமைப்பு சார்ந்து உருவாக்கிய நிலையிலும் குடியுரிமை சார்ந்து பெண்கள் பெற்றிருந்த சுதந்திரநிலையையும் சங்கப்பாடல்கள் மூலம் அறிந்து கொள்ள இயலும். வீரம், கல்வி, கலை, போன்றவற்றில் சிறந்து விளங்கிய சங்ககாலப்பெண்கள் அரசப்பதவியையோ பிற பதிவிகளையோ நிர்வாகப்பொறுப்புகளையோ ஏற்று செயல்படுத்த முடியாத நிலையே இருந்துள்ளது. பெண்களுக்குரிய இல்லறக்கடமைகளைச் செவ்வனே செய்து ஆடவர் எவ்வழி அவ்வழியே நல்வழி என வாழ்ந்திருந்ததாக சங்ககால சமுதாயத்திலிருந்து அறிய முடிகின்றது.

### 3.4.1. மனையுறை மகளிர்

“வினையேஆடவர்க்குயிரே மனையுறை மகளிர்க்கு

ஆடவர் உயிரே”

என்னும் குறுந்தொகைப் பாடலும்

"இம்மை மாறி மறுமை யாயினும்

நீயாகியர் என் கணவரே

யானாகியர்நின் நெஞ்கநேர் பவளே"

என்னும் குறுந்தொகைப் பாடலும் பெண்கள் ஆண்களைச் சார்ந்து இயங்கும் வாழ்வியலைக் காட்டுகிறது. திருமணத்திற்கு முன் களவு வாழ்க்கையில் தலைவனைத் தேர்ந்தெடுக்கும் உரிமைபெறினும் உடன்போக்கு மேற்கொள்ளினும் கற்பு வாழ்க்கையில் தலைவன் வறுமையுற்ற பொழுது தந்தை தரும் செல்வத்தைப் பெறாது ஒரு பொழுது மறுத்து உண்ணும் தலைவியாக விளங்கியதை நற்றிணையில் 110வது பாடல் எடுத்துரைக்கின்றது. இல்லறம் அல்லது நல்லறமல்ல என்பதற்கேற்ப மனையுறை மகளிராக, மங்கலம் என்ப மனைமாட்சியாக, தெய்வற்தொழாஅது கொழுநன் தொழுதெழும் கற்புடை மகளிராக விருந்தோம்பும் சிறந்தோராக,ஈன்றுபுறந்தரும் மகளிராக பெண்கள் திகழ்ந்தனர். தலைவன் பரத்தையை நாடிச்சென்றாலும் தலைவி தலைவனை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் உடையவனாக விளங்கினான்.

தலைவன் இறந்துபடின் கைம்மை நோன்பு நோற்பதும், உடன் கட்டை ஏறுவதும் சடங்காக சங்ககால சமுதாயம் கொண்டிருந்ததை அறிய முடிகின்றது. "கணவன் இறந்தமையால்" புதல்வர் முதலிய குடும்பத்தவர்களை வளர்க்கும் கடமையினை மேற்கொண்டிருந்தனர். அதனால் ஒரு நாளைக்கு ஒரு வேலையே உணவருத்திக் கைம்மை நோன்பினை மேற்கொண்டனர்.

கணவனை இழந்த ஆதரவற்ற பெண்கள் பிறருடைய உதவியினை எதிர்பாராது பருத்திப்பஞ்சினை நூலாக நூற்றுத் தம் குடும்பத்தைப் பாதுகாத்தனர். இவர்கள் தம் குடும்ப வருவாய்க்குரிய தொழிலாக நூல் நூற்பதை மேற்கொண்டதால் (பருததிப் பெண்டிர்) என்னும் பெயரால் குறிக்கப்பெறுவர்".என க.வெள்ளைவாரணர் 'சங்ககால மக்கள்' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

### 3.4.2. மூதின் மகளிர்

வீரக்குடியில் பிறந்த பெண்களை ‘‘மூதின் மகளிர்’’ என்பர். ‘காவற்பெண்டு’ என்னும் பெண்பாற்புலவர் தன் மகன் எங்கே என்று கேட்போருக்கு

‘‘சிற்றில் நற்றூண் பற்றிநின் மகன்

யாண்டுளனோ என வினவுதீராயின் என் மகன்

யாண்டுளனோ ஆயினும் அறியேன்: ஓருா்

புலி சோ்ந்து போஇய கல்லஅளைப் போல

ஈன்று வயிறு இதுவோ

தோன்றுவன் மாதோ போர்க் களந்தானே’’

(புறநானூறு-86)

என்று பாடியுள்ளார். என் மகன் எங்கே என்ற கேட்பீராயின் பெற்றெடுத்த வயிறு இதுவாயினும் புலி குகையிலிருந்து வெளிப்பட்டது போல போர்க்களத்தில் மட்டுமே தோன்றுவான் எனக் குறிப்பிடுவதிலிருந்து வீர மகளிரின் வீரமகனின் வீரவுணர்ச்சியை அறிய முடிகின்றது. தன் மகன் போர்க்களத்தில் புறமுதுகு காட்டியிருந்தால் அவனுக்குப் பாலூட்டிய மார்பினை அறுத்தெறிவேன் என வஞ்சினம் கூறியதையும்

‘‘சிதைந்து வேறாகிய

படுமகன் இடக்கை காணூஉ

ஈன்ற ஞான்றினும் பெரிது உவந்தனளே’’

என மகனின் வீரவுணர்ச்சி கண்டு புறநானூற்று 275வது பாடலில் ஈன்ற பொழுதினும் பெரிதும் மகிழ்ந்த தாயினைக் காண முடிகிறது. ஒக்கூர் மாசாத்தியர் பாடிய

‘‘கெடுகசிந்தை கடிதிவள் துணிவே

மூதின் மகளிர் ஆதல் தகுமே

மேனாள் உற்று செருவிற்கு இவன்தனை

யானை எறிந்து களத்தொழிந்தனளே,

நெருதல் உற்ற செருவிற்கு இவன்கொழுநன்

பெருநிரை விலங்கி யாண்டுப் பட்டனனே''

குறிப்புகள்

என்னும் (புறநானூற்று -279) பாடலில் மூன்று வயது பாலகளைப் போருக்கு அனுப்ப தயார் படுத்துவதைப் பாடியுள்ளார். முதல் நான் போரில் தந்தையையும் அடுத்த நாள் போரில் கணவனையும் இழந்து விட்டு மூன்றாம் நாள் போரில் தன் மூன்று வயது பாலகனைப் போர்க்களத்திற்கு அனுப்பும் வீரமகளிரின் வீரவுணர்ச்சியை வியக்காமல் இருத்தல் இயலாது. சங்க மகளிரின் வீரவுணர்ச்சி நாட்டுப்பற்றின் எழுச்சியே. ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போல சங்கமகளிரின் வீரஉணாச்சியும் நாட்டுப்பற்றும் என்பதை சங்கஇலக்கியச் சான்றுகளிலிருந்து உணரமுடிகின்றது.

### 3.4.3 பெண்பாற்புலவர்கள்

சங்ககாலப் பெண்பாற்புலவர்கள் 41 பேர்கள் கவிபாடும் திறமும், மன்னர்களுக்கு அறிவுரை கூறி வழி நடத்தும் திறமும்கொண்டவர்களாக இருந்துள்ளனர். ஔவையார், காக்கைப்பாடினியார், நச்செள்ளையார்,ஒக்கூர்மாசாத்தியர், வெள்ளிவீதியார், மாறோக்கத்து நப்பசலையார், ஆதிமந்தியார், வெண்ணிக்குயத்தியார், காவற்பெண்டு, பொன்முடியார், நக்கண்ணையார், காமக்காணி பசலையார்,ஒல்லையூர்,தந்த பூதப்பாண்டியன் மனைவி, ஊன்பித்தையார், குப்பைக்கோழியார் எனப் பெண்பாற்புலவர்கள் தம் கவித்திறனையும் மொழித்திறனையும் வாழ்வியல் திறத்தினையும் வெளிப்படுத்திப் பாடல்களை இயற்றியுள்ளனர். சங்கப்பெண் புலவர்களில் ஔவையார் அதிக எண்ணிக்கையில் பாடல் பாடிய புலவராகவும், அதியமான் நெடுமான் அஞ்சிக்கு அறிவுறுத்தும் கருத்துக்களைப் பாடலாக இயற்றி வழி நடத்துபவராகவும் சுதந்திர மொழியை வெளியிடுபவராகவும் பல்வேறு பரிமாணங்களைக் கொண்டு இருந்துள்ளார் .

''நாடா கொன்றோ, காடா கொன்றோ,

அவலாகொன்றோ, மிசையாகொன்றோ,

எவ்வழி நல்லவா் ஆடவா்

அவ்வழி நல்லை, வாழிய நிலனே''

குறிப்புகள்

என்னும் பாடல் நாடு மேடோ, பள்ளமோ, நாடோ, காடோ அந்நிலத்தில் வாழும் மக்களின் பண்புகளைப் பொறுத்ததே என்று பாடியுள்ளாா். மன்னா்கள், வள்ளல்கள் புலவா்களுக்குப் பாிசில்களைக் கொடுக்கவில்லையெனினும் எத்திசை செல்லினும் அத்திசைக் சோறே எனக் கற்றோருக்கும் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்ற வகையில் பாடியுள்ளாா் ..அப்பாடலானது

''வாயிலோயே! வாயிலோயே

வள்ளியோா் செவிமுதல் வழங்குமொழிவித்தித்தாம்

உள்ளியது முடிக்கும், உரனுடை உள்ளத்து

பாிசிலா்க்கு அடையா வாயிலோயே

கடுமான்தோன்றல், நெடுமான் அஞ்சி

தன் அறியலின் கொல்? என் அறியலன் கொல்?

அறிவும் புகழும் உடையோா் மாய்ந்தென

வறுந்தலை உலகமும் அன்றே, அதனால்

காவினம் கலனே! சுருக்கினெம் கலப்பை

மரங்கொல் தச்சன், கைவல்சிறாா்

மழுவுடைக் காட்டகத்தற்றே

எத்திசைச் செலினும் அத்திசைச்சோறே''

என்னும் புறநானூற்று 24ஆவது பாடல் குறிப்பிடுகிறது. சங்ககாலப்பெண் புலவா்கள் வீரவுணா்ச்சியையும், காதலுணா்ச்சியையும் அறவுணா்ச்சியையும் தன்மான உணா்ச்சியையும் அவலஉணா்ச்சியையும் தாங்கள் இயற்றிய பாடல்கள் மூலம் தொிவித்துள்ளனா். அகப்பாடல்களும் புறப்பாடல்களும் பெண்களின்

*Self -Instructional Material*

மன உணர்ச்சியை மட்டுமின்றி அவர்கள் வாழ்ந்த காலத்தின் பதிவாகவும் விளங்குகின்றன.



## 3.5.ஐந்திணைப்பகுப்பு அமைப்பு

பழந்தமிழ் மக்கள் நிலத்தினை நானிலம்' என்று பிரித்து 'முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல்' என நால்வகைப்படுத்தி அந்நிலத்தில் வாழும் மக்களின் வாழ்க்கை முறைக்கேற்ப தொல்காப்பியம் குறிப்பிடும் இலக்கண முறைப்படி திணைப்பகுப்பு அமைந்துள்ளனர். நான்குவகை நிலங்களில் ஏற்படும் மாறுபாடுகளே 'பாலை' என்னும் நிலமாகி ஐந்திணையாகி உள்ளது.

'முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து

நல்லியல்பு இழந்து நடுங்குதுயர் உறுத்துப்

பாலை என்பதோர் படிவம் கொள்ளும்''

என்று தொல்காப்பியர் வரையறுத்துள்ளார். அந்த ஐவகை நில அமைப்பு தட்பவெப்பநிலைக்கேற்ப முதற்பொருள்,கருப்பொருள், உரிப்பொருள்யாவும் பகுக்கப்பெற்றுள்ளன.

''நிலமின்றேல் வரலாறு இல்லை, நிலமின்றேல்

உயிரில்லை – மனித இனம் இல்லை – மற்றைய

நாகரிகமும் பண்பாடும் இல்லை. எனவே

அவற்றைக் காட்டும் வரலாறும் இல்லையன்றொ?

இவ்வாறு நிலநூலுக்கும் வரலாற்றுக்கும் இடையே

அமைந்த தொடர்பு திண்ணியது. பிரிக்க முடியாது''

என்று ''தமிழக வரலாறு''என்னும் நூலில் எஸ்.எம்.ஜாமல் குறிப்பிட்டு உள்ளார்.

### 3.5.1. குறிஞ்சி

''எப்போதும் பொய்த்துப் போகாமல் ஆண்டுதோறும் பெய்யும் பருவமழையால் தென்னக மேட்டு நிலப்பகுதி, ஆண்டாண்டு காலமாக

அரிப்புற்று அரிப்புற்று வந்ததன் விளைவால் சிறு சிறு குன்றுகள் பரந்து கிடக்கும் நிலப்பரப்பாகும் குறிஞ்சியே . தென்னிந்திய மனிதன் வாழத் தொடங்கிய நனிமிகத் தொன்மை வாய்ந்த நிலப்பகுதியும்''எனத் தமிழ் பண்பாடு என்னும் நூலில் புலவர் கா. கோவிந்தன் குறிப்பிட்டுள்ளார்.



குறிஞ்சி நிலத்தில் வாழும் மக்கள் மலைகளைத் தங்கள் வாழிடமாகக் கொண்டு அங்கு விளையும் தேனும் தினையும் உண்டு, விலங்குகளை வேட்டையாடி வாழும் வாழ்க்கையைக் கொண்டு வாழ்ந்துள்ளதைச் சங்க இலக்கியப்பாடல்களும் ஆதாரங்களாக்கி உள்ளன. கபிலர் என்னும் புலவர் 'குறிஞ்சிக்கோர் கபிலர்' என்னும் சிறப்பினைப் பெற்றவர். குறிஞ்சித்திணையைப் பாடி அங்குள்ள மக்களின் வாழ்க்கையைச் சித்தரித்து உள்ளார். திணைப்புன வாழ்வும்,புனல் விளையாட்டும், புள் ஓம்பலும், பிற மனை நிகழ்வுகளும், குன்றக் குரவையும் வேலன் வெறியாடலும் அம்மலைவாழ் மக்களின் வாழ்வில் காணப்பெறும் தனிப்பெருஞ் சிறப்புகள்.

### 3.5.2 முல்லை

காடு அடர்ந்த நிலப்பகுதிகளில் பசுக்களையும் ஆடுகளையும் மேய்த்து வரகு முதலிய புன்புலப்பயிர்களை விளைவித்து வாழ்ந்தவர்கள் முல்லை நில மக்கள், இவர்களை 'ஆயர்' என்பர். இவர்கள் ஆநிரை ஓம்பலும் காட்டில் பெறும் இயற்கைப் பொருளைத் துய்த்தலும் பசுவின் பாலையும் தயிரையும் தங்கள் உணவாகக் கொண்டும் வாழ்ந்து உள்ளனர். முல்லை நிலமக்களின் வாழ்வியல் பண்புகளாக தன்னை நாடி வரும் விருந்திரை உபசரித்தலும், கொல்லேறு தழுவித் தம் வல்லமையைக் காட்டி (ஏறு தழுவுதல்) மணம் முடித்தலும், பிரிந்தவர்களின் துயரம் தீர்க்கும் வகையில் 'இன்னே வருகுவர் தாயர்' என்று ஆய்ச்சியர் விரிச்சி கூறுதலும், முல்லைப்பண் (ஆதிப் பண்ணாக உலக அளவில் 'குறிப்பிடப்பெறும் பண் தற்காலத்தில் மோகனராகம் என்பர்) குழல் ஊதி கொடிய காட்டினையும் பகக்களையும் தம் வசமாக்கிய நல்ல சமுதாய நெறிகளைக் கொண்டதே முல்லை நிலமாகும்.

### 3.5.3.மருதம்

காட்டினைச் சீர்திருத்தி நன்னிலமாக்கி நிலங்களையும், ஏரிகளையும் நீர்நிலைகளையும் உருவாக்கி நன்செய் பயிர்களை விளைவித்து அரசினை அமைத்து வாழ்ந்தவர்கள் மருதநிலமக்கள். இவர்களை 'உழவர்' எனப் பெயரிட்டு அழைத்தனர். வயல் சார்ந்த இடந்தோறும் மக்கள் கலந்து, ஒத்து வாழும் வாழ்க்கையும் நல்ல வேளாண் தொழில் புரிந்து வேண்டியவருக்கு வேண்டுவன வழங்கி, நல்ல வளமையான அரிசிச்சோறும் கனிகளும் விருந்தினருக்கு கொடுத்து சமுதாய வாழ்வினைச் செப்பம் செய்தவர்கள் கூடி வாழும் பண்பினை உலகினருக்கு அறிமுகம் செய்து நெறிப்படுத்தி வாழ்ந்த மருத நில மக்களின் பண்பும் வாழ்வும் வளமும் வரலாற்றின் அடிப்படையாக வரலாற்று அறிஞர்களால் சுட்டப்பெறுகின்றன.

### 3.5.4 நெய்தல்

கடலோரத்தில் குடிகளை அமைத்துக் கொண்டு கடலில் படகுகளைச் செலுத்தி வலை வீசி மீன்பிடித்து உப்பு விளைவித்து விலைப்படுத்தி வாழ்வதையே தொழிலாகச் கொண்டவர்கள் நெய்தல் நில மக்கள் இவர்கள் 'பரதவர்' என வழங்கப் பெற்றனர். அப்பகுதியே நெய்தல் நிலப்பகுதி, கடல்படுபொருள்களைக் கொண்டு தம் வயிறு ஓம்பி பண்டமாற்று செய்து, நாட்டு வாணிப வளனையும் பெருக்குவதற்கேற்ற புகார், முசிறி, தொண்டி, மாமல்லபுரம் போன்ற கடற்கரைப் பட்டினங்களுமே நெய்த நில மக்களின் வாழ்க்கையாகும்.

### 3.5.5 பாலை

வறண்ட மணல் பரந்த நிலமாகிய பாலை நிலப்பகுதி மனிதர்கள் வாழ்வதற்குத் தகுதியற்ற நிலமாக விளங்கியது. குறிஞ்சியும் முல்லையும் திரிந்து வறட்சியாவதே. தொழில் அற்ற நிலையில் வழிப்பறி செய்து வாழ்ந்ததால்,கள்வர் எனப்பட்டனர். பாலைநிலப்பகுதியிலேயே வாழ்ந்து மறம் வலிமை கொண்டவர்களை 'மறவர்கள்' என்று அழைத்தனர். பிற்காலத்து படைவீரர்களாக விளங்கினர். வழிப்பறி செய்யும் கொடுந்தொழில் செய்வதால் 'மறம்' என்னும் சொல் 'கொடுமை' என்னும் பொருளையும் குறித்தது.

உடும்புக்கறி போன்ற உணவையும் கொற்றவை போன்ற கடவுளைப் பாட்டிசைத்து பாடிப் போற்றலும் பாலைநில மக்களின் வாழ்வியலாகும்

## 3.6 தொகுப்புரை

குறிப்புகள்

சங்ககாலத்தில் தெற்றிப்பள்ளிக்கூடங்கள் குலபதி கணக்காயர் என்னும் பட்டங்கள் ஓதற்பிரிவு தருக்கவாதக்கொடி வானியல் அறிவு மனையுறை மகளிர் கடமைகளும் மூதின்மகளிர் வீரவுணர்ச்சியும் ஔவையார் காக்கைப்பாடினியார் நச்செள்ளையார் வெள்ளிவீதியார் ஆதிமந்தியார் காவற்பெண்டு குப்பைக்கோழியார் போன்ற பெண்பாற்புலவர்களும் குறித்து எடுத்துரைப்பதோடு சங்ககால மக்களின் வாழ்வியல் நிலமாக விளங்கிய ஐந்திணைப் பாகுபாடுகளான குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை ஆகிய இயற்கையோடு இயைந்த வாழ்வினையும் இக்கூறு எடுத்து இயம்பியுள்ளது .

## 3.7 மாதிரி வினாக்கள்

**1.'இளம்பாலாசிரியர்' என்று எவரைக் குறிப்பிடுகின்றார் ?**

'இளம்பாலாசிரியர்' என்பவர் தொடக்கப்பள்ளி ஆசிரியர் ஆவார் .

1.குலபதி என்னும் பட்டம் எவருக்கு வழங்கப்பெற்றுள்ளது ?

பதினாயிரம் மாணவர்களுக்கு மேல் கற்பித்தவர்களுக்கு 'குலபதி' என்னும் பட்டம் வழங்கப்பெற்றுள்ளது .

2.வானியல் அறிவினை முழுமையாக வெளிப்படுத்தும் பாடலைப் பாடிய புலவர் யார்?

முதுகண்ணன் சாத்தனார்

4.''வினையே ஆடவர்க்கு உயிரே மனையுறை மகளிருக்கு எவர் உயிராகக் கூறப்பெற்றுள்ளனர் ?

மனையுறை மகளிருக்கு ஆடவர் உயிராக கூறப்பெற்றுள்ளனர்

5.சங்கப்பெண்பாற்புலவர்கள் இருவரைக் குறிப்பிடுக

ஔவையார் காவற்பெண்டு

## 3.8 பயிற்சி வினா

குறிப்புகள்

1. சங்ககால மக்களின் வாழ்வியலில் கல்வி பெண்கள் நிலை குறித்து எழுதுக .
2. ஐந்திணைப் பகுப்பு விளக்குக

**மேலும் படித்தறிக**

1.புலவர்.கா.கோவிந்தனார்

தமிழகவரலாறு-சங்ககாலம்-அரசர்கள்

எழிலகம்

46-செல்வ வினாயகர் கோயில் தெரு

திருவத்திபுரம் (செய்யாறு )

திருவண்ணாமலை -604403

# பிரிவு – 2

## கூறு : 4 பாண்டிய நாட்டில் களப்பிரர் - களப்பிரர் வரலாறு –களப்பிரர் ஆட்சியால் தமிழகம் பெற்ற நன்மை தீமை



## களப்பிரர் - பல்லவர்

**4. பாட அமைப்பு**

**4.1 அறிமுகம்**

**4.2 நோக்கம்**

**4.3 களப்பிரர்**

**4.4. பாண்டிய நாட்டில் களப்பிரர்**

**4.4.1 களப்பிரர் வரலாறு**

**4.4.2 களப்பிரர் ஆட்சியால் தமிழகம் பெற்ற நன்மை தீமை**

**4.5 தொகுப்புரை**

**4.6 மாதிரி வினாக்கள்**

**4.7 பயிற்சி வினா**

**4.8 மேலும் அறிக**

### 4.1. அறிமுகம்

சங்ககால ஆட்சிக்குப் பிறகு தமிழக வரலாற்றில் 'இருண்ட காலம்'எனும் ஒரு காலம் தோன்றியது. கி.பி.250 முதல் 550 வரையிலான சங்கம் மருவிய காலமே தமிழகத்தின் 'இருண்டகாலம்' எனக் சுட்டப்படுகின்றது. இக்காலத்தில் தமிழகத்தை 'களப்பிரா்' என்னும் இனத்தார்கள் ஆட்சி புரிந்தார்கள். இவர்களின் பூர்விகம், மரபு முற்கால ஆட்சி குறித்து எவ்வித செய்தியும் கிடைக்கப்பெறவில்லை. அத்தகைய களப்பிரர் தமிழகத்தை எவ்வகையில் கைப்பற்றி ஆண்டனர். அவர்களை வீழ்த்தி தமிழகத்தில் ஆட்சியை நிலை நாட்டிய பல்லவர்கள், பாண்டியர்கள் குறித்தும்

அறிவதோடு களப்பிரர் காலத்தில் நிலவிய சமயம், மொழி, இலக்கிய நூல்கள் குறித்த தரவுகளையும் தெளிவுபடுத்தும்.

**குறிப்புகள்**

## 4.2 நோக்கம்

1. களப்பிரர் என்னும் ஆட்சியாளர்கள் குறித்து அறிதல்.
2. தமிழகத்தின் இருண்டகாலம் என அறிவிக்கப்படுவதன் காரணத்தைத் தெளிதல்.
3. தமிழக வரலாற்றில் ஏறுமுகங்களையும் இறங்குமுகங்களையும் மாணவர்கள் அறிவதன் மூலம் தமிழக வரலாற்றின் ஆட்சி அதிகாரமும் மக்கள் ஈர்ப்பும் எவ்வகையாக இருந்துள்ளன என்பதை புரிந்து கொள்ளல்.

## 4.3. களப்பிரர்

கடைச்சங்ககாலத்திற்கும் கி.பி.6ம் நூற்றாண்டில் கடைப்பகுதிக்கும் இடைப்பட்ட காலம் தமிழத்தின் இருண்டகாலமாகும் வடக்கே சாதவாகனப் பேரரசின் வீழ்ச்சி, தமிழகத்தில் பல்லவர்களின் வளர்ச்சி. சமுத்திரகுப்தனின் படையெடுப்பு போன்றன கி.பி.3ஆம் நூற்றாண்டில் தொண்டைமண்டலத்தில் மிகப்பெரிய அரசியல் குழப்பத்தை ஏற்படுத்தியது. சங்க காலத்தில் தமிழகத்தை ஆண்ட மூவேந்தர்களும் குறுநில மன்னர்களும் தமக்குள்ளே போரிட்டுப் போரிட்டு வலுவிழந்திருந்த நிலையில் வேங்கடத்தை ஆட்சிபுரிந்த ‘களவர்’ என்றழைக்கப்படும் களப்பிரர்கள் தமிழகத்திற்குள் நுழைந்து சோழ, பாண்டிய மன்னர்களை வென்று தம் ஆட்சியை நிலைநிறுத்திக் கொண்டனர்.

## 4.4 பாண்டிய நாட்டில் களப்பிரர்

“கயலொடு கலந்த சிலையுடைக் கொடுவரிப்

புயறுறழ் தடக்கைப் போர்வேல் அச்சுதன்”

என்னும் யாப்பருங்கலங்காரிகை மேற்கோள் செய்யுள் வரிகள் அச்சுதக் களப்பாளன் என்னும் பெயர் கொண்டவன் மூவேந்தர்களையும் வென்று அவர்களின் அரசுகளை ஒரு குடையின்

கீழ்க் கொண்டு வந்து ஆட்சி புரிந்தான் என்பதை விவரிக்கின்றது. புத்ததத்தர் என்னும் புத்தசமய வளர்ச்சியாளர் காவிரிநாட்டை களப்பிரர் குலத்தைச் சேர்ந்த அச்சுத விக்கந்தன் ஆட்சிபுரிந்த பெழுது தான் பூதமங்கலத்துப் பள்ளியிலிருந்து 'விநயவிநிச்சயம்' என்னும் நூலை இயற்றியதாகக் கூறியுள்ளார். இச்செய்தியை அந்நூலின் இறுதியில் பாலிமொழியில் குறிப்பிட்டுள்ளார். 'அச்சுதக்களப்பாளன்' என்னும் பெயர் கொண்ட வேந்தன் ஒருவன் முடியுடை மூவேந்தரையும் வென்று சிறைப்படுத்தினான் என்று தமிழ் நாவலர் சரிதை' குறிப்பிடுகின்றது.

''கருநாடன் காவலன் ஒருவன், நாற்படை கொண்டு பொதிய மலைக்குரிய தமிழ் மன்னனை வென்று மதுரையைக் கைக்கொண்டான் 'தமிழகமும் வரலாறும்'என்னும் நூலில் புலவர்.கா.கோவிந்தன் குறிப்பிட்டு உள்ளார். பெரியபுராணத்தில், மூர்த்திநாயனார்புராணம் கூறுவதும் வேள்விக்குடிச்செப்பேட்டுச்செய்தியும்களப்பிரர் பாண்டியர்களை வென்று 'மாறன்' என்று பெயரிட்டுக் கொண்டனர். 'முத்தரையர்' முத்துக்கள் கிடைக்கும் பகுதிக்கு (பாண்டிய நாட்டுக்கு) அரசர் என்று தம்மை அழைத்துக்கொண்டனர். அவ்வாறு இல்லையெனில் சேர, சோழ, பாண்டியரை வென்றவர் என்பதால் முத்; தரையர் எனப்பெயர் கொண்டிருக்கலாம்.

பாண்டிய நாட்டில் முத்தரையர் அரசு செலுத்திய பொழுது தான் கி.பி.470இல் சமண சங்கம் மதுரையில் கூட்டப்பெற்றது. 'திகம்பர தரிசனம்' என்னும் சமணநூல் இதனைக் குறிப்பிடுகின்றது.

### 4.4.1 களப்பிரர் வரலாறு

'களப்பிரர்யார்'என்னும் கேள்விக்கு 'பல்லவர் வரலாறு' என்னும் நூலில் டாக்டர்.மா. இராசமாணிக்கமும் தமிழகம் - வரலாறு – பண்பாடும் என்ற நூலில் வி.டி. செல்வமும், கி.பி.250-600 என்ற நூலில் சதாசிவ பண்டாரத்தாரும் ஆராய்ந்து கூறியுள்ளனர். மேலும் காசக்குடிச் செப்பேடுகள், கூரம்செப்பேடுகள், கொற்றமங்கலச்செப்பேடுகள், தளவாய்புரச்செப்பேடுகள் ஆகிய செப்பேடுகளில் குறிப்பிடப்பெற்றுள்ளன. காஞ்சி வைகுந்தப்பெருமாள் கோவில் கல்வெட்டுகள், திருப்புகலூர்க் கல்வெட்டுகள் ஆகியவற்றிலும் தமிழ்நாவலர்சரிதை, புத்ததத்தர் எழுதிய விநயவிநிச்சியம்,

அபிதம்மாவதாரம் ஆகிய நூல்களிலும் களப்பிரரைப் பற்றிய குறிப்புகள் உள்ளன.

குறிப்புகள்

களப்பிரர்யார் என்பதற்கு தமிழகத்தின் வடக்கில் காளத்தி மலையில் வாழ்ந்த களவர் என்ற இனமே களப்பிரர்இனம் என்பர் டாக்டர்.மா.இராசமாணிக்கனார்.'களவர்' என்னும் இனப்பெயரே கன்டைத்தில் 'களபரு' எனவும் வடமொழியில் 'களப்ரா' எனவும் தமிழில் 'களப்பிரர்' எனவும் உருமாறியது.

கருநாடகக் கல்வெட்டுக்களில் கலிகுபன், கலிதேவன் என்னும் பெயர்கள் உள்ளன. களப்பிரரைச் கவியரசர்கள் என வேள்விக்குடிச் செப்பேட்டிலும் செந்தலைக்கல்வெட்டிலும் குறிப்பிட்டு உள்ளனர். கருநாடக மன்னன் ஒருவன் பாண்டிய நாட்டை ஆண்டது பற்றியும் அவன் காலத்தில் சைவம் ஒழிந்து சமணம் செழித்தது குறித்தும் பெரிய புராணமும் கல்லாடமும் எடுத்து உரைத்துள்ளன.

களப்பிரரை மேற்குக்கங்கர்களுடன் தொடர்புப்படுத்தவர் மற்றொரு சாரார். பாண்டியர்கள் பலவீனம் அடைந்த பொழுது தமிழகத்திற்குள் நுழைந்த கங்கர்களே களப்பிரர் எனப்பட்டனர் என்பது ஒரு சில ஆய்வாளர்களின் கணிப்பு .சிலர் வேங்கடத்தைச் சேர்ந்தவர் என்றும் முத்தரையர்களே களப்பிரர் என்றும் குறிப்பிடுவர். எனினும் 'அச்சுதகளப்பாளன்' என்னும் மன்னனே களப்பிரர் ஆட்சி மன்னர்களில் முதன்மையானவாகக் குறிப்பிடப்படுகின்றார்.

கி.பி. 3 ஆம் நுற்றாண்டின் தொடக்கத்தில் தமிழகத்தில் தென்பகுதியாகிய பாண்டியநாடு களப்பிரர் ஆட்சிக்கும் வடபகுதியாகிய தொண்டை நாடு பல்லவர் ஆட்சிக்கும் உட்பட்டது. இவர்கள் காலத்தில் பாலி, பிராகிருத மொழி பெரிதும் ஆதரவு பெற்றன. சமணரும் பௌத்தரும் அரசு சமயங்களாக விளங்கின.

''தமிழகத்தின் வடஎல்லையாகிய வேங்கடத்தைப் 'புல்லி' என்பவன் ஆண்டு வந்தான். அவன் கள்வர் எனவும் 'களவர்'எனவும் வழங்கப்பட்ட ஓர் இனத்தைச் சேர்ந்தவர் எனவும் சங்க இலக்கியங்கள் அறிவிக்கின்றன'' என்று புலவர் கா.கோவிந்தனார் ''காலந்தோறும் தமிழகம்'' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்புகள்

"கல்லர் இளையர் பெருமகன் புல்லி

வியன்தலை நன்னாட்டு வேங்கடம்" (அகநானூறு-83)

"புடையலன் கழற்கால் புல்லிக்குதவும் (அகநானூறு-295)

"புல்லிய வேங்கட விறல் வரை" (புறானூறு-385)

போன்ற சங்க நூல்களிலிருந்து அச்சான்று குறிப்புகளை அறியலாம்.

"பல்லவரால் அழுத்தப்பட்டகளப்பிரர்

1. தொண்டை நாடு புகுந்த காலம் - கி.பி.200-220
2. சோழநாடு புகுந்த காலம் - கி.பி.225-250

   சோழ நாட்டை ஆண்ட காலம் - கி.பி.225-575
3. பாண்டிய நாடு புகுந்த காலம் - கி.பி.225-575

   பாண்டிய நாட்டை ஆண்ட காலம் - 250-550
4. ஏறக்குறைய கி.பி.550க்குப் பிறகு வலிமை

பல்லவர் சிற்றரசாகவும் பாண்டியர் சிற்றரசாகவும் கி.பி.10 ஆம் நூற்றாண்டு வரை ஆட்சி புரிந்தனர் என்று டாக்டர்.மா. இராசமாணிக்கனார்'பல்லவர் வரலாறு' என்னும் நூலில் கூறியுள்ளார். அக்கூற்றின் படி 'களப்பிரர் கி.பி.2ஆம் நூற்றாண்டிலிருந்து 10ஆம் நூற்றாண்டு வரை தமிழகத்தை ஆட்சி செய்திருக்கலாம். அச்சுத களப்பாளன், புல்லி போன்ற மன்னனைத் தவிர சோழநாட்டில் செந்தலை என்னும் ஊர் முத்தரையர் காலத்தில் சிறந்த நகரமாக விளங்கியதாக வரலாற்று ஆய்வாளர்கள் உறுதிப்படுத்துகின்றனர். அங்குள்ள கோயில் மண்டபத்தூண்களில் உள்ள கல்வெட்டுகளில் முத்தரை என்னும் பெயரிட்டு வாழ்ந்ததாக அறியமுடிகின்றது.

### 4.4.2 களப்பிரர் ஆட்சியில் தமிழகம் பெற்ற நன்மை தீமைகள்

*Self -Instructional Material*

கி.பி.2ஆம் நூற்றாண்டு தொடக்கத்தில் தமிழகத்தின் தென்பகுதியாகிய பாண்டியநாடு களப்பிரர் ஆட்சிக்கு உட்பட்டது. வடபகுதியாகிய தொண்டைநாடு பல்லவர் ஆட்சிக்கு ஆட்பட்டது.

களப்பிரர் ஆட்சியில் பாலியும் பல்லவர் ஆட்சியில் பிராகிருத மொழியும் ஆட்சி மொழிகளாக விளங்கின. சமணமும் பௌத்தமும் அரச சமயங்களாக விளங்கின. இவர்கள் ஆட்சியில் சோழநாட்டில் பௌத்தரும் பாண்டியநாட்டில் சமணமும் தழைத்து ஓங்கின. உறையூர், காஞ்சி, நாகப்பட்டினம், புகார்,பூதமங்கலம் ஆகிய இடங்களிலிருந்து புத்தமடங்கள் சமயம் பரப்பும் பணியில் ஈடுபட்டிருந்தன. புத்த சமயத்தின் தலைமையகமாக காஞ்சி விளங்கியது. அது புத்த சமயத்தொண்டும், பாலி இலக்கியத் தொண்டும் புரிந்ததாக ஷகந்த வம்சம்' குறிப்பிடுகிறது. களப்பிரர் ஆட்சியில் சமண, பௌத்த சமயங்களின் வரவும் அதனால் தமிழ் இலக்கியப்பாடுபொருளில் மாற்றங்களும் ஏற்பட்டன. இம்மாற்றம் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு நன்மையை அளித்த வேளையில் சமண, பௌத்த சமயங்களின் தாக்கம் அரசியல், சமுதாய நிலையில் தீமைகளையும் ஏற்படுத்தவே செய்தன. சமயக் காழ்ப்புணர்ச்சி உருவாகியது.

குறிப்புகள்

தமிழ்மொழியும் புறக்கணிக்கப்பட்டன. பண்பாட்டு மாற்றங்களும் விளைந்தன உயிர்க்கொலை வன்மையாக கண்டிக்கப்பெற்றது. கொல்லாமை, புலால் உண்ணாமை, பொய்யாமை, பிறப்பினால் உயர்வு தாழ்வு காணாமை என்னும் உயர்ந்த அறங்களைப் போற்றி வளர்த்தது மனிதமாண்பினை மேம்படுத்தும் நன்மைகளாகவும் விளங்கின.

‘‘களப்பிரர் காலத்தில் தமிழ் மொழிக்குத் தாழ்வும் பிராகிருதத்துக்கும் பாலி மொழிக்கும் அரசாங்கச்செல்வாக்கும் கிடைத்தன. எனினும் தமிழ் மன்னனின் ஆட்சிமொழி என்ற ஓர் உயர்நிலையினின்றும் இழிந்ததாயினும் அறத்தையும் தத்துவத்தையும் ஒழுக்கத்தையும் பொதுமக்களுக்குப் புகட்டும் நிலைமையை எய்திற்று. தமிழில் போதித்தால் ஒழியத் தத்தம் சமயங்கள் மக்களின் கருத்தைக் கவராது எனப் பௌத்தரும் சமணரும் நன்கு உணர்ந்தனர்’’ என்று கே.கே. பிள்ளை தமிழகவரலாறும்மக்களும்பண்பாடும் என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். இக்கூற்று தமிழ் மொழிக்கு விளைந்த தீமை, நன்மை இரண்டையும் சுட்டுவதாக உள்ளது.

பூச்சியபாதா் என்பவரின் மாணவரான ''வஞ்சிரநந்தி'' மதுரையில் திராவிடசங்கம் கி.பி. 470 ஒன்றே நிறுவினர். இச்சங்கத்தின் நோக்கமானது சமணசமயத்தின் கருத்துக்களை எடுத்துரைக்கும் நூல்களை உருவாக்குவதே. தமிழ் இலக்கியத்தில் நூல்கள் பல தோன்றின. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் பலவும் நீலகேசி, குண்டலகேசி, யசோதரகாவியம், சீவகசிந்தாமணி போன்றன உருவாவதற்கு இத்திராவிடசங்கமே தோற்றுவாயாக இருந்துள்ளது. சிலப்பதிகாரமும், மணிமேகலையும் இக்காலத்தில் தோன்றியதாக அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

''களப்பிரர் காலத்தில் வழங்கி வந்த பல்வேறுப்பட்ட சமயங்களுள் சிறப்பானவை வைதிகம், சைவம், பிரமவாதம்,ஆசீவகம், நிகண்டம், சாங்கியம், வைசேடிகள், பௌதிகம் அல்லது உலோகாயதம் என்பன இச்சமயங்களை வளர்த்த அறிஞர்கள் வாய்ப்பு நேர்ந்த பொழுதுதத்தம் கொள்கைகளை மக்களுக்கு எடுத்து விளங்கி வந்தனர். எனினும் சமயப் போர்கள் எதுவும் நிகழவில்லை'' என கே.கே. பிள்ளை தம் 'தமிழகவரலாறும்மக்களும்பண்பாடும்' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

களப்பிரர் ஆட்சியில் அரசியல் மாற்றங்கள் குறித்து பெருமளவு நன்மைகள் ஏற்படவில்லை. சமய மாற்றங்களும் சமயத்தின் மூலம் தமிழ் மொழிக்கான இலக்கிய வளர்ச்சிக்குரிய ஏற்றங்களுமே நன்மைகளாக இருந்துள்ளன. பல்சமயப் பிரிவினைப்போர் எதுவும் நிகழவில்லை என்பதும் குறிப்பிடத்தக்க ஒன்று. வேற்று இனத்தவா் தமிழகத்தை ஆட்சி புரிந்தனர் என்பதே தீமையாக உள்ளது. தமிழக அரசர்கள் ஆட்சியை இழந்ததும் கடைச்சங்கம் அழிந்ததும் தீமையாகும். அதனாலேயே 'இருண்டகாலம்' எனக் குறிப்பிடப் பெறும் காலமாக களப்பிரர் ஆட்சி காலம் வரலாற்றில் பதிவு செய்யப்பெற்று உள்ளது.

## 4.5 தொகுப்புரை

தமிழகத்தை 'இருண்டகாலம்' எனக் குறிக்கப்பெறுவதற்கு உரிய காலமாக களப்பிரர் காலம் இருந்துள்ளது .

.இக்காலத்தில் வேற்று இனத்தைச்சேர்ந்தவர்கள் ஆட்சி புரிந்துள்ளனர் என்பதையும் 'அச்சுதகளப்பாளன்' என்னும்

மன்னன்முதல் மன்னனாகவும் குறிப்பிடப்பெற்றுள்ளான் .

குறிப்புகள்

பாண்டிய நாட்டினைக் களப்பிரர் பெற்ற விதமும் களப்பிரர் வரலாறும் களப்பிரர் ஆட்சியில் தமிழகம் பாலி

பிராகிருத மொழி அரசாங்க மொழியாகவும் தமிழ் புறக்கணிப்பும் பெற்றது. சமணபௌத்தசமயங்கள் செல்வாக்குப் பெற்றன .அச்சமயங்கள் சார்ந்து தமிழ் இலக்கிய நூல்கள் தோன்றின .

## 4.6 மாதிரி வினாவிடைகள்

**1.**தமிழகத்தின் இருண்ட காலம் என்றழைக்கப்பெறும் காலம் எது?

களப்பிரர் காலம்

2 களப்பிரர் ஆட்சியில் புறக்கணிக்கப்பட்ட மொழி எது ?

களப்பிரர் ஆட்சியில் புறக்கணிக்கப்பட்ட மொழி தமிழாகும்

3. வச்சிரநந்தி உருவாக்கிய சங்கம் எது ?

திராவிட சங்கமாகும் .

4. களப்பிரர் ஆட்சியில் செல்வாக்குப் பெற்ற சமயங்கள்

5. எவை ?

சமணமும் பௌத்தமும்

6. களப்பிரரைப் பற்றிக் குறிப்பிடும் செப்பேடுகள் எவை ?

காசக்குடிச் செப்பேடுகள் கூரம் செப்பேடுகள் போன்றன .

4.7 பயிற்சி வினா

1. களப்பிரர் தமிழகத்தை ஆண்டநிலையை விளக்குக

4.8 மேலும் படித்தறிக

1.அ.மு.பரமசிவானந்தம்

தமிழக வரலாறு



தமிழ்க்கலைப்பதிப்பகம்

சென்னை-1995-5ஆம் பதிப்பு

## கூறு-5

## பல்லவர் தோற்றம் - முற்கால இடைக்கால பிற்காலப் பல்லவர்கள் வரலாறு – புதிய பல்லவர் மரபு – பல்லவரின் வீழ்ச்சியும் மறைவும் - பல்லவர் பாண்டியர் போர் பல்லவர் சாளுக்கிய தொடர்பு

5. பாடஅமைப்பு

5.1 அறிமுகம்

5.2 நோக்கம்

5.3 பல்லவர் தோற்றம்

5.4 முற்கால இடைக்கால பிற்காலப்பல்லவர்கள் வரலாறு

5.4.1 முற்காலப் பல்லவர்கள்

5.4.2 இடைக்காலப் பல்லவர்கள்

5.4.3 பிற்காலப் பல்லவர்கள்

**5.4.3.1 சிம்மவிஷ்ணு**

**5.4.3.2 மகேந்திரவர்மன்**

**5.4.3.3 நரசிம்மவர்மன்**

**5.4.3.4 நரசிம்மவர்மனுக்குப்பின் பல்லவமன்னர்கள்**

**5.5 புதிய பல்லவர் மரபு**

**5.6 பல்லவரின் வீழ்ச்சியும் மறைவும்**

**5.7 பல்லவர் பாண்டியர் போர்**

**5.8 பல்லவர் சாளுக்கிய தொடர்பு**

**5.9 தொகுப்புரை**

**5.10 மாதிரி வினாக்கள்**

**5.11 பயிற்சி வினா**

**5.12 மலும் படித்தறிக**

குறிப்புகள்

**.1.1அறிமுகம்**

தமிழக ஆட்சியில் களப்பிரருக்குப் பிறகு தமிழகத்தை ஆட்சி புரிந்தவர்கள் பல்லவர்கள் . பல்லவர்களின் தோற்றம் முற்கால இடைக்கால பிற்காலப்பல்லவ மன்னர்களின் ஆட்சி சிறப்பு போர் முதலியனவும் பிற்காலப்பல்லவர்களின் தனித்துவம் பெற்ற சிம்மவி'ணுமகேந்திரவர்மன் நரசிம்மவர்மன் போன்றோர் குறித்த செய்திகளும் அறிவதற்கு உரியன .புதிய பல்லவர் மரபு பல்லவர்களின் வீழ்ச்சியும் மறைவும் பல்லவர் பாண்டியர் போர் பாண்டிய சாளுக்கியதொடர்பு குறித்தும் அறிவதன் மூலம் தமிழக வரலாற்றின் பன்முக ஆட்சியாளர்களின் ஆட்சியினைத்தெரிந்து கொள்ளலாம் .

**1.1 நோக்கம்**

1. பல்லவர் ஆட்சி பற்றி அறிதல்

2. பல்லவ மன்னர்களின் சிறப்புகளைத் தெரிதல்

3. பல்லவமன்னர்களால் தமிழகத்தில் விளைந்த நன்மைகள் ஆட்சிநுட்பத்தினைத் தற்கால ஆட்சிமுறைக்குப் பயன்படுமாற்றை ஆராய்தல்

## 5.3 பல்லவர் தோற்றம்

குறிப்புகள்

பல்லவர் ஆட்சியானது 700 ஆண்டுகள் தென்னிந்தியாவில் நிலைத்திருப்பதும் அவர்கள் யார்? எங்கிருந்து வந்தனர் போன்ற கேள்விக்களுக்கு விடை தேடுவதும் கடினமாக இருந்துள்ளது. இந்திய வரலாற்று நூலாசிரியரான வின்ஸெண்ட் ஸ்மித் தமது ''பழைய இந்திய வரலாறு' என்னும் நூலின் முதற்பதிப்பில் பல்லவர் என்பவர் பல்லவர் என்னும் பாரசீகமரபினர் என்று குறிப்பிட்டு உள்ளார். அவரே அந்நூலின் தம்பதிப்பில் பல்லவர் என்பவர் தென் இந்தியாவிற்கே உரியவர். கோதாவரிக்கும் கிருஷ்ணநதிக்கும் இடைப்பட்ட வேங்கிநாட்டவராக இருக்கலாம் என்கிறார். அவர் தம் பதிப்பில் 'பல்லவர்' என்னும் சொல்லை 'பல்லவர்' என்னும் சொல்லோடு ஒப்பிட்டுப் பார்த்து அதனால் மட்டும் பல்லவர் பாரசீகராக இருக்க முடியாது பல்லவர் தென் இந்தியராக இருக்க முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பல்லவர் 'பஹ்லவர்' என்னும் பாரசீகமரபினர் என்று வின்ஸென்ட் ஸ்மித் கூறியதுபோலலே லீவிஸ், ரைஸ் வெங்கையா போன்ற வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பட்டு உள்ளனர். கி.பி. முதல் நூற்றாண்டில் பாரசீகப் படையினர் இந்தியாவை நோக்கி வந்த பொழுது பஹ்லவர் என்னும் சொல்லே குறிப்பிடப் பெறவில்லை என்று கே.கே. பிள்ளை கூறுவார்.

பல்லவர்கள் சாதவாகனச்சிற்றரசர்களே என்று சில வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிட்டு உள்ளனர். ஆந்திர மன்னர்களாகிய சாதவாகனருக்கு அடங்கிய தென்பகுதியை ஆண்ட சிற்றரசர்களே பல்லவர்கள் என்பர் என்று கூறியுள்ளனர்.

''பல்லவர் என்னும் சொல்லும் தொண்டையர் என்னும் சொல்லும் ஒரு பொருளையே குறிக்குமென்றும், சாதவாகனப்பேரரசு வீழ்ச்சியுற்ற பிறகு இப்பல்லவர்கள் காஞ்சிபுரத்தில் தம் பெயரில் ஆட்சிப்பரம்பரை ஒன்றை தொடங்கினர் என்றும் அதன் பின்னர் 'தொண்டையர்'

என்னும் பெயர் மறைந்து பல்லவர் என்னும் பெயருக்கு இடங்கொடுத்தது என்றும் டாக்டர். எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார் கருதுவார்'' என்று கே.கே. பிள்ளை தம் தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும்' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

பல்லவர்கள் தொண்டை மண்டலத்திலேயே தோன்றியவர்கள் என்னும் கொள்கைக்குப் போதிய சான்றுகள் உள்ளன. மன்னன் அசோகனின் குடிகளுள் 'புலிந்தர்' என்னும் இனத்தவர் இருந்தனர் என்றும் அப்புலிந்தர்களே குறும்பர் என்றும் அவர்கள் தொண்டை மண்டலத்தில் வாழ்ந்திருந்தனர் என்றும் வரலாற்றுச் சான்றுகள் குறிப்பிடுகின்றன. அசோகமன்னனுக்குப் பின்னர் அசுவத்தாமனின் பெயருக்கு முன்னும் 'பல்லவன்'என்னும் பெயர் காணப்படுகிறது. அசோகமன்னனின் கல்வெட்டுகள் இவற்றில் புலிந்தர்கள் 'பலடர்' என்று குறிப்பிடப்பெற்று அப்பலடர் என்றும் சொல்லே காலப்போக்கில் பல்லவர் என்றும் மாறியிருக்கலாம் என்கின்றனர் வரலாற்று ஆய்வாளர்கள்.

''தொண்டைமண்டலம் கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. முதல் நூற்றாண்டு வரையில் மிகவும் புகழ்பெற்று விளங்கியதற்கு மணிமேகலை சான்று பகர்கின்றது. கரிகாற்சோழன் கி.பி.இரண்டாம் நூற்றாண்டில் வரலாற்றுக்குத் தென்புறத்திலிருந்த தொண்டை மணடலப் பகுதியை வென்று சோழநாட்டுடன் இணைத்துக் கொண்டான். அப்பொழுது காஞ்சிபுரத்தில் வழங்கிவந்த மோரிய நிறுவனங்களை அவன் அழித்திருக்க முடியாது. ஏனெனில் பல்லவர்கள் சாதவாகனருக்குத் திறை செலுத்தி வந்தனர். ஆகையால் சாதவாகனருடைய பாதுகாப்பு காஞ்சிக்கு அரண் செய்தது. சாதவாகனரின் ஆட்சி கி.பி.225ல் வீழ்ச்சியுற்று அவர்களுக்குப் பின்னர் காஞ்சிபுரத்தில் பல்லவரே முழு ஆட்சிப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டனர். நாளடைவில் அவர்களுடைய ஆட்சியானது காஞ்சிபுரத்திலிருந்து வடக்கில் கிரு'ணாநதிவரையில் பரவிற்று. மயிதவொளு ஹீரஹதஹள்ளி என்னும் ஊர்களில் கிடைத்துள்ள சிவஸ்கந்தவர்மனின் பிராகிருத மொழிச்செப்பேடுகள் இதற்குச் சான்றுகள் காணப்படுகின்றன'' என கே.கே பிள்ளை குறிப்பிடும் கூற்று பல்லவர் பற்றிய தோற்றத்தில் சாதவாஹனர் பல்லவராக இருக்கலாம் என்றும் உறுதியைத் தருகின்றது.

குறிப்புகள்

பல்லவர்கள் வாகடர்களுள் ஒரு பிரிவினர் என்றும் குறிப்பிட்டு உள்ளனர். பல்லவரைச் சேர்ந்த வீரகூர்ச்சா என்பவன் நாககன்னிகை ஒருத்தியை மணந்தான் என்றும் கூறுவர். சோழன் வெள்வேற் கிள்ளிக்கும் பீலிவளைஎன்ற நாககன்னிகைக்கும் தொண்டைமான் இளந்திரையன் பிறந்தான். அவனுடைய பெயரினால் தொண்டை மண்டலம் தோற்றுவிக்கப்பட்டது இவ்வரலாற்றினை மணிமேகலை மூலம் அறியமுடிகின்றது.

'மணிபல்லவம்' என்ற தொடரில் உள்ள 'பல்லவ' என்ற பெயரைத் தன் மூலப்பெயராகக் கொண்டு தொண்டைமான் இளந்திரையன் காஞ்சியிலிருந்து ஆட்சி புரிந்தான் என்றும் குறிப்பிடுகின்றனர். 'பல்லவர்' என்ற சொல்லின் தமிழாக்கமே 'தொண்டையர்' எனக் குறிப்பிடுவர் - 'பல்லவர் தொண்டையர்கோன்' என்னும் தொடர் திருமங்கையாழ்வார் பாடலில் பாடப்பெற்றுள்ளது. மகேந்திரவர்மப் பல்லவனை தொண்டைமாலை அணிந்தவன் எனக் கூறுவர். இவ்வகையில் பல்லவர்கள் 'தொண்டையர்' எனக் குறிக்கப்படும் சொல்வழக்கு இணையும் வரலாற்றுக் குறிப்புகளையும் அறியமுடிகின்றது.

## 5.4. முற்கால இடைக்கால பிற்காலப் பல்லவர்கள் வரலாறு

பல்லவர் ஆட்சி புரிந்த காலத்தை மூன்றாகப் பிரிப்பர்.

1. பிராகிருதப் பட்டயங்களை வெளியிட்ட (கி.பி.250-340) முற்காலப் பல்லவர்கள்

2. வடமொழிப் பட்டயங்களை வெளியிட்ட (கி.பி.340-575) இடைக்காலப் பல்லவர்கள்

3. கிரந்தப் பட்டயங்களை வெளியிட்ட (கி.ப.574-900) பிறகாலப் பல்லவர்கள்.

### 5.4.1. முற்காலப் பல்லவர்கள்

முற்காலப் பல்லவர்களும் இடைக்காலப் பல்லவர்களும் வரலாற்று முக்கியத்துவம் பெறவில்லை. பெருவேள்விகளைச் செய்தமை காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு பேரரசை நிறுவ

முயன்றமை ஆகிய காரணங்களால் முற்காலப் பல்லவர்களுள் சிவஸ்கந்தவர்மன் (கி.பி.300-325) முக்கியமான மன்னனாக விளங்குகிறான்.

மூன்று பட்டயங்களின் அடிப்படையில் முற்காலப் பல்லவர்களைக் கீழ் வருமாறு முறைப்படுத்தலாம்.

பப்பதேவன்

சிவஸ்கந்தவர்மன்

விசயஸ்கந்தவர்மன்

இளவரசர் புத்தவர்மன்

புத்யங்குரன

### 5.4.2. இடைக்காலப் பல்லவர்கள்

இடைக்காலப் பல்லவர்களை அறிவதற்கு வடமொழியிலுள்ள செப்பேடுகளும் இரண்டொரு கல்வெட்டுகளுமே துணையாக உள்ளன. செப்பேடுகளைப் பல்லவமன்னர்கள் பலர் வெளியிட்டுள்ளனர். இடைக்காலப்பல்லவர் பட்டயங்களிலிருந்து பல்லவ அரசர்களின் அரசமுறையை வரலாற்று அறிஞர்கள் வகுத்துள்ளனர்.

குமாரவிஷ்ணு (1) - (கி.பி.340 - 350)

கந்தவர்மன் (1) – (கி.பி.350 – 375)

வீரகூர்ச்சர்மன் - (கி.பி.375 – 400)

கந்தர்வன் (11) (கி.பி.400-435)

இவன் பிள்ளைகள் மூவர்)

சிம்மவர்மன் (1) இளவரசன் குமாரவி'ணு(2)

கந்தவர்மன் (2)

நந்திவர்மன் (1) சிம்மவர்மன் (2) புத்தவர்மன்

கி.பி. 550-575)　　　குமாரவிஷ்ணு (3)

(கி.பி. 525-550)　　　விஷ்ணு கோவர்மன்

சிம்மவிஷ்ணு (கி.பி.575-615)

குறிப்புகள்

இடைக்காலப் பல்லவர்கள் பலர் தம் காலம் முழுவதுமே கி.பி.340-575 வரை குப்தர், வாகாடகர், கதம்பர், சாளுக்கியர், சோழர் போன்ற மன்னர்களோடு ஓய்வின்றிப் போர் செய்தனர். பகைவர்கள் பேரரசின் பல பகுதிகளைக் கைப்பற்றிக்கொண்டனர். தலைநகரமும் மாற்றப்பட்டுக் கொண்டே இருந்ததால் நிலையான ஆட்சியை வழங்க முடியாத காலமாக இடைக்காலப் பல்லவர்களின் காலம் இருந்துள்ளது.

### 5.4.3. பிற்காலப் பல்லவர்கள்

பிற்காலப் பல்லவர்கள் வரலாற்றினை அறிவதற்கு பல்லவர்கள் வெளியிட்ட பட்டயங்களும் கல்வெட்டுகளும் மட்டுமின்றி பல்லவ நாட்டைச் சுற்றிலும் ஆட்சி புரிந்த சாளுக்கியர், இராட்டிரகூடர், கதம்பர், கங்கர், பாண்டியர், முத்தரையர் (களப்பிரர்) பாணர் போன்றோரின் பட்டயங்களும் கல்வெட்டுகளும் துணையாக விளங்குவன. இலக்கியச் சான்றுகளாக சைவசமய இலக்கியமாகிய தேவாரத்திருமுறைகளும் வைணவ சமய இலக்கியமாகிய நாலாயிரத்திவ்வியப் பிரபந்தங்களும் பல்லவரைப் பற்றிய குறிப்புகளைத் தருகின்றன. கி.பி.615-630 வரை மகேந்திரவர்மன் வெளியிட்ட ‘‘மத்தவிலாசப் பிரகசனம், அவந்திசுந்தரிகதா, பாரத வெண்பா, நந்திக்கலம்பகம், பெரியபுராணம் என்பன சிறந்த வரலாற்றுக் குறிப்புகளாகும். காசக்குடி, கூரம், வேலூர் பாளையப்பட்டயங்கள் பிற்காலப் பல்லவ அரசர்களின் பட்டியலைத் தருகின்றன. இவற்றில் இடைக்காலப்பல்லவ அரச முறையிலுள்ள குழப்பங்கள் இல்லை. பிற்காலப் பல்லவர்களின் அரசமுறையில் குழப்பங்கள் ஏதுமில்லை.

மூன்றாம் சிம்மவர்மன்

சிம்மவிஷ்ணு　　　பீமவர்மன்

மகேந்திரவர்மன் (1)　　　புத்தவர்மன்

| | |
|---|---|
| நரசிம்மவர்மன் (1) | ஆதித்தவர்மன் |
| மகேந்திரவர்மன் (2) | கோவிந்தவர்மன் |
| பரமேசுவர்மன் (1) | இரண்யவர்மன் |
| நரசிம்மவர்மன் (2) | தந்திவர்மன் (2) |
| பரமேகவாரர்மன் (2) | தந்திவர்மன் |
| நந்திவர்மன் (3) | மகேந்திரவர்மன் |
| நிருதுங்கவர்மன் | |
| அபராசிதவர்மன் | |

குறிப்புகள்

### 5.4.3.1 சிம்மவிஷ்ணு (கி.பி.515-615)

பல்லவர் அரச மரபில் பெரும் புகழ் பெற்ற முதல் மகேந்திரவர்மனின் தந்தை சிம்மவிஷ்ணு கி.பி.575முதல் 625 வரை ஆட்சி புரிந்தமன்னன் காஞ்சியைக் களப்பிரரிடமிருந்து மீட்டு தலைநகராகக் கொண்ட ஆட்சி புரிந்தமன்னன் காசக்குடிப் பட்டயம் சிம்மவிஷ்ணு மன்னன் களப்பிரர்,சோழர், மழவர் ஆகியோரை வென்றான் என்று குறிப்பிடுகின்றது. மகேந்திரவர்மன் எழுதிய மத்தவிலாசப்பிரகசனத்திலும் சிம்மவி'ணு மன்னனின் வெற்றிகள் குறிப்பிடப்பெற்றுள்ளன.

சிம்மவிஷ்ணு குகைக்கோவில்கள் பலவற்றை நிர்மாணித்தான். சிறந்த வைணவ அடியார் என்பதால் ஆதிவரதர் குகைக்கோவிலை அமைத்து உள்ளான். அம்மன்னனின் இரு மனைவியர் சிலைகளும் சிம்மவிஷ்ணு போதாதிராசன்' என்னும் பெயரும் பொறிக்கப்பெற்றுள்ளன. பாரவி, தண்டி ஆகிய வடமொழிப் புலவர்கள் இம்மன்னனின் அவையில் வீற்றிருந்து இலக்கிய இலக்கணத்தை உருவாக்கினர்.

**5.4.3.2**

**மகேந்திரவர்மன் (கி.பி.615 – 630)**



சிம்மவிஷ்ணு மகனான மகேந்திரவர்மன் கி.பி.7ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பல்லவ அரியணை ஏறிய மன்னன். சமணம் உயர்நிலையிருந்து வீழ்ச்சி அடைந்து சைவம் தழைத்தது. சமண சமயத்திலிருந்து சைவ சமயத்திற்கு மாறிய மன்னன் மாமல்லபுரம் போன்ற குகைக்கோவில்களை உருவாக்கியவன். இவன் காலத்தில் பல்லவர் சாளுக்கியர் போர் உச்சநிலையை அடைந்தது. சிற்பம், ஓவியம், இசை, நாடகம் போன்றன இம்மன்னனின் ஆட்சியில் வளர்ச்சியுற்றன. இவன் காலத்தைச் சேர்ந்தவரே 'அப்பர்' என்று அழைக்கப்பெற்ற திருநாவுக்கரசர்.

மகேந்திரவர்மன் காலத்தில் பல்லவர் சாளுக்கியரிடையே நிகழ்ந்த போர் குறிப்பிடத்தக்கது. கி.பி.610 இல் அரசாட்சிக்கு வந்தவன் இரண்டாம் புலிகேசி. கி.பி.615ல் அரசாட்சிக்கு வந்தவன் மகேந்திரவர்மன். வடநாட்டில் ஹர்ஷவர்த்தனன் ஆட்சி புரிந்தான். ஹர்ஷனின் வலிமைக்கு அஞ்சிய லாடர். மானவர்,கூர்ச்சரர் ஆகியோர் தற்காப்பிற்காக புலிகேசியின் துணையைப் பெற்றனர். அதனால் இரண்டாம் புலிகேசியின் ஆட்சி நீட்சிப்பெற்றது. ஹர்ஷவர்த்தனை வென்றதால் தென்னகத்தின் மீது தன் பார்வையைச் செலுத்தினான் இரண்டாம் புலிகேசி புள்ளலூரில் மோதின படைகளில் எப்படை வெற்றி பெற்றது என அறியமுடியவில்லை. மகேந்திரவர்மன் காஞ்சியைக் காப்பாற்றிக் கொண்டான் என்று அறியமுடிகின்றது. மேற்குக் கங்க மன்னனின் மகளைப் புலிகேசிக்கு மணம் செய்து கொண்டதால் சாளுக்கியருக்கும் பல்லவருக்கும் நடைபெற்ற போரில் மேற்குக் கங்க மன்னர் துர்விநீதன் புலகேசிக்குத் துணை நின்றான். அதற்காக அவனைத் தண்டிக்க நினைத்த மகேந்திரன் கங்க நாட்டின் மீது படையெடுத்து வெற்றிபெற்றதாக துர்விநீதன் கல்வெட்டிலிருந்து அறியமுடிகிறது.



மகேந்திரவர்மன் இசைப்புலமையை குடுமியான் மலைக்கல்வெட்டு தெரிவிக்கின்றது. இசைநுணுக்கம் பற்றிய குறிப்புகளும் பண் வகுத்தோரின் பட்டியலும் உள்ளன. 'சங்கீரணசாதி' என்னும் புனைபெயரினையும் கொண்டுள்ளான். மகேந்திரர்மனின்

ஓவியப் புலமையை மாமண்டூர்க்கல்வெட்டும் சித்தன்ன வாசல் படைப்புகளும் விளக்கியுள்ளன. 'சித்திரகாரப்புலி' என்னும் சிறப்புப்பெயரும் கொண்டுள்ளான். கோவில் கட்டிடக்கலையில் சிறந்து விளங்கியதால் 'சேத்தகாரி' என்றும் வழங்கப்பெற்றான் . 'மத்தவிலாச பிரகசனம்' என்னும் வடமொழி நாடக நூலினையும் இயற்றிய கலைத்திறனாளன். பல்லவர் காலச் சமயநிலையை இந்நாடகம் விவரித்துள்ளது.

மகேந்திரவர்மன் சிங்கவரம், சீயமங்கலம், தளவானூர், திருச்சி, நாமக்கல், பல்லாவரம், மகேந்திரவாடி, மண்டகப்பட்டு, மாமண்டூர், மாமல்லபுரம், வல்லம் ஆகிய இடங்களில் கோவில்கள் அமைத்துள்ளான். கல், மரம், உலோகம், சுண்ணாம்பு இல்லாமல் குகைக்கோவில்களைக் கட்டமைத்த சிறப்பிற்குரிய மன்னன் மகேந்திரவர்மன்.

மகேந்திரவர்மன் சமணனாக இருந்து திருநாவுக்கரசர் போல் சைவசமயத்திற்கு மாறிய மன்னன். இச்செய்திகள் "லிங்கத்தை வழிபடுகின்ற குணபரன் என்ற பெயர் கொண்ட அரசன் அந்த லிங்கத்தினால் புறச்சமயத்திலிருந்து திரும்பிய ஞானம் உலகத்தில் நீண்ட நாள் நிலைப்பதாக எனத் திருச்சிக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது" என டாக்டர் ஆ. இராமகிருட்டினன் தம் 'தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும்' என்றும் நூலில் குறிப்பிட்டு உள்ளார்.

### 5.4.3.3 நரசிம்மவர்மன் (கி.பி.630-668)

மகேந்திரவர்மனைப் போலவே பெருவீரனாக விளங்கிய மன்னன், மகேந்திரவர்மனின் மகன் நரசிம்மவர்மன். இவன் ஆட்சிக்காலம் கி.பி.630லிருந்து 668 வரை உள்ள காலமாகும். தென்னிந்திய வரலாற்றில் சிறப்பிடம் பெற்ற ஆட்சிகளில் இம்மன்னனின் ஆட்சிக்காலமும் அடங்கும். இவன் காலத்தில் குறிப்பிடத்தக்க நிகழ்வுகள்.

1. வாதாபியை வென்று கைப்பற்றியது.
2. இலங்கைப் படையெடுப்பு
3. கோவில்களும் கோட்டைகளும் அமைத்தமை – மாமல்லபுரம்

4. (யுவான் சுவாங்)சீனப்பயணி வருகை புரிந்தது.

5. சைவசமயத்தின் ஏற்றம்.

குறிப்புகள்

பல்லவசாளுக்கியப் போர் நரசிம்மவர்மனின் காலத்திலும் இரண்டாம் புலிகேசி மீண்டும் பல்லவநாட்டினைத் தாக்கி வெற்றி பெறும் முயற்சியில் பல்லவருக்கு அடங்கிய சிற்றரசர்களைத் தாக்கி வெற்றி பெற்ற பிறகு நரசிம்மவர்மனின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகளைத் தாக்கினான். தோல்வி ஏற்பட்டு பின்வாங்கிய சாளுக்கிய மன்னனைத் தொடர்ந்து விரட்டி வாதாபியைக் கைப்பற்றினான் நரசிம்மவர்மன் . வாதாபி முற்றிலும் அழிக்கப்பட்டு வெற்றித்தூண் நிறுவப்பட்டது. அதனால் ‘வாதாபிக்கொண்டான்’ என்னும் சிறப்பினை நரசிம்மவர்மன் பெற்றான். இதற்கு உறுதுணையாக படைத்தளபதி பரஞ்சோதியாகிய அறுபத்துமூன்று நாயன்மார்களுன் ஒருவரான சிறுத்தொண்டர் விளங்கினார். நரசிம்மவர்மன் வாதாபி கொண்ட நிகழ்வினை சேக்கிழாரும் பெரியபுராணத்தில் கி.பி.12 ஆம் நூற்றாண்டில் பாடியுள்ளார்.

“மன்னவர்க்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாபித்∴ தொன்னகரம் துகளாகத் துளைநெடுங்கை வரையுகைத்துப்∴ பண்மணியும் நிதிக்குவையும் பகட்டினமும் பரித்தொகையும்∴ இன்னனஎண்ணில கவர்ந்தே இகலரசன் முன் கொணர்ந்தார்.’’ என்பது அப்பாடல்,

இவ்வாதாபி கொண்ட வரலாற்றுப் போரினைக் கூரம்பட்டயம், உதயசந்திரமங்கலப்பட்டயம், வேலூர்ப்பாளையப்பட்டயம், வாதாபியில் உள்ள கல்வெட்டு போன்றன தெரிவிக்கின்றன. சாளுக்கியரின் தோல்வியை கர்நூல் பட்டயமும், சாளுக்கியரின் சோரம் பட்டயமும் குறிப்பிட்டு உள்ளன.

நரசிம்மவர்மன் இலங்கை மானவர்மனுக்கு உதவும் பொருட்டு இலங்கை மீது போர் தொடுத்து வெற்றியை அடைந்தான் என்று காசக்குடிப்பட்டயமும் மகாவம்சமும் குறிப்பிட்டு உள்ளன.

*Self -Instructional Material*

நரசிம்மவர்மன் காலத்தில் சீனப்பயணி யுவான்சுவாங் தமிழகத்திற்கு வருகை தந்து குறிப்புகளை எழுதி வைத்துள்ளார்.

காஞ்சியில் நூற்றுக்கு மேற்பட்ட புத்தமடங்களும், பத்தாயிரம் பௌத்த துறவிகளும் இருந்துள்ளனர். நாலந்தா பல்கலைக்கழகத்தின் தலைவரும் புத்தசமயத் தத்துவ மேதையுமான 'தர்மபாலர்' காஞ்சியைச் சேர்ந்தவர் என்று குறிப்பிட்டுள்ளார். தமிழகத்தின் நாட்டுவளமும் மக்களின் அச்சமற்ற மனதைரியமும், கற்றோரை மதிக்கும் பண்பும், வணிகச் சிறப்பினையும் சிறப்பித்துக் கூறியுள்ளார்.

நரசிம்மவர்மன் மாமல்லபுரம், புதுக்கோட்டை திருமயம், திருவெள்ளரை பெருமாள், குகைக்கோவில், நாமக்கல்லில் உள்ள நரசிங்கப்பெருமாள் குகைக்கோயில் மற்றும் குடுமியான் மலை, திருச்சி ஆகிய இடங்களிலுள்ள குகைக்கோயில்கள் ஆகிய கோயில்களை உருவாக்கிய கலை ஈடுபாடுடைய மன்னன். மாமல்லபுரத்தில் குகைக்கோவில்கள், தேர்கள் எனப்படும் ஒற்றைக்கல்கோவில்கள், கற்சிலைகள்,**மகிடாசுரமண்டபம்**, வராகமண்டபம், திருமூர்த்தி மண்டபம் பஞ்சபாண்டவர் ரதங்கள் போன்றன வரலாற்றுச் சிறப்பு மிக்கவை. மாமல்லபுரத்தின் பாறை மீது அமைந்துள்ள கோவர்த்தன மலையைக் கண்ணன் ஏந்தி நிற்கும் சிலை, அர்ச்சுனன் தவம் போன்றன கற்சிலை படைப்பிற்கு சான்று மட்டுமல்ல காலத்தினால் அழியாதவை.

நரசிம்மவர்மன் மகாமல்லன், ஸ்ரீபரன், ஸ்ரீமேகன், ஸ்ரீநிதி, இரணசயன், அத்தியந்தகாமன், அமேயமாயன் நயநாங்குரன் போன்ற பட்டப்பெயர்களையும் பெற்ற மன்னன்.

### 5.4.3.4 நரசிம்மவர்மனுக்குப் பின் ஆண்ட பல்லவ மன்னர்கள்

நரசிம்மவர்மனுக்குப் பிறகு இரண்டாம் மகேந்திரவர்மன் ஆட்சிபுரிந்தான். நரசிம்மவர்னின் மகனாகிய இவன் வரலாறு கூறும் பட்டயம் எதுவும் கிடைக்கவில்லை. அறவழியில் ஆட்சி புரிந்ததாக வேலூர் பாளையப்பட்டயம் தெரிவிக்கிறது. இவன் ஆட்சி நெடுங்காலம் இல்லை. இவனுக்கு பிறகு பரமேசுவரவர்மன் காலம் கி.பி.670-685 ஆண்டுகளாகும். இம்மன்னன் பாண்டியன் நெடுமாறனோடு போரிட்டுத் தோற்ற சாளுக்கியனைப் பின்னர் பரமேசுவரன் பெருவளநல்லூரில் போரிட்டு வென்றான் என்பதை சேந்தூர்ப்பட்டயமொழி தெரிவிக்கிறது. இப்போர் நெல்வேலிப்போர் எனக் குறிக்கப்பெறுகின்றது.

குறிப்புகள்

பரமேசுவரவர்மன் சிறந்த சிவபக்தன் என்பதால் 'கூரம்' என்னும் சிற்றூரில் கற்கோவில் ஒன்றை இவனுக்குக் கட்டினான். இதற்கு 'பரமேசுவரமங்கலம்' எனத் தன் பெயர் பெற்ற சிற்றூரை மானியமாக தந்தான். அக்கோவில் 'வித்யாவிந்தபல்லவ – பரமேசுவரவ க்ருகம்' எனப் பெயர்பெற்றது. மகாபலிபுரத்தில் 'கணேசர்கோவில்' இராமனுசர் மண்டபம் அமைத்தான். இம்மன்னன் சித்ரமாயன், குணபாசனன், அத்யந்தகாமன், ஸ்வஸ்தன், ஸ்ரீநிதி, ஸ்ரீபரன், ரணசயன், தருணாங்குரன், காமராசன் போன்ற விருதுப்பெயர்களையும் கொண்டிருந்தான். வடமொழியில் புலமையும் வீரமும் சிவபக்தியும் கொண்ட மன்னனாக பரமேசுவரவர்மன் விளங்கினான் என்பதை வரலாற்றுச்சான்றுகள் வழி அறியமுடிகின்றது.

இராசசிம்மன் கி.பி. 666 லிருந்து 705 வரை ஆட்சி புரிந்ததாக கூறப்படுகின்றது. சாளுக்கியர் பட்டயங்களான சோரப்பட்டயம், வக்கலேப் பட்டயம் போன்றன விநயாதித்தன் என்ற மன்னன் தெற்கே இருந்த பல்லவ, சோழ பாண்டிய, சேர, நாடுகளை அடக்கிக் களப்பிரர், ெ□ாய்சளர், மாளவர்களுடைய வலிமையைக் குறைத்து எங்கும் அமைதி ஏற்படும் படியாக படையெடுத்தான் என்று தெவிக்கின்றன. இராசசிம்மன் காலத்தில் கொடிய பஞ்சம் தோன்றியதாக 'அவந்தி சுந்தரிகதா' என்னும் நூலில் அம்மன்னனின் அவைப்புலவரான 'தண்டி' என்போர் குறிப்பிட்டுள்ளார். இப்பஞ்சம் கி.பி.686 முதல் 689 வரை (3 வருடகாலம்) இருந்ததாக சீன நூல் ஒன்று தெரிவிக்கின்றது. அப்பொழுது 'வச்சிரபோதி' என்னும் பௌத்தப்பெரியார் காஞ்சிக்கு வருகை தந்து பஞ்சம் தீர இறைவனை வேண்டினார் என்றும் பிறகு மழை பெய்தது என்றும் சீன நூல் குறிப்பிட்டுள்ளது. பஞ்சம் நீங்கிய பிறகு காஞ்சியில் கைலாசநாதர் கோயிலைக் கட்டியதோடு ஐராவதேச்சுரர் கோயிலையும் மகாபலிபுரத்தில் கடற்கரை ஓரமாக உள்ள கோயிலையும் கட்டினார். கைலாசநாதர் கோவிலில் இராசசிம்மன் 250 விருதுப் பெயர்களைப் பொறித்து வைத்துள்ளான். ரி'பலாஞ்சனன், ஸ்ரீசங்ரபக்தன், ஸ்ரீஆகமப்பிரியன், சிவசூடாமணி, ஸ்ரீவாத்யவித்யாதரன் போன்றன. சென்னைக்கும் திருவள்ளுவருக்கும் இடையில் இருந்த திருநின்றவூரில் பூசலநாயனார் சிவபெருமானுக்குக் கோவில்கட்ட விரும்பினர். அவரிடம் கோவில் கட்டுவதற்குத் தேவையான நிதி இல்லை என்பதால் மனதாலே கோவில் கட்டினார்.

அப்பொழுது இராசசிம்மனும் கோவில் கட்டி சிவபெருமான் எழுத்தருள நாள் குறித்தான். அந்நாளில் பூசலார் தன் மனதில் கட்டிய கோவிலிற்குச் சிவபெருமானை எழுந்தருளச் செய்ய வேண்டிய நாள் என்பதால் சிவபெருமான் இராசசிம்மன் மன்னன் கனவில் தோன்றி கையிலாசநாதர் கோவிலுக்குத் தான் மற்றொரு நாள் எழுந்தருளுவதாகக் கூறி மறைந்தார். அது கேட்டு வியந்த மன்னன் பூசலாரை நாடி அவர் கட்டிய கோவிலைக் காட்டுமாறு வேண்டினான். பூசலார் தாம் மனதில் கட்டிய கோவிலைக் கூறவே, மன்னன் அவரை வணங்கி மீண்டான் என்று பூசலநாயனார் பற்றி பெரியபுராணம் தரும்செய்தி. இச்செய்தி கல்வெட்டில் 'அரசன் வான்ஒலி கேட்டான்' எனக் குறிப்பிடப்பெற்றுள்ளது.

குறிப்புகள்

இராசசிம்மனை அடுத்து, அவன்மகன் இரண்டாம் பரமேசுகவரவர்மன் கி.பி.705-710 வரை ஆட்சி புரிந்ததாக இம்மன்னனின் மூன்றாம் ஆண்டு கல்வெட்டு தெரிவிக்கின்றது. காசக்குடிப்பட்டயம், வேலூர், பாளையப்பட்டயம் ஆகியன இவன் அமைதியான வாழ்க்கையை நடத்தினான். பிரகஸ்பதி விதித்த வழியில் உலகைக் காத்தான் எனக் குறிப்பிட்டு உள்ளன. இவன் காஞ்சியிலுள்ள 'பரமேச்சுரவிண்ணகரம்' எனப்படும் வைகுந்தப் பெருமாள் கோவிலையும் திருவதிகையிலுள்ள சிவன் கோவிலையும் கட்டியவன் என வரலாறு தெரிவிக்கின்றது.

## 5.5. புதிய பல்லவர் மரபு

இரண்டாம் பரமேசுவரவர்மனுடன் சிம்மவி'ஹு மரபு முடிந்து விடுகிறது. இரண்டாம் பரமேசுவரவர்மனுக்குப் பிறகு புதிய மரபைச் சேர்ந்த இரண்டாம் நந்திவர்மன் பட்டம் பெற்றதாக சில பட்டயங்கள் குறிப்பிட்டுள்ளன.

சிம்மவர்மன்

| | |
|---|---|
| சிம்மவி'ஹு | பீமவர்மன் |
| மகேந்திரவர்மன் - 1 | புத்தவர்மன் |
| நரசிம்மவர்மன் - 1 | ஆதித்தவர்மன் |

குறிப்புகள்

மகேந்திரவர்மன் - 2 கோவிந்தவர்மன்

பரமேசுவரவர்மன் -1 இரண்யவர்மன்

நரசிம்மவர்மன் - 2 நந்திவர்மன் - 2

பரமேசுவரவர்மன் - 2

(சித்திரமாயன் - சிறுவன்)

புதிய மரபு தோன்றியது எதனால் எனின் சிம்மவி'ணுவின் தம்பி பீமவர்மன். பீமவர்மன் மரபில் வந்தவன் இரண்யவர்மன் இரண்யவர்மன் மகன் பல்லவமன்னனாகிய இரண்டாம் நந்திவர்மன். இம்மரபினரே 8,9 ஆம் நூற்றாண்டுகள் முடிய பல்லவ நாட்டை ஆண்டனர். இரண்டாம் பரமேசுவரானின் மகன் சித்திரமாயன் சிறுவனாக அல்லது பொறுப்பற்றவனாக இருந்திருக்க வாய்ப்பு உள்ளதால் பேரரசினைக் காக்க வேண்டி சாளுக்கியரையும் பாண்டியரையும் எதிர்த்து நிற்கும் வல்லமை உடைய அரசன் வேண்டுமென்று இரண்யவர்மனை அரசனாக அமைச்சர்களும் பிறகும் வேண்டினர். இரண்யவர்மன் மறத்து தன் மகனை அரசனாக்கினான் அப்புதிய பல்லவ மரபசர்கள்.

இரண்டாம் நந்திவர்மன் - கி.பி.710-775

தந்திவர்மன் - கி.பி.775 – 825

மூன்றாம் நந்திவர்மன் - கி.பி.825-850

பிற்பட்ட பல்லவர் - கி.பி.850 – 893

### 5.5.1. இரண்டாம் நந்திவர்மன் (கி.பி.710-775)

12 வயதில் பட்டம் பெற்ற நீண்டதொரு ஆட்சியை வழங்கிய மன்னன் இரண்டாம் நந்திவர்மன் இவன் காலத்தில் வரலாற்றுச் சான்றுகளாக பல்லவர்பட்டயங்கள், பாண்டியர் பட்டயங்கள்,சாளுக்கியப் பட்டயங்கள், வைகுந்தப்பெருமாள் கோவிலில் உள்ள சிற்பங்களும், கல்வெட்டுகளும், கங்கர் கல்வெட்டுகள், இராட்டிரகூடர் பட்டயங்கள் திருமங்கையாழ்வார் பாடல்கள் போன்றவற்றின் மூலமும் மேலும் உதயேந்திரப்பட்டயம்,

காசக்குடிப்பட்டயம், தண்டன் தோட்டப் பட்டயம், கொற்றங்குடிப்பட்டயம், கைலாசநாதர் கோவிலில் உள்ள இரண்டாம் கீர்த்திவர்மன் வெளியிட்ட வக்கலேரிப்பட்டயம், வேள்விக்குடிப்பட்டயம், சின்னமனுர்ப்பட்டயம், கங்கர் இராட்டிரகூடப்பட்டயங்கள் போன்றவற்றின் மூலமும் வரலாற்று அறிஞர்கள் ஆய்ந்து கூறியுள்ளனர்.

குறிப்புகள்

இரண்டாம் நந்திவர்மன் தான் காலத்தில் வடக்கிலும் தெற்கிலும் மேற்கிலும் பல போர்கள் செய்தும் எந்த ஒரு சிறு பகுதியையும் இழக்கவில்லை .. இவன் பேரரசு வடவேங்கடம் முதல் புதுக்கோட்டை வரை பரவியிருந்தது. நாட்டில் கல்வியும் சமயமும் சிறப்புற்று விளங்கின.

''பல்லவ மன்னனிடம் கொடை பெற்ற மறையவர் அனைவரும் சிறந்த கலை விற்பன்னராவார். நான்கு வேதங்கள், ஆறு அங்கங்கள் முதலியவற்றில் துறை போனவர். செய்யுள், கூத்து, இதிகாசம், கதைகள் இவற்றில் வல்லவர். எல்லாவகைச் சடங்குகளிலும் தேர்ச்சி உற்றவர். நல்ல ஒழுக்கம் உடையவர். இவரை 'இருள் அகற்றும் ஒளி ஆணையர்' என்று காசக்குடிப் பட்டயம் முதலியன கூறுகின்றன. ஷபல்லவமல்லனே சிறந்த கல்விமான், படைக்கலப்புலவன், இசை விருப்பன், செய்யுட்கள் செய்வதில் வால்மீகி போன்றவன். வில்வித்தையில் இராமன் அரசியலில் பிரகஸ்பதி எனப்பலப்படப் பட்டயங்கள் பகர்கின்றன'' என்று டாக்டர். மா.இராசமாணிக்கனார் 'பல்லவர் வரலாறு' என்னும் நூலில் குறிப்பிட்டு உள்ளார்.

### 5.5.2 நந்திவர்மன் (கி.பி.725-825)

இரண்டாம் நந்திவர்மனுக்கும் இராட்டிரகூடப் பெண்ணான ரேவாவிற்குப் பிறந்த மகன். இம்மன்னன் பற்றிய பட்டயங்களும் கல்வெட்டுகளும் திருச்சிராப்பள்ளியிலிருந்து வடக்கே திருச்சானூர் வரை பரவியிருந்தன. இவன் 51 ஆண்டுகள் ஆட்சி புரிந்திருக்கலாம் என்று இவனைப் பற்றிய 51வது ஆண்டு கல்வெட்டு குறிப்பதால் அறியலாம். நந்திவர்மன் ஆட்சிக்காலத்தில் நீர்ப்பாசனவசதிகள் சிறப்பாக கவனிக்கப்பெற்று ஏரிகள் பல வெட்டப்பெற்றன. திருச்சிராப்பள்ளி கூற்றத்தில் உள்ள ஆலம்பாக்கத்திற்கு தந்திவர்ம மங்கலம்' எனப் பெயரிட்டு பிரமதேயமாக வழங்கி உள்ளான். அங்கு கையிலாசநாதர் கோவில் ஒன்றைக் கட்டியுள்ளான். இவன்

'வைணவ சமயத்தைப் பின்பற்றினாலும் சைவக் கோவிலையும் கட்டியுள்ளான்.

### 5.5.3. மூன்றாம் நந்திவர்மன் (கி.பி.825-850)



இம்மன்னன் நந்திவர்மன் மகன். தந்திவர்மன் கதம்ப அரசர் மகளைத் திருமணம் செய்து பிறந்தவன் இவன் காலத்து வரலாற்றுச் செய்தி வேலூர் பாளையப் பட்டயம் குறிப்பிட்டுள்ளது. பத்தாம் ஆட்சி ஆண்டு கல்வெட்டு மூலம் அறியலாம்.

இம்மூன்றாம் நந்திவர்மன் 'தெள்ளாறு எறிந்த நந்திவர்மன்' என்று அழைக்கப்பெறுகின்றான். வடஆர்க்காடு மாவட்டத்திலுள்ள வந்தவாசிக்கு அருகிலிருப்பது தெள்ளாறு. பாண்டியன் ஸ்ரீமாறனுக்கும் மூன்றாம் நந்திவர்மனுக்கும் இடையே நடைபெற்ற போர். வெற்றியைக் கைக்கொண்ட மன்னன் பாண்டியர்களை வெள்ளாறு, கடம்பூர், வெறியலூர், தொண்டி, பழையாறை ஆகிய இடங்களில் போரிட்டு வென்று வைகை வரை துரத்திச் சென்றான்.

'சிவனை முழுவதும் மறவாத சிந்தையான்' என நந்திக்கலம்பகம் போற்றுகிறது. காடவர்கோன், கழற்சிங்கன் எனக் சிறப்புப்பெயர்களைக் கொண்டவன். தமிழிற்கு உயிர் கொடுத்த (பல இடங்களில் அவனி நாராயணன் எனக் குறிப்பிடப் பெற்றுள்ளான்) மன்னன் என்னும் சிறப்பினைப் பெறுவதற்கேற்ப 'நந்திக்கலம்பகம்' பாடப்பெற்றவன். 'பைந்தமிழைஆய்கின்றகோன்நந்தி' எனப் புகழப்பெற்றவன். இவன் காலத்து கடல் வாணிபம் சிறப்புற்று விளங்கியது. மகாபலிபுரமும், மயிலையும் சிறந்த துறைமுகப் பட்டினங்களாக விளங்கியுள்ளன.

## 5.6 பல்லவரின் வீழ்ச்சியும் மறைவும்

மூன்றாம் நந்திவர்மனுக்கும் பின் சிறந்த பல்லவ மன்னர்கள் இல்லை. கி.பி.900 வரைக்கும் பல்லவர்கள் ஆட்சி தொடர்ந்தாலும் அவர்கள் தங்கள் வலிமையை இழந்து சிற்றரசர்கள் போல இருந்தனர். நந்திவர்மன் மகனான நிருபதுங்கவர்மன் ஆட்சியில் பகைவர் பாண்டியர்களும் சோழர்களும் பழம் பெற்றனர். அவர்களோடு போர் என்பதே முற்றுப்பெறாத தொடர்கதையானது. நிருபதுங்கவர்மன்

ஆட்சிக்காலத்தில் பாண்டிய நாட்டினை ஆண்ட சீமாறன் சீவல்லபன் மகனான இரண்டாம் வரகுணன் கி.பி.880இல் பல்லவர் மீது படையெடுத்து சென்றான். நிருபதுங்கன் மகனான அபராசிதன் போருக்கும் சென்றான். அவனுடன் சோழ மன்னனாகிய ஆதித்த சோழன் இணைந்து பாண்டியனைத் தோற்கடித்தான். ஆதித்த சோழன் சோழநாடு முழுவதையும் தனதாக்கிக்கொண்டான். தொண்டை நாடு செங்கற்பட்டு வரையுள்ள பகுதியை ஆதித்தசோழன் தனக்குரியதாக்கினான். அபராசிதவர்மன் ஆட்சி கி.பி.890 ஆம் ஆண்டு முடிந்திருத்தல் வேண்டும் என்று 18ஆம் ஆண்டு கல்வெட்டு குறிப்பிடுகின்றது. நிருபதுங்கவர்மனின் ஆட்சி முடிவிலேயே பல்லவப் பேரரசின் பெரும்பகுதி சோழர் வசமாகியது. அபராசிதன் ஆட்சியோடு பல்லவர் பேரரசு வீழ்ச்சியுற்று மறைந்தது.

“பிற்காலத்தில் துளம்ப – பல்லவர் என்பவர், பல்லாரிக் கோட்டமும் மைசூரின் ஒரு பகுதியும் சேர்ந்த நுளம்ப பாடியைக் கி.பி.13ஆம் நூற்றாண்டு வரை ஆண்டு வந்தனர். அவர்கள் ஆதித்த சோழன் வழிவந்த பேரரசர்களுடன் ஓயாது போர் நடத்திவந்தனர். பலர் சிற்றரசராகியும் அரசாங்க அலுவலராகியும் இருந்தனர். அவர்கள் இங்ஙனமே மேலைச்சாளுக்கியரிடம் வேலை பார்த்தனர். அவர்கள் ‘காஞ்சிப்பல்லவமரபினர்’ என்று தம்மைக் கூறிக்கொண்டனர். ஆதலின் காஞ்சியில் பல்லவர் ஆட்சி இழந்தவுடன், பல்லவ அரச மரபினர் தமது பழைய இடத்திற்கும் சென்று குறுகிய நிலப்பகுதியை ஆளலாயினர் என்பது தெரிகிறது. வேறு பலர் சோழப்பேரரசின் கூடலூர், சேந்தமங்கலம் முதலிய இடங்களில் சிற்றரசராகவும் தானைத் தலைவராகவும் வளநாட்டுத் தலைவர்களாகவும் இருந்து வந்தனர்” என்று டாக்டர் மா. இராசமாணிக்கனார் தம் ‘பல்லவ வரலாறு’ என்னும் நூலில் குறிப்பிட்டு உள்ளார்.

பிற்காலப்பல்லவர்களில் அபராசிதனே இறுதி மன்னனாக அறியப்படுகிறான். அவனோடு பல்லவப்பேரரசு முடிவுற்றது.

## 5.7 பல்லவர் பாண்டியர் போர்

பல்லவர் பாண்டியர் போர் முதன்முதலில் அரிகேசரி மாறவர்மன் - பராங்குசன் (நின்ற சீர் நெடுமாற நாயனார் கி.பி.640-680) காலத்தில் தான் தொடங்கியது. பல்லவர் பாண்டியர் போர் கொங்குநாட்டு உரிமை

சார்ந்து பிற்காலத்து எழுந்தது. கொங்குநாடு ஒரு காலத்தில் பாண்டியரிடமும் மற்றொரு காலத்தில் பல்லவரிடமும் மாறி மாறி இருந்துள்ள நிலையில் நந்திவர்மன் கொங்கு நாட்டைக் கைப்பற்ற பாண்டிய மன்னன் போரிட வேண்டியதாயிற்று. அதற்கடுத்து சித்திரமாயன் என்னும் மன்னன் (பரமேசுவரன் மகன்) பாண்டியனைச் சரணடைய இருந்து இதனால் பாண்டிய மன்னன் அரிகேசரி பராங்குச மாறவர்மன் (கி.பி.710-765) நந்திவர்மனைத் தாக்குவதற்கு தக்க சமயம் பார்த்திருந்தான். 'நந்திபுரம்' என்னும் இடத்தில் பாண்டியன் பெரும்படையுடன் முற்றுகையிட்டான். பல்லவமன்னனுக்கு உற்ற துணையாக விளங்கிய 'பூசான் மரபில் வந்த உதயசந்திரன்' என்னும் படைத்தலைவன் பாண்டியருடன் போரிட்டு இருவரும் சில இடங்களில் மாறி மாறி வெற்றி பெற்றாலும் இறுதியில் பல்லவ மன்னனே வென்றான்.

வரகுணபாண்டியன்மாறன் இராசசிம்மன் மகன். இவன் ஏறக்குறைய கி.பி.800-830 வரை ஆட்சி புரிந்த பாண்டிய மன்னன். இம்மன்னன் காலத்தில் பல்லவர் பாண்டியர் போர் கி.பி. 806-முதல் 817வரை நிகழ்ந்தது. இம்மன்னன் **தகடூர்** அதிகனை எதிர்த்த பொழுது தந்திவர்மன் அதிகனை ஆதரித்தான். சேரனும் அதிகனை ஆதரித்தான். வரகுணன் இவர்கள் அனைவரையும் தோல்வி அடையும் படி செய்தான்.

நந்திவர்மன் இழந்த நாட்டை மூன்றாம் நந்திவர்மன் சீமாறன் சீவல்லபன் என்னும் பாண்டிய மன்னன் ஆட்சிக்காலத்தில் தெள்ளாற்றில் பெரும் போர் நிகழ்த்தி, பகைவரைத் துரத்திச் சென்று கடம்பூர், வெளியலூர், வெள்ளாறு, பழையாறு ஆகிய இடங்களில் தோற்கடித்துப் பாண்டிய நாட்டு எல்லையை அடைந்தான். பாண்டியமன்னனையும பிற பகை மன்னர்களையும் தோல்வியுறச் செய்தான். தெள்ளாற்றுப் போருக்குப் பின் பல ஆண்டுகள் கழித்து குடமூக்கில் (கும்பகோணம்) பல்லவரையும் அவருக்குத் துணையாக வந்த பகைவரையும் சீமாறன் சீவல்லபன் என்னும் பாண்டிய மன்னன் வென்றான். நிருபதுங்கன் என்னும் பல்லவ மன்னன் ஆட்சிக் காலத்தில் அவன் மகன் அபராசிதன் பாண்டிய மன்னனை வீழ்த்த பெரும் படை திரட்டிச் சென்றான். அப்போர் அரிசிலாற்றங்கரையில் நிகழ்ந்தது. இதில் பல்லவமன்னன் வெற்றி பெற்றதால் பாண்டிய பேரரசு நிலை

தளர்ந்தது. அம்மன்னனுடன் சோழமன்னன் ஆதித்தசோழனும் இணைந்து போர் புரிந்ததால் பாண்டிய மன்னன் தோற்றான். பாண்டியர் வீழ்ச்சி அடைந்து சோழர்களின் ஆதிக்கம் தோன்றியது.

## 5.8 பல்லவர் - சாளுக்கியர் தொடர்பு

### 5.8.1 சாளுக்கியர் தோற்றம்

சாளுக்கிய இன அரசில் மேலைச்சாளுக்கிய முதலாம் புலிகேசி மலப்பிரபாநதி அருகில் கோட்டையில் உருவாகியது. தன் நாட்டு எல்லையை விரிவுபடுத்தத் தொடங்கினான். இவன் பேரன் இரண்டாம் புலிகேசி காலத்தில் (கி.பி.610) சாளுக்கிய நாட்டின் எல்லைப்பரப்பு மேலும் விரிவாகியது. இரண்டாம் புலிகேசி திருமணஉறவின் மூலம் கங்கரையும் போர் வெற்றியால் கடம்பரையும் கட்டுப்படுத்தித் தன் அதிகாரத்திற்கு உட்படுத்தி வைத்திருந்தான். வடநாட்டை ஆட்சி புரிந்த ஹர்‘னின் வலிமை கண்டு அஞ்சிய லாடர், மானவர்,கூர்ச்சரம் ஆகியோர் தற்காப்பிற்காக இரண்டாம் புலிகேசியின் ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்டனர். இதனால் வடக்கிலிருந்து தெற்கு, கிழக்கு நோக்கிச் சாளுக்கியப்பேரரசும் தெற்கிலிருந்து வடக்கு. மேற்கு நோக்கிப் பல்லவப்பேரரசும் பெருகிக் கொண்டு சென்றமையை வரலாறு எடுத்துரைக்கின்றது.

இவ்விரு அரசுகளும் ஒன்றுக்கொன்று தன் எல்லைப் பரப்பின் நீட்சிக்குத் தடையாக உள்ள அரசினை எதிர்க்க முயன்றன. மகேந்திரவர்ம பல்லவன் காலத்தில் இரண்டாம் புலிகேசியின் படைகள் பல்லவ நாட்டைத் தாக்கின.

‘‘புலிகேசியின் படைகள் எழுப்பிய தூளி, பல்லவவேந்தனின் ஒளியை மங்கச் செய்தது. புலிகேசியின் படைப்பெருமை கண்டு காஞ்சி அரசன் காஞ்சிக் கோட்டைக்குள் ஒளிந்து கொண்டான். சாளுக்கியன் நாற்படையுள்ளிருந்த யானைகளின் மதநீர் பாய்ந்து காவிரி கலங்கி விட்டது. புலிகேசிப்பல்லவர்பணி போக்கும் கதிரவனாய்க் காட்சி தந்து. சேர, சோழ, பாண்டியனைக் களிப்புறச் செய்தான்’’ என்று புலவர். கா.கோவிந்தனார் காலந்தோறும் ‘தமிழகம்’ என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளது. புலிகேசியின் படைவலிமையைக் காட்டுவதாக உள்ளது.

பல்லவ நாட்டினுள் புகுந்ததும், தன் படையோடு காஞ்சிக் கோட்டைக்குள் மகேந்திரவர்ம பல்லவன் மறைந்திருந்தான். எதிர்ப்பார் இன்றி இரண்டாம் புலிகேசி காவிரி பாயும் நாடு வரை சென்று திரும்பினான். பல்லவ மன்னன் ஒளிந்து கொண்டதே அவனுக்குத் தோல்வி என்று சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் மகிழ்ந்தனர். இறுதியில் இரண்டாம் புலிகேசி சாளுக்கிய நாடு நோக்கித் திரும்பியதும், மகேந்திரவர்மபல்லவன் காஞ்சிக் கோட்டையிலிருந்து வெளிப்பட்டு வடக்கே புள்ளலூரில் தோற்கடித்துத் துரத்தினான். புள்ளலூரில் தோல்வி கண்ட இரண்டாம் புலிகேசி மகேந்திரவர்ம பல்லவன் மறைவிற்கு பிறகு நரசிம்மவர்ம பல்லவ மன்னன் அரியணையில் அமர்ந்ததும் மிகப்பெரிய படையோடு பல்லவ நாட்டின் மீது தாக்குதல் நடத்தினான். நரசிம்மவர்ம பல்லவன் இலங்கை அரசன் மாணவர்மனுடன் இணைந்து சாளுக்கிய படையைத் தாக்கினான். பரஞ்சோதி என்னும் பிற்காலச் சிறுத்தொண்டநாயனராகிய படைத்தளபதி சாளுக்கியர் படையை அவர்களின் தலைநகரம் வாதாபி வரை துரத்திச் சென்று தாக்கினான். நரசிம்மவர்ம பல்லவனின் புகழ்பாடும் வெற்றித்தூணை நிலைநிறுத்திவிட்டு படைத்தளபதி பரஞ்சோதி காஞ்சிக்கு வந்து சேர்ந்தான்.

### 5.8..2 முதல் விக்கரமாதித்தியனும் பல்லவ போர்களும்

முதல் விக்கிரமாதித்தியன் தன் தந்தை இரண்டாம் புலிகேசியின் மறைவிற்குப் பிறகு பல்லவ மன்னன் பரமேசுவரவர்மன் ஆட்சியிலிருக்கும் பொழுது பல்லவ நாட்டைத்தாக்கினான். ‘‘ஸ்ரீவல்லபனாகிய விக்கிரமாதித்தன், நரசிம்மவர்மனது பெருமையை அழித்தான். மகேந்திரன் செல்வாக்கை அழித்தான். ஈசுவரபோத்தரசனை வென்றான். இவன் மகாமல்லன் மரபை அழித்தமையால் ‘‘இராசமல்லன்’’ எனும் விருதுப்பெயர் கொண்டான். தென் நாட்டின் ஒட்டியாணமாக விளங்கும் காஞ்சியைக் கைப்பற்றினான் என்று புலவர் கா. கோவிந்தனார் ‘காலந்தோறும் தமிழகம்’ என்னும் நூலில் குறிப்பிட்டு உள்ளார்.



பல்லவ மன்னன் பரமேசுவரவர்மன் மீண்டும் தன் மீது படைதொடுத்த விக்கிரமாதித்தியனை உறையூருக்கு அருகிலுள்ள படைப்பிரிவு கொண்டு எதிர்த்தான். மற்றொரு படைப்பிரிவினை

சாளுக்கிய நாட்டிற்கு அனுப்பி விக்கிரமாதித்தியன் மகன் விநயாதித்தியனையும் பேரன் விசயாதித்தியனையும் புறங்கண்டு கொள்ளையடித்துத் திரும்பின 'சாளுக்கிய மன்னன் விநயாதித்தியன் ஆட்சிக்காலத்தில் பல்லவர் சாளுக்கியப் போரின்றி அமைதியாக கழிந்தன.

குறிப்புகள்

### 5.8.3 இரண்டாம் விக்கிரமாதித்தியனும் பல்லவபோர்களும்

இரண்டாம் விக்கிரமாதித்தியன் சாளுக்கிய அரசனாக அரியணையில் வீற்ற பிறகு பல்லவர் சாளுக்கியர் போர் மீண்டும் துவங்கிற்று. இப்போரில் மூன்றாம் மகேந்திரவர்மன் கொல்லப்பட்டான். காஞ்சிபுரம் மூன்றுமுறை பிடிக்கப்பட்டது. காஞ்சி கைலாசநாதர் கோவிலும் பிற கோவில்களும் கொள்ளையடிக்கப்பட்டன. தெற்கே பாண்டியரோடு போரிட்டுக் கொண்டிருந்த நந்திவர்மன், அப்போர்த் தலைமையைத் தன் படைத்தலைவன் உதயசந்திரனிடம் ஒப்படைத்து வடக்கு நோக்கி வந்து தலைநகர் காஞ்சியில் தங்கியிருந்த விக்கிரமாதித்தன் மகன் கீர்த்திவர்மன் பெரும்படையோடு வந்து நந்திவர்மனை வளைத்துக் கொண்டான். அந்நிலையில் பாண்டியரை வெற்றி கொண்ட பல்லவர் படைத்தளபதி உதயசந்திரன் காஞ்சியை அடைந்து சாளுக்கியர் படையைப் பல்லவ நாட்டு எல்லைக்கு அப்பால் விரட்டி அடித்து வெற்றி கொண்டான்.

சாளுக்கிய கீர்த்திவர்மன் பல்லவரால் தமக்கு ஏற்பட்ட பழியினைத் துடைக்க எண்ணி, பெரும் படையுடன் பல்லவ நாட்டின் மீது போர் தொடுக்க அச்சமயத்தில் கங்கரும் பாண்டியரும் பல்லவநந்திவர்மனுக்குத் துணை நின்றனர். 'வெம்பை' என்ற இடத்தில் போர் நடைபெற்று போரில் கீர்த்திவர்மன் இறந்தான். பல்லவர் - சாளுக்கியர் தொடர்பும் அதனால் விளைந்த போரும் பல்லவமன்னன் மகேந்திரவர்மன் காலத்திலிருந்து கி.பி.610ல் தொடங்கி இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் கி.பி.787ஆம் ஆண்டு அளவில் ஏறத்தாழ நூறு ஆண்டுகள் நடைபெற்று கீர்த்திவர்மன் மறைவோடு முடிவு பெற்றது.

## 5.9 தொகுப்புரை

குறிப்புகள்

பல்லவர் யார் என்னும் கேள்வியில் நாககன்னிகைக்கும் சோழன் வெள்வேற்கிள்ளிக்கும் பிறந்த தொண்டைமான் இளந்திரையன் வழியினரே ‘தொண்டையன்’ எனக் குறிப்பிடுகின்ற பல்லவர்கள் என்னும் செய்தியும் முற்காலஇடைக்காலப்பல்லவர்களையும் மிகச்சிறந்த ஆட்சியை வழங்கிய முதலாம் மகேந்திரவர்மன் முதலாம் நரசிம்மவர்மன் மூன்நாம் நந்திவர்மன் போன்ற மன்னர்களின் சிறப்புகளையும் எடுத்தரைக்கப்பெற்றுள்ளது . சாளுக்கியர்கள் சோழர்களின் பாண்டியர்களின் தாக்குதலில் வீழ்ச்சியை அடைந்த பல்லவ அரசமரபினரையும் அவர்களின் முடிவினையும் அறியமுடிகின்றது .

## 5.10 மாதிரி வினாக்கள்

1.சங்கீரணசாதி சித்திரகாரப்புலி போன்ற சிறப்புப்பெயர்களைப் பெற்ற மன்னன் யார் ?

முதலாம் மகேந்திரவர்மன்

2.வாதாபிக்கொண்டான் எனச்சிறப்பிக்கப்பெற்ற மன்னன் யார் ?

முதலாம் நரசிம்மவர்மன்

3. நந்திகலம்பகம் பாடப்பெற்ற மன்னன் யார் ?

மூன்றாம் நந்திஎர்மன்

4.தென்நாட்டின் ஒட்டியாணம் என அழைக்கப்பெற்ற நகரம் எது ?

காஞ்சிபுரம்

5.பல்லவப்பேரரசின் கடைசிமன்னன் யார் ?

கீர்த்திவர்மன்

*Self -Instructional Material*

### பயிற்சி வினாக்கள்

1. பல்லவர்களின் தோற்றம் -விளக்குக

2. முற்காலப்பல்லவர்கள் குறித்து எழுதுக.
3. முதலாம் மகேந்திரவர்ம பல்லவன் சிறப்புகள் யாவை ?
4. வாதாபிக்கொண்டான் எனச் சிறப்பிக்கப்பெற்ற மன்னன் யார்? ஏன்?
5. பல்லவமன்னர்களின் வீழ்ச்சியினை விவரி

**மேலும் படித்தறிக .**

டாக்டர்.மா.இராசமாணிக்கனார்

பல்லவர் வரலாறு

கழக வெளியீடு

சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்

திருநெல்வேலி லிமிடெட்

திருநெல்வேலி

## கூறு – 6

## பல்லவராட்சி முறை – பல்லவர் காலக் கல்வி நிலை – பெண்டிர் நிலை – சமூக வாழ்க்கை – பல்லவர் காலக் கட்டிடக் கலை - இசைக்கலை

6.பாடஅமைப்பு

6.1 அறிமுகம்

6.2 நோக்கம்

6.3 பல்லவராட்சி முறை

6.3.1 அமைச்சியல்

6.3.2 உள்ளாட்சியியல்

.6.3.3 படையியல்

.6.3.4 வரியியல்

6.3.5 நீதியியல்



6.4 பல்லவர்களின் கல்விநிலை

.6.4.1 காஞ்சிக் கல்லூரி

.6.4.2 பாகூர்வடமொழிக்கல்லூரி

.6.4.3 அக்கிரகாரங்கள்

.6.4.4 மடங்கள் வழி கல்வி

6.4.5 திருப்பருத்திக்குன்றம்

.6.4.6 கோவில்கள்

.6.5 பெண்டிர் நிலை

.6.6 சமூக வாழ்க்கை

.6.7 பல்லவர் காலக் கட்டிடக்கலை

.6.7.1 ஓவியங்கள்

6.7.2 சிற்பங்கள்

.6.8 இசைக்கலை

.6.8.1 மகேந்திரவர்மனும் இசையும்

.6.8.2 இராசசிம்மனும் இசையும்

.6.8.3 நாயன்மார்கள் இசை

.6.8.4 ஆழ்வார்கள் இசை

.6.8.5 தேவாரகாலத்து இசைக்கருவிகள்

6.9 தொகுப்புரை

6.10 மாதிரி வினாக்கள்

6.11 பயிற்சி வினாக்கள்

6.12 மேலும் படித்து அறிக

குறிப்புகள்

## 6.1 அறிமுகம்

பல்லவர் காலம் தமிழக வரலாற்றில் மதிப்புமிகு காலமாக குறிப்பிடப்பெறுவது . தமிழக ஆட்சியில் சிறப்புமிகு பல்லவர் கால ஆட்சியின் அமைச்சு உள்ளாட்சி படை வரி நீதி போன்ற செய்திகளோடு கல்வி கலை கட்டிடம் ஓவியம் சிற்பம் இசை போன்ற பல்லவர் காலச்சிறப்புகளையும் பெண்களின் நிலையையும் அறியலாம் . பல்லவர்களின் காலத்தில் கல்விநிலை வடமொழிக்கல்லூரிகள்.காஞ்சிக்கல்லூரி பாகூர்வடமொழிக்கல்லூரி அக்கிராங்க மடங்கள்வழிகல்வி திருப்பருத்திக்குன்றம் ஆகியன குறிப்பிடத்தக்கன . சித்தன்னவாசல் குடுமியான்மலை ஓவியங்களும் சிற்பங்களும் மாமல்லபுரத்தின் குகைக்கோவில்களும் பல்லவர்கால வரலாற்றிலே அழிக்கமுடியாத பதிவுகள் என்பதை தொகுத்து உரைக்கின்றன .

6.2 நோக்கம்

1.பல்லவர் கால சமூகநிலையினை அறிதல் .

2.பல்லவர் கால ஆட்சியினைத் தெளிதல்

3.பல்லவர் காலக் கலையினை அறிவதன் மூலம் தற்காலத்தில் மாணவர்களிடம்கலையுணர்வினை மேம்படுத்தல் .

## 6.3. பல்லவராட்சி முறை

பல்லவர் காலம் தமிழக வரலாற்றில் ஒரு சிறந்த பொற்காலமாக வரலாற்று ஆசிரியர்களால் குறிப்பிடப்பெறுகின்றது. பல்லவர்களின் அரசியல் முறைகள் சாதவாகனரின் அரசியல் முறையுடனும் சாணக்கியாரின் அர்த்த சாஸ்திரமும் காமாந்தகரின் நீதி சாஸ்திரமும் **சுக்ர**நீதியும் எடுத்துரைக்கும் அரசியல் நெறிகளே என்று வரலாற்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

*Self-Instructional Material*

பல்லவர் காலத்தில் நாடு ஆட்சி முறை கருதிப் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. கோட்டங்கள், கூற்றங்கள், இராட்டிரங்கள் எனப் பகுக்கப்பெற்று, மக்களிடம் பொறுப்பு அளிக்கப்பெற்றிருந்தது. அரசர்கள் அரசுப்பணிகளைத் தாமே கவனித்தும் பிறரை அதிகாரியாக நியமித்தும் கவனித்து வந்தனர். மக்கள் வாழ்க்கை முறையை நேரில் கண்டு, அதனைச் சித்தரிக்கும் வகையில் ‘மத்தவிலாசப்பிரகசனம்’ என்னும் நூலினையும் மகேந்திரவர்மபல்லவன் எழுதியுள்ளான். மக்களோடு இயைந்த குடியாட்சி முறையும் மன்னராட்சி முறையில் நிலவியதை அறியலாம்.

பல்லவப் பெருநாடு பல மண்டலங்களாகவும் (இராட்டிரங்கள்) ஒவ்வொரு மண்டலமும் கோட்டங்களாகவும் பிரிக்கப்பெற்றிருந்து உள்ளன. பல்லவர்கள் ஆட்சி புரிந்த தமிழ்நாட்டில் கோட்டம், நாடு, ஊர் என்னும் பிரிவுகளைக் கொண்டிருந்தனர். பல்லவர்கள் தமிழ் அரசர்கள் தொண்டைநாட்டுப் பிரிவுகளுக்கு வைத்திருந்த பெயர்களையே தொடர்ந்து பின்பற்றி வந்துள்ளனர். தொண்டைநாடு பல்லவருக்கு முன்பு 24 கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டு இருந்தன. அவை

1. புழல் கோட்டம்
2. ஈக்காட்டுக் கோட்டம்
3. மணவிற்கோட்டம்
4. செங்காட்டுக் கோட்டம்
5. பையூர்க்கோட்டம்
6. எயில் கோட்டம்
7. தாமல் கோட்டம
8. ஊற்றுக் கோட்டம்
9. களத்தூர்க்கோட்டம்
10. செம்பூர்க்கோட்டம்

11. ஆம்பூர்க்கோட்டம்
12. வெண்குன்றக்கோட்டம்
13. பலகுன்றக்கோட்டம்
14. இலங்காட்டுக் கோட்டம்
15. கலியூர்க்கோட்டம்
16. செங்கரைக் கோட்டம்
17. படுவூர்க் கோட்டம்
18. கடிகூர்க் கோட்டம்
19. செந்திருக்கைக் கோட்டம்
20. குன்றவட்டான கோட்டம்
21. வேங்கடக் கோட்டம்
22. வேலூர்க் கோட்டம்
23. சேத்தூர்க் கோட்டம்
24. புலியூர்க் கோட்டம் என்பன

பல்லவர் அரசமுறை என்பது தந்தையிலிருந்து மூத்த மகனுக்கு அரச உரிமை உடையது என்கிறது. அரசுக்கு ஏற்ற மைந்தன் இல்லாத காலங்களில் அரசனுடைய தம்பி மகன் பட்டத்தைப் பெறுதல் இயல்பு. அரசன் வாரிசு இன்றி இறந்துவிட்டால் அமைச்சர் முதலியவர்கள் ஒன்று கூடி அரசமரபில் ஒருவரைத் தேர்ந்தெடுப்பர். 'நாடு பிடிப்பது' என்பது வேற்று நாட்டினைக் கவர்வது அரசனுடைய கடமை.

குறிப்புகள்

பல்லவ மன்னர்கள் நந்தி இலச்சினையை (சின்னம்) அரச சின்னமாகக் கொண்டிருந்தார்கள். இரண்டு பக்கங்களிலும் உயர்ந்த விளக்குகள், இடையே நந்தி அமர்ந்துள்ள அழகிய கோலமானது பல்லவர்களின் சின்னமாகும். சிங்க இலச்சினைச் (சின்னம்) கொண்ட பட்டயங்களும் உள்ளன. அவை போர்க்களத்திலிருந்து

அனுப்பப்பெற்றவை. நந்தி உருவம் பதிக்கப்பெற்ற கொடியும், நாணயங்களும், பட்டயங்களும் பல்லவர்களின் அரச சின்னமாக 'நந்தி' இருந்திருப்பதைக் காட்டுகின்றது.



### 6.3.1. அமைச்சியல்

அமைச்சர்கள் மந்திரிகள், மகாமந்திரிகள், ஆமாத்யர் (அமைச்சர்) என வழங்கப்பெற்றனர். சிவஸ்கந்தவர்மனின் ஹரஹதகல்லிப் பட்டயத்தில் ஆமாத்யர் என்று குறிப்பிடப்பெற்றது. மகேந்திரவர்மன் நந்திவர்மன் காலத்திலும் பல்லவர் அரசியல் அமைப்பில் அமைச்சர் குழு இருந்ததை கல்வெட்டுகள் சுட்டியுள்ளன. இரண்டாம் நந்திவர்மனின் தலைமை அமைச்சன் 'பிரம்மராஜன்' என்றும் மூன்றாம் நந்திவர்மனின் அமைச்சன் 'நம்பன்இறையூர்உடையான்' என்றும் அழைக்கப்பெற்றனர். அவர்களுக்கு 'தென்னவன் பிரம்மராயன்''பேரரசன்' எனப் பட்டங்களை வழங்கியுள்ளனர். அரசனின் ஆணைகளை நடைமுறைப்படுத்தும் நடைமுறையாளராக விளங்கிய அமைச்சர்களுக்கு "உத்தமசீலன்"'நம்பன்' எனப் பெயர் வழங்கியதாகவோ அல்லது அப்பெயர் கொண்ட அமைச்சர்கள் அரசன் ஆணைகளை நடைமுறையில் கொண்டு வந்தனர் என்றோ கல்வெட்டுகள் எடுத்துரைக்கின்றன.

பல்லவவேந்தரிடம் 'உள்படு கருமத்தைலைவர்' என்னும் பெயரில் நேர்முகத்தனிச்செயலாளர் (Private Secreataurices) இருந்தனர். 'வாயில் கேட்பார். (Secretarices) எனப்படும் செயலாளர்களும்,'கீழ் வாயில் கேட்பார்' (Under Secreataries) எனப்படும் துணைச்செயலாளர்களும் பல்லவ அமைச்சரவையில் இடம் பெற்றிருந்தனர்.

### 6.3.2 உள்ளாட்சியியல்

உள்ளாட்சித்துறை ஊரவையை மையமாகக்கொண்டு விளங்கியது. பல்லவர் காலத்தில் இருபது வகையான ஊரவைகள் இருந்ததாக வரலாற்று அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். அவற்றுள் ஊர், சபை, நகரம் என்னும் மூவகையான ஊரவைகள் முக்கியமானதாக விளங்கின. அனைவருக்கும் பொதுவான அவை

ஊர் எனவும், அந்தணர்களுள் இறையிலியாகத் தரப்பட்ட ஊர்களில் இருந்த அவை சபை எனவும், வணிகர்கள் அதிகமாக இருந்த ஊர்களில் இருந்த அவை நகரம் எனவும் வழங்கப்பெற்றது.

குறிப்புகள்

ஊரவை உறுப்பினர்கள் பெருமக்கள் எனவும் மகாசபையார் எனவும், ஊரவைச் செயற்பாடுகளைக் கவனித்து வந்த அரசர் ஆளும்கணத்தார் எனவும் ஊரின் ஆட்சிக்குப் பொறுப்பானவர்கள் ஊரார் எனவும் அழைக்கப்பெற்றனர். ஊரார் என்னும் சொல் சிற்றூர் ஒன்றின் மக்கள் அவையையும் குறிப்பிட்டு நிற்பது. எவ்விதமான விதிமுறைகளும் இன்றி குடிமக்கள் ஒன்று கூடித் தம் ஊரின் நலத்தைப் பற்றி ஆய்வுகள் செய்து முடிவுக்கு வருவது ஊராரின் கடமை. ஊரவையில் ஒரு பொது அவையும் ஒரு செயற்குழுவும் இருந்தன. பொது அவை விழாக்காலங்களில் அல்லது முக்கிய நிகழ்ச்சிகளில் ஆண்டிற்கு ஒரிருமுறை கூடியது. அன்றாட அலுவல்கள் செயற்குழுவால் மேற்பார்வை இடப்பட்டன.

ஊரவைகள் குழுக்களாகப் பகுக்கப்பட்டு வாரியங்கள் (committee) என்ற பெயரில் செயற்பட்டு வந்தன. ஏரி வாரியம், தோட்ட வாரியம், ஆகியன முதன்மையானவை. அவற்றின் பணி நீர்ப்பாசன உரிமைகளை ஒழுங்குபடுத்துதல், அறக்கட்டளைகளை நிர்வகித்தல் ஏரிகள், பாதைகள், கோவில்கள் ஆகியவற்றினை பராமரித்தல் ஆகியன வாரியங்களின் சிறப்புப் பணிகளாகும். ஊரவையின் பொதுப்பணிகளாக மக்களின் பொதுநலன்கள். வழக்குகள் - தீர்ப்பு வழங்குதல் போன்றன இருந்துள்ளன. ஊரவைப் பணிகளைச் செய்ய வாரியப் பணிமக்கள் நிர்வாக அலுவலர் ஆகியோர் ஈடுபட்டிருந்தனர். உள்ளாட்சி முறை பல்லவர் காலத்திலேயே தோன்றியது என்பர். சுந்தரர் காலத்தில் கி.பி.9ஆம் நூற்றாண்டில் திருவெண்ணெய் நல்லூரில் ஊரவையும், திருநீலகண்ட நாயனார் காலத்தில் சிதம்பரத்திலும் இருந்ததாக பெரியபுராணம் தெரிவிக்கின்றது.

சிற்றூர்களை நேரே பொறுப்பாக அரசியலுக்கு உட்பட்டு ஆட்சி செய்தவர்கள் 'ஆளுங்கணத்தார்' எனப்பட்டனர். இவர்கள் ஊரவையிலிருந்து மாறுபட்டவர். இக்காலத்தில் நகர அவையார் போன்றவர் (commissonor) கோவில் தொடர்பான பலவகை

வேலைகளையும் தவறாது கவனித்து வந்தவர்கள். ‘அமிர்தசணத்தார்’ என வழங்கப்பெற்றனர். இவர்கள் கோவிலுக்கு வரும் தானங்களைப் பெற்று, கோவில் பண்டாரத்தி (கஜானா)லிருந்து பொருள்களைக் குறித்த வட்டிக்குக் கடன் தருவர். இவை தொடர்பான பாத்திரங்களைப் பாதுகாப்பர். கோவில் தொடர்பான பிற வேலைகளையும் செய்வர். ஊரவையாருக்குக் கோவில் தொடர்பான செய்திகளில் பொறுப்புடையவர்.

### .6.3.3 படையியல்

பல்லவர்களிடம் யானைகள், குதிரைகள், வீரர்கள் எனும் முப்படைகள் இருந்துள்ளன. தேர்ப்படை குறித்த செய்திகள் இல்லை. மேலைநாட்டுக் குதிரைகள் மாமல்லபுரத்தில் இறக்குமதி செய்யப்பட்டதை சான்றுகள் தெரிவிக்கின்றன.

பல்லவ மன்னர்களிடம் சிறந்த படைத்தளபதிகள் பணியாற்றி உள்ளனர். சிம்மவர்மன் காலத்தில் விஷ்ணுவர்மனும் நரசிம்மவர்மன் காலத்தில் வாதாபியைக் கைப்பற்றிய சிறுத்தொண்ட நாயனராகிய பரஞ்சோதியும் இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் உதயசந்திரனும் மூன்றாம் நந்திவர்மனிடம் பூதிவிக்கிரமகேசரி என்னும் படைத்தலைவனும் சிறந்த முறையில் போர் செய்து தன் மன்னனுக்குப் பெருமையையும் எதிரிக்குப் படைவலிமையையும் போராற்றலையும் காட்டியுள்ளனர்.

பல்லவமன்னர்கள் கடற்படையையும் கொண்டிருந்ததை வரலாற்றுச் சான்றுகள் உறுதி செய்கின்றன. நரசிம்மவர்மன் தன் நண்பனான மானவர்மனுக்கு உதவி புரிய தன் கடற்படையை ஈழத்திற்கு அனுப்பி வெற்றி பெற்றுள்ளான். நிருபதுங்கவர்மன் காலத்தில் ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் என்ற பாண்டியன் பல்லவன் கடற்படை பெற்று ஈழத்தின் மீது படையெடுத்து சென்ற செய்தியை அறிய முடிகின்றது. இராசசிம்மன் இலக்கத் தீவுகளை வென்றதாக வரலாறு தெரிவிக்கின்றது.

### 6.3.4 வரியியல்

பல்லவ அரசிற்குக் கிடைத்த வரி பற்றியும் வரிவசூல் முறையை பற்றியும் வரிவிலக்கு நிலங்கள் பற்றியும் ''உறுவப்பள்ளிக் கல்வெட்டு' குறிப்பிட்டு உள்ளது. அரசின் வருவாயில் நிலவரி முதன்மையானது. நிலங்கள் உழவுநிலம், தரிசு நிலம். இறையிலி நிலம் எனப் பிரிக்கப்பட்டு இருந்தன. இறையிலி நிலப்பகுதிகளான பிரமதேயம், தேவதானம், திருவிடையாட்டம், பள்ளிச் சந்தம் ஆகியன வரிவிலக்கு அளிக்கப்பட்ட இறையிலி நிலங்களாகும்.



சிவன் கோவில் - தேவதானம்

திருமால் கோவில் - திருவிடையாட்டம்

சமணப் பள்ளிகள் - பள்ளிச்சந்தம்

அந்தணர் - பிரமதேயம்

அரசு நிலங்கள் 'அடைநிலம்' எனவும் தனியார் நிலங்கள் 'பயல்நிலம்' எனவும் அழைக்கப்பட்டன. அடைநிலங்களில் பயிரிடும் உரிமை நேரடியாக உழவர்களுக்கு அளிக்கப்பட்டிருந்தது. இந்த உரிமை அடிக்கடி மாற்றப்பட்டது.

நீர்ப்பாசனத்திற்கும் வரிவசூல் செய்யப்பெற்றது. உழவினைப் பெருக்கும் நோக்கத்துடன் பல்லவர்கள் பல ஏரிகளை வெட்டியுள்ளனர். ஏரியினைத் தாடகம், என்று குறிப்பிட்டு உள்ளனர். அவற்றுள் உத்திர மேரூர்ஏரி, காவிரிப்பாக்கம் ஏரி. தென்னேரி, மகேந்திரவாடி, மாமண்டூர் ஏரி, வாலி ஏரி, வெள்ளேரி ஆகியன குறிப்பிடத்தக்கவை. ஏரிகளைப் பழுது பார்க்க அதற்குச் செலவிட 'ஏரிப்பட்டி' என்ற இறையிலி நிலங்கள் தனியாக கொடுக்கப் பெற்றுள்ளன. இந்த ஏரிகளில் பல மழைநீரையும் ஆற்று நீரையும் பெற்றுள்ளன. இந்த ஏரிகள் தவிர கூவல்கள் பல (கிணறுகள்) வெட்டப்பட்டு உள்ளன. கால்வாய்களும் பல வெட்டப்பட்டு உள்ளன. அதற்கு ஆற்றுக்கால், நாட்டுக்கால் எனப் பெயர். பெரிய வாய்க்கால்களிலிருந்து பிரிந்த கிளைக்கால்கள் பல. அவை குரங்கு, கால், கிளைக்கால், ஓடை எனப் பல்வேறு பெயர்கள் பெற்றிருந்தன. வாய்க்கால்களில் மதகுகள் இருந்து கிளைக்கால்களில் நீரை சேர்த்தன. ஏரிகளைச் சீர்திருத்தம் செய்து

செப்பனிட பணம் படைத்த பெருமக்கள் ஊரனவயாரிடம் 'பொன்' முதலியவற்றை ஒப்படைத்துள்ளனர்.



அத்தொகையை வட்டிக்கு விட்டுப் பெருக்கி அதனை நல்வழியில் பயன்படுத்தி வந்தனர். பலர் நிலங்களைத் தானம் செய்து அவற்றின் வருவாயைக் கொண்டு நீர்ப்பாசன வசதிகளைத் திருத்தமுறச் செய்து வந்தனர். ஊர் வருமானத்தில் ஒரு பகுதியும் இப்பணிகளுக்குப் பயன்பட்டு வந்தது. அரசும் பொருளுதவி செய்து வந்ததால் நீர்ப்பாசனம் குறைவின்றிப் பல்லவர் காலத்தில் நடைபெற்று வந்தது.

தொழில்வரி வழக்கில் இருந்துள்ளதை சான்றுகள் எடுத்துரைத்துள்ளன. காணம், இறை பாட்டம் என்பன அவை சார்ந்த சொற்கள் மட்பாண்டம் செய்தல், கள் இறக்குதல், ஆடை நெய்தல், ஆடை விற்றல், நூல் நூற்றல், நெய் விற்றல், கால் நடை மேய்த்தல் போன்ற தொழில் புரிந்தோர் தத்தம் தொழில் செய்தவற்கு வரி அளிக்க வேண்டியிருந்தது. கொல்லர், வண்ணார், வலையர், தரகர், ஓடக்காரர் போன்றோரும் வரி செலுத்தினர் நிலஅளவை, வரிஅளவை கணக்குகளையும் சிற்றூர் - பேரூர் அரசியல் அலுவலர்கள் நிர்மாணித்து வந்தனர். சிற்றூர் தலைவன் சிற்றூர் வருவாயில் ஒரு பகுதியைப் பெற்று வாழ்ந்தான். அவனுக்கு அந்த ஊர்க்கார்கள் செலுத்திய வரி 'விசக்காணம்' அல்லது 'வியவன் காணம்' ஆகும். நெல் விற்பவர் அரிசி முதலிய பலவகை கூலவகைகளை விற்போர் குறிப்பிட்ட அளவையுடைய அரிசியோ பிற கூலமோ வரிய ாகத்தந்துள்ளனர். அரசர் தலை இடப்பட்ட திருமுகங்களை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் கொண்டு செல்ல வரி இருந்தது என்றும் அதற்கு 'திருமுகக்காணம்' எனப்பெயர் வழங்கிற்று. கத்தி முதலிய கருவிகளை விற்போர் 'கத்திக்காணம்' என்னும் வரியும் பறை அடிப்போர் 'நெடும்பறை' என்னும் வரியும் எனப் பல துறைகளிலும் வரிகள் பெற்று வந்த வருவாய் அரசாங்கப் பண்டாரத்தை (கஜானா) அடைந்தது. இவை தவிர மூலிகைகளுக்கு இடப்பட்ட வரிகளாக செங்கொடிக்காணம், கண்ணாட்டுக்காணம், குவளைநடுவரி, குவளைக் காணம், வீட்டுவரி, சுங்கவரி, சந்தைவரி போன்றனவும் குடிமக்கள் செலுத்திய வரிகளாகும் பல்லவர் காலத்தில் அரசாங்க நிர்வாக முறைகள் திறம்பட செயல்பட்டமைக்கு

வரிநிர்ணயமும் வரிவிலக்கும் அரசாங்கத்தில் வருவாய்க் கணக்கும் சான்றுகளாக விளங்குகின்றன.

### .6.3.5 நீதியியல்

நாட்டின் தலைமைநீதிபதியாக மன்னனே இருந்தான். நீதிமன்றங்கள் அறம் கூறும் அவையங்கள் என்று அழைக்கப்பெற்றன. சிற்றூரில் இருந்த அறங்கூறு அவையங்கள் கரணம்' என்றும் பெருகரங்களில் இருந்தவை. 'அதிகரணம்ஷ என்றும் பிற வழக்குகளை விசாரிக்கும் மன்றம் 'தருமசானம்'என்றும் குற்ற வழக்குகளை விசாரிக்கும் மன்றம் 'அதிகரணம்' என்றும் அழைக்கப்பெற்றன.

ஒரு வழக்கில் ஆட்சி, ஆவணம், அயலவர் காட்சி ஆகிய மூன்றையும் கொண்டு தீர்ப்பு வழங்கப்பட்டது. ஆட்சி என்பது அனுபோக பாத்தியம், ஆவணம் என்பது எழுத்து வடிவில் அமைந்த பதிவுச்சான்று அயலார் காடசி என்பது நிகழ்ச்சியை நேரில் கண்டவரின் சாட்சியம். ஊர் மன்றங்களில் குற்றவாளிக்கு அளிக்கப்பட்ட தண்டம் 'மன்றுபாடு' என்பதாகும். சட்ட நுணுக்கங்களை எடுத்துரைக்க 'தர்மாசனப்பட்டர்' என்னும் ஆலோசகர் இருந்ததாக வரலாற்றுச்சான்றுகள் குறிப்பிடுகின்றன.

## 6.4 பல்லவர் காலக் கல்விநிலை

பல்லவர் காலக் கல்வி நிலை பண்டைய கல்வி முறை அறம், பொருள், இன்பம், வீடு சார்ந்த கல்வியையே முதன்மைப்படுத்துவன. போர் முறைகளும் போர்க்கருவிகளும் தத்தவ ஞான விளக்கமும், அரசியல் அறிவும் தரப்பெற்ற கல்வியே பண்டைய கல்விமுறையாகும் இலக்கியம், இசை, நடனம், நாடகம், ஓவியம் கட்டிடம் போன்றவற்றில் பல்லவர் காலம் சிறந்திருந்த நிலையில் அக்கலைகள் குறித்த கல்வியும் பயிற்சியும் மிகுதியாக இருந்திருக்க வாய்ப்புண்டு.

### 6.4.1 காஞ்சிக் கல்லூரி

கதம்ப அரசர் மரபைத் தோற்றுவித்த மயூரசன்மன் முதற்பல்லவர் காலத்தில் காஞ்சியிலிருந்த வடமொழிக் கல்லூரியில்

குறிப்புகள்

*Self-Instructional Material*

(கடிகை) படிக்க வந்ததிருக்கலாம் (கி.பி.345-370) என ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். அக்கல்லூரி வேதங்களையும், உயர்ந்த ஆராய்ச்சிக்கல்வியையும் அளித்து வந்துள்ளது. மாணவர்கள் நூற்றுக்கணக்கற்றோர் படித்துள்ளனர். 'மயூரசன்மன்' பல்லவ மன்னனால் விரட்டப் பெற்றான் என்பதிலிருந்து அக்கல்லூரி பல்லவமன்னனின் கட்டுப்பாட்டில் இருந்திருப்பதை அறியமுடிகின்றது.

பல கலை வல்லுநர்களும் கலந்து உரையாடும் இடமாகவும் விளங்கிற்று. ஒரு கலையில் புலமை எய்திய ஒருவர் தாம் கண்டதைக் கூறிப் பிறர் சம்மதம் பெறவும் இக்கடிகை பயன்பெற்றது. மதுரைத்தமிழ்ச் சங்கம் போலச் சிறந்திருந்தாகக் குறிப்பிட்டு உள்ளனர். இங்கிருந்து தர்மபாலர் நாலந்தாப் பல்கலைக்கழகப் பேராசிரியராகச் சென்றார் என்றால் இக்கடிமைகயின் சிறப்பினை அறியலாம்.

கடிகாடலம் என்னும் வைணவர் கலைப் பீடமும் இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் சோளிங்கர் மலை மீது இருந்தது என்றும் அதற்கு **மானியம்** தரப்பெற்றதாக திருவல்லம் கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

### 6.4.2 பாகூர் வடமொழிக்கல்லூரி

பல்லவர் காலத்தில் பெரும்பதியாக விளங்கிய பாகூர் என்னுமிடத்தில் நிருபதுங்கவர்மன் ஆட்சிக்காலத்தில் ஒரு கல்லூரி இருந்தது. அங்கு 14 வகையான கலைகளும் 18 வகையான வித்தைகளும் கற்பிக்கப்பெற்று வந்தன. 18வகை வித்தை என்பது நான்கு வேதங்கள், ஆறு அங்கங்கள், மீமாம்சை, நிபாயம், தருமசாத்திரம், புராணம், மருத்துவம், வில்வித்தை, இசை, பொருள்நூல் ஆகியன.

இக்கல்லூரி நடைபெற கி.பி.850இல் நிருபதுங்கவர்மன் ஆட்சியில் பாகூரை அடுத்த மூன்று சிற்றூர்கள் சேட்டுப்பாக்கம், விளாங்காட்டங் கடுவனூர், இறைபுனைச்சேரி ஆகியன அதிகாரி ஒருவனால் தரப்பெற்றன.

### 6.4.3 அக்கிரகாரங்கள்

நான்கு வேதங்கள், ஆறு அங்கங்கள் முதலிய பலகலைகளில் சிறந்த மறையவரைக் கொண்ட சேரியே அக்கிரகாரம் ஆகும். கற்றறித்த மறையவர் - வாதங்களில் வல்லமறையவர் - கற்பிக்கும் ஆற்றல் பெற்ற மறையவர் யாவரும் கூடி தங்கியிருந்தமையால் பலரும் இவ்விடம் சென்று கல்வி கற்க வசதி இருந்தது. பல துறை கல்வியைப் பெறும் சேரியாக ஊருக்கு வெளியே அமைதி குடி கொண்ட இயற்கைக் சூழலில் இருந்தது. அரசர்கள் அவர்களுக்கு சிற்றூர்களை இறையிலியாக தந்து எல்லா வசதிகளையும் தந்ததால் அவர்கள் மன அமைதியுடன் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினர். மாணவர் பலரும் வந்து கல்வி கற்றதால் அரசரும் செல்வர்களும் பொருளுதவி செய்து மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கேற்ற சத்திரங்களை உருவாக்கினர். கோவிலும் உருவாக சேரியும் பெரிதாக மறையவரே ஊராண்மையைச் சட்டவிதிகளின் படி நிர்வகித்து வந்தார். இப்பகுதியே ‘குடி’ என்றும் ‘சதுர்வேதிமங்கலம்’ எனவும் பெயர் பெற்றது. இங்கு சேரிகளைப் பகைவர்களிடமிருந்து பாதுகாக்க படைக்கலப் பயிற்சியும் அளிக்கப்பெற்றது. இப்படைப்பயிற்சி பெறவே மேலைச்சாளுக்கியரிடம் பல பிராமணர் பயிற்சி பெற்றனர் என வரலாறு தெரிவிக்கின்றது.

வடமொழியோடு தமிழினையும் கற்று கோவில்களுப் பூசை செய்து விழாக்கள், நாடகங்கள் நடத்தி, உணவுச்சாலை, மருத்துவச் சாலை போன்றனவும் நிறுவி அதனைப் பராமரித்து வந்தனர்.

### 6.4.4 மடங்கள் வழி கல்வி

மடங்கள் கல்வி கற்க வருவோருக்கு உணவும் தங்குமிடமும் தந்து கல்வியைத் தருவன. கங்கபாடியிலிருந்த மடங்களில் சமணம், பௌத்திரம், தர்க்கம், காவியம், இலக்கணம், நாடகம், பாதசாத்திரம் முதலிய பல கலைகளில் வல்லூநர் சிறந்து விளங்கினர். சைவமடங்களுள் காபாலிகமடம், பாசுபதமடம், காளாமுக மடம் போன்ற பல இருந்ததை மத்தவிலாசத்தைக் கொண்டு அறியலாம். காளாமுகர் பெரும் படிப்பாளிகளாக விளங்கினர். ‘இராசகுரு’ என்னும் உயிர்நிலையிலிருந்து பேரரசர்கள் பலர் சீடர்களாக விளங்கினர் என்பதை பிற்காலச் சோழர் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

மடங்கள் கற்பித்த பாடங்களில் இலக்கணம், தரிசனங்கள், சித்தாந்தம், யோகம், அறநூல்கள், புராணங்கள், செய்யுள், நாடகம், தருக்கம், இசை. ஓவியம் முதலியன பாடத்திட்டங்களாக இருந்துள்ளன.



பல்லவர் ஆட்சிக் காலத்தில் பாதிரிப்புலியூறிற்றான் (பாடலிபுத்ரம்) என்னுமிடத்தில் சிறந்த சமணமடம் இருந்துள்ளது. 'யோக விபாகம்' என்னும் சமணநூல் பாலி மொழியிலிருந்து வடமொழியில் மொழிபெயர்க்கப்பட்ட இடம். மருள் நீக்கியார் என்னும் திருநாவுக்கரசர் இச்சமண மடத்தில் வீற்றிருந்து கல்வியில் சிறந்து 'தருமசேனர்' என்னும் பட்டம் பெற்ற இடமும் இம்மடமாகும். திருநாவுக்கரசர் சைவராக மாறியதும் அம்மடத்தினை இடித்து அப்பொருட்களைக் கொண்டு திருவதிகையில் கோவில் கட்டி அதற்கு 'குணதர ஈசுவரம்'என்னும் பெயரினையும் வழங்கி உள்ளான்.

### .6.4.5 திருப்பருத்திக் குன்றம்

காஞ்சிபுரத்தை அடுத்துள்ள திருப்பருத்திக் குன்றம் என்னுமிடம் 'சமண காஞ்சி' என்று அழைக்கப்பெற்றது. பல்லவர் காலத்தில் மிக உயர்ந்த இடத்தில் இருந்த இடமாகும். பல்லவர்காலச்சிற்பம் - ஓவியக் கலைக்கும் சிறந்த இடமாக விளங்குவது. சமணக் கலையைப் பரப்ப அமைந்திருந்த இடமாக திருப்பருத்திக் குன்றம் விளங்கியுள்ளது.

பல்லவர் ஆட்சியில் தமிழ்க்கல்வியும் தேவாரம், ஆழ்வார் தருளிச் செயல்கள் போன்றவற்றால் மேம்பட்டு சிறந்து விளங்கியமையை அறிய முடிகின்றது. இவ்வகையில் பல்லவர் ஆட்சியில் வடமொழியும் தமிழும் சமயக்கல்வியும் கலைகளும் மேலோங்கி நின்றன என்பதை வரலாற்றுச் சான்றுகள் எடுத்துரைத்துள்ளன.

### 6.4.6 கோவில்கள்



பல்லவர் காலத்தில் கயிலாச நாதர் கோவில் போன்றவை பல்கலைப் பள்ளிகளாகவும் இருந்து வந்துள்ளன. அக்கோவில்களில் சிற்பம், ஓவியம், இசை, நடனம், நாடகம், சமயக்கல்வி, சாத்திரக்கல்வி

போன்றனவும் கற்பிக்கப்பட்டு உள்ளன இங்கு பத்திரப்பதிவும் (பட்டயமும் கல்வெட்டும் பிறவும்) நிகழ்ந்துள்ளன. பெரிய கோவில்களில் படிக்கும்மண்டபம், நடனமண்டபம், நாடகமண்டபம், தருக்கமண்டபம் முதலியன இருந்து மக்களின் அறிவு வளர்ச்சியை மேம்படுத்தி உள்ளன.

## 6.5. பெண்டிர் நிலை

பல்லவர் காலத்தில் பெண்கள் நிலை வைசமயம் சார்ந்து நின்றசீர் நெடுமாறன் பட்டத்து அரசியாகிய மங்கையர்க்கரசியின் செயல்பாடுகள் அரசியல் நிகழ்வுகளோடு குறிப்பிடத்தக்கன . தன் கணவனை சைவசமயத்திற்கு மாற்றியதோடு அவரின் கூன் விழுந்த தன்மையையும் மாற்றியதற்கு முதல்காரணியாக விளங்கியவர் . காரைக்காலம்மையாரும் இக்காலத்தில் சிவபெருமானைப் போற்றி வழிபட்டு திருவிரட்டைமணிமாலை அற்புதத் திருவந்தாதி ஆகிய நூல்களை இயற்றியுள்ளார் . வைணவ சமயத்தில் பெரியாழ்வாரின் வளர்ப்பு மகளாகிய ஆண்டாள் சூடி கொடுத்த நாச்சியராக திருப்பாவையும் நாச்சியார் திருமொழியினையும் தமிழ் இலக்கிய உலகிற்குத் தந்துள்ளார் .

## 6.6 சமூக வாழ்க்கை

சங்க காலத்திற்குப் பிறகு பிற்காலம் பல்லவர் காலத்தில் தமிழகம் தெளிவான சமூக வாழ்க்கையைக் கொண்டு வளர்ச்சியைப் பெற்று வந்துள்ளது. தொழிலால் வேறுபாடு கண்ட சங்க காலத்தை விட பிறப்பால் வேறுபாடு உருவாக்கப்பெற்ற பல்லவர் காலத்தில் அவ்வேறுபாட்டினையும் பலவீனப்படுத்தும் உயர்நோக்கும் பண்பாடும் நிறைந்த காலமாக, பல்லவர் கால சமூக வாழ்க்கை இருந்துள்ளது. சேக்கிழார் தம் பெரிய புராணத்தில் அந்தணர் குலத்தில் பிறந்த அப்பூதி அடிகளார் வேளாண் குலத்தில் பிறந்த நாவுக்கரசரை வீட்டுக்கு அழைத்து வந்து உணவு வழங்கினார். அவருடன் அமர்ந்து உணவு உண்டார். அப்பரை சிவபெருமானை விட உயர்ந்த நிலையில் வைத்து வணங்கினார் அப்பூதிஅடிகளார். பிறப்பிலே தாழ்ந்த திருநீலகண்ட யாழ்ப்பாணர் ஞானசம்பந்தரோடு பல இடங்களுக்குச் சென்று யாழ் வாசித்து ஒன்றி இருந்ததை சேக்கிழார் பல இடங்களில்



குறிப்புகள்

குறிப்பிடுகின்றார். பல்லவர் காலத்தில் சாதி வேறுபாடு மக்களிடம் காழ்ப்புணர்ச்சியை ஏற்படுத்தவில்லை.



பல்லவர் கால சமூக வாழ்க்கையில் அரசியல், நிர்வாகம், நீதித்துறை, படைத்துறை. கல்வி போன்ற பலவற்றிலும் சிறந்து விளங்கியதோடு கலைகளிலும் ஓங்கி உயர்ந்து நின்ற தமிழகமாக விளங்கியது.

சங்க காலத்திற்குப் பின் களப்பிரர் பல்லவர் ஆட்சியில் வைதிக சமயம், சமணம், பௌத்தம் ஆகிய மூன்று சமயங்கள் ஒன்றோடொன்று போட்டி இட்டன. அச்சமயப் போட்டியில் சமணமும் பௌத்தமும் தொடக்கத்தில் செல்வாக்கு அடைந்து பிறகு சைவ வைணவ சமயங்கள் முதன்மை அடைந்தன.

பௌத்த சமயம் சென்று தேய்ந்து மறைந்தது. சமணமும் பிற்காலத்து மறைந்துவிடும் நிலை தோன்றிற்று. அரசன் எச்சமயத்தைப் பின்றபற்றினானோ அச்சமயத்திற்கே முதன்மையும் மக்களும் அவற்றையே பின்பற்ற வேண்டிய நிலையும் உருவாகியது.

“சைவமும் வைணமும் இந்து சமயத்தின் இரு கண்கள் எனலாம் என கே.கே பிள்ளை தம் தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும் என்னும் நூலில் குறிப்பிட்டு உள்ளார். சமணசமயம் தோற்றுவித்த நீதி நூல்களின் எண்ணிக்கை குறைந்து சைவ சமய குரவர்களும் ஆழ்வார்களும் உருவாக்கிய இலக்கியங்கள் தமிழின் வளர்ச்சிக்கும் புத்திலக்கிய வகைக்கும் அடித்தளமாகின. சைவ வைணவ சமய அடியார்கள் மக்களிடையே வாழ்ந்து இறைவன் மீது கொண்ட அன்பினைத் தம் பாமாலைகளில் கோர்த்து இறைவனுக்குச் சூட்டினர்.

“உலக இயல்புகளையும் இயற்கை எழிலையும் அவர்கள் மறுக்கவும் இல்லை. மறக்கவும் இல்லை. வெளி, வளி, தீ, நீர், நிலம் என்னும் ஐந்து பூதங்களிலும் பேசுகின்ற சொல்லினும் எண்ணுகின்ற எண்ணங்களிலும் கடவுள் கலந்துள்ளார் என்பதை வலியுறுத்தி, எண்ணம், சொல் ஆகியவற்றில் தூய்மை வேண்டும் என்று மக்களுக்கு எடுத்தோதினர்” என கே.கே. பிள்ளை எடுத்துரைத்துள்ளார்.

சைவத்தோடு தொடர்புடைய பாசுபதம், காபாலிகம், காளாமுகம் போன்றனவும் பல்லவர் காலத்தில் மேலோங்கியிருந்தது. மகேந்திரவர்ம பல்லவன் எழுதிய ‘மத்தவிலாசபிரகசனம் காபாலிக சமயம் சார்ந்த,சமயப்பிரிவுகளின் தாக்கத்தின் ஒன்றாகவும். இருப்பதிலிருந்து அறியலாம்.



குறிப்புகள்

## 6.7. பல்லவர் காலக் கட்டிடக் கலை

பல்லவர் காலக் கட்டிடக்கலை செங்கல், சுண்ணாம்பு, மரம், உலோகமின்றி கற்களில் குடைந்தெடுக்கப்பட்ட குகைக்கோயில்களாக பல தனிச்சிறப்புடன் விளங்குகின்றன. மகேந்திரவர்மன் காலத்திற்கு முன்பு கற்கோவில்கள் இல்லை. அவ்வகையில் பல்லவர்கள் அமைத்த குகைக்கோவில்கள்.

1. மகேந்திர வாடி
2. பல்லாவரம்
3. மகாபலிபுரம்
4. திருக்கழுக்குன்றம்
5. வல்லம்
6. மாமண்டூர்
7. தளவானூர்
8. மண்டப்பட்டு
9. மேலைச்சேரி
10. திருச்சிராப்பள்ளி
11. குன்றாண்டார் கோவில்
12. குடுமியாமலை
13. நாரத்தமலை
14. சித்தன்ன வாசல்

ஆகிய இடங்களில் உருவாக்கப் பெற்றுள்ளன. கோவில்களில் அமைக்கும். விமானங்கள் ‘‘தூயது, கலப்பு, பெருங்கலப்பு என மூவகைப்படும். கல், செங்கல், மரம் முதலியவற்றால் ஒன்றைக் கொண்டே அமைக்கும் விமானம் ‘தூய விமானம்’ என்றும் இரண்டை கொண்டு அமைப்பது ‘கலப்பு விமானம்’ என்றும் இரண்டிற்கு மேற்பட்ட பொருள்களால் அமைப்பது பெருங்கலப்பு விமானம் என்றும் கட்டிடக் கலை நூல் குறிப்பிடுவதாக அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

பழைய சமணர் கோவில் ‘மண்டபம்’ போன்ற அமைப்பினை உடையது. நான்கு தூண்களைக் கொண்டது. அகன்ற கதவுகளை உடையது. மண்டபத்தைச் சுற்றியும் தாழ்வாரத்தை உடையது. மேற்கூரை கல்தளத்தைக் கொண்டது. அவர்கள் மீதும் தூண்கள் மீதும் சமணசித்திரங்கள் தீட்டப்பெற்றிருக்கும். இந்த அமைப்பினை காவிரிப்பூம்பட்டினத்துக் கோவில்களிலும் மாமல்லபுரம் ‘மண்டபம்’ போன்ற அமைப்பிலும் காணலாம்.

‘‘பண்டைச் சமணர் மூன்று சிறு அறைகளைக் கொண்ட கோவில்களை (மண்டபங்களை)யும் அமைத்தனர். அந்த அறைகளில் நடுவில் தீர்த்தகரையில் இரு பக்கமும் இயக்கர் இயக்கியரையும் வைத்தனர். நடு அறையும் இருக்கும்படி அமைத்தனர். இம்முறையில் அமைந்தவையே மகேந்திரன் குடைவித்த கோவில்கள் ஆகும் ‘‘என்பது கே.கே.பிள்ளையின் கூற்று. இக்கட்டிட அமைப்பு முறையே எல்லோரா, அஜந்தா வரை பரவியது. பிற்காலத்தில் இராசசிம்மன் கட்டிய கைலாசநாதர் கோவில் அவ்வாறு அமைந்தே.

தேவாரகாலத்தில் குறிப்பாக திருநாவுக்கரசர் காலத்தில் மகேந்திரவர்மபல்லவன் தன் மண்டகப்பட்டுக்கல்வெட்டில் மரம், செங்கல், மண், உலோகம் இவற்றால் உருவாகிய கோவில்கள் சங்க நூற்பாக்களாலும் அதற்கு முன்னருமே உணர்த்தப்பட்ட செய்தியாகும். இங்ஙனம் அமைந்த பழைய கோவில்கள்

1. பெருங்கோவில்
2. இளங்கோவில்
3. மணிக்கோவில்

4. கரக்கோவில்

5. தூங்கானை மாடம்

எனப் பல வகைப்படும்.

இவ்வகையில் பல்லவர் காலத்தில் கட்டிடக்கலை தனிச்சிறப்புடனும் பொலிவுடனும் மன்னர்களால் கட்டப்பெற்று காலத்தினால் அழியாத்தன்மை பெற்று விளங்குவதை வரலாறும் காலமுமே பதிவு செய்துள்ளன.

குறிப்புகள்

### 6.7.1 ஓவியங்கள்

பல்லவர் காலத்தில் ஓவியங்களும் சிற்பங்களும் நுண்கலையின் உன்னதமாக விளங்கின. பல்லவர் கால ஓவியச்சிறப்பினை உலகிற்கு வண்ணமாக்கிக் கூறிக் கொண்டிருப்பது சித்தன்ன வாசல். சித்தன்ன வாசல் குன்றின் மீது வெட்டப்பட்ட குகைக்கோவிலின் தூண்களிலும் மேற்கூரையிலும் வரையப்பட்டிருக்கும் வண்ண ஓவியங்கள் காண்பவர்களின் கண்களுக்கு விருந்தாக விளங்குவன. முன் மண்டபத் தூண்கள் இரண்டிலும் வரையப்பட்டிருக்கும் நடனமாதர் ஓவியங்கள் அக்காலத்தில் பெண்கள் அணிந்திருந்த ஆடைகள் அவர்களுடைய கூந்தல் ஒப்பனை போன்றன அழகாக தீட்டப்பெற்றுள்ளன. வலப்புறத் தூணின் உட்புறத்தில் தீட்டப்பட்டிருக்கும் அரசன் அரசியர் ஓவியம், அக்கால அரசின் மணிமுடி அழகு, ஆடவர், மகளிரின் தோற்றப் பொலிவுகளைச் சித்தரிப்பன. முன்மண்டபக் கூரையில் தாமரைக்குளமும் சித்தன்னவாசல் ஓவியங்களின் முதன்மைச்சித்திரமாக விளங்குவது. பச்சிலைகளுக்கு இடையே மலர்ந்துள்ள செந்தாமரை மலர்கள் அவற்றின் இடைஇடையே காட்சி அளிக்கும் கயல்மீன்கள், கவின் மிகு அன்னங்கள், நீரில் நீந்தி மகிழும் யானைகள், எருமைகள், இடக்கையில் பூக்கூடை தாங்கி வலக்கையால் மலர் பறிக்கும் சமணத்துறவி ஆகிய காட்சிகள் இயற்கையின் எழில் மிகு வண்ண ஓவியங்கள், அந்த ஓவியங்களில் பயன்படுத்தப் பெற்றிருக்கும் வண்ணக்கோலத்தின் வனப்பு வார்த்தைகளால் விவரிக்க முடியாத ஒன்றாகும். சுவர்களில் வண்ணச் சாந்து மஞ்சட்கிழக்கு, மஞ்சள், சிவப்பு, வெள்ளை, கருப்பு, நிலம், பச்சை ஆகிய நிறம் தரும் பச்சிலைகள் ஆகியவற்றைப்

பயன்படுத்தித் தீட்டப்பெற்ற கவின் மிகு ஓவியங்கள் நூற்றாண்டுகள் பல கடந்தும் வாழும் அழியா ஓவியங்களாகும்.

### .6.7.2. சிற்பங்கள்



சிற்பக்கலைக்கு உயிர் கொடுத்த மன்னவனாக நரசிம்மவர்மன் விளங்குகிறான். வாதாபியைக் கைப்பற்றிய பொழுது அங்கு சுவர்களில் செதுக்கப்பெற்ற சிற்பங்களைக் கண்டே மாமல்லபுரத்திலும் மகிடாசுரமண்டபம் துர்க்கை சிங்கத்தின் மீது அமர்ந்து எருமைத் தலை அரக்கன் மீது அம்புகளைப் பொழியுமாறும் அவரவர்க்குரிய இரு படைகளும் அவர்களைச் சுற்றி நின்று அவர்களுக்கு அரண் செய்ய அமைந்த சிற்பங்களின் சிறப்பு பல்லவர்களுக்கே உரியதாகும். மகாபலிபுரமாகிய மாமல்லபுரத்திற்குச் சிறப்பு தருவது கற்பாறைகள் மீது செதுக்கி வைத்திருக்கும் சிற்பங்களே எனலாம்.

கோவர்த்தனமலையும், இடையர்கள் பால் கறப்பதும், சுற்றிலும் பலராமனும் பிறகும் குழுமிநிற்பதும், கன்று பகவின் மடியில் வாய் வைத்திருப்பதும், மலையிலிருந்து பாய்ந்து விழும் ஆறு, அதன் நடுவில் விளையாடும் நாகர், நீர் நிறைந்த குடத்தைத் தோள் மீது சுமந்து செல்லும் ஓர் அந்தணன், ஆற்று நீர் உண்ணவரும் ஒரு மடமான், ஆற்று நீரில் பாய்ந்து நீராட நிற்கும் அன்னப்பறவைகள் ஆற்றங்கரையில் ஓர் அழகிய கோவில், அதைச் சுற்றிலும் தவநிலையில் நிற்கும் முனிவர்கள், அம்முனிவர்களைப் பார்த்துத் தானும் தவம் புரியும் பூனை, பூனை தவம் மேற்கொண்டதால் அச்சமற்று ஆடி மகிழும் எலிகள், அருச்சனன் தவம் எனப் பல சிற்பங்கள் சிற்பத்திறமையின் உச்சமாக விளங்குவன.

இராசசிம்மன் தன் காலத்தில் கட்டிய காஞ்சி கைலாசநாதர் கோவிலும் சிற்பங்கள் காண்பாரை அதிசயம் கொள்ளச் செய்யும் இறைவன் ஆடிய ஊர்த்துவ நடனம், யானைக்கை நடனம் முதல் அக்கால மக்களிடையே பெரு வழக்கிலிருந்த பல்வேறு நடன வகைகளும் அழகிய சிற்பங்களாக செதுக்கப்பெற்றுள்ளன. அம்மை அப்பர் சிற்பங்களும், நான்முகன் - நாமகள், திருமால் - திருமகள் சிற்பங்களும் பல்லவர்களின் சிற்பக்கலைக்கூடமாக விளங்கின எனலாம்.

## 6.8 இசைக்கலை

மன்னன் எவ்வழி அவ்வழி குடிகள் என்பதற்கேற்ப பல்லவர் காலத்தில் இசையும் நடனமும் தமிழகத்து மக்களிடையே அவர்கள் வாழ்க்கையில் பிரிக்க முடியாத அங்கமாக விளங்கின. அக்காலத்தில் ஆட்சி புரிந்த பல்லவவேந்தர்களும் அக்கலைகளில் வல்லவர்களாக அவற்றைப் பேணி வளர்ப்பவர்களாகத் திகழ்ந்ததால் ஏற்பட்ட தாக்கமே எனலாம்.

### 6.8.1. மகேந்திரவர்மனும் இசையும்

மகேந்திரவர்மபல்லவன் சிறந்த இசைப்பேரறிஞனராக விளங்கினான். 'சங்கீரணம்' என்ற தாள வகையை அதன் ஒழுங்குகளை அமைத்ததால் 'சங்கீரணசாதி' என அழைக்கப்பெற்றான். 'பல்லாவரம் குகைக்கோயில்கல்வெட்டு' 'சித்திரநமசிவாய' என்று தொடங்கும் குடுமியான் மலைக்கல்வெட்டு, மகேந்திரவர்மபல்லவன் உருவாக்கிய பண்கள் எட்டுநரம்புகள் கொண்ட வீணைக்கும் பயன்படும். ஏழு நரம்புகளைக் கொண்ட வீணைக்கும் பயன்படும் என்கிறது. இசையைத் தனது செல்வமாகக் கூறியுள்ள மகேந்திரவர்மபல்லவனின் சிறப்பை மாமண்டூர்க் கல்வெட்டு "ஊர்வசிகந்தர்வசாத்திரம்" எனப்பெயரிட்டுப் பாராட்டியுள்ளது. 'பரிவாதினி வீணை' என்னும் வீணையை மீட்டிப் பாடுவதில் சிறந்தவன். அந்த வீணையானது பொன்நரம்புகளைக் கொண்டது என்று வரலாறு சுட்டுகிறது.

### .6.8.2 இராசசிம்மனும் இசையும்

இராசசிம்மனும் இசையில் பெரும் திறம் கொண்டவன். அவனுடைய பல விருதுப் பெயர்களும் வாத்யவித்யாதரன் (இசைக்கருவியில் வித்யாதரன்) என்பதாலும் தும்புருவைப் போல ஆதோத்யவீணை வாசிப்பில் சிறந்தவன் என்பதாலும் 'வீணாநாரதன்' என்றும் சிறப்பிக்கப் பெறும் இசை வல்லவன்'.

### 6.8.3 நாயன்மார்கள் இசை

பல்லவர் காலத்தில் சைவ சமயத்தின் எழுச்சியினால் சைவ சமய அடியவர்கள் எழுச்சியுடன் பல பாடல்களைப் பாடியுள்ளனர்.

திருநாவுக்கரச தேவார இசைப்பாக்களைப் பாடி மக்களைப் பேரின்ப நிலைக்கு அழைத்துச் சென்று திளைக்கச் செய்துள்ளனர். ஆடவர்களும் பெண்களும் கோவில்களில் கலந்து பாடினர் என்னும் குறிப்புகள் தேவாரத்திருமுறைகளில் பல இடங்களில் குறிப்பிடப்பெற்றுள்ளது.

திருஞாணசம்பந்தர் பாடிய பாக்களைத் திருநீலகண்ட யாழ்ப்பாணர் தம் யாழில் இசைத்து மகிழ்ந்த வரலாறும் அவர் யாழிலும் இசைத்து மகிழ்ந்த வரலாறும் பாடமுடியாத நுண்ணிய இசை அமைந்த "யாழ்மூரிப்பண்" என்னும் பண்ணைப் பாடுவதில் திருஞானசம்பந்தரும் சிறந்து விளங்கியதை பல்லவர் கால இசை வளத்திற்கும் சான்றாக குறிப்பிடலாம்.

### 6.8.4 ஆழ்வார்கள் இசை

சைவசமய வளர்ச்சினைப் போலவே வைணவ சமய வளர்ச்சியும் பல்லவர் காலத்தில் சிறந்திருந்தன. சைவ அடியார்களைப் போல ஆழ்வார்களும் வைணவத்தலங்களில் பாகரங்களைப் பாடினர். இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் வைணவசமயம் போற்றப்பட்ட நிலையில் ஆழ்வார்களின் அருளிச் செயல்கள் தோன்றிப் பாடப்பெற்றிருக்கலாம் என்பது வரலாற்று அறிஞர்களின் கணிப்பு.

### 6.8.5 தேவாரகாலத்து இசைக்கருவிகள்

தேவாரகாலத்தில் பலவகையான இசைக்கருவிகள் இசைக்கப்பெற்றுள்ளன. யாழ், வீணை, குழல், கின்னரி, கொக்கரி, சச்சரி, தக்கை, முழவம், மொந்தை, மிருதங்கம், மத்தளம், தமருகம், துந்துபி, குடகுழா, தத்தலகம், முரசம், உடுக்கை, தாளம், துடி, கொடுகொட்டி முதலியன பல்லவர் காலத்தில் இசைக்குப் பெற்ற இசைக்கருவிகளாகும். தேவார காலத்தில் உருவாகிய பண்கள் பழைய இசைநூல்களில் கூறப்பெற்ற இசைநுணுக்கமும் கொண்டவை. இவை பற்றிய செய்திகளைச் சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப் பெற்றிருப்பதிலிருந்து இசை காலம் கடந்து வாழ்வதோடு தமிழரின் தொன்மையையும் அழியாமல் பாதுகாப்பதையும் மறுக்க முடியாது.

## 6.9 தொகுப்புரை

பல்லவர் ஆட்சிமுறை கோட்டங்கள் கூற்றங்கள் இராட்டிரங்கள் எனப் பகுக்கப்பெற்று அரசுப்பணிகளை அதிகாரிகளை நியமித்து கவனித்து வந்துள்ளனர் . பல்லவநாடு பல மண்டலங்களாக கோட்டங்களாகப் பிரிக்கப்பெற்று 24 கோட்டங்களைக் கொண்டிருந்தது .உள்படுக்கருமத்தலைவர் நேர்முகத்தனிச்செயலர் வாயில் கேட்பார் எனப் பல்லவ அமைச்சரவை விளங்கியது . உள்ளாட்சித்துறையில் ஊரவைகள் குழுக்களாகவும் வாரியமாகவும் செயற்பட்டன .யானை குதிரை காலாட்படைகளும் மக்களைக் காக்கும் கலசங்களாக இருந்துள்ளன . அரசு நிலங்கள் 'அடைநிலம்'எனவும்தனியார் நிலங்கள் 'பயல்நிலம்' எனவும் நீர்ப்பாசனத்திற்கு பல ஏரிகள் வெட்டப்பட்டும் வரிவசூல் செய்யப்பெற்றும் உள்ளன . பல்லவர் காலச் சமூகத்தில் கல்வியும் பெண்கள் நிலையும் சிறந்திருந்தன . சமயங்களில் சைவமும் வைணவமும் மேலோங்கியிருந்தன . பல்லவர்கள் தம் கட்டிடக்கலையில் தனித்துவம் கொண்டு விளங்கினர் என்பதற்கு மகாபலிபுரம் சித்தன்னவாசல் குடுமியான்மலை போன்றன சான்றுகளாக உள்ளன .சித்தன்னவாசல் ஓவியங்கள் கண்கவர் ஓவியங்களாகத் தீட்டப்பெற்றுள்ளன . மகேந்திரவர்மன் இராசசிம்மன் போன்றோர் இசையிலே சிறந்து விளங்கினர் என்பதையும் இக்கூறு எடுத்துரைத்துள்ளது .

**குறிப்புகள்**

## 6.10 மாதிரி வினாக்கள்

**1.**பல்லவர்களின் சின்னம் எது ?

நந்தி சின்னம்

2. ஊரவைகள் குழுக்களாகப் பகுக்கப்பட்டு எப்பெயரில் செயற்பட்டு வந்தன ?

   ஊரவைகள் குழுக்களாகப் பகுக்கப்பெற்று 'வாரியங்கள்' என்ற பெயரில் செயற்பட்டு வந்தன .

3. அரசு நிலங்கள் எப்பெயரில் வழங்கப்பெற்றன ?

‘அடைநிலம்’ என்னும் பெயரில் வழங்கப்பெற்றன .

குறிப்புகள்

4. மூலிகைகளுக்கு இடப்பட்ட வரிகள் எவை ?

செங்கொடிக்காணம் குவளைவரி குவளைக்காணம் கண்ணாட்டுக்காணம் .

5. அக்கிரகாரங்க’ என்பதன் பொருள் யாது ?

‘அக்கரகாரங்க’ என்பது நான்கு வேதங்கள் ஆறு அங்கங்கள் முதலிய பல கரைகளில் சிறந்த மறையவரைக் கொண்ட சேரிகளாகும் .

## 6.11 பயிற்சி வினாக்கள்

1.பல்லவர் கால கல்விநிலையை விளக்குக

2.பல்லவர்களின் கலைத்திறன்களை விவரிக்க

## 6.12 மேலும் படித்து அறிக

புலவர்.கா.கோவிந்தனார்

காலந்தோறும் தமிழகம்

எழிலகம்

46-செல்வ வினாயகர் கோவில் தெரு

திருவத்திபுரம்

திருவண்ணாமலை மாவட்டம்-604407

டிசம்பர் -1998

# பிரிவு – 3 சோழர் பாண்டியர்

## கூறு 7

## பிற்காலச் சோழப் பேரரசின தோற்றம் - திரும்புறம்பியம் போர் - பிற்காலச் சோழர் வரலாறு

குறிப்புகள்


7. பாடஅமைப்பு

7.1 அறிமுகம்

7.2 நோக்கம்

7.3 சோழர்களும் சோழப் பேரரசும்

7.1 பிற்காலச் சோழப் பேரரசின் தோற்றம்

7.2 திரும்புறம்பயம் போர்

7.3 பிற்காலச் சோழர் வரலாறு

7.3.1 விசயாலய சோழன்

7.3.2 ஆதித்த சோழன்

7.3.3 முதற் பராந்தக சோழன்

7.3.4 கண்டராதித்தனும் பிற்காலச் சோழப் பரம்பரரையினரும்

7.4 தொகுப்புரை

7.5 மாதிரி வினாக்கள்

7.6 பயிற்சி வினா

7.7 மேலும் அறிக

## 7.1. அறிமுகம்

குறிப்புகள்

தமிழக வரலாற்றில் சோழர்களின் ஆட்சி சங்க காலத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்து உள்ளது. கி.மு.3 ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட சோழர்களாக சிபி முசுகுந்தன், காந்தன், தூங்கெயில் எறிந்த தொடித்தோட்செம்பியன் ஆகியோர் குறிப்பிடப்பெற்று உள்ளனர். கி.மு.3 ஆம் நூற்றாண்டில் செருப்பாழிஎறிந்த இளஞ்சேட்சென்னியும் கி.மு.2ஆம் நூற்றாண்டில் மனுநீதிச்சோழனும், முதற்கரிகாலனும் ஆட்சி புரிந்துள்ளனர்.கி.மு.முதல் நூற்றாண்டில் இரண்டாம் கரிகாலனும் (இமயம் வரை சென்ற மன்னன்) கி.பி.1முதல் கி.பி.150வரை சோழர்களின் ஆட்சியில் நலங்கள்ளியும் நெடுங்கிள்ளியும், மாவளத்தான் என்னும் மன்னனும் கிள்ளவளவனும் பெருநற்கிள்ளியும் கோப்பெருங்சோழனும், வேறு சோழ மரபினர்களும் ஆட்சி செய்துள்ளனர். கி.பி.150-300 வரை நெடுமுடிக்கிள்ளி, இளங்கிள்ளி போன்றோர் ஆட்சி புரிந்துள்ளனர். இக்காலத்திற்குப் பிறகு களப்பிரர் வருகையாலும் பல்லவர் வருகையாலும் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் வீழ்ச்சி அடைந்தனர். விஜயாலயன் காலத்திலிருந்து சோழர் மறுபடியும் எழுச்சி கொண்டு தமக்குரிய ஆட்சிச் சிறப்பினை வெளிப்படுத்தினர். இப்பிற்காலச்சோழப்பேரரசின் தோற்றமும் எழுச்சியும் தமிழக வரலாற்றில் மைல்கல்லாக விளங்குவது.

## 7.2 நோக்கம்

1. சோழர்களின் வீழ்ச்சியும் எழுச்சியும் குறித்து அறிதல்.
2. சோழமன்னர்களின் தனிச்சிறப்புகளைத் தெரிந்து கொள்ளல்
3. சோழர்களின் ஆட்சியில் தமிழகம் பெற்ற சிறப்பினை அறிதல்
4. மன்னராட்சி முறையில் மன்னர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் அரசனுடைய நிர்வாக மேலாண்மைத்திறனைத் தெரிந்து கொள்ளுதல் முதன்மையாகின்றது.

*Self -Instructional Material*

## 7. சோழர்களும் சோழப்பேரரசும்



சங்ககாலத்தில் புகழின் உச்சியிலிருந்த சோழர்கள் களப்பிரர், பல்லவர் வருகையால் சிதைந்து போயினர். களப்பிரர்களை வென்று வடக்கே பல்லவர்களும் தெற்கே பாண்டியர்களும் தங்கள் அரசினை நிறுவியபொழுதும் சோழர்களால் தங்கள் அரசினை நிலைநிறுத்த முடியவில்லை. தமிழகத்துக்குப் புதியவர்களாகிய பல்லவர்களைத் தடுத்தும் நிறுத்தும் பணியில் தொடக்கத்தில் பாண்டியர்களோடு கூடிப் பல்லவர்களை எதிர்த்தார்கள் என்றாலும் பல்லவர் பகைமை, தமக்கு ஆக்கத்திலும் அழிவே விளைவிக்கும் என்பதை உணர்ந்து பல்லவர்களோடு நட்புறவு கொண்டு வாழ்ந்து வந்தனர். சோழர்களின் வரலாற்றில் கி.பி.300-875 ஆண்டுகள் ஏறத்தாழ ஆறு நூற்றாண்டுகள் இருண்ட பகுதியாகும். சோழர்களின் வீழ்ச்சி 'விசயாலயன்' என்னும் சோழமன்னனால் எழுச்சி பெற்று பிற்காலச்சோழர்கள் காலம் தமிழக வரலாற்றில் பொற்காலமாக மின்னும் நிலையினை அடைந்தது.

### 7.1 பிற்காலச் சோழப் பேரரசின் தோற்றம்

தமிழகப் பேரரசு மட்டுமின்றி இந்தியப்பேரரசுகளில் ஒன்றாக விளங்கிய பிற்காலச்சோழப் பேரரசைத் தோற்றுவித்த முதல்வனாக விசயலாயச்சோழன் குறிப்பிடப்படுகிறான். வரலாற்றுப் பக்கங்கள் அவன் புகழினைப் பறை சாற்றிக்கொண்டே உள்ளன. விசயாலயன் காலத்தில் சோழமண்டலம் சோழர், பல்லவர், பாண்டியர் ஆகிய மூவரின் ஆதிக்கத்தின் கீழ்ப் பல பகுதிகளாக விளங்கிற்று. தொடக்கத்தில் விசயாலயன் பல்லவருக்கு அடங்கிய சிற்றரசனாக இருந்திருக்கலாம் என்று வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுவர். இம்மன்னன் காலத்தில் முத்தரையர்கள் செந்தலையைத் தலைநகராகக் கொண்டு பல்லவருக்கு அடங்கிய சிற்றரசர்களாக இருந்து தஞ்சைக்கும் திருச்சிக்கும் இடைப்பட்ட பகுதியை ஆண்டு வந்தனர். பாண்டியருக்கும் பல்லவருக்கும் இடையே போர் நடைபெற்ற பொழுது விசயாலயன் பல்லவருக்கும் துணையாக நின்று போர்செய்தார்கள். 'விசயாலயன் தஞ்சையைக் கைப்பற்றி அதைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்ததும், அந்த வெற்றியின் நினைவாக 'நிசும்பசூதினி' என்னும் துர்க்கைக்கோவிலைக் கட்டிய செய்தியும் திருவாலங்காட்டுச் செப்பேட்டில் குறிப்பிடப்பெற்றுள்ளது.

## 7.2 திரும்புறம்பயப்போர்

‘திரும்புறம்பயம்’ என்னும் இடம் கும்பகோணத்திற்கு வடமேற்கே உள்ள மண்ணியாற்றில் வடகரையில் உள்ளது. சோழன் விசயாலனுக்கும் பாண்டிய மன்னன் இரண்டாம் வரகுணனுக்கும் இடையே நடைபெற்ற போர்’ திரும்புறம்பயப்போர்’ என அழைக்கப்படுகின்றது. கி.பி.880-ல் இப்போர் நிகழ்தது.

விசயாலய சோழன் கி.பி.850ல் உறையூர் அரசுகட்டிலில் பதவி ஏறினான். இம்மன்னனும் பல்லவமன்னர்களுக்குத் திறை செலுத்துபவனாக அவன் கீழ் இருந்தான். அப்பொழுது பல்லவப் பேரரசனான மூன்றாம் நந்திவர்மன் தன் நாட்டைச் சிறிது சிறிதாக வென்று தெள்ளாறு வரை வந்துவிட்ட பாண்டியன் வரகுணனையும் சோழரையும் பிறரையும் தெள்ளாற்றுப் போரில் முற்றிலுமாக முறியடித்தான். இப்போரில் விசாயலயன் அல்லது அவனுக்கு முற்பட்ட சோழ மன்னன் பாண்டியனோடு சேர்ந்திருந்தான். பல்லவருக்கும் பாண்டியருக்கும் குடமூக்கில் போர் நிகழ்ந்தது. அப்போரில் முதலாம் வரகுணன் மகனான ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் வெற்றி பெற்றான். பிறகு அரிசியாற்றங்கரையில் நந்திவர்மன் மகனான நிருபதுங்கபல்லவன் ஸ்ரீமாறன் படைகளை வெற்றி கொண்டான். ஸ்ரீமாறனுக்குப் பின் கி.பி.862ல் அவன் மகனான இரண்டாம் வரகுணன் பல்லவர் மீது போர் தொடுத்தான். அப்பொழுது அபராசிதவர்மன் என்னும் பல்லவன் தன் பாட்டனான கங்கஅரசர் பிருதிவீபதியோடு வந்து கடும் போர் செய்தான். அப்போரில் விசயாலயன் பல்லவன் பக்கமாக நின்று போரிட்டான். தஞ்சையை ஆண்ட முத்தரையர் (களப்பிரர் மரபினர்) பாண்டியன் பக்கம் நின்று போரிட்டனர். போரில் பிருதிவீபதி தோற்றான். ஆயினும் பாண்டியன் தோற்றோட அபராசிதபல்லவமன்னன் வெற்றி அடைந்தான். அவனுடன் சேர்ந்திருந்த விசயாலயசோழன் முத்தரையருடைய தஞ்சையைக் கைப்பற்றிக்கொண்டான். திரும்புறம்பயப்போரில் பெரும் பங்கு கொண்ட விசயாலயன் மகனான ஆதித்தசோழன் சோழநாட்டின் ஒரு பகுதிக்கு உரிய மன்னனாக ஆனான்.



திரும்புறம்பயப்போரானது தமிழகவரலாற்றில் பெரும் மாற்றங்களை உண்டாக்கிய போராகும். இப்போரில் தோற்ற

பாண்டியநாடு மீண்டும் உயிர்ப்பு பெற இயலாது போயிற்று. பாண்டியர்கள் தெள்ளாறு, அரிசியாறு இடங்களில் ஏற்பட்ட தோல்வியோடு பாண்டியரின் திரும்புறம்பயப் போரின் தோல்வியும் ஒன்று சேர்ந்து பாண்டியரின் மதிப்பு குறைந்தது. பாண்டியப்பேரரசின் உயிர்நாடியைச் சிதைத்து விட்டது. பல்லவர்களும் மேலைச்சாளுக்கியருடன் இராட்டிரகூடருடனும் போர் செய்து தோல்வியுற்றனர். தெற்கில் முதலாம் வரகுணப் பாண்டியன் காலம் முதல் ஓயாத போர்கள் நடந்தமையால் பல்லவப் பேரரசும் வீழ்ந்தது. அவர்களின் வட பகுதியை இராட்டிரகூடர்களும் தென் பகுதியைப் புதிதாக எழுச்சி பெற்ற ஆதித்தசோழனும் சிறிது சிறிதாக கவர்ந்து சோழப்பேரரசு உருவாகியது. இத்திரும்புறம்பயப் போரினை சதாசிவபண்டாரத்தார். ‘‘சங்ககாலத்தில் நெடுஞ்செழியன் தலையாலங்கானத்துப் போரில் பெற்ற வெற்றியையும் ஆங்கிலேயர் பிளாசிப்போரில் பெற்ற வெற்றியையும் விசயாலயன் பெற்ற வெற்றியுடன் ஒப்பிடுவர் என்றார்’’. இக்கூற்றினை டாக்டர். ஆ.இராமகிரு‘ணன் தமிழக வரலாறும் தமிழர்பண்பாடும் என்னும் நூலில் குறிப்பிட்டு உள்ளார். இப்போரானது முக்கியத்துவம் உடையதாக கூறப்பெறுவதற்கு பிற்காலச் சோழப்பேரரசு உதயத்திற்குக் காரணமாக இருந்ததே முக்கிய காரணமாகும்.

### 7.3. பிற்காலச்சோழர் வரலாறு (கி.பி.846-1279)

பிற்காலச்சோழப்பேரரசு கி.பி.846 முதல் கி.பி.1279 வரை 433 ஆண்டுகள் நிலைபெற்று, ஆட்சி செலுத்தியது. முதல் விசயாலய சோழன் முதல் 3ம் இராசேந்திரசோழன் வரை 21 பேரரசர்கள் அரியாணையில் வீற்றிருந்து சோழப்பேரரசின் புகழிற்குப் பெரும் பணி ஆற்றியுள்ளனர்.

1. விசயாலய சோழன் - கி.பி.850-880
2. ஆதித்த சோழன் - கி.பி.880-907
3. முதல் பராந்தக சோழன் - கி.பி.907-953

முதற் பராந்தக சோழன் காலத்திலிருந்து பராந்தக மரபினர் சோழர் பரம்பரையில் தோன்றினர்.

முதற் பராந்தக சோழன்

கோக்கிழான் ——— கண்டராதித்தன;———சேரன்மகள்

அடிகள்
மகன்



அரசமாதேவி மகன் உத்தம சோழன்
அரிஞ்சயன்

இராசாதித்தன்
(வைதும்பர் )

மகளான கலியாணிமுயெ மணந்தவன்

இரண்டாம் பராந்ததன் (சுந்தரசோழன்)

### 7.3.1 விசயாலய சோழன் (கி.பி 850-880)

பிற்காலச்சோழர் பேரரசைத் தோற்றுவித்த முதல்வனாக விசயாலய சோழன் விளங்குகிறான். இம்மன்னன் முத்தரையரை வென்று தஞ்சாவூரைக் கைப்பற்றினான். அங்குத் துர்க்கைக்குக் கோவில் கட்டினான் என்று திருவாலங்காட்டுச்செப்பேடுகள் குறிப்பிடுகின்றன. விசயாலயன் தன் பெயரினைக் கொண்ட (விசயாலயச் சதுர்வேதிமங்கலம்' என்னும் சிற்றூரைப் பிரம்மதேயமாக கொடுத்தான் என்று திருச்சிராப்பள்ளிக்கல்வெட்டு ஒன்று குறிப்பிடுகின்றது. தொண்டை நாடு வரை விசயாலயன் ஆட்சி பரவிடினும் பல்லவ மன்னனுக்கு அடங்கியிருக்கும் மன்னனாகவே இருந்தான். எனினும் தன் ஆட்சியாண்டைக் குறிக்கும் உரிமை பெற்றிருந்தார்.

### 7.3.2 ஆதித்த சோழன் (கி.பி.880-907)

ஆதித்த சோழன் காலத்தில் தொண்டை நாடு முழுவதும் இவன் ஆட்சியின் கீழ் வந்தது. அதனால் ‘தொண்டை நாடு பரவின சோழன்’ என்னும் சிறப்புப்பெயர் பெற்றான். இம்மன்னனின் 24ஆம் ஆட்சியாண்டின் கல்வெட்டு கிடைத்திருப்பதால் இவன் 24 ஆண்டுகள் அரசாண்டான் என உறுதியாகக் கூறலாம். ஆதித்தசோழன் தஞ்சாவூரில் முடிசூட்டியவுடன் கொங்குநாடு சென்று அதனை வென்றான். அப்பகுதியையும் சோழநாட்டுடன் இணைத்துக் கொண்டான். சேர மன்னன் தாணுரவி உற்ற நண்பனாக விளங்கினான்.

ஆதித்தன் தொண்டை நாட்டில் காளத்திற்கு அருகில் இருந்தான். அவன் மகன் பராந்தக சோழன் மன்னன் இறந்த இடத்தில் ஒரு கோவிலைக்கட்டினான். அதற்கு 'கோதண்ட ராமேச்சுரம்' எனவும் 'ஆதித்தேச்சுரம்' எனவும் பெயர் வழங்கிற்று. அங்கு ஆயிரம் பிராமணருக்கு அன்னமிட ஏற்பாடு செய்யப்பெற்றதாக வரலாறு குறிப்பிடுகின்றது.

ஆதித்தசோழன் பல்லவ குலத்தில் சிறந்த திரிபுவனமாதேவி என்பவரைப் பட்டத்தரசியாக கொண்டமையால் பல்லவமன்னன் அபராஜிதனிடம் நண்பனாய் இருந்ததோடு தொண்டை நாட்டினைப் பெறவும் வாய்ப்பாகியது. அவர்களுக்குப் பாரந்தகன், கன்னரதேவன் என்னும் இரு புதல்வர்கள் பிறந்தனர். சோழனுக்குப் பிறகு பட்டம் எய்தினான்.

### 7.3.3 முதற் பராந்தக சோழன் (கி.பி.907-953)

முதற் பராந்தக சோழன் நெடுங்காலம் ஆட்சி புரிந்தான். சோழ நாடு, தொண்டைநாடு, கொங்குநாடு ஆகிய மூன்றும் இவன் ஆணையின் கீழ் இருந்தன. இவன் பாண்டியநாட்டின் மேல் படையெடுத்தான். இவன் 'மதுரைகொண்டகோப்பரகேசரி' என்னும் சிறப்புப்பெயரினைப் பெற்றவன். கி.பி.910-ல் மதுரையைக் கைப்பற்றியதாக வரலாறு தெரிவிக்கின்றது. அப்பொழுது மதுரையை ஆட்சி செய்த மன்னன் மூன்றாம் இராசசிம்மன், அவனை பராந்தகன் வென்றான். பாண்டிய மன்னன் ஈழமன்னன் ஐந்தாம் காசியபன் துணையைப் பெற, பெரும் படையை அவன் அனுப்பியதால் பாண்டியன் படையும் சோழர் படையும் 'வெள்;ரில்' எதிர்த்தன. முதல் பராந்தகசோழ மன்னனே வெற்றி பெற்றான். இதனை ஈழநாட்டு வரலாறுகளும் மகாவமிசமும், இரண்டாம் பிருதிவீபதியின் செப்பேடுகளும் குறிப்பிட்டு உள்ளன. இராசசிம்மனின் சின்னமனூர்ச் செப்பேடுகள் பாண்டியன் வெற்றியைச் சிறப்பிக்கின்றன.

இராசசிம்மன் பராந்தகனிடம் தோற்றதால் ஈழநாடு சென்று 'தப்புலன்' என்னும் மன்னனிடம் படை வேண்டினான். அவன் மறுக்கவே தன் முடியையும் பிற சின்னங்களையும் அவனிடம் ஒப்படைத்து விட்டு, தாய் வானவன் மாதேவியோடு சேரநாடு சென்று தங்கிவிட்டான். பராந்தகசோழன் மதுரை சென்று வெற்றி மகுடம் கூட முயலும்

பொழுது கீரிடமும் பிற சின்னங்களும் காணாது ஈழமன்னனிடம் இருப்பது அறிந்து தருமாறு கேட்டான். அம்மன்னன் தர மறுத்ததால் சோழர் படை ஈழம் சென்று உள்நாட்டில் புகுந்து தென்கிழக்குப் பகுதி வரையில் கைப்பற்றி வெற்றியைப்பெற்றது. அதனால் ‘மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரி’ என்னும் சிறப்புப்பெயர் பராந்தகசோழனுக்குக் கிடைத்தது. நெல்லூருக்கு அப்பால் வரைசென்று பராந்தகன் இராட்டிரகூடர்களுடன் மணஉறவு கொண்டு போரின்றி வாழ்ந்தான் எனினும் தன் மருமகன் பொருட்டு இராட்டிரகூட மன்னான மூன்றாம் கிருஷ்ணனோடு தக்கோலத்தில் நடந்த போரில் பராந்தகனுடைய மூத்த மகன் இராசாதித்தன் இருந்தான். எனவே பராந்தகனுக்குப் பிறகு பராந்தகசோழனின் இரண்டாம் மகன் கண்டராதித்தன் பட்டத்திற்கு உரிமையானான்.

பராந்தக சோழன் சிறந்த சிவபக்தன் திருவாவடுதுறை, செந்துறை ஆகிய இடங்களில் கோயில்கள் அமைத்தான். வீரநாராயண ஏரி, சதுர்வேதிமங்கலஏரி, சோழவாரிதி, சோழசிங்கபுரத்தேரி முதலிய பேரேரிகளை வெட்டி, நீர்ப்பாசனவசதிகள் செய்தான். பல வகை தானங்களில் ‘ஏமகர்ப்பம்’‘துலாபாரம்’ ஆகியன இம்மன்னன் செய்த தானங்களாகும். புலவர்களை ஆதரித்த மன்னன் என்பதால் ‘பண்டிதவற்சலன்’ என்னும் சிறப்புப்பெயர் பெற்றான். மேலும் வீரநாராயணன், சமரகேசரி, விக்கிரமசிங்கன், குஞ்சரமல்லன், சோழசிகாமணி, வீரசோழன், சோழர்குலப் பெருமானார் போன்ற விருதுப் பெயர்களும் உள்ளன.

## 7.4. கண்டராதித்தனும் பிற்காலச் சோழப் பரம்பரையினரும்

முதற்பராந்தகசோழனின் முதல் மகன் இராசாதித்தன் இறந்தமையால் கண்டராதீத்தன் பட்டம் பெற்றான். (கி.பி.947-959)

முதற்பராந்தகசோழன்

| | |
|---|---|
| கண்டராதித்தன் | சேரன் மகன் |
| உத்தம சோழன் | மகன் அரிஞ்சயன் |

(மதுராந்தகன்) இரண்டாம் பராந்தகன்

சுந்தரசோழன்

இரண்டாம் ஆதித்தன் முதலாம் இராசராசன்



இம்மன்னன் 'இராசகேசரி' ஆவான். இவன் மழவரையன் மகள் செம்பியன் மாதேவியாரை மணந்து உத்தமசோழன் (மதுராந்தகன்) என்பவனைப் பெற்றான். இம்மன்னன் காவிரியின் வடகரையில் 'கண்டராதித்த சதுர்வேதிமங்கலம்' என்னும் பெயரால் ஊரினை உண்டாக்கி இறந்தான். சிறந்த சிவபக்தன் மேற்கு எழுந்தருளிய தேவர் என்று ஒரு கல்வெட்டு குறிப்பிடப்பட்டுள்ளது. கண்டராதித்தனுக்குப் பிறகு அவன் மகன் மதுராந்தகன் குழந்தையாக இருந்ததால் ஒரு ஆண்டு மட்டுமே ஆட்சி செய்த மன்னனாக 'அரிஞ்சயன்' உள்ளான். அரிஞ்சயனுக்குப் பிறகு அவன் மகன் இரண்டாம் பராந்தகன் என்னும் சுந்தரசோழன் என்பவன் மன்னனாக ஆட்சி பொறுப்பேற்றான். 'மதுரை கொண்ட இராசகேசரி'' என்னும் பட்டத்தைப் பெற்ற மன்னன். 'வீரபாண்டியன்' என்னும் மன்னனை ஷேசே'ர' என்னுமிடத்தில் தோற்கடித்தான். பராந்தகன் மகனான இரண்டாம் ஆதித்தனும் சிறுவனாக இருப்பினும் இப்போரில் கலந்து கொண்டு போர் செய்தான். அதனால் 'வீரபாண்டியன்தலைகொண்டஆதித்தன்' என்னும் சிறப்பினைப் பெற்றதாக திருவாலங்காட்டுச்செப்பேடு எடுத்துரைக்கின்றது. ஆதித்த கரிகாலன் ஆட்சிப் பொறுப்பேற்காது தன் தந்தை இரண்டாம் பராந்தக சோழனுக்கு உதவியாக இருந்தான். தந்தை உயிருடன் இருக்கும் பொழுதே கொலை செய்யப்பட்டான். ஆதித்தகரிகாலன் பட்டம் பெற்றால் தான் ஆட்சி பொறுப்பினைப் பெற இயலாது என்று மதுராந்தகன் சூழ்ச்சி செய்து ஆதித்தகரிகாலனைக் கொன்றதாக வரலாறு குறிப்பிடுகின்றது. ஆதித்தகரிகாலனின் தம்பியான முதலாம் இராசராசன் தன் சிறிய தந்தையான மதுராந்தகனுக்கே நாடாள விருப்பம் இருப்பதை அறிந்து அவனை அரசனாக்கினான். அவனுக்கு அடங்கிய இளவரசனாக இருந்து அவனுக்குப் பின் தானே மன்னனாவது என்னும் ஒப்பந்தப்படி இச்செயலைச் செய்தான்.

'மதுராந்தகன்' என்னும் உத்தமசோழன் 'பரகேசரி' என்னும் பட்டம் பெற்றவன். உத்தமசோழன் விக்கிரம சோழன் என்னும்

பட்டத்தையும் பெற்றிருந்ததாக வரலாறு குறிப்பிடுகின்றது. உத்தமசோழனுக்கு 'மதுராந்தகன் கண்டராதித்தர்' என்னும் மகன் இருந்ததாக கல்வெட்டு தெரிவிக்கின்றது. இவன் இராசராசன் ஆட்சியில் கோவில்களை மேற்பார்வை செய்து வந்தான். இவர்கள் அனைவரும் மிகக் குறுகிய காலம் ஆட்சி புரிந்தவர்கள் என்பதால் சோழப் பேரரசு விரிந்து படவில்லை. இராசராசசோழன் ஆட்சியே சோழர்களின் ஆட்சியில் வரலாற்றுச்சிறப்புமிக்க ஆட்சியாக விளங்கியது. சோழப் பேரரசை விரிவாக்கி நிலைபெற செய்த பேரரசன் ஆவான்.

## 7.5 தொகுப்புரை

சோழர்களும்சோழப்பேரரசும் என்றவகையில் பிற்காலச் சோழப்பேரரசின் தோற்றம் விசயாலயச்சோழனால் புதுயுகம் கண்டது .திரும்புறம்பயப்போர் வரலாற்று முக்கியத்துவம் உடைய போராக சோழர்களுக்கு எழுச்சியும் பாண்டியர்களுக்கு வீழ்ச்சியையும் தந்தது விசயாலயசோழன் ஆதித்தசோழன் முதற்பராந்தக சோழன் கண்டராதித்தனும் பிற்காலச் சோழர்களும் புரிந்த போர்களும் ஆட்சியும் குறிப்பிடப்பெற்றுள்ளன .

## 7.6 மாதிரி வினாக்கள்

1.பாண்டிய மன்னன் இரண்டாம் வரகுணனுக்கும் சோழன் விசயாலயனுக்கும் நடைபெற்ற போரின் பெயர் என்ன ?

திரும்புறம்பயப்போர்

2.'தொண்டை நாடு பரவின சோழன் ' என்னும் சிறப்புப்பெயர் கொண்ட மன்னன் யார் ?

ஆதித்தசோழன்

3.முதல்பராந்தகசோழன் செய்த தானங்களின் பெயர்களைக் குறிப்பிடுக

ஏமகர்ப்பம் துலாபாரம்

4. மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரி என்னும் மன்னன் யார் ?

முதல் பராந்தக சோழன்

5. சோழர்களின் ஆட்சியில் வரலாற்றுச்சிறப்பு மிக்க ஆட்சியை வழங்கிய மன்னன் யார் ?

முதலாம் இராசராச சோழன் .



## 7.7 பயிற்சி வினாக்கள்

1.பிற்காலச் சோழமன்னர்களின் ஆட்சி குறித்து எழுதுக .

## 7.8 மேலும் படித்தறிக

டாக்டர்.மா.இராசமாணிக்கனார்

சோழர் வரலாறு

பூரம் பதிப்பகம்

புதிய எண்-2 பழைய எண் -59

ராஜீ நாயக்கர் தெரு

மேற்கு மாம்பலம்

சென்னை -600033

பதிப்பு -2005

**கூறு 8 :**

## முதல் இராசராசன் முதல் இராசேந்திரன் தனிச்சிறப்பு – சோழராட்சியில் புதிய மரபு தோன்றல் - அம்மரபினர் வரலாறு – சோழரின் வீழ்ச்சியும் பாண்டியர் எழுச்சியும்

**8.பாடஅமைப்பு**

**8.1 அறிமுகம்**

**8.2 நோக்கம்**

8.3 முதல் இராசராசன்-முதல்இராசேந்திரன் தனிச்சிறப்புகள்

8.3.1 முதல் இராசராசன் தனிச்சிறப்புகள்

8.3.2 முதல் இராசேந்திரன் தனிச்சிறப்புகள்

8.4 சோழராட்சியின் புதிய மரபு தோன்றல்

8.5 அம்மரபினர் வரலாறு

8.5.1 விக்கிரம சோழன்

8.5.2 இரண்டாம் குலோத்துங்கன்

8.5.3 இரண்டாம் இராசராசன்

8.5.4 இரண்டாம் இராசாதிராசன்

8.5.5 மூன்றாம் குலோத்துங்கள்

8.6 சோழரின் வீழ்ச்சியும் பாண்டியர் எழுச்சியும்

8.7 தொகுப்புரை

8.8 மாதிரி வினாக்கள்

8.9 பயிற்சி வினா

8.10 மேலும் படித்து அறிக

## 8.1 அறிமுகம்

பிற்காலச்சோழப் பேரரசு விசயாலய சோழ மன்னனால் எழுச்சி கொண்டநிலையில் சோழர்களின் ஆட்சியில் சிறப்பான ஆட்சியினைத் தந்த முதல் இராசராசன் முதல் இராசேந்திரன் ஆகியோரின் தனிச்சிறப்புகளையும் அறியலாம் . அம்மன்னர்களுக்குப் பின் வந்த சோழராட்சியின் புதிய மரபு தோன்றல்களாக விளங்கிய விக்கிரம சோழன் இரண்டாம் குலோத்துங்கன் இரண்டாம் .இராசராசன் இராசாதிராசன் மூன்றாம் குலோத்துங்கன் போன்றோரின் சிறப்புகளையும் சோழரின் ஆட்சி முடிந்து பாண்டியரின் ஆட்சி எழுச்சி கொண்ட நிலையையும் இக்கூறு விவரிக்கின்றது .

## 8.2 நோக்கம்

**1.சோழமன்னர்களின் பரம்பரையை அறிதல் .**

**2.சோழராட்சியினையும் போர்களையும் தெரிதல்.**

**3.மன்னர்களின் வெற்றியையும் வீழ்ச்சியினையும் அறிவதன் மூலம் காலமாற்றத்தின் விளைவுகளை அறிதல்**

## .8.3 முதல் இராசராசன் முதல் இராசேந்திரன் தனிச்சிறப்புகள்

சோழர் வரலாற்றில் ‘பொற்காலம்’ எனப் புகழ்பெற்ற காலமாக முதல் இராசராசன் ஆண்ட காலம் விளங்குகிறது. சுந்தரசோழனாகிய இரண்டாம் பராந்தகனுக்கும் வானவன்மாதேவிக்கும் பிறந்தவன். இராசகேசரி முதலாம் இராசராசன் கி.பி.985 முதல் 1014 வரை சோழப் பேரரசை ஆண்ட இம்மன்னன் அரசு கிரு‘ணா ஆறு முதல் இலங்கை வரை பரவி இருந்தது. முதல் இராசராசன் என்னும் இப்பெயர் இம்மன்னனின் மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் காணப்படுகிறது. ‘இராசகேசரி’ என்னும் பட்டம் புனைந்து கொண்டதாக வரலாறு குறிப்பிடுகின்றது. இவன் ஆட்சியில் ஓவியம், சிற்பம், நாடகம், நடனம், இசை, இலக்கியம் யாவும் ஓங்கி வளர்ந்தன. அரசியல் அமைப்பினை செவ்வனே நடத்தியவன் இராசராசசோழன். போராற்றலும, புகழாற்றாலும், செயலாற்றலும் நிர்வாக ஆற்றலும் நிறைந்த மன்னன் ஆவான்.

### 8.3.1 முதலாம் இராசராசன் தனிச்சிறப்புகள்

இராசராசன் தனிச்சிறப்புகளில் கல்வெட்டுகளில் வரலாற்று நிகழ்ச்சிகளைப் பொறிக்கும் வழக்கத்தை ஏற்படுத்தியவன். பட்டயம் அல்லது கல்வெட்டிற்கு ஒரு தொடரை அழகாக அமைத்தவனும் இராசராசன் ‘‘திருமகள் போல பெருநிலச் செல்வியும்’’ எனத் தொடங்கி வருவது இத்தொடர். இராசராசனுக்கு உரிய தனிப்பட்ட தொடர் இவ்வாறே ‘மெய்க்கீர்த்தி’ தொடங்கப்பெறும்.

முதல் இராசராசன் பல முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரம் போன்ற பல தீவுகளைக் கைப்பற்றி வெற்றியைப் பெற்றதால் ‘செயங்கொண்ட சோழன்’ என அழைக்கப்பெற்றான். சோழ மண்டலம் சயங்கொண்ட சோழ மண்டலம்’ என வழங்கப்பெற்றது. முதல் இராசராசன் செய்த போர்களை

‘‘திருமகள் போலப் பெருநிலச் செல்வியும்
தனக்கே உரிமை பூண்டமை மனங்கொளக்
காந்தளூர்ச் சாலை கலமறுத்து அருளி
வேங்கை நாடும் கங்கை பாடியும்
தடிகை பாடியும் நுளம்ப பாடியும்
குடமலை நாடும் கொல்லமும் கலிங்கமும்
முரட்டொழில் சிங்களர் ஈழ மண்டலமும்
இரட்ட பாடி ஏழரை இலக்கமும்
முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரமும்
திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட’’

என்னும் மெய்க்கீர்த்தி எடுத்துரைத்துள்ளது. என்பதை தமிழகவரலாறும் தமிழர் பண்பாடும் என்னும் நூலினால் அறியலாம்.

முதல் இராசராசன் நாகரிக அரசியல் செய்ததால் நாடு முழுவதும் நிலங்களை அளக்கும்படிச் செய்தான். பிற நிலங்களுக்குத்

தரம் வாரியாக வரி விதிக்க ஏற்பாடு செய்தான். வரி வசூலிக்கப் பல அதிகாரிகளை நியமித்தான். வரிகளைக் கவனிப்பதற்கு உயர்தர அலுவலகச் குழுவையும் தனித்தனி மண்டலங்களையும் கவனிக்க தனித்தனி அலுவலாளர்களையும், எல்லா மண்டலங்களையும் கவனிக்க பேரலுவலாளர்களையும் நியமித்து சிறந்த ஆட்சியை வழங்கிய மன்னனாக சிறப்பிக்கப்படுகிறான். ஊராட்சி முறையும், ஒவ்வொரு மண்டலத்திற்குப் படைகளும், எல்லைப் புறங்களில் காவற்படைகளும், கடல்பகுதியில் கப்பற்படையும் அமைத்து ஒப்பற்ற ஆட்சியை வழங்கினான்.

இராசராசன் சிறந்த சிவபக்தன். சிவன் கோயில்கள் பல கட்டினான். மைசூரில் விஷ்ணு கோவிலும் நாகபட்டினத்தில் புத்த விகாரமும் அமைத்தவன். இவன் கட்டிய கோவில்களில் தஞ்சைப் பெரிய கோவிலே தனிச்சிறப்புடைய வரலாற்றுச் சிறப்புமிக்க ஒன்றாகும். தஞ்சை பெரிய கோவில் ‘இராசராசேச்சுரம்’ என அழைக்கப்பெறுவது.

“யாண்டு இருப்பத்தைந்தாவது நாள் 275 இல் உடையார் ஸ்ரீராசராச தேவர் ஸ்ரீராசேச்சுரமுடையார், ஸ்ரீ விமானத்துச் செம்பின் தூபித்தறியில் வைக்கக் கொடுத்த செப்புக்குடம் ஒன்று நிறை 3083 பலத்தில் சுருக்கின தகடு பல பொன் ஆடவல்லான் என்னும் கல்லால் நிறை 2926 கழஞ்க” என்ற கல்வெட்டுப் பகுதியால், இராசராசன் 25 ஆம் ஆண்டிற்றான் திருப்பணி முடிவுற்றுக் கும்பாபிஷேகம் முடிவுற்றதெனக் கூறலாம்” என டாக்டர் மா. இராசமாணிக்கனார் தம் ‘சோழர் வரலாறு’ என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

முதல் இராசராசன் ‘மும்முடிச்சோழன்’, சயங்கொண்டசோழன்’ ‘சோழேந்திரசிம்மன்’ ‘சிவபாதசேகரன்’ ‘கூத்திரியசூடாமணி’ ஷஜனநாதன்’ நிகரிலீசோழன்’ ‘இராசேந்திரசிம்மன்’ ‘சோழ மார்த்தாண்டன்’ ‘இராசமார்த்தாண்டன்’ ‘நித்திய விநோதன்’ ‘பாண்டிய குலாசனி’ ‘கேரளாந்தகன்’ ‘சிங்களாந்தகன்’ ‘இரவிகுலமாணிக்கம்’ ‘தெலுங்குகுலகாலன்’ போன்ற சிறப்புப்பெயர்களைக் கொண்டவன். தேவராப்பாடல்களை முறைபடுத்தியும் அவற்றை கோவில்களில் ஓதவும் செய்வித்ததை வரலாற்று அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஸ்ரீஇராசராச விஜயம்’ என்னும் நூல் இராசராசன் வரலாற்றை தெரிவிப்பது. ‘இராசராசேசுவர



குறிப்புகள்

நாடகம்'என்னும் நாடக நூல் இம்மன்னன் காலத்தில் இருந்ததாகத் தஞ்சைப் பெரிய கோவில் கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

### 8.3.2 முதல் இராசேந்திரன் தனிச்சிறப்புகள்



முதலாம் இராசேந்திரன் எல்லைப்பரப்பினும் ஆட்சித்திறனிலும் மிகவும் பெரியதாகவும் மிகவும் மதிக்கப்பெற்றதுமான சோழப்பேரரசை ஆண்ட பெருமைக்கு உரியவன். கி.பி.1012 முதல் 1044 வரை ஆட்சி புரிந்த மன்னன். மதுராந்தகன் என்னும் இயற்பெயருடையவன். 'திருமன்னி வளர இருநிலமடத்தையும்' எனத் தொடங்கும் மெய்க்கீர்த்தி இராசேந்திர சோழமன்னனின் தனிச்சிறப்பான மெய்க்கீர்த்தியாகும். முதல் இராசேந்திரசோழன் செய்த போர்ச்செயல்கள் மூன்று வகையினதாக பிரித்து வரலாற்றுஆய்வாளர்கள் திருவாலங்காட்டுச் செப்பேடு வாயிலாக வகுத்துள்ளனர்.

1. இராசேந்திரன் இளவரசனாக இருந்து நடத்தியவை.
2. அரசனாக இருந்து நடத்தியவை.
3. இம்மன்னன் காலத்தில் இளவரசனான இராசாதிராசன் நடத்தியவை.

முதல் இராசேந்திரன் செய்த போர்களுள் மன்னன் தன் 41ஆம் ஆண்டில் வட நாட்டுப் படையெடுப்பு முக்கியத்துவம் வாய்ந்தது. கி.பி.1023இல் வடநாடு நோக்கிச் சென்று பல நாடுகளைக் கவர்ந்ததாகக் கூறப்படுகிறது. இரண்டு ஆண்டுகள் வட நாட்டுப் படையெடுப்பில் சக்கரக்கோட்டம், ஒட்டரதேயம், கோசலநாடு, தண்டபுத்தி, உத்தரலாடம், வாங்காளம் ஆகிய பகுதிகளைக் கைப்பற்றி கங்கைக்கரையை அடைந்ததாகக் கூறப்படுகிறது. தான் புதிதாக அமைத்த கங்கை கொண்ட சோழபுரத்தையும் 'சோழகங்கம்' என்னும் ஏரியையும் கங்கை நீரால் தூய்மை செய்ய விரும்பியே படைகளை வடக்கே அனுப்பிக் கங்கை நீரைக் கொண்டுவர முயன்றான். வேற்று அரசர்கள் படை தன் நாட்டு வழியே செல்லப் புதியநாட்டினர் இடந்தரமாட்டார் ஆதலின், வடவரைவென்ற புகழ்

தனக்கு இருக்கட்டுமே என இராசேந்திரன் எண்ணியதாலும் இப்போர்கள் நிகழ்ந்தன என்பது வரலாற்று ஆய்வாளர்கள் கருத்து.



முதல் இராசேந்திரசோழன் கங்கையைக் கைப்பற்றி வெற்றி பெற்றது போலக் கடாரத்தையும் கைப்பற்றியது வரலாற்று போரில் குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். கடாரம் மீது இராசேந்திரன் கொண்ட வெற்றி அவனுடைய பதின்மூன்றாம் ஆண்டுக் கல்வெட்டில் குறிப்பிடப்படுகின்றது. நாட்டினைக்கவர்ந்து சோழப்பேரரசின் எல்லையை நீட்டிப்பதே கடாரம் கொண்டதற்கான நோக்கமாக இருக்கலாம். மலாய் தீபகற்பகத்தின் பகுதிகளாக உள்ள ஸ்ரீவிசயம், பண்ணை, மலையூர், மாயிருஷங்கம், இலங்காசோகம், தலைத்தக்கோலம், மாடலிங்கம், இலாமுரிதேசம், மானக்கவாரம் ஆகிய இடங்களையும் கடாரத்துடன் இராசேந்திரன் வெற்றி கொண்டான். இராசேந்திரசோழன் கடாரம் கொண்ட செய்தியை விக்கிரசோழன் உலாவும் குலோத்துங்க சோழன் உலாவும் கலிங்கத்துப்பரணியும் உறுதி செய்கின்றன. இம்மன்னனின் போர்ப்படை வலிமையை அறியமுடிகின்றது.

முதல் இராசேந்திர சோழனால் புதிதாக அமைக்கப்பட்ட பெரிய நகரம், கங்கைகொண்டசோழபுரம் அதில் ‘கங்கைகொண்ட சோழேச்சுரம்’ என்னும் கோவிலையும் ‘சோழகங்கம்’ என்னும் ஏரியையும் கட்டினான். தற்பொழுது ‘பொன்னேரி’ எனப் பெயர்பெற்றுள்ளது. இராசேந்திரன் சீனாவுடன் இராசதந்திரத் தொடர்புகளையும் வணிகத்தொடர்புகளையும் ஏற்படுத்தும் விதமாக கி.பி.1016, 1033 ஆகிய ஆண்டுகளில் தூதுக்குழுக்களை அனுப்பினான். வரலாற்றுப்பக்கங்களில் முதல் இராசேந்திரசோழனின் ஆட்சிச் சிறப்பும் போர்த்திறமும் கட்டிடக்கலைத்திறநுட்பமும் அழிக்கமுடியா வரலாற்றுப் பதிவுகள்.

### 8.4 சோழராட்சியில் புதிய மரபு தோன்றல்

முதல் இராசேந்திர சோழருக்குப் பின் அவர் மக்கள் மூவரும் (கி.பி.1044-1070) அடுத்தடுத்து அரசராயினர். தங்கள் ஆட்சிக்காலத்தில் தந்தையின் பேரரசை நிலைநிறுத்த போர்கள் பல செய்தனர். மேலைச் சாளுக்கியருடன் நடத்திய போரில் இராசாதிராசன் கொல்லப்பட்டான். அப்பொழுது தளர்ச்சி அடைந்த

சோழர் படைக்கு அம்மன்னனின் தம்பியான இராசேந்திரசோழதேவன் போர்க்களத்தில் தானே முடி சூடி வீரத்துடன் போர் புரிந்து வெற்றி பெற்றான். தெற்கிலே இலங்கை அரசன் பாண்டியன், சேரன் ஆகிய மூவரும் ஒன்று சேர்ந்து தத்தம் சுயாட்சியை நிலைநிறுத்தக் கலகம் செய்தனர். அதனையும் அடக்கி, கீழைச்சாளுக்கியர் உதவியுடன் சோழப் பேரரசினைக் காத்து நின்றனர். சாளுக்கிய சோழஇராசேந்திரன் எனப்பட்ட முதற்குலோத்துங்கன் சோழப் பேரரசை ஆட்சி செய்வதற்கு வழிகோலினர்.

**புதிய மரபு தோன்றல் மன்னர்களின் வரிசைமுறை**

இராசதிராசன் - கி.பி.1018 – 1054

இராசேந்திர சோழதேவன் - கி.பி.1052-1064

வீரராசேந்திரன் - கி.பி.1063-1069

அதிராசேந்திரன் - கி.பி.1069-1070

முதற்குலோத்துங்கன் - கி.பி.1070-1120

## 8.5 அம்மரபினர் வரலாறு

முதற்குலோத்துங்கன் - (கி.பி.1070 – 1120)

விக்கிரம சோழன் - (கி.பி.1120-1135)ஷ

இரண்டாம் குலோத்துங்கன் - (கி.பி.1133-1150)

இரண்டாம் இராசராசன் - (கி.பி.1146-1173)

இரண்டாம் இராசாதிராசன் - (கி.பி.1163-1179)

மூன்றாம் குலோத்துங்கன் - (கி.பி.1178-1218)

மூன்றாம் இராசராசன் - (கி.பி.1216-1246)

மூன்றாம் இராசேந்திரன் - (கி.பி.1246-1279)

என்னும் புதிய மரபு சோழர் பேரரசில் தோன்றியது. அதிராசேந்திரன் மன்னனோடு இராசராசன், இராசேந்திரன் பரம்பரை

முடிவிற்கு வந்து. சோழநாட்டை ஆள்வதற்கு நல்ல வேந்தராக இராசேந்திரன் மகளாகிய அம்மங்கைக்கும் கீழைச் சாளுக்கிய இராசேந்திரனுக்கும் மகனாகிய குலோத்துங்கன் தாய்வழி உரிமை முறையில் அரசனாக பட்டம் சூட்டினான். முதலாம் குலோத்துங்கன் ஆட்சி சிறந்தமுறையில் அமைந்தது. இளமையில் ‘இராசேந்திரன்’ என்னும் பாட்டன் பெயரைச் சூடிக்கொண்டிருந்த மன்னன் தாம் பட்டம் சூட்டிய பிறகு இராசகேசரி குலோத்துங்கன் என்னும் பெயர் பெற்றான். வேங்கிநாடும் சோழப்பேரரசுடன் இணைந்து சோழ நாட்டின் எல்லை அதிகரித்தது. தொடக்கத்தில் மேலைச்சாளுக்கியருடன் மேற்கொண்ட போர் விக்கிரமாதித்தன் மன்னனுடன் நிகழ்ந்தது. இம்மன்னனோடு யாதவர், ஓய்சாளர் கடம்பர் ஆகியோர் சேர்ந்து சோழரை எதிர்த்தனர். குலோத்துங்க மன்னனின் படை கொங்கணக்கடற்கரை வரை திக்விசயம் செய்து வெற்றி பெற்றதாக விக்கிரம சோழன் உலா’ குறிப்பிடுகின்றது.

குலோத்துங்க மன்னன் காலத்தில் தமிழ்நாட்டிற்குச் சீனாவுடன் நெருங்கிய தொடர்பு இருந்ததை 1077-ல் குலோத்துங்கன் எழுவர் கொண்ட தூதுக்குழு ஒன்றைச் சீனநாட்டிற்கு அனுப்பினான். 1088ல் நடந்த கடாரப்போரில் அந்த நாட்டு மன்னனுக்குத் தானே சென்று உதவி புரிந்தான். **சுங்கம்** தவிர்த்த சோழன்’ என்று இம்மன்னனின் சிறப்புப்பெயர். இம்மன்னன் வாணிபத்திலும் அதன் வளர்ச்சியிலும் காட்டிய அக்கரையை வெளிப்படுத்துகின்றது. சைவசமயத்தின் மீது கொண்ட ஈடுபாட்டினை ‘திருநீற்றுச்சோழன்’ என்னும் சிறப்புப்பெயர் எடுத்துக்காட்டுகின்றது. ‘திருமன்னி விளங்கும்’ ‘புகழ்மாது விளங்க’‘பூமருவிய திருமடந்தை’‘திருமகள் செயமகன்’‘பூமேல் அரிவை’‘பூமியும்திருவும்’ ‘புகழ்சூழ்ந்தபுணரி’ எனத் தொடங்கும் மெய்க்கிர்த்திகள் தனிப்பட்ட மெய்க்கீர்த்திக்குப் பதில் ஓர் அரசன் ஒன்றிக்கு மேற்பட்ட மெய்க்கீர்த்திகளைத் தனதாகக் கொள்ளும் வழக்கத்தை உருவாக்கியவன். மன்னார்குடியில் இராசகோபாலசுவாமி கோயிலைக் கட்டியவன். பௌத்த சமணக்கோயில்களுக்கும் நிலங்கள் அளித்துள்ளான். சோழநாடு முழுவதும் நிலங்களை அளக்கச் செய்தவன். ‘குலோத்துங்கன் இசைத்தமிழ் நூல் என்னும் நூல் அம்மன்னனின் கலை ஈடுபாட்டினை உணர்த்துவது.

முதற்குலோத்துங்கசோழனின் முக்கிய படையெடுப்புகளில் கலிங்கப்படையெடுப்பு முதன்மையும் சிறப்பும் வாய்ந்தது. தனக்கு சிறை செலுத்த மறுத்த வடகலிங்க மன்னன் அனந்தவர்மனைத் தண்டிக்கும் நோக்குடன் ‘கருணாகரன்’ தலைமையில் எடுக்கப்பட்ட படையெடுப்பு செயங்கொண்டாரால் கலிங்கத்துப்பரணியில் பாராட்டப்பெற்றது. இப்போரினை கலிங்கத்துப்பரணி நூல் மட்டுமின்றி 45ஆம் ஆட்சியாண்டு ஆனமைலைக் கல்வெட்டும் விவரிக்கின்றது. இம்மன்னன் அபயன், செயதரன், சயதுங்கன், விருதராசபயங்கரன், கரிகாலன் இசை நாராயணன், உலகுய்யவந்தான். திருநீற்றுச்சோழன், மனுகுலதீபன், உபய குலோத்தமன் முதலிய சிறப்புப்பெயர்களைப் பெற்றுள்ளான்.' கவி குமுத சந்திரன்’ என்னும் சிறப்புப்பெயர் பெற்ற திருநாராயண பட்டர் என்பவர் ‘ குலோத்துங்கசோழசரிதை’ என்னும் நூலாகப் பாடியுள்ளார்.

### 8.5.1 விக்கிரம சோழன்

குலோத்துங்ாசோழமன்னன் மறைவிற்குப் பிறகு ‘விக்கிரம சோழன்’ பட்டம் ஏற்றான். ‘பரகேசரி’ என்னும் சிறப்பினைப் பெற்று 1120ல் அரசனான். இவன் ஆட்சியில் வெள்ளமும் பஞ்சமும் ஏற்பட்டன. சிறந்த சிவபக்தனாக, தில்லைக்குப் பல பணிகள் செய்து பொன் வேய்ந்துள்ளான். முத்துவடம் அளித்தான். பொன்கலனும் பொன் கற்பகத்தருவும் செய்து அளித்தான். ஒட்டக்கூத்தர் அவைக்களப்புலவராய் வீற்றிருந்து மூவர் உலாவைப் பாடியுள்ளார். தக்கயாகப்பரணி என்னும் நூலும் இயற்றப்பெற்றது. இவன் 1135ல் மறைந்த பிறகு இரண்டாம் குலோத்துங்கன் பட்டத்திற்கு வந்தான்.

### 8.5.2 இரண்டாம் குலோத்துங்கன்

விக்கிரமன் மகன் இராசகேசரி இரண்டாம் குலோத்துங்கன் கி.பி.1133முதல் 1150 வரை அரசு புரிந்தான். இவன் காலத்தில் போரின்மையால் அமைதி நிலவியது. முன்னோரைப் போலத் தில்லையைச் சிறப்பு செய்தான். பேரம்பலத்திற்குப் பொன் வேய்ந்தான் ஒட்டக்கூத்தர் இரண்டாம் குலோத்துங்க சோழன் மீது பிள்ளைத்தமிழ் பாடினார். தமிழில் தண்டியலங்காரம் செய்த தண்டியாசிரியர் இம்மன்னன் அவைக்களப்புலவர். இம்மன்னனுக்கு அநபாயன் அபயன்,

எதிரிலிப்பெருமாள், கலிகடிந்தான், திருநீற்றுச்சோழன், பெரிய பெருமாள் எனப் பல பட்டங்கள் உடையவன். இவன் மறைவிற்குப் பிறகு இரண்டாம் இராசராசன் பட்டம் ஏற்றான்.

### 8.5.3 இரண்டாம் இராசராசன்

பரகேசரி இரண்டாம் இராசராசன் கி.பி.1146 முதல் 1163 வரை அரசு புரிந்தான். இம்மன்னன் ஆட்சியிலும் போரில்லை என்பதால் தமிழ், வடமொழியில் சிறந்து அவற்றை வளர்க்கும் முயற்சியில் ஈடுபாடு கொண்டான். இரண்டாம் குலோத்துங்கன் கடலில் எறிந்த திருமால் சிலையினைத் தேடிக் கொணர்ந்து தில்லையிலேயே அமைத்து, குடிப்பழியை நீக்கினான். கும்பகோணத்துக்கு அருகில் உள்ள தாராசுரத்தில் இம்மன்னன் 'இராசராசேச்சுரம்' என்னும் பெருங்கோயிலை உருவாக்கினான்.

இம்மன்னன் நோயுற்று இறக்கும் பொழுது இவன் மைந்தர் இருவரும் ஈராண்டும் ஓராண்டும் நிரம்பிய குழந்தைகள் என்பதால், தாயத்தாருள் ஒருவராகிய நெறியுடைய பெருமாள் புதல்வன் எதிரிலிப் பெருமாளைக் கங்கைகெண்ட சோழபுரத்திலிருந்து வரவழைத்து இளவரசு பட்டம் கட்டி இறந்தான். அமைச்சர் தலைவனாகிய திருச்சிற்றம்பலமுடையான் பெருநம்பி குழந்தைகளையும் நாட்டையும் காத்தான். நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு எதிரிலிப் பெருமாள் இராசாதிராசன் என்னும் பெயருடன் முறைப்படி சோழப்பேரரசின் மன்னனான்.

### 8.5.4 இரண்டாம் இராசாதிராசன்

இராசகேசரி இரண்டாம் இராசாதிராசன் விக்கிரம சோழனின் பேரன். குலசேகரன், பராக்கிரபாண்டியன் இருவரும் பாண்டியநாட்டில் தாயத்தார் போரில் குலசேகரனுக்கு இரண்டாம் இராசதிராசனும் பராக்கிரமனுக்கு ஈழவேந்தன் பராக்கிரமபாகுவும் உதவினர். குலசேகரன் பாண்டிய நாட்டின் மன்னனாக பொறுப்பேற்றான். பராக்கிரமபாகு தன் விரோதி குலசேகரனை நண்பனாக்கிக் கொண்டு தன் மகளையும் கொடுத்தான். பாண்டியனும் சோழன் உதவியை மறந்து விரோதியாக, சோழப் படை குலசேகரனை அழித்துப் பாண்டியநாட்டிற்கு வீரபாண்டியனை மன்னானக்கிற்று. மதுரையும்



குறிப்புகள்

ஈழமும் கொண்ட சோழ இராசசேகரிவர்மன் என்று சிறப்பிக்கப்பெற்றான். இம்மன்னனுக்குப் பல அரசர்கள் கப்பம் கட்டி வாழ்ந்தனர்.

### 8.5.5 மூன்றாம் குலோத்துங்கன்



இராசாதிராசனுக்குப் பின் பரகேசரி மூன்றாம் குலோத்துங்கன் 1178-1218 வரை ஆட்சி செய்து வந்தான். இம்மன்னன் யாருடைய வாரிசு என்று அறிய முடியவில்லை. இரண்டாம் இராசராசனின் மகன் என்று தன் தந்தை கட்டிய இராசராசேச்சுவரத்தைக் குறிப்பிடுவதிலிருந்தே அறியலாம். திறை செலுத்த மறுத்த கொங்கு வேந்தரை வென்று கருவூரில் 'சோழகேரளனாக' முடிசூட்டிக் கொண்டான். கருவூரும் 'முடிவழங்கு சோழபுரமாயிற்று' வீர பாண்டியன் மகன் குலசேகர பாண்டியன் சோழமன்னனோடு மாறுபட அவனை வென்று 'சோழ பாண்டியன்' என்னும் பெயரோடு முடிசூட்டிக் கொண்டான். மூன்று மண்டலங்களைக் கொண்டமையால் 'திரிபுவன வீரதேவன்' என்று சிறப்பிக்கப்பெற்றான். மதுரை கோவில்களுக்குப் பொன் வேய்ந்தான். பிறகு தன்னை அடைக்கலம் அடைந்த குலசேகர பாண்டியனுக்குப் பாண்டி நாட்டை வழங்கினான். போரோடு பல அறப்பணிகளுமம புரிந்து நாட்டைக் காத்தான். பல புலவர்களை ஆதரித்த மன்னனாக விளங்கினான்.

சிறந்த சிவபக்தன் என்பதால் 'நம்தோழன்' என வழங்கப்பெற்றதாக இம்மன்னனைப் பற்றித் திருவாரூர்க் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. இம்மன்னன் 'திரிபுவன வீரேச்சுரம் என்னும் கோயிலைத் திருவிடை மருதூருக்கு அருகில் கட்டினான். வச்சணந்தி மாலை, நேமிநாதம், நன்னூல் இயற்றிய புலவர்களை ஆதரித்ததோடு பல தமிழ் இலக்கணநூல்களும் இலக்கியநூல்களும் தோன்ற காரணமாக விளங்கினான் வீரராசேந்திரன் முடிவழங்கு சோழன், சோழ கேரளன். திரிபுவனவீரதேவன், முடித்தலைக்கொண்டான், உலகுடையான், இராசாக்கள் தம்பிரான், உலகுய்ய வந்தான், தனிநாயகன் எனப் பல பெயர்களைக் கொண்டவன். இம்மன்னன் காலத்தோடு சோழரின் உச்சநிலை முடிந்து வீழ்ச்சியை நோக்கியது.

## 8.6 சோழரின் வீழ்ச்சியும் பாண்டியரின் எழுச்சியும்



விசயாலய சோழனால் எழுச்சி கொண்ட சோழப் பேரரசு முதல் குலோத்துங்கன் இறுதிக் காலத்தில் வீழ்ச்சியை நோக்கிச் சென்றது. வலிமை குன்றிய சோழர்களைத் தாக்குவதற்குப் பன்முக முயற்சி நடந்தது. சோழர்களின் ஆட்சியில் சைவ வைணவப் போராட்டமும் சாதிபாகுபாடுகளும் உள்நாட்டுக் குழப்பங்களும், வடக்கில் புதிதாகத் தோன்றிய காகதீயர்,**போசளர்**, யாதவர், தெலுங்குச் சோடர், தெற்கில் பாண்டியர் ஆகியோர் எழுச்சியும் சோழப்பேரரசின் வீழ்ச்சியைத் துரிதப்படுத்தின. இரண்டாம் இராசராசன் காலத்தில் மையஅரசின் கட்டுப்பாடு தளர்ச்சி கண்டு சிற்றரசர்கள் பலம் கொண்டனர். பாண்டியர் காடவர், போசளர், ஆகியோர் தமிழகத்தில் ஆடிய சூழ்ச்சியில் சோழர்களின் தேவையற்ற தலையீடு, அரசரிமைப்போர் காரணமாக எழுந்த சிக்கல்கள் எனத் தள்ளாடிய சோழப்பேரரசு மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சியில் தலை நிமிர்ந்து. மீண்டும் மூன்றாம் இராசராசன் அரியாணையில் அமர்ந்ததும் அதே ஆண்டில் பாண்டிய நாட்டில் முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன் அரியணை ஏறினான். சுந்தரபாண்டியன் தன் முன்னோர்களைக் குறுநில மன்னர்களாக்கித் திறைபெற்ற சோழர்களைப் பழிவாங்கும் நோக்குடன் கி.பி.1219ல் சோழநாட்டின் மீது படையெடுத்து தஞ்சையையும் உறையூரையும் தீக்கொளுத்தி மூன்றாம் இராசராசனை விரட்டி அடித்தனர். சோழன் கரிகாலன் பட்டினப்பாலை பாடிய உருத்திரங்கன்னாருக்குப் பரிசிலாக அளித்த ‘‘பதினாறுகால் மண்டபம்’ தவிர அனைத்தும் அழிக்கப்பட்டன எனச் சுந்தரபாண்டியனின் திருவெள்ளறைக் கல்வெட்டு தெரிவிக்கின்றது. சோழர்கள் பாண்டியர்களுக்குத் திறை செலுத்தும் குறுநில மன்னர்களாக மாறினர். சோழர் படைக்கு உதவியாக இருந்த போசளர் வீர நரசிம்மன் மகன் வீர சோமேன்வரன் பாண்டியனுடன் சேர்ந்து சோழனை எதிர்த்தான் இப்போர் மூன்றாம்இராசேந்திரன் காலத்தில் நிகழ்ந்த போராகும். இம்மன்னர் திரை செலுத்த மறுத்த இரண்டாம் சுந்தரபாண்டியனுடன் போர் புரிந்து சிறையில் அடைபட்டான். சோழப்பேரரசிற்கு முற்றுப்புள்ளியாகவும் மாறிற்று. ‘‘மூன்றாம் இராசேந்திரனுக்குப் பின் சோழ நாடு முடிசூட்டு விழா ஒன்றைக் கொண்டாடும் பேற்றை இழந்து விட்டது’’ என்று கே.கே. பிள்ளையின்

கூற்றினை டாக்டர் ஆ. இராமகிருட்டினன் தம் தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும் என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளது. சோழப் பேரரசிற்கான வீழ்ச்சியின் கூற்றாகும்.



## 8.7 தொகுப்புரை

சோழர் வரலாற்றில் பொற்காலமென திகழ்ந்த முதல் இராசராசன் காலத்தில் நாகரிக அரசியல் செய்ததாக வரலாறு சுட்டுகின்றது.நிலங்களை அளக்க ஏற்பாடு செய்தல் கடற்படை காவற்படை போன்றன அமைத்துள்ளான் .தஞ்சை பெரிய கோவிலைக் கட்டி 'இராசராசேச்சுரம்' எனச் சிறப்பிக்கும் பெயரினைப் பெற்றான் . முதல் இராசேந்திரசோழன் கங்கை வரை சென்று சோழ சாம்ராஜ்யத்தை நிறுவினான் .கங்கை கொண்ட சோழன் என்னும் சிறப்புப்பெயரினைப் பெற்றதோடு கங்கை கொண்ட சோழபுரத்தை உருவாக்கி அதில் கோவிலினையும் அமைத்தான் . இராசேந்திரசோழனுக்குப் பிறகு புதியமரபு தோன்றி சோழராட்சியை முதற்குலோத்துங்கன் விக்கிரமசோழன் இரண்டாம்குலோத்துங்கன் இரண்டாம் இராசராசன் இரண்டாம் இராசாதிராசன் மூன்றாம் குலோத்துங்கன் போன்றோர் ஆட்சி புரிந்தனர். அதன் பிறகு சோழர்கள் வீழ்ச்சி அடைந்து பாண்டியமன்னர்கள் எழுச்சி உற்றனர் போன்ற கருத்துக்களை இக்கூறு கூறியுள்ளது .

## 8.8 மாதிரி வினாக்கள்

1.'திருமகள் போலப் பெருநிலச்செல்வியும் ' எனத் தொடங்கும் மெய்க்கீர்த்தி எம்மன்னனுக்கு உரியது ?

முதல் இராசராச சோழன்

2.'சோழகங்கம்' என்னும் ஏரியை உருவாக்கிய மன்னன் யார்?

முதல் இராசேந்திரன்

3.'சுங்கம் தவிர்த்த சோழன்'–யார் ? ஏன் ?

முதல் குலோத்துங்க சோழன் சுங்கவரியினைத் தவிர்த்த

காரணத்தினால் சுங்கம் தவிர்த்த சோழன் எனப்பட்டான்.

4.மூவருலா பாடிய புலவரின் பெயரினைக் குறிப்பிக

ஒட்டகூத்தர்

5.பிற்காலச்சோழர்களில் கடைசி சோழமன்னனாக அறியப்படும் மன்னன் யார் ?

மூன்றாம் இராசேந்திரன்

**குறிப்புகள்**

**பயிற்சி வினா**

1.இராசராச சோழரின் தனிச்சிறப்புகளை விவரி

2.இராசேந்திர சோழரின் வீரமும் சிறப்பும் குறித்து விளக்குக

3.சோழமன்னர்களின் எழுச்சியும் வீழ்ச்சியும் -ஆய்க

மேலும் படித்து அறிக

டாக்டர்.மா.இராசமாணிக்கனார்

தமிழக ஆட்சி

பதிப்பு ஆண்டு -1972

## கூறு 9

## சாழராட்சி முறை – ஊராட்சி முறை – சமூக வாழ்க்கை - சோழர்களின் கடல் கடந்த வெற்றி – சோழர்களின் கட்டிடக்கலை வளர்ச்சி – கல்வி நிலை – பெண்டிர் நிலை - இசை வளர்ச்சி

**9. பாடஅமைப்பு**

**9.1 அறிமுகம்**

**9.2 நோக்கம்**

குறிப்புகள்

9.3 சோழராட்சி முறை

9.4 ஊராட்சி முறை

9.5 சமூக வாழ்க்கை

9.6 சோழர்களின் கடல் கடந்த வெற்றி

9.7 சோழர்களின் கட்டிடக்கலை வளர்ச்சி

9.8 கல்வி நிலை

9.9 பெண்டிர் நிலை

9.10 இசை வளர்ச்சி

9.11 தொகுப்புரை

9.12 மாதிரி வினாக்கள்

9.13 பயிற்சி வினா

9.14 மேலும் அறிக

## 9.1 அறிமுகம்

சோழர்களின் ஆட்சிமுறையில் ஊராட்சி முறையும் சமூகவாழ்க்கைமுறையும் சோழர்களின் கடல் கடந்த வெற்றியும் சோழர்களின் கலைநுட்பம் மிக்க கட்டிடக்கலை வளர்ச்சியும் கல்விநிலையும் பெண்கள் நிலையும் இசை வளர்ச்சியும் குறித்து இக்கூறு மூலம் அறியலாம் . சோழர்கள் ஆட்சியில் பல முரண்பாடுகள் தோன்றி மக்களிடையே வேறுபாடுகளை உண்டாக்கினும் சோழர்களின் போர்த்திறமும் கலைத்திறமும் தனித்த ஆற்றல் கொண்டு விளங்கின .உலகமே வியந்திடும் கட்டிடக் கலையினை சோழமன்னர்கள் தம் ஆட்சியின் மகுடமாக காட்சிப்படுத்திவிட்டுச் சென்றுள்ளனர் . தமிழ் மொழியின் எழுச்சி புதிய நோக்கில் அமைந்தன போன்ற செய்திகளை அறியலாம் .

## 9.2 நோக்கம்

**1. சோழர்களின் வரலாற்றினையும் சிறப்பினையும் அறிதல்**

**2. சோழர்களின் கலைத்திறத்தினையும் உணர்ந்து பெருமிதம் அடைதல் .**

**3.மாணவர்கள் சோழர்களின் கலைநுட்ப அறிவினைப் பெறுதல்**

## 9.3 சோழராட்சி முறை

சோழராட்சி முறை பற்றி கல்வெட்டுச் சான்றுகளே முக்கிய ஆதாரமாக விளங்குகின்றன. சோழர்களின் நிர்வாக அமைப்பு, நீதிமுறை, வருவாய்த்துறை போன்றன அரசாட்சிமுறையில் முதன்மையாகின்றன. தஞ்சை. திருச்சி, தென்னார்க்காடு, புதுக்கோட்டை மாவட்டங்களில் சில பகுதிகள் சோழமண்டலம் என அழைக்கப்பெற்றது. இந்நிலப்பரப்பு மண்டலம் வளநாடு, நாடு எனப் பகுக்கப்பெற்று மண்டல ஆட்சிப்பொறுப்பு இளவரசர்களிடமும் அரச குடும்பத்தாரிடமும் ஒப்படைக்கப்பெற்றிருந்தது. இராசராசன் காலத்தில் சோழமண்டலம் ஒன்பது வளநாடுகளாகப் பகுக்கப்பெற்று ஒவ்வொரு வளநாடும் இரண்டு ஆறுகளுக்கு நடுவில் அமைந்திருந்த நிலப்பரப்பாக விளங்கியது. ஓவ்வொரு நாடும் சிற்றூர்கள் சிலவற்றையும் சில கூற்றங்களையும் சதுர்வேதிங்கலத்தையும் கொண்டிருந்தது. சோழர்களின் அரச உரிமையானது மூத்தமகனுக்கு இளவரசு பட்டம் கட்டும் வழக்கத்தைக் கொண்டிருந்தது. அரியணை அமர்ந்து ஆளுவதற்குரிய அரசியல் பயிற்சி அளிப்பது அதன் நோக்கமாக இருந்தது.

சோழர்கள் காலத்தில் முதலமைச்சர் உள்ளிட்ட அமைச்சர்குழுவும் விக்கிரம சோழன் உலாவும் கலிங்கத்துப்பரணியும் குறிப்பிடுவதோடு ‘சௌஜீகுவா’ என்னும் சீன ஆசிரியரும் அமைச்சர் குழுவில் நால்வர் இடம் பெற்றுள்ளதாகத் தெரிவித்துள்ளார். அரசு அலுவலர்களும் பெருந்தரம், சிறுதரம் என்றும் அவர்களின் தகுதிக்கேற்ப நிலங்கள் ‘சீவிதம்’ என்னும் பெயரில் இறையிலியாக அளிக்கப்பெற்று வாழ்நாள் முழுவதும் ‘அனுபவபாத்தியம்’ அளிக்கப்பட்டிருந்தது. அவர்களின் சந்ததியினர் அந்நிலத்தில் உரிமை கொண்டாட முடியாது.

சோழர் அரசியலில் வரியே பெரும்பங்கு பெற்றிருந்தது. விளைநிலங்களை அளந்து தரம் இட்டு அவற்றிற்குரிய வரிகளை விதித்து, அவற்றை வாங்கும் பொருட்டு அப்பல்வேறு பணிகளையும் புரியும் பல்வேறு துறைத்தலைவர்களைக் கொண்ட நிலவரிக்கழகம் ஒவ்வொரு மண்டலத்திலும் இடம் பெற்றிருந்தது. அது புரவுவரித் திணைக்களம் எனவும் அதன் உறுப்பினர்கள் புரவுரித்திணைக்களத்தார் எனவும் வழங்கப்பட்டனர். இதன் தலைவர் புரவுவரித்திணைக்கள நாயகம் எனவும் ஊர்தோறும் சென்று நிலவரிக்கணக்குகளை மேற்பார்வை செய்து வருபவன் புரவுவரித் திணைக்களத்துக்கண்காணி எனவும், ஒவ்வொரு ஊரிலிருந்தும் அரசுக்கு வரவேண்டிய வரி இவ்வளவு என்பதைத் தெளிவாக எழுதி வைத்திருக்கப் புத்தகம் 'வரி பொத்தகம்' எனவும் 'அப்புத்தகம் எழுதுபவனும் ஷவரி பொத்தகம்' என்றே அழைக்கப்படும் நிலையும் வரி பற்றி அவ்வப்பொழுது ஏற்படும் மாறுதல்களைக் குறித்து வைப்பவன் 'வரியிலிடுஅதிகாரி' எனவும் இவர்கள் அனைவரும் இணைத்து செயல்படுவதற்கே இருந்துள்ளதை சோழர் கால வரலாற்றுப்பதிவிலிருந்து அறிய முடிகிறது.

சோழர்களின் வருவாய்த்துறையில் அடிப்படையாக நிலவரி அமைந்திருந்தது. இது இறை அல்லது காணிக்கடன் என அழைக்கப்பட்டது. நிலங்கள் வரி செலுத்த வேண்டிய நிலங்கள், இறையிலி நிலங்கள் எனப் பகுக்கப்பெற்று உள்ளன.

இறையிலி நிலங்கள் தேவதானம், திருவிடையாட்டம், பள்ளிச்சந்தம், மடப்புறம் ஆகியனவும், அறச்சாலைகளுக்கு அளிக்கப்பட்ட சாலாபோகம், அந்தணர்களுக்கு அளிக்கப்பட்ட சதுர்வேதிமங்கலம், பிரமதேயம், அரசு அலுவலர்களுக்கு அளிக்கப்பட்ட சீவீதம், மற்றும் நந்தம், ஏரி, வாய்க்கால், சுடுகாடு ஆகியனவும் இறையிலிநிலங்களாக மன்னர்களால் உரியவர்களுக்குக் கொடுக்கப் பட்டிருந்தன. இறையிலி நிலங்களை அனுபவிப்போர் ஊரவையின் இசைவு இன்றி எங்கும் சென்று தொழில் செய்யக்கூடாது என்பது விதியாகவும் இருந்துள்ளதை கல்வெட்டுச்சான்றுகள் எடுத்துரைத்துள்ளன. நிலங்களைத் தரம் பிரிப்பதும், நில அளவீடும் நிகழ்ந்துள்ளன. அதற்கு நீர்வளமும் நிலவளமும் கணக்கீடு செய்யப்பெற்றுள்ளன. நிலவளமும் கணக்கீடு செய்யப்பெற்றுள்ளன.

நிலங்கள் நீர்நிலம், கொல்லை, நத்தம், காடு எனப்பகுக்கப்பட்டு குழி, மா, வேலி என்ற முறையில் அளந்தும் கல் நடப்பட்டு பாகுபாடு செய்யப்பெற்றிருந்தனர். விளைநிலங்கள் மட்டுமே வரி விதிப்பிற்கு உட்பட்டிருந்தன. சோழர்கள் நீர்ப்பாசனத்திற்கென்று அமைத்த ஏரிகள் பல. அவற்றுள் வீரநாரணஏரி, சோழவாரிதி, கண்டராதித்தப்பேரேரி, மதுராந்தகப்பேரேரி ஆகியன குறிப்பிடத்தக்கன.

குறிப்புகள்

தொழில்வரிகளும், சுங்கவரிகளும் சோழராட்சியில் முக்கிய பங்காற்றி உள்ளன. தொழில்வரியினை குடிமை எனவும், வாணிகவரி சுங்கம் எனவும் குறிப்பிட்டுள்ளனர். தறிக்கூறை, செக்கிறை, தட்டாரப்பாட்டம், மீன்பாட்டம், வண்ணாரப்பாறை, குசக்காணம், கண்ணாலக்காணம், தரகு. நீர்க்கூலி, நாடுகாவல் ஆகியன தொழில்வரிகளாகும். போர்வரியும் வசூலிக்கப்பட்டதாக தஞ்சை மாவட்ட ஆலங்குடிக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

நீதித்துறையில் ஊரவைமன்றங்கள் தவிர அரசுநீதி மன்றங்களும் தனியாக இயங்கின. தண்டனைகள் கடுமையாக இருந்தன. சிறு குற்றங்களுக்குக் கசையடிகள் வழங்கப்பெற்றன. அரசுதுரோகம், கொலை போன்ற பெருங்குற்றங்களுக்கு மரணதண்டனை வழங்கப்பட்டது. தலையை வெட்டியோ, யானையின் காலால் இடறியோ மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது. உடைமைகளைப் பறிமுதல் செய்வதும் உண்டு. நீதியை முறைப்படுத்தவும் நியாயத்தீர்ப்பு வழங்கவும் வழக்குமரபுகள், ஆவணங்கள், வாய்மொழிச் சாட்சியங்கள் ஆகியன சான்றாதரங்களாக இருந்துள்ளன.

சோழர்களின் அரசாட்சி முறையில் படைத்துறை முக்கிய துறையாகப் பணியாற்றி உள்ளன. சோழப் பேரரசுகள் தங்களின் நாட்டு எல்லையை விரிவாக்குவதில் தங்கள் மேலாண்மையை நிறுவுவதிலும் பெரிதும் துணை நின்றது படைகளே. குதிரை, யானை, காலாட்படை, கப்பல் எனப் படைகள் நான்காகப் பிரிக்கப்பெற்று படைத்தலைமை அரசக்குடும்பத்தவர் தலைமையேற்க போர்கள் நிகழ்ந்துள்ளன. போர்களில் பங்கேற்கும் வீரர்கள் உடல்வலிமையும் ஆற்றலும் கொண்ட வீரர்களாக இருந்துள்ளனர். சோழர்களின்

படைப்பிரிவில் 70 பிரிவுகள் இருந்ததாக வரலாற்றுச்சான்றுகள் குறிப்பிட்டு உள்ளன.

அரசணைகள் மற்றும் மக்கள் குறைத் தீா்ப்பாயமும் சோழர்கள் ஆட்சியில் இருந்துள்ளன. தலைநகரில் அமைச்சர்கள் மட்டுமல்லாது சாமந்தர், திருமந்திரஓலை, திருமந்திரஓலைநாயகம், விடையில் அதிகாரி, கரும அதிகாரி என வேறு பிற அலுவலா்களும் இருந்தனர். இவா்களுள் சாமந்தா் நாற்படைத்தலைவர். அரசன் அவ்வப்பொழுது அளிக்கும் ஆணைகளைக் கேட்டு ஓலையில் எழுதுகின்றவர் திருமந்திர ஓலை. அவர் எழுதியதைச் சரிபார்த்துக் கையொப்பம் இடுகின்றவர். திருமந்திர ஓலை நாயகம். அரச ஆணை அடங்கிய திருமுகங்களை உரியவர்களுக்குப் பணி மக்கள் மூலம் சேர்க்கின்றவர்கள் விடை அதிகாரி. அரசின் பல்வேறு துறைகளிலும் நிகழும் நிகழ்ச்சிகளை ஆராய்ந்து ஒழுங்கு செய்பவர் கரும அதிகாரி. இத்தகைய அதிகாரிகள் மட்டுமல்லாது நாட்டில் களவும், கலகமும், கொலையும், கொள்ளையும் நிகழாதவாறு காக்கும் காவல்துறை தலைவனாகிய நாடுகாவல் அதிகாரியும் தலைநகரில் இருந்துள்ளனர்.

அரசனும் அமைச்சர்களும் உடன் கூட்டத்து அதிகாரிகளும் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று நாட்டு மக்களின் குறைகளையும் முறையீடுகளையும் நேரில் கேட்டறிந்து குறை தீர்க்கும் முறை செய்தும் வருவார் என்று சோழர் கால அரசாட்சி முறையிலிருந்து அறியப்படும் செய்திகளாகும்.

## 9.4 ஊராட்சி முறை

சோழர்களின் ஊராட்சி முறையில் ஊரவைகளின் அமைப்பு, தேர்தல்நடைபெற்றமுறை, உறுப்பினர்க்குரியதகுதிகள், தகுதியிழந்தோர், ஊரவையில் செயற்பாடுகள், அதிகாரவரம்புகள் ஆகியன விளக்கப்பெற்றுள்ளன. இதனை மானூர்க்கல்வெட்டு, உத்தரமேரூர்க் கல்வெட்டு, திருப்பனந்தாள் கல்வெட்டு, தழையனூர்க் கல்வெட்டுகள் எடுத்துரைத்துள்ளன. சோழர் காலத்தில் ஊரவைகள் நான்காகப் பிரிக்கப்பெற்றிருந்தன.

1. கிராம அவை
2. தேவதான அவை

3. ஊர் அவை 4. நகரவை

கிராமஅவை என்பது அந்தணர் வாழ்ந்த சதுர்வேதிமங்கலத்திலிருந்த அவை. பிரமதேயஅவை எனவும் அழைக்கப்பெற்றது. தேவதானஅவை என்பது கோவிலுக்குரிய தேவதானங்களிலிருந்த அவை. ஊர்அவை என்பது அந்தணர் அல்லாத பிற வகுப்பினர் வாழ்ந்த ஊர்களில் இருந்த அவை. நகரவை என்பது வணிகர் வாழும் ஊர்களில் இருந்த அவை.

குறிப்புகள்

ஊர் பெரும்பாலும் 30 தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு மக்கள் தொகை மிகுதியாகவிருந்த ஊர்களில் தொகுதிகளின் எண்ணிக்கை இரட்டிப்பாக இருந்தது. தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த செந்தலை 60 தொகுதிகளாகவும் பிரிக்கப்பட்டிருந்தது. ‘தொகுதி’ என்பது ‘குடும்பு’ என்னும் சொல்லில் வழங்கப்பெற்றது. இந்த முப்பது குடும்பு (தொகுதி) 30 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். ஊர்ப்பொதுமக்கள் அடங்கிய பேரவையால் குடவோலைமுறை மூலம் தேர்தல் நடைபெறும். பேரவையினர் ‘பெருமக்கள்’ என அழைக்கப்பெற்றனர். உறுப்பினர்கள் ‘வாரியப்பெருமக்கள் அல்லது ஆளும்கணத்தார்’ என அழைக்கப்பெற்றனர். இந்த உறுப்பினர் மூன்று வாரியங்களாகப் பிரிக்கப் பெற்று சம்வத்சரவாரியம், தோட்டவாரியம், ஏரிவாரியம் எனப் பெயரிடப்பட்டு செயல்பட்டது. சம்வத்சரவரரியம் 12 உறுப்பினர்களையும் தோட்டவாரியம் 12 உறுப்பினர்களையும் ஏரிவாரியம் 6 உறுப்பினர்களையும் 12பேர் குடவேலை முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். அவர்களுள் 6 பேர் பஞ்சவாரிய உறுப்பினராகவும் 6 பேர் பொன்வாரிய உறுப்பினராகவும் கருதப்படுவர். இதனைத் தவிர கணக்கு வாரியம், கலிங்கு வாரியம், குடம்பு வாரியம், தடிவழிவாரியம், போன்ற வாரியங்களும் கட்டப்பட்டுள்ளன. உறுப்பினர்கள் பதவிக்காலம் ஓராண்டு ஆகும். இதற்கு ஊதியம் கிடையாது. குற்றம் செய்தவர்கள் விலக்கப்படுவர். அந்த இடத்திற்கு உடனடியாக குடவோலை முறை மூலம் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

ஒரு முறை வாரிய உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் மீண்டும் 3 ஆண்டுகளுக்கு உறுப்பினர் ஆக இயலாது. சம்வத்சர வாரியம் மட்டும் இவ்விதி முறைகளிலிருந்து விலக்கு பெறுகிறது.

கல்வியிலும் அனுபவத்திலும் முதிர்ந்தவர்களே வாரியத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுவர். இவ்வாரிய உறுப்பினர்கள் பிற வாரிய உறுப்பினராக இருந்து பட்டறிவு பெற்றவராக இருத்தல் வேண்டும்.

ஊரவையில் உறுப்பினராகும் தகுதி ஆண்கள் அனைவருக்கும் உரியது. அவர்களுக்கான சிறப்புத்தகுதிகள் சொந்தமனையில் வீடுகட்டிக் குடியிருப்பவர்கள், காணிக்கடன் செலுத்த கால்வேலி நிலம் உடையவர்கள், சிறந்த கல்வியறிவு உடையவர்கள் அறநெறியில் நடப்பவர்கள், அதன் வழி பொருள் ஈட்டுபவர்கள் 35 வயதிற்கு மேல் 70 வயதிற்கு உட்பட்டவர்கள் 3 ஆண்டுகளுக்கு எந்த வாரியத்திலும் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படாதவர்கள் ஆகியோர் உறுப்பினராகும் தகுதி பெற்றவர்கள்.

உறுப்பினராகும் தகுதியை இழந்தவர்கள் எவரென்றால் உறுப்பினராய் இருந்து இறுதியில் கணக்கினைக் காட்டாதவர்கள். அவர்களின் நெருங்கிய உறவினர்கள், கூடத்தகாதவர்களோடு கூடிக் கெட்டவர்கள், கள்ளக் கையெழுத்து இட்டவர்கள், கையூட்டு வாங்கிக் கழுவாய் தேடிக்கொண்டவர்கள், ஊருக்குத்துரோகம் செய்தவர்கள் ஆகியோர் உறுப்பினராகும் தகுதியை வாழ்நாள் முழுவதும் இழந்தவர்கள்.

தேர்தல் முறை என்பது அரசு ஆணை பெற்ற அலுவலர் ஒருவரால் மேற்பார்வையிடப்படும். உறுப்பினர் தேர்தலின் பொழுது ஊர்மக்கள் அடங்கிய பேரவையினரின் வருகை கட்டாயமாக்கப்பட்டிருந்தது. தகுதியை உடைய பேரவையினர் தங்கள் பெயர்கள் எழுதப்பட்ட ஓலைகளை ஒரு குடத்தில் இட்டிருப்பர். ஏதுமறியாத குழந்தை ஒன்றின் மூலமாக ஓர் ஓலையை எடுக்கக் கூறி அதனை நடுவர் கையில் கொடுப்பர். வெறுங்கையை விரித்துக் காட்டிய பிறகு நடுவர் அதை வாங்கி ஓசையுடன் வாசிப்பார். பேரவை உறுப்பினர் ஒவ்வொருவரும் அதனை வாசிப்பர். பிறகு அவர் அக்குடும்பிற்குரிய (தொகுதிக்குரிய) உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்று அறிவிக்கப்பெற்று அனைத்து குடும்புகளுக்கும் உரிய உறுப்பினர் தேர்தல் நடைபெறும்.



ஊரவையின் செயல்பாட்டிற்கென்று தனி இடங்கள் உண்டு. மண்டபம், மன்றம், மரநிழல் ஆகிய இடங்களில் கூடுவதும் வழக்கம்

அவை கூடும் இடத்தையும் காலத்தையும் கொம்பு வாத்தியக் கருவியினை ஊதியும் முரசு அறைந்தும் தெரிவிக்கும் மரபு உண்டு. பகல். இரவு ஆகிய எந்த வேளையிலும் தேவைப்பட்ட பொழுது அவை கூட்டப்பெறும். இரவு நேரத்தில் அவையைக் கூட்டினால் பெருஞ்செலவு ஏற்படுமென்று அப்பொழுதில் அவை கூடுவதில்லை என ஊரவையிலேயே தீர்மானம் நிறைவேறியதாக கல்வெட்டுச்சான்றுகள் தெரிவிக்கின்றன.

குறிப்புகள்

ஊரவையின் பணிபுரியும் அலுவலர்களின் ஊதியம் பெற்றனர். அவர்கள் ஐவராவர் நடுவர் 'நியாயத்தார்' என்றும் கணக்கு எழுதும் பொறுப்பு கரணத்தாருக்கும், ஊரில் கலகம், திருட்டு ஆகியன நிகழாதவாறு காத்து ஊரினைக் காப்பவனுக்கு பாடிக்காப்பான் என்றும் வரிகள் வசூலிப்பவன் தண்டுவான் என்றும் குற்றேவல் செய்யும் பணியை உடையவன் அடிகீழ்நிற்பான் என்றும் அழைக்கப்பெற்றனர். இவர்களைத் தவிர 'தண்டல்' என்ற ஊரவை மேற்பார்வையாளரும் 'கிழார்' என்ற ஊர்த்தலைவரும் இருந்தனர்.

வாரியங்கள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனிக் கடமைகள் இருந்தன. குடிமக்கள் கொண்டுவரும் வழக்குகளுக்குத் தீர்ப்பு வழங்குவதும் அறநிலையங்களைக் கண்காணிப்பதும் சம்வத்சர வாரியத்தின் பணிகளாகும். நீர்நிலையங்களைப் பாதுகாத்தலும், விளைவுக்கு நீர் பாய்ச்சுதலும் ஏரி வாரியத்தின் பணிகளாகும். புன்செய் நிலங்களைப் பாதுகாப்பது தோட்ட வாரியத்தின் பணியாகும். பொன் நாணயங்களை ஆராய்வது பொன்வாரியத்தின் பணியாகும். தகுதியுடைய உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பது குடும்பு (தொகுதி) வாரியத்தின் பணியாகும். இவை அனைத்தும் பேரரசுகளின் இடையூறுகள் இன்றி தன்னாட்சியாக இயங்கின. நிலவருவாயைக் கணக்கிடுதல். வரிகளை விகிதப்படுத்தி உறுதி செய்தல், பொதுச்சொத்துகளைக் கண்காணித்தல், கோவில்களின் தேவைகளை நிறைவு செய்தல் ஆகியன ஊரவைக்குரிய உரிமைகளாக இருந்துள்ளன. ஊர்ப்புறம் போக்கு நிலங்களே அன்றித் தனிப்பட்டோர் நிலங்களையும் கண்காணிக்கும் உரிமையைப் பெற்றிருந்தனர். நிலதானம் நிலவிற்பனை போன்ற உரிமை மாற்றங்களுக்கு இச்சபையில் ஒப்புதலைப் பெறவேண்டும். வரியினைச் செலுத்தாது உள்ளவர்களின் நிலங்களைச் நிலங்களைப் பறிமுதல் செய்யவும்

அவற்றை விற்று வரிநிலுவைக்கு ஈடுகட்டவும் ஊர் வழக்குகள் மூலம் குற்றம் செய்தவர்கள் நிரூபிக்கப்பட்டவர்களைக் கடுமையாகத் தண்டிக்கவும் ஊரவையினர் உரிமை பெற்றிருந்தனர்.



அரசின் ஒப்புதலின்றி வரியை மாற்றவோ சேர்க்கவோ ஊரவைக்கு உரிமை அளிக்கப்பட்டிருந்தது. அரசின் வரிக்கொடுமைகள் தாங்கமுடியாமல் இருந்தபொழுது ஊரவையினரிடம் பொதுமக்கள் முறையிடுதலும், நியாயவரிகளுக்கு மேல் அரசுக்குத் தரவேண்டியதில்லை என ஊரவையினர் தீர்மானம் இடுவதும் உள்ளது.

நிலத்தினை அளந்து நிலவளம், நிலத்தரம் ஆகியவற்றை முறைப்படுத்தி நிர்ணயிக்கும் முன் அரசு அந்த ஊரவை உடன்பாட்டைப் பெற வேண்டும் என்பது விதியாக இருந்து உள்ளது.

### 9..5 சமூக வாழ்க்கை

சோழர்கால சமூகவாழ்க்கையில் சாதி அடிப்படையில் அமைந்த சமூக வாழ்க்கையைக் காணமுடிகிறது. சமூகத்தில் ஒரு பிரிவின் உயர்நிலையும் மற்றொரு பிரிவினர் தாழ்நிலையும் பெற்று வாழ்ந்திருந்தனர்.

‘‘சமூகத்தின் உயர்மட்டத்தில் இருந்தவர்களுக்கு மிகுதியான சமூக உரிமை இருந்ததாக நீலகண்ட சாஸ்திரி குறிப்பிடுகின்றார்’’ என டாக்டர் ஆ. இராமகிருட்டினன் தன் தமிழகவரலாறும் தமிழர்பண்பாடும் என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

பல்லவர்காலத்தைப் போலவே சோழர்கள் காலமும் ‘அந்தணர்கள்’ சமுதாயத்தில் உயர்நிலையில் வைத்துப்போற்றப்பட்டனர். அவர்களுக்கென தனி ஊர்கள், நிர்வாகத்திற்கென தனி ஊரவைகள் இருந்தன. ‘‘அந்தணர்களுக்கு அளிக்கப்பட்ட ஆலயப்பணிகளும் கல்விச் சலுகைகளும் அவர்களது நிலையை உயர்த்தின ’’என வி.டி. செல்வம் குறிப்பிடுவதை டாக்டர்.ஆ. இராமகிருட்டினன் தம் தமிழகவரலாறும் தமிழர்பண்பாடும் என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு மாறாக தாழ்ந்தவர்கள் சமுதாயத்தில் கீழ்நிலையிலும் விதிகளும் கட்டுபாடுகளும் விதிக்கப்பட்ட நிலையில் வாழ்ந்திருந்தனர். உழைக்கும் தொழிலாளர் இனத்திற்கு

1. அடிமைகளை வைத்துக் கொள்ளக்கூடாது
2. பேரிகை கொட்டும் உரிமை இல்லை.
3. குயவர்கள் ஒரு மேலாடை மட்டும் அணியும் உரிமை பெற்றிருந்தனர்.

போன்ற பல கட்டுப்பாடுகள் இருந்திருந்தன.

சமுதாயத்தில் வளம் மிக்கவர்கள் வலங்கைப்பிரிவினர் என்றும் உழைக்கும் மக்கள் இடங்கைப்பிரிவினர் என்றும் வலங்கைப்பிரிவினர் அரசின் அனைத்து வசதிகளையும் சலுகைகளையும் பெற்றனர். அரசாங்கச்செல்வாக்கு, பட்டங்கள், விருதுகள், படைத்தலைமை, வாழ்க்கை வசதிகள் ஆகிய அனைத்தும் தனி உரிமைகளாக விளங்கின.

அதனால் உயர் வகுப்பினர் என்னும் தகுதியை உருவாக்கிக் கொண்டனர். இடங்கைப்பிரிவினர் தனிச்சலுகைகள் எதுவும் பெறவில்லை. தொண்டு புரிவதும் உழைப்பதும் இவர்களின் தொழில்களாக இருந்தன. வரிகளும் இவர்களுக்கே விதிக்கப்பட்டிருந்தன. நிலவரி, வீட்டுவரி, தொழில்வரி ஆகியன அவர்களுக்கு விதிக்கப்பட்ட வரிகள். இவர்களிடமிருந்து பெறப்பட்ட வரிகள் வலங்கையினரின் வசதிக்காகப் பயன்படுத்தப்பட்டன. இரு பிரிவினருக்கும் தனித்தனிக் கோவில்கள், மண்டபங்கள், தேவரடியார்கள் வழக்கில் இருந்துள்ளனர்.

இவ்விருப்பிரிவினருக்கும் இடையில் ஏற்பட்ட பல்வேறு வேறுபாடுகளால் அவர்களுக்கு இடையே பூசல்களும் சண்டைகளும் ஏற்பட்டு அந்தணர்கள் வாழ்ந்த இராசமகேந்திர ‘சதுர்வேதிமங்கலம்’ என்னும் ஊர் தீக்கிரையாக்கப்பட்டது. அந்தணர்கள் பணிபுரிந்த கோவில்கள் சூறையாடப்பட்டது பற்றியும் திருவரங்கக்கோவில் கல்வெட்டுகள் குறிப்பிட்டு உள்ளன. அந்தணருக்கும் நிலக்கிழாருக்கும் எவ்விதத் தொண்டுகள் செய்தல் கூடாது என்றும்

குறிப்புகள்

முறையற்ற வரிகளை எதிர்ப்பது என்றும் மீறுவோரைக் குத்திக் கொன்று விடுவது என்றும் இடங்கையினர் கூடி முடிவெடுத்தாக விருத்தாசலம் கல்வெட்டு எடுத்துரைக்கின்றது.



சோழர்காலச் சமூகவாழ்க்கையில் சமயநிலையில் சைவமும் வைணவமும் நிலை பெற்று விளங்கினும் பல பூசல்களும் போராட்டங்களும் இக்காலத்தில் நிகழ்ந்து உள்ளன. சைவத்திருமுறைகள் நம்பியாண்டார்நம்பியால் தொகுக்கப்பெற்றதோடு நாலாயிரத்திவ்வயப்பிரபந்தமும் நாதமுனிகளால் தொகுக்கப்பெற்று சைவசித்தாந்த நூல்கள் பலவும் தோன்றிய காலமாகவும் மடங்கள் பல தோன்றிய காலமாகவும் இருந்துள்ளன. இளம்பூரணர், சேனாவரையர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், பரிலேழகர், மயிலைநாதர், தெய்வச்சிலையார் போன்ற பல உரையாசிரியர்களும் இக்காலத்தே வாழ்ந்து தமிழ் இலக்கிய இலக்கண வளர்ச்சிக்கு ஆக்கப் பணிகளைச் செய்துள்ளனர். தமிழ்மொழி, வடமொழி ஆகிய இரண்டும் சோழர்கள் சமூக வாழ்க்கையில் மன்னர்களின் பெருமைக்குப் பெருமிதம் சேர்ப்பதாக மேன்மை பெற்றுள்ளன.

## 9.6 சோழர்களின் கடல்கடந்த வெற்றி

சோழர்களின் கடல் கடந்த வெற்றிக்கு இரு மன்னர்கள் முக்கியப் பங்காற்றியுள்ளனர் .அவர்கள் முதல் இராசராசன் மற்றும் முதல் இராசேந்திரன் .மாலத்தீவுகள் முந்நீர்ப்பழந்தீவு பன்னீராயிரம் ஆகிய பகுதிகளை இராசராசசோழன் கைப்பற்றியுள்ளான் . இராசேந்திரசோழன் கடாரம்கொண்டசெய்தி பதின்மூன்றாம்கல்வெட்டில் குறிப்பிடப்பெற்றுள்ளது . ‘‘ஆழ்கடலின் அரவணைப்பில் பாதுகாப்புப் பெற்று ஆற்றலுடன் விளங்கிய கடாரத்தின் மீது இராசேந்திரன் கொண்ட வெற்றி தமிழக வரலாற்றில் தனிச்சிறப்பு உடையது .’’என டாக்டர்.ஆ.இராமகிருட்டினன் கூறியுள்ளார் .ஶ்ரீவிசயம் பண்ணை மலையூர் மாயிருடிங்கம் இலங்காசோகம் தலைத்தக்கோலம் மாடலிங்கம்இலாமூரிதேசம் மானக்கவாரம் ஆகிய பகுதிகளையும் கடாரத்துடன் வெற்றி கொண்டதாக வரலாறு தெரிவிக்கின்றது .

## 9.7 சோழர்களின் கட்டிடக்கலை வளர்ச்சி



சோழர்களின் பல்லவர்களுக்கு அடுத்த நிலையில் கலைவளர்ச்சியில் இருந்து விளங்கினர். சோழ மன்னர்கள் கட்டிடக்கலையில் மேலோங்கி விளங்கியதை அவர்கள் கட்டமைத்த கோவில்கள் மூலமாக அறியலாம். கோவில்களுக்கு சோழ மன்னர்களின் பெயரையோ, விருதுப்பெயரையோ சூட்டும் மரபு இருந்துள்ளதை சான்றுகள் தெரியப்படுத்தி உள்ளன. மூதாதையரின் நினைவுக் குறியீடாகவும் கோவில்கள் எழுப்பப்பட்டு உள்ளன. இதற்கு முதல் பராந்தகன் தன் தந்தையின் நினைவாக எழுப்பிய ‘ஆதித்தியேச்சுரம்’ என்னும் கோவிலும் முதல் இராசராசன் அரிஞ்சயன் நினைவாக கட்டிய ‘அரிஞ்சிகையீச்சுரம்’ என்னும் கோவிலும் சான்றாக விளங்குகின்றன.

### 9.7.1 விசயாலய சோழேச்சுரம்

சோழர்காலச் கோவில்களில் முற்காலச்சோழர் கலைப்பாணிக்கும் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குவது நாலந்தா மலையிலுள்ள விசயாலயசோழேச்சுரம் கோவிலாகும். வடிவமைப்பில் பிற கோவில்களிலிருந்து மாறுபட்டு அமைந்துள்ளது. இதன் கருவறை வட்டவடிவம் கொண்டது. அதன் சுற்றுப்பிரகாரம் சதுரமாக உள்ளது. கருவறையின் மேலுள்ள விமானம் நான்கு தளங்களைக் கொண்டது. அவற்றில் முதல் மூன்று தளங்கள் சதுரமானவை. நான்காம் நிலை வட்ட வடிவமானது. பல்லவர் காலக் கலைப்பாணியைப் பெரிதும் பின்பற்றி அமைந்தது.

### 9.7.2 கண்ணனூர் பாலசுப்பிரமணியர் கோவில்

முதலாம் ஆதித்த சோழன் கட்டிய 47 கோவில்களில் கண்ணனூர் பாலசுப்பிரமணியன் கோவில் கட்டிடக்கலையில் விசயாலய சோழேச்சுரத்தைச் சார்ந்தது. ஆனால் விமானத்திலும் துணைக்கோவில்களின் கூரை மூலைகளிலும் நந்திக்குப் பதிலாக யானை உருவம் அமைக்கப்பெற்றுள்ளது. இங்கு முருகனின் ஊர்தியாக யானை உள்ளது.

### 9.7.3 தஞ்சைப்பெரியகோவில்

பிற்காலச் சோழர்களின் கட்டிடக்கலைக்கும் சிற்பக்கலைத் திறனுக்கும் சான்றாக விளங்குவது தஞ்சைப்பெரியகோவில். முதல் இராசராசசோழனால் கட்டப்பெற்ற தஞ்சைப்பெரியகோவில் 'பெருவுடையார் கோவில்' எனவும் 'இராசராசேச்சுரம்' எனவும் அழைக்கப்படும் சிறப்பினைப்பெற்றது. இக்கட்டிடக்கலையில் கோபுரத்தின் தனிச்சிறப்பாக சூரியனின் ஒளி பட்டு நிழல் விழாத கோபுரமாக விளங்குகின்றது. "பெருங்கற்றளியாக வடிவமைக்கப் பெற்ற இத்திருக்கோவில் இராசராசனின் வெற்றிச்சிறப்பை விளக்கிநிற்கும் பண்பாட்டுச்சின்னம் எனவும் திராவிடக்கலை முறையைப் பின்பற்றி அமைக்கப்பட்ட தலைசிறந்த கலைக்கருவூலமாகும் எனப் புகழப்படுகிறது". என டாக்டர் ஆ. இராமகிருட்டினன் தம் 'தமிழக வரலாறும் தமிழர்பண்பாடும்' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளனர்.

### 9.7.4. கட்டிடக்கலையின் சிறப்புகள்

இக்கோவில் கி.பி.1003 ஆம் ஆண்ட தொடங்கப்பெற்று 15 ஆண்டு காலத்தில் கி.பி.1009ல் முடிக்கப்பட்டது. கோவிலின் நிழல் தரையில் விழாதவாறு பல கலை நுட்பங்களோடு கட்டப்பெற்றுள்ளது. 14 அடுக்குகளைக் கொண்டது. 500 அடி நீளமும் 250 அடி அகலமும் உள்ளது. இக்கோவில் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், நந்தி மண்டபம், விமானம் ஆகிய உறுப்புகளைக் கொண்டு கோவிலைச் சுற்றி இரு மதில் சுவர்கள் அமைய, இரண்டிலும் கோபுரவாயில்களும் உள்ளன. மதிலின் உட்புறந்து மூலை ஒவ்வொன்றிலும் துணைக்கோவில் உள்ளது. கோவிலின் கருவறை 45சதுர அடியில் சதுரவடிவாக உள்ளது. கருவறையைச் சுற்றி வலம் வரும் வழியில் உட்சுவர்களில் ஓவியங்கள் அழகுறத் தீட்டப்பெற்றுள்ளன. கருவறையை அடுத்து அர்த்தமண்டபமும் அதனை அடுத்து மகாமண்டபமும் உள்ளன. மகா மண்டபத்தின் முன் பக்கத்தில் நந்திமண்டபம் உள்ளது. அங்கு ஓரே கல்லில் வடிக்கப்பெற்ற பெரிய நந்தி உள்ளது. தென்னிந்தியாவில் உள்ள மிகப் பெரிய நந்திகளுள் ஒன்றாகும்.

கருவறையின் மீது விமானம் உள்ளது. 'தட்சிணமேரு' என அழைக்கப்படுகின்றது. இதன் உயரம் 140 அடி விமானத்தின் அடித்தளம் சதுரவடிவமானது. இதன் பக்கங்கள் 82 அடி நீளம் உடையவை. விமானம் 50 அடி உயரம் உடையது. 13 அடுக்குகளைக் கொண்டது. போகப் போக சிறுத்துக் கொண்டே போகுமாறு விமானம் உள்ளது. விமானத்தின் உச்சியில் 80டன் எடையுள்ள ஒரு கருங்கல் போடப்பெற்றுள்ளது. விமானத்தின் மீது போர்த்தப்பட்டுள்ள பொன் 2926 கழஞ்சு நிறையுடையது. "திராவிடக் கைவினைஞர்களின் ஈடு இணையற்ற கலைப்படைப்பாகிய இவ்விமானம் இந்தியக் கட்டிடக் கலையின் உரைக்கல்லாகத் திகழ்கிறது என்பர் பெர்பிர'ன்" என டாக்டர் ஆ. இராமகிருட்டினன் கூறியுள்ளார்.

### 9.7.5 கங்கைகொண்டசோழேச்சுரம்

'கங்கை கொண்ட சோழேச்சுரம்' என்னும் கோவில் முதலாம் இராசேந்திரனால் கங்கைகொண்டசோழபுரத்தில் கட்டப்பெற்றதாகும். முதல் இராசராசனின் தஞ்சைப் பெரிய கோவில் பாணியைப் பின்பற்றிக் கட்டப்பெற்ற ஒன்றாகும். விமான வடிவமைப்பில் தஞ்சைப் பெரிய கோவிலைப் போன்று விளங்கினும் நுணுக்கமான வேலைப்பாடுகள் மிகுதியாகக் கொண்டது. இக்கோவில் ஆறு கோபுரங்கள் உள்ளன. 13 முழுச்சுற்றுள்ள லிங்கம் கருவறையை அணி செய்கிறது. விமானம் 100அடி பக்கங்களை உடைய சதுரவடிவில் அமைந்துள்ளது. 186 அடி உயரமுள்ள இவ்விமானத்தில் 8 நிலைகள் உள்ளன. அம்மனுக்கு என்று இங்குத் தனிக் கோவில் ஒன்று உள்ளது. சோழர்களின் கட்டிடக் கலைக்குச் சான்றாக இக்கோவில்கள் விளங்குகின்றன.

## 9.8 கல்வி நிலை

சோழர் காலத்தில் கல்விநிலை தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு உதவவில்லை. வடமொழிப்பள்ளிகள் மிகுதியாக இருந்துள்ளன. சாத்திரங்கள், புராணங்கள் தோன்றிய காலத்தில் அவற்றைப் பிராமணர் பயில்வதற்கென அரசர்கள் கல்வி நிறுவனங்களை அமைத்துக் கொடுத்தனர். கல்வி ஊர்ப்பொதுமக்களுக்கு அளிக்கப்பட்டிருந்ததா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. ஊர்மக்கள் பிழையின்றி

எழுதும் அளவிற்கு கல்வியறிவு பெறவில்லை. ''அரசாணைகளையும் உடைமை மாற்று ஆவணங்களையும் அழிவின்றிக் கல்லில் பொறிக்கும் தொழிலை மேற்கொண்டிருந்த கல்தச்சர்கள் பொறித்த கல்வெட்டுகளில் நூற்றுக்காணக்கான எழுத்துப்பிழைகள் இருந்துள்ளன. ஒரு சில வரிகளையேனும் பிழையின்றி எழுதும் அடிப்படையான இலக்கண அறிவு அவர்கள் பெற்றிருக்கவில்லை எனத்தெரிகின்றது. கல்லில் பொறிக்கும் படி வாசகம் எழுதிக் கொடுத்த அரசாங்க அலுவலர்களே இலக்கணப்பிழைகளை அறியாதவர்களாய் இருந்தனரா அன்றிப் பிழையுடன் பொறிக்கப்பட்டு வரும்போது அதைக் கண்காணித்து அவ்வவ்போது திருத்தும் வழக்கம் அந்நாளில் இல்லையா என்றெல்லாம் ஐயப்பாடுகள் எழுகின்றன. என்று கே.கே.பிள்ளை தம் தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும் என்னும் நூலில் குறிப்பிட்டு உள்ளார்.

ஓவியர்களும் கட்டிடக்கலைஞர்களும் சிற்பிகளும் அதனைக் குறித்த தொழில் நுட்பமும் நுண்ணறிவும் கொண்டவர்களாக விளங்கி உள்ளனர். மன்னர்கள் உருவாக்கிய பள்ளிகள் யாவும் பிராமணருக்கு மட்டும் வடமொழிப் பயிற்சியை அளித்து வந்தன. தமிழ் இலக்கிய இலக்கணப் பயற்சி இல்லை. புராணங்கள், இதிகாசங்கள், சிவதருமம், சோமசித்தாந்தம், இராமானுசபாடியம், பிரபாகரின் மீமாமிசை, வியாகரணம் ஆகிய வடமொழி இலக்கிய இலக்கணங்களையே பிராமணர்கள் பயின்று வந்துள்ளனர். வேதப்பயிற்சிப்பள்ளி, வேதம் அ்'டாத்தியாயி ஆகியவற்றுக்குப் பட்ட விருத்திகள் நிறுவப்பட்டன. தென்னார்க்காட்டில் இராசராச சதுர்வேதி மங்கலம் என்னுமிடத்தில் 340 பிராமண மாணவர்கள் பயிற்சி பெற்று வந்ததாகவும் 14 ஆசிரியர் வேதாந்தம் பயிற்றி வந்தனர் என்றும் நாள் ஒன்றுக்கு ஒரு கலம் நான்கு மரக்கால் நெல் ஊதியமாகப் பெற்றார்கள் என்றும் வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. சில ஆசிரியர்கள் நெல்லுடன் பொன்னும் சேர்ந்து ஊதியமாகப் பெற்றுள்ளார்கள். புதுவையை அடுத்த திரிபுவனியிலும் திருமுக்கூடலிலும், திருவாவடுதுறையின் பெருவே;ரிலும் திருவொற்றியூரிலும் பிராமணருக்காக வேத வியாகரணப் பள்ளிகள் நடைபெற்று வந்தன.

தமிழ் வளர்க்க சோழர் காலத்து மன்னர்கள் தவறினும் சைவ மடங்கள் ஈடுபட்டிருந்தனர். சோழர் காலத்தில் தோன்றிய

சைவ வைணவ நூல்கள் யாவும் வடமொழிக்கலப்பு உடையவை. அம்மடங்கள் சமயத்தை வளர்த்த அளவிற்கு தமிழ் மொழியை வளர்க்கவில்லை என வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

குறிப்புகள்

பிராமணத்தவசிகளுக்கும் அநாதி கிரீசர்களுக்கும் மருத்துவமும் இலக்கணமும் கற்று வந்த வேதியருக்கும் மடம் ஒன்று விக்கிரம சோழன் காலத்தில் நிறுவப்பட்டதாக விக்கிரமசோழன் காலத்துக் கல்வெட்டு ஒன்று (கி.பி.1120) எடுத்துரைத்துள்ளது. செங்கற்பட்டுத் திருமுக்கூடலிலும் கோயில் வருமானத்தில் கல்லூரியும் மருந்தகமும் அமைக்கப்பட்டு இருந்ததாகவும் திருவாவடுதுறையில் மருத்துவக் கல்லூரியும் திருவொற்றியூர் இலக்கணகல்லூரியும் இருந்துள்ளன எனினும் தமிழ் வளர்க்கும் கல்வி நிலையங்கள் இல்லை என்பது வரலாற்று உண்மை. இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் பதினாறு கண்பார்வையற்றோர் தேவாரம் பாடிவந்துள்ளனர். திருவாமாத்தூர் கோவில் கல்வெட்டு அவர்களுக்கு ‘கண்காட்டுவார்’ அமர்த்தப் பட்டிருந்தனர் எனக் கூறுகின்றது. கண்பார்வையற்றோருக்கு தேவார இசைப்பள்ளி இருந்திருக்கலாம் என்றும் அவர்களுக்கு வழிகாட்டுவதற்கு ‘கண்காட்டுவார்’ இருந்திருக்கலாம் என்று கல்வெட்டுச்செய்தி குறிப்பிடுகின்றது.

## 9.9 பெண்டிர் நிலை

சோழர்காலத்தில் பெண்கள் சொத்துரிமை பெற்றிருந்தனர். எவ்விதமான கட்டுப்பாடுகளுமின்றி சுதந்திரமாக வாழ்ந்து வந்துள்ளனர். மன்னர்கள் பல மனைவிகளைப் பெற்றிருந்தாலும் குடிமக்கள் அவ்வாறு இல்லை. சோழர் காலத்திலும் பெண்கள் உடன்கட்டை ஏறும் வழக்கம் இல்லை. ஆனால் அரசியர் சிலர் தம் கணவனுடன் உடன்கட்டை ஏறினர் எனக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. உடன்கட்டை ஏறிய பெண்ணொருத்தி கணவன் இறந்துவிட்டால் சக்களத்திகளுக்குப் பணிவிடை செய்ய வேண்டிய அடிமையையாக வாழும் நிலை இருக்கும் என்பதால் சுற்றியிருப்பவர்கள் தன்னைக் கயிற்றால் பிணித்து நெருப்பில் எறிந்து விடவேண்டுமென்றும் கூறியதாக கல்வெட்டுச் சான்று குறிப்பிடுகின்றது.

அரசனின் அலுவல்களில் பட்டத்தரசிகளும் பங்கேற்றுள்ளனர். அரசியர் தனிப்பட்ட முறையில் கோவில்கள் எழுப்புவதும்

கோவில்களில் திருப்பணிசெய்வதும் போன்ற பொதுக்காரியங்களில் ஈடுபட்டு உள்ளனர். கண்டராதித்தன் மனைவியும் உத்தமசோழனின் அன்னையுமான செம்பியன் மாதேவியார் பல கோவில்களை எழுப்பி உள்ளார். திருநல்லத்தில் தம் கணவர் கண்டராதித்தருக்காக அவர் பெயரால் கற்றளியை உருவாக்கி, அவர் சிவபெருமானின் திருவடியைத் தொழுவது போல ஒரு படிமம் செய்து அக்கோவிலில் வைத்துள்ளார். அவர் உருவாக்கிய கோவில்களுக்கு திருமேனிகள், அணிகலன்கள், கலங்கள் ஆகியவற்றை செய்து கொடுத்துள்ளார். பல கோவில்களுக்கு விளக்குகள் வைத்துள்ளார். இவர் செய்த கோவில் திருப்பணியில் கோவிலைப் புதுப்பிக்கும் முன்பு அக்கோவிலில் காணப்பட்ட கல்வெட்டுச் சாசனங்கள் அனைத்திற்கும் புதிய படி ஒன்று எடுத்து அமைப்பதை வழக்கமாக கொண்டுள்ளார். இருபத்தாறு சாசனங்களுக்கு படி எடுத்துள்ளார். அவர் படி எடுத்த கல்வெட்டுகளில் 'ஸ்வஸ்திஸ்ரீ' என்னும் சொல் சேர்க்கப்பட்டிருத்தல் சான்றாகின்றது. முதலாம் இராசராச சோழனின் உடன்பிறந்தவளான குந்தவைபிராட்டியார் சிவன் கோவிலும் திருமாலும் கோவிலும் சமணக் கோவிலும் எழுப்பி உள்ளார். தேவரடியார்களும் அரண்மனை அடியில் தொழில் புரிந்த பெண்களும் அறக்கட்டளைகள் நிறுவி பணியாற்றி இருந்துள்ளனர். சோழர்கள் காலத்தில் இசையிலும் கூத்திலும் சிறந்து விளங்கிய தேவரடியார்கள் கோயில் பணிகளில் ஈடுபட்டிருந்ததாக கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. தேவரடியார்கள் அரசர்களின் ஆணையின் பேரில் கோவில்களுக்குத் திருப்பணியும் கலைப்பணியும் செய்பவர்களாக வாழ்ந்துள்ளனர். இவர்களுக்கு தலைக்கோலிகள், தனிச்சேரிப்பெண்டுகள், பதியிலார், கோயிற்பினாக்கள் எனப் பெயர்கள் வழங்கி வந்துள்ளன. திரு அலகிடுவதும், திருமெழுகிடுவதும், மலர் தொடுத்தலும் தேவரடியார்கள் மேற்கொண்டிருந்த திருத்தொண்டுகளில் சில. தேவாரம், திருவாசம் ஓதுவதும் நடனம் ஆடுவதும் அப்பெண்கள் சிறப்பாக ஈடுபட்டிருந்த பணிகளாகும். அவர்களுக்கு அரசு மானியங்கள் வழங்கப்பட்டு இருந்துள்ளன. தேவரடியார்கள் சிலர் திருமணம் செய்து கொண்டு இல்லறம் நடத்திவந்தனர் எனச் சில கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. தஞ்சைப் பெருவுடையார் கோவில் திருத்தொண்டுகளாக இராசராசன் நானூறு தேவரடியார்களை அமர்த்தினான் என்றும் அவர் அனைவருக்கும் தனித்தனி வீதிகள் வகுத்து அவற்றில் வரிசை

வரிசையாக வீடுகள் அமைத்துக் கொடுத்தான் என்றும் தஞ்சாவூர் கோவில் கல்வெட்டு குறிப்பிடுகின்றது என வரலாற்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## 9.10 இசை வளர்ச்சி

சங்க காலத்தில் பாணரும் விறலியரும் வளர்ந்து வந்த இசையினைச் சோழர்கள் காலத்தில் தேவரடியார்கள் தொடர்ந்து வளர்த்து வந்துள்ளனர். மக்கள் நெஞ்சை அள்ளும் இசையிலும் கூத்திலும் வல்லுநர்களாக விளங்கிய தேவரடியார்கள் மக்கள் சமூகத்தில் பெருமதிப்பு பெற்றிருந்தனர். இசைக்கச்சேரிகள் நிகழ விதிமுறைகள் இயற்றப்பட்டிருந்தன. சிலப்பதிகாரமும் மணிமேகலையும் கூறப்பெற்றிருந்த யாழ் வகைகளும் மண்வகைகளும் தொடர்ந்து சோழர்கள் காலத்தில் பயிற்சியில் இருந்தன. இடையர் ஏறுதழுவும் பொழுது 'ஏறங்கோன்' என்ற தனிப்பறை ஒன்றை முழக்கி உள்ளனர். வீணையின் உறைக்கு எழினி என்று பெயர். வீணை செய்வதற்குத் தனிப்பட்ட மரத்தினைத் தேர்ந்தெடுத்து செய்துள்ளனர். மட்கியமரம், வாளால் வெட்டுண்டமரம், இடி விழுந்த மரம் ஆகியவற்றால் வீணைகள் செய்வது இல்லை. வீணை வாசிக்கத் தொடங்கும் முன்பு அதற்கு மலர்மாலை சூட்டுவார்கள். கூத்தாடி முதிர்ந்த பெண்களுக்கும், பின்பாட்டுப் பாடிய பெண்களுக்கும் நாட்டியத்துக்குப் பதம் பாடிய பெண்களுக்கும் 'தோரியமடந்தையர்' என்று பெயர். இசைப்புலவர்கள் பாடும் பொழுது தே, தா என்று ஆளத்தி செய்யும் வழக்கம் இருந்துள்ளது. தேவாரப்பாடல்களை இசையுடன் பாடுவதற்கு ஒதுவார்கள் இருந்துள்ளனர். சோழர் காலத்து இசைவளர்ச்சி இசைக்கருவி இசைப்போர் மற்றும் கூத்திசை மூலமாகவும் வளர்ச்சி பெற்று சிறந்துள்ளதை வரலாற்றுச் சான்றுகள் வழி அறியமுடிகின்றது.

## 9.11 தொகுப்புரை

சோழர்களின் ஆட்சிமுறையில் நிறைகளும் குறைகளும் இருந்துள்ளன.தஞ்சைப்பெரிய கோவில் கங்கை கொண்ட சோழபுரம் போன்ற கோவில்களை நிர்மாணித்து கட்டிடக்கலையில் சிறந்து விளங்கினர் . கடல் கடந்து போர்களையும் வாணிகத்தையும் செய்துள்ளனர் .ஈழப்போரும் கங்கை கொண்டமைக்கான போரும்

சோழர்களின் குறிப்பிடத்தக்க போர்களாகும் .தொழில் வரியும் சுங்கவரிகளும் முதன்மையாக இருந்துள்ளன . ஊராட்சி முறையில் கிராமசேவை தேவதானஅவை ஊரவை நகரவை போன்றன குறித்தும் அதில் நிகழ்ந்த குடவோலைமுறை தேர்தலும் குறிப்பிடத்தக்கன .சைவ வைணவ இலக்கிய நூல்களின் தொகுப்பும் உரையாசிரியர்களின் பணிகளும் தமிழின் வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கின .கல்வெட்டுகளில் நிறைய பிழைகள் இருப்பினும் சோழர் காலத்திலும் மன்னராட்சியையும் பிற செய்திகளையும் அறிய கல்வெட்டுகள் முக்கியப் பங்காற்றியுள்ளன . சோழ அரசிகள் பலர் கோவில்களை நிர்மாணித்து அறப்பணிகள் பலவற்றை செய்துள்ளதையும் தேவதாசிகளின் வாழ்வியல் நிலையின் சில கூறுகளையும் எடுத்துரைத்து உள்ளது .

## 9.12 மாதிரி வினாக்கள்

1.புரவுவரித் திணைக்களம் என்றால் என்ன ?

புரவுவரித்திணைக்களம் என்பது விளைநிலங்களுக்கு வரி விதித்து அப்பணிகளைச் செய்யும் பல்வேறு துறைத்தலைவர்களைக் கொண்ட நிலவரிக்கழகம் .

2.சோழர் காலத்தில் நிலவிய தேர்தல் முறைக்கு என்ன பெயர் ?

குடவோலை முறை

3.இராசராசேச்சுரம் என அழைக்கப்பெற்ற கோவில் எது ?

தஞ்சைப் பெருவுடையார் கோவில்

4.சோழர் காலத்தில் தமிழ்மொழியினை எவை வளர்த்துள்ளன ?

மடங்கள்

5.கண்பார்வையற்றோருக்கு வழி காட்டுவோர் பெயர் யாது ?

கண்காட்டுவார்



## 9.13 பயிற்சி வினா

1.சோழர்கால ஊரவை செயல்பட்ட விதத்தினை விளக்குக

2.சோழா் காலக்கட்டிடக்கலையின் தனித்துவங்கள் யாவை ?

3.சோழா்காலக் கல்விநிலையினை விவாி

குறிப்புகள்

## கூறு 10

## இரண்டாம் பாண்டியப் பேரரசு –
## பாண்டியர் சோழர் தொடர்பு –
## பாண்டியர் வீழ்ச்சியில் இசுலாமியர் எழுச்சி

**10.பாடஅமைப்பு**

**10.1 அறிமுகம்**

**10.2 நோக்கம்**

**10.3 இரண்டாம் பாண்டியப்பேரரசு**

**10.3.1 முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன்**

**10.3.2 முதல் சடையவர்மன் சுந்தரபாண்டியன்**

**10.3.3 சடையவர்மன் வீரபாண்டியன்**

**10.3.4 மாறவர்மன் குலசேகரபாண்டியன்**

**10.4 பாண்டியர் சோழர் தொடர்பு**

**10.5 பாண்டியர் சோழர் வீழ்ச்சியில் இஸ்லாமியர் எழுச்சி**

**10.6 தொகுப்புரை**

**10.7 மாதிரி வினா**

**10.8 மேலும் அறிக**



### 10.1 அறிமுகம்

இரண்டாம் பாண்டிய பேரரசு 14ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மீண்டும் எழுச்சி பெற்றது . முதல் மாறவர்மன் சுந்தர பாண்டியன் முதல் சடையவர்மன் சுந்தர பாண்டியன் சடையவர்மன் வீரபாண்டியன் மாறவர்மன் குலசேகர பாண்டியன் போன்ற மன்னர்களின் பிற்கால ஆட்சிச்சிறப்பினை அறியமுடியும் .பாண்டியர் சோழர் தொடர்பினால் சோழர்களை வீழ்த்தி பாண்டியர்கள் எழுச்சி பெற்ற நிலையையும் பாண்டியர்கள் தங்கள் அரசுரிமைப் போரினால் இஸ்லாமியர்கள் பாண்டியர்களை வீழ்த்தியதையும் அறியலாம் .

## 10.2 நோக்கம்

1. **பாண்டியர்களின் எழுச்சி வரலாறு அறிதல்**
2. **பாண்டியர் ஆட்சியின் குழப்பநிலைக்கான காரணங்களை ஆராய்தல்**
3. **ஆட்சி மாற்றங்களுக்கான நிர்வாகச்சீர்கேடுகளைத் தெளிதல்**

## 10.3 இரண்டாம் பாண்டியப் பேரரசு

கடைச்சங்க காலத்தில் பேரரசு நடத்திய பாண்டியர் பதினான்காம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மதுரை மாநகரை இஸ்லாமியர் கைப்பற்றிக் கொண்ட காலம் முடிய சரிவற்ற பேரரசாகவே வாழ்ந்தனர் எனக் குறிப்பிடமுடியாது. பாண்டியப் பேரரசு முற்றிலுமாக வீழ்ச்சியை அடைந்து மறைந்தது கி.பி.பதினான்காம் நூற்றாண்டிலே தான் .

கடைச்சங்க காலத்தில் நிகழ்ந்த ஆழிப்பேரலை காரணமாக பரந்துப்பட்ட நிலப்பகுதியை ஆண்ட பாண்டியர்களின் நிலப்பகுதி குறைந்தது. தமிழகம் முழுவதையும் ஒரு குடையின் கீழ் ஆண்ட தலையாலங்கானத்துச்செருவென்ற நெடுஞ்செழியனுக்குப் பிறகு களப்பிரர் ஆதிக்கத்தால் வீழ்ச்சியைத் தழுவியது. களப்பிரர்களை ஏறத்தாழ நானூறு ஆண்டுகள் கழித்து 59ல் கடுங்கோன் என்பவன் அழித்து, பாண்டியப் பேரரசிற்குப் புத்துயிர் அளித்தான் எனினும் பல்லவர் ஆட்சியால் கி.பி.882ல் நடைபெற்ற திருப்புறம்பியம் வரை

பாண்டிய மன்னாளை மட்டுமல்லாது சோழ மன்னர்களும் யாவரும் பல்லவருக்கு அடங்கிய நிலையில் சோழ மன்னர்களின் எழுச்சியால் பல்லவர்கள் வீழ்ச்சியால் பாண்டிய மன்னர்கள் மீண்டும் தலையெடுத்தனர். பாண்டியப் பேரரசின் அழிவிற்கு வித்திட்டவர்கள் பாண்டியர்களின் வழிவந்தவர்களே. அவர்களிடையே ஒற்றுமையின்மை நிலவியதால் சோழர்கள் மதுரையைக் கைப்பற்றி ஆண்டனர். பராக்கிரம பாண்டியனும் அவன் மகன் வீரபாண்டியனும் ஒரு புறமாக, மற்றொரு புறமாக அரசுரிமை காரணமாக பகை கொண்டு ஒருவரையொருவர் அழிக்க முனைந்தனர். அதற்குத் துணையாக சோழர்களையும் சிங்களவர்களையும் மாறிமாறி அணுகி, தாம் அழிந்ததோடு பாண்டியப் பேரரசினையும் அழித்தனர்.

### 10.3.1 முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி.1219 – 1251)

கி.பி.1219 முதல் 1251 வரை பாண்டிய நாட்டை ஆட்சி புரிந்த மன்னன் முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன் இம்மன்னனுடைய மெய்க்கீர்த்தி,'பூ மருவிய திருமடந்தையும் புவிமடந்தையும் புயத்து இருப்ப' எனத் தொடங்குவதாகும். இம்மன்னனின் தனிச்சிறப்பினை விளக்குவதாகும். சோழர்களின் வீழ்ச்சிக் காரணமாக விளங்கியதால் 'சோனாடுகொண்டருளியசுந்தரபாண்டியன்'எனச்சிறப்பிக்கப்படுகின்றான். இம்மன்னனின்மூன்றாமாண்டுகல்வெட்டு'சேணோடுகொண்டருளியசுந்தரபாண்டியன்' எனச் சிறப்பிக்கப்படுகின்றான். இம்மன்னனின் மூன்றாமாண்டு கல்வெட்டு 'சோனாடுகொண்டருளியசுந்தரபாண்டியத்தேவர்' எனக் குறிப்பிடுகின்றது.

மூன்றாம் குலோத்துங்க சோழன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து நிகழ்த்திய அழிவு வேலைகளுக்கும் அம்மன்னனின் அண்ணன் சடையவர்மன் குலசேகர பாண்டியனை இழிவுபடுத்திய செயலுக்கும் பழிவாங்கும் நோக்கம் கொண்டு முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன் கி.பி.1219இல் சோழநாட்டின் மீது படையெடுத்துத் தாக்கினான். அப்பொழுது சோழநாட்டில் ஆட்சி செலுத்திய முதுமையால் தளர்ச்சியுற்றிருந்த மூன்றாம்குலோத்துங்கனும், இளவரசனாக விளங்கிய, மூன்றாம் இராசராசனும் நாட்டை விட்டுத்துரத்தப்பட்டனர். சோழரின் பழைய தலைநகரங்களாகிய



குறிப்புகள்

குறிப்புகள்

உறையூரும் தஞ்சையும் கைப்பற்றப்பட்டன. அவை கொள்ளையிடப்பட்டுப் பின்னர் கைப்பற்றப்பட்டன. பிறகு எரியூட்டப்பட்டன. உருத்திரங்கண்ணனாருக்குக் கரிகாலன் பரிசளித்த பதினாறுகால் பண்டபம் தவிர அனைத்து இடங்களும் இடித்து அழிக்கப்பட்டன. எனத் திருவெள்ளறைக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

சுந்தரபாண்டியனின் மேலாதிக்கத்தை ஏற்றுக்கொள்ள மூன்றாம் இராசராசன் ஒப்புதல் தெரிவித்தாலும் ஹொய்சளரின் துணை கிடைத்த பொழுது அவன் பாண்டியருக்குத் திறை செலுத்த மறுத்தான். இதனால் சுந்தரபாண்டியன் சோழநாட்டின் மீது கி.பி.1231 இல் மீண்டும் போர் தொடுக்க நேர்ந்தது. இப்போரில் மூன்றாம் இராசராசன் கடும் தோல்வியையும் பெரும்செல்வஇழப்பையும் எதிர்கொண்டான். சோழர் மீது பெற்ற முதல் வெற்றியின் பொழுது ‘வீராபி’கம்’ செய்து கொண்ட சுந்தரபாண்டியன் இரண்டாவது வெற்றியின் பொழுது முடிகொண்ட சோழபுரத்தில் ‘விஜயாபிஷேகம்’ செய்து கொண்டான். முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியனுக்குப் பிறகு முதல் சடையவர்மன் சுந்தர பாண்டியன் கி.பி1251இல் பட்டத்துக்கு வந்தான்.

### 10.3.2 முதல் சடையவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி.1251-1271)

முதல் சடையவர்மன் சுந்தரபாண்டியன் வடக்கே காஞ்சிபுரத்தைத் தாண்டி, திருபுட்குழி வரையில் எல்லை அமைத்து ஆட்சி புரிந்த மன்னன். சோழப்பேரரசை இல்லையெனும் படி செய்தான். இவன் காலத்தில் தான் மூன்றாம்இராசேந்திரன் என்னும் சோழ மன்னன் இறுதியாக வாழ்ந்ததாக இவன் காலத்து கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன இப்பாண்டியமன்னன் காலத்தில் கல்வெட்டுகள், நாட்டின் பல பாகங்களிலும் பரவி இருக்கின்றன. இவன் காலத்து வடமொழிக்கல்வெட்டுகளும் இருந்துள்ளன. இம்மன்னனை சேர மன்னர்களோடும் ெ ாய்சளர்களோடும் போர் புரிந்து வென்ற செய்தியானது கல்வெட்டுகள் குறித்துள்ளன. சேர மன்னன் உதயமார்த்தாண்டவர்மன் கொலை செய்யப்பட்டான். சிங்களவர்கள் அஞ்சித் திரை செலுத்தி நின்றனர். ஹொய்சளர்கள் ‘மை சூர்ப்பீடபூமிக்குள் அடைபட்டனர். கி.பி.1262இல் ஹொய்சளர்களுடன் நடத்திய இரண்டாவது போரில் அந்நாட்டு மன்னன் சோமேசுவரனும்

கி.பி.1262க்கும் 1264க்கும் இடையில் சிங்களருடன் நடத்திய இரண்டாவது போரில் அந்நாட்டு இளவரசனும் கொல்லப்பட்டனர். இப்போர்களில் பெற்ற வெற்றிக்குப் பின் சடையவர்மன் சுந்தரபாண்டியன். ‘எம்மண்டலமும் கொண்டருளிய சுந்தரபாண்டியன்’ எனவும் ‘எல்லாம் தலையான பெருமாள்’ எனவும் புனைபெயர்களைக் சூடிக் கொண்டான். சோழ மன்னனைச் சிறை பிடித்து வைத்திருந்த பல்லவன் கோப்பெருஞ்சிங்கனை இம்மன்னன் வெற்றி கொண்டு, நடுநாட்டிலும் தொண்டை நாட்டிலும் தொல்லை உண்டாகாதவாறு பாதுகாத்தான். வாணர் தம் மகதநாடு வரை முதல்உடையவர்மன் சுந்தரபாண்டியன் படை சென்று வெற்றியைப் பெற்றதாகக் கூறப்படுகின்றது. இறுதியாக விசயகண்ட கோபாலனைக் கொன்று காஞ்சியைக் கைப்பற்றினான். பின் காகதீய மன்னன் கணபதியை வென்று நெல்லூரில் விஜயாபிஷேகம் செய்து கொண்டான். இவன் போர்களே தமிழ்நாட்டில் பெரும் மாற்றத்தை உண்டாக்கின. வடநாட்டு மன்னர்கள் இம்மன்னனைக் கண்டு நடுநடுங்கி நின்றனர். சுந்தரபாண்டியன் ‘மகாராசாதிராச ஸ்ரீபரமேச்சுரன்’ என்றும் புகழப்பெற்றான்.

முதல் சடையவர்மன் சுந்தரபாண்டியன் சைவ வைணவ வேறுபாடற்று இரண்டையும் சரிசமமாகப் பார்க்கும் சமயப் பொறறை உடையவன். தில்லையிலிருந்து இறைவனைத் தரிசித்ததோடு, துலாபாரம் புக்குப் பிராமணர்களுக்குப் பொன்னைத் தானம் செய்தான். தில்லை நடராசர் கோவிலுக்கும் திருவரங்கப் பெருமாள் கோவிலுக்கும் பொன் வேய்ந்த சிறப்பினை உடையவன். இவன் தமிழ், வடமொழி ஆகிய இரண்டினையும் போற்றிப் பாதுகாத்தான் என்பது கல்வெட்டுகள் வழி அறியலாகும் செய்திகளாகும்.

### 10.3.3 சடையவர்மன் வீரபாண்டியன் (கி.பி.1243 – 1268)

முதல் சடையவர்மன் சுந்தரபாண்டியனை அடுத்து அம்மன்னன் அவன் காலத்திலேயே தன் மகன் சடையவர்மன் வீரபாண்டியனைத் தொண்டை நாட்டுப் பிரதிநிதியாக்கி ஆட்சி புரிந்தான். இவன் ஆட்சிக்குப் பிறகு சடையவர்மன் வீரபாண்டியனே பட்டத்துக்கு வந்தான். தந்தையின் காலத்தில் கி.பி.1267ல் வீராபி‘கம் செய்து கொண்டான். இவன் குறித்த கல்வெட்டுகள் கோவை மாவட்டத்தில்

கிடைக்கின்றமையால் இம்மன்னன் அந்நாட்டினை வெற்றி கொண்டதை அறியமுடிகின்றது. இக்கல்வெட்டுகள் மக்களுடைய அக்கால வாழ்க்கை முறையை எடுத்துரைத்துள்ளன. நிலங்களைக்குத்தகைக்கு விடும் வழக்கமும், கடமை வரி வசூலிக்கும் வழக்கமும், மக்கள் சபை கூடிப் பொருளாராயும் நிலையும், கோவில்களுக்கு நன்கொடை வழங்கும் முறையும், கோவில் பணி போன்ற பொதுப்பணிக்கு நன்கொடை வசூலிக்கும் விதமும் வியாபாரிகள் கூட்டுச்சபை அமைக்கும் முறையும் அவை பற்றி பிறவும் கல்வெட்டுகளால் அறியமுடிகின்றது.

### 10.3.4 மாறவர்மன் குலசேகரபாண்டியன் (கி.பி.1268-1310)

மாறவர்மன் குலசேகர பாண்டியன் 1268இல் அரசு பதவி ஏற்றான். இம்மன்னன் பல மண்டலங்களைக் கைக்கொண்ட மன்னனாக ‘எம் மண்டலமும் கொண்டருளிய கோனேரின்மை கொண்டான், கொல்லங் கொண்டான் போன்ற விருதுகளைப் பெற்றான். கேரளம், கொங்குநாடு, சோழமண்டலம், தொண்டை மண்டலம், சிங்களம் ஆகிய நாடுகளை வென்றதாக அவன் காலத்தில் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. அவன் மூன்றாம் இராசேந்திரன், போசள இராமநாதன் போன்ற மன்னர்களையும் வெற்றி கொண்டு பாண்டியநாட்டுடன் இணைத்துக்கொண்டான். சிங்களத்தில் அரசியல் கலகம் ஏற்பட்ட பொழுது குலசேகர பாண்டியன் ஆரிய சக்கரவர்த்தி என்னும் படைத்தலைவனைச் சிங்களத்திற்கு அனுப்பி புத்தரின் பல் சின்னம் ஒன்றைக் கைப்பற்றிக்கொண்டு வந்தான். மூன்றாம் பராக்கிரமபாகு என்னும் சிங்கள வேந்தன் மதுரைக்கு வந்து பாண்டியனுக்கு அடிபணிந்து சின்னத்தை மீட்டுக் கொண்டு சென்றான். இம்மன்னன் ஆட்சிக்காலத்தில் இத்தாலி நாட்டிலிருந்து மார்கோபோலோ கற்றுப்பயணம் மேற்கொண்டு பாண்டிய நாட்டில் ஒருவருக்கு மேற்பட்ட மன்னர்கள் ஆட்சி புரிந்தனர் என்று குறிப்பிட்டுள்ளார். இம்மன்னன் காலத்தில் மாறவர்மன் விக்கிர பாண்டியனும், சடையவர்மன் சுந்தரபாண்டியன் இருவரும் சடையவர்மன் வீரபாண்டியனும் இருந்ததாகக் கூறுவர். இசுலாமிய வரலாற்று யாத்திரிகன் ‘வாசப்’ என்பவரும் சுந்தரபாண்டியனுடைய மூன்று சகோதரர்கள் உரிமை பெற்று அரசாண்டார்கள் என்னும் குறிப்பினைத் தந்துள்ளார். மாறவர்மன் குலசேகரபாண்டியனே யாவருக்கும் மேலான சிறந்த

பாண்டிய மன்னனாக விளங்கினான். மற்றவர்கள் அவனால் நியமிக்கப்பட்ட பிரதிநிகளாகவோ அன்றிச் சிற்றரசர்கள் போன்றோ வாழ்ந்திருந்தார்கள் என்பதே பொருத்தமானது. ஐந்து பிரிவாகப் பிரிக்கப்பெற்ற பாண்டியர் மீண்டும் ஒன்று சேராத காரணத்தால் அவர்களுக்குள் போரும், பிற நாட்டினரின் உதவியும் பாண்டியரின் வீழ்ச்சிக்குக் காரணமாகியது. பதினான்காம் நூற்றாண்டு முழுவதும் தமிழ்நாட்டில் என்ன நிகழ்ந்தது என்று புரிந்து கொள்ள முடியாத அளவிற்கு நாட்டில் அயலவர் படையெடுப்புகளும் குழப்பங்களும் நிகழ்ந்து கொண்டே இருந்துள்ளன. அலாவுதீன் கில்ஜியின் படைத்தலைவன் மாலிக்காபூரும் இசுலாமியர்கள் ஆதிக்கமும் பாண்டிய நாட்டை நிலை குலைய செய்தன.

பாண்டியர்களின் பேரரசில் இசுலாமியர் ஆதிக்கத்தினால் சீர்குலைவு ஏற்பட்ட நிலையில் இறுதியாக ஆண்ட பாண்டிய மன்னர்களாக சடையவர்மன் பராக்கிரம பாண்டியன், (கி.பி.1422 வரை) அழகன் பராக்கிரமன் (கி.பி.1473–1506 வரை), சடையவர்மன் சீவல்லபன் (கி.பி.1534–1542வரை) சடையவர்மன் பாரக்கிரம குலசேகரன்( கி.பி.1543- 1552வரை) நெல்வேலிமாறன்(கி.பி.1552-1564வரை), சடையவர்மன் அதிவீரராமன் (கி.பி.1564-1604வரை) வரதுங்கராமன் (கி.பி.1588வரை), வரகுணராம் குலசேகரன் (கி.பி.1613) இரண்டாம் வரகுணராம் குலசேகரன் (கி.பி.1748) ஆட்சி புரிந்ததாகவும் ஆனால் அவர்கள் அனைவரும் குறுநிலமன்னர்களாக (ஜமீந்தார்) எங்கோ மூலைமுடுக்குகளில் ஆட்சி புரிந்ததாகவும் வரலாற்றுக்குறிப்புகள் எடுத்துரைக்கின்றன. தமிழ் அரசர் பரம்பரையானது தம் பெயரினையும் குறிப்பிடமுடியாத அளவிற்கு விசயநகரமன்னர்களும், மராட்டியர்களும், முஸ்லீம்களும், மேலைநாட்டினரும் படையெடுப்புகள் நடத்தித் தமிழகத்தைத் தங்கள் கட்டுக்குள் கொணர்ந்து விட்டனர். பாண்டியர்களின் ஆட்சிக்காலம் வரலாற்றுப் பக்கங்களில் முடிவுக்கு வந்த காலமாக ஆயிற்று.

## 10.4 பாண்டியர் சோழர் தொடர்பு

தமிழகத்தை ஆட்சிபுரிந்த மாமன்னர்களாகிய சேர, சோழ, பாண்டியர்களின் ஆட்சிக்காலம் 18 ஆம் நூற்றாண்டு வரை இருந்தது. இடையிடையே சில மாற்று இனத்தாரின் தாக்குதலும் படையெடுப்பும்

இருப்பினும் தங்கள் அரசஉரிமையை மீட்டு தமிழகத்தை ஆண்டனர். எனினும் சேரருக்கும் சோழருக்கும் பாண்டியருக்குமிடையே போர்களும் நிகழ்ந்து ஒருவரையொருவர் வென்றுள்ளனர்.

சோழர் பாண்டியர்களுக்கிடையே நிலவிய பகையுணர்ச்சி சங்க காலத்தோடு நிற்கவில்லை. அது தொடர் நிகழ்வாகவே மாறியது. கி.பி.880 இல் திரும்புறம்பயத்தில் நடைபெற்ற போர் பல்லவருக்கும் பாண்டியருக்குமிடையேயான போரே ஆயினும் அதில் பல்லவனுக்குத் துணை நின்ற எதிரியாகநின்ற பாண்டியன் வரகுணனும் போரிட்டுப் போரில் பாண்டியன் தோல்வியுற்றான். ஆதித்தனுக்குப் பிறகு சோழமன்னன் பராந்தகன் அரியணை ஏறியதும் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்துத் தாக்கினான். மூன்றாம் இராசசிம்மனை வென்று ‘மதுரை கொண்ட கோப்பரகேசர்’ என்னும் புகழினைப் பெற்றான். அப்பழியினைத் தீர்க்க மூன்றாம் இராசசிம்மன் ஐந்தாம் **காசிபன்** துணைகொண்டு சோழமன்னனைத் தாக்க, பராந்தகசோழன் அம்மன்னனைத் தோற்கடித்து இலங்கைக்கே துரத்தினான்.

பாண்டியன் இராசசிம்மன் தக்க சமயம் பார்த்து, வடக்கிலிருந்து இராட்டிரக் கூடர்கள் பராந்தக சோழனைத் தாக்கிய பொழுது தாக்குதல் நடத்தி இழந்த பாண்டிய நாட்டை மீண்டும் தனக்குரியதாக ஆக்கிக் கொண்டான்.

இரண்டாம் பராந்தகன் ஆட்சியில் சோழர் பாண்டியர் போர் மீண்டும் தலையெடுத்து அப்பொழுது பாண்டிய மன்னனாக இருந்த வீரபாண்டியனை மதுரையைச் சோழர் உடைமையாக்கிக் கொண்டு ‘மதுராந்தகசுந்தரசோழன்’ என வெற்றிப் பெயர் சூடிக் கொண்டான். இராசசிம்மனைப் போலவே வீரபாண்டியனும் இலங்கை அரசன் துணையை நாடினான். அப்பொழுது இலங்கையை ஆட்சிபுரிந்த நான்காம் மகிந்தனை நாடினான். அப்போரில் சுந்தரசோழன் மகன் ஆதித்த கரிகாலன் வீரபாண்டியனைக் கொன்று ஷவீரபாண்டியன் தலை கொண்ட கோப்பரகேசர்’ எனப் புகழ் பெற்றான்.

முதல் இராசராசசோழன் காலத்தில் சோழ நாட்டு அரசியல் தூதுவனைச் சிறையிட்டு இழிவுபடுத்திய சேர நாட்டினர் மீது படையெடுத்துச் சென்ற சோழர் படையைத் தடுத்து நிறுத்திய பாண்டிய அமரபுயங்கன், சோழர் பெரும் படையால் வென்று

துரத்தப்பட்டான். இந்த வெற்றிக்கு அறிகுறியாக இராசராசன் ‘பாண்டிய குலாசனி’ என்னும் பட்டப்பெயர் கொண்டு. பாண்டிய நாட்டிற்கு ராசராச மண்டலம் என்னும் பெயரைச் சூட்டினான்.

இராசராசனுக்குப் பிறகு முதலாம் இராசேந்திரன் தன் மகன் சுந்தர சோழனுக்கு மதுரை மாநகரில் அரண்மனை அமைத்து ‘சடையவர்மன் கந்தரசோழபாண்டியன்’ என்னும் பட்டத்தைக் சூட்டி பாண்டிய நாட்டின் ஆட்சிப் பொறுப்பினை அளித்தான். அப்பொழுது பாண்டிய வம்சத்தினர் தங்கள் நாட்டை மீட்கும் முயற்சியில் பாண்டிய மன்னர்களாகிய மானாபரணன், வீரகேரளன், சுந்தரபாண்டியன் ஆகிய மூவரும் ஒன்று கூடி எதிர்த்தனர். அதனை அறிந்த முதலாம் இராசேந்திர சோழன் தன் மகன் இராசாதிராசனைப் பெரும் படையுடன் அனுப்பி மாணபரணனையும் வீரகேரளனையும் வென்று சுந்தரபாண்டியனைக் காடு புகுந்து மறைந்து வாழும் வண்ணம் செய்து குழப்பத்தை அடக்கி மீண்டான்.

வீரராசேந்திரனும் தன் தந்தை முதலாம் இராசேந்திரனைப் பின்பற்றி தன்மகன் கங்கை கொண்ட சோழன் என்பவனைப் பாண்டிய நாட்டின் அரசப்பிரதிநியாக அமர்ந்தி,‘சோழபாண்டியன்’ என்னும் பெயர் சூட்டினான். பாண்டியன் வழித் தோன்றலாகிய வீரகேசி என்பவன் தன் அரசரிமையைப் பெறுவதற்குச் சோழபாண்டியனை எதிர்த்தான். வீரராசேந்திரன் பாண்டியநாடு புகுந்து எதிர்த்த வீரகேசரியைக் கொன்றான். வீரராசேந்திரனுக்குப் பிறகு சோழர் அரியணையில் அமர்ந்த அவன் மகன் அதிராசேந்திரன் இறந்து போக, சோழராட்சியில் குழப்பம் ஏற்பட்டது. பாண்டிய நாட்டிலும் சோழர் பரம்பரையினர் ஆள்வதற்கு எவருமில்லை என்பதால் பாண்டியர் மரபினருக்குத் தக்க சமய மாயிற்று. “பாண்டியர் வழி வந்த ஐந்து அரசர்கள் பாண்டிய நாட்டை ஐந்து பிரிவாகப் பிரித்துக்கொண்டு ஆண்டனர். இவர்கள் ஆட்சியானது கி.பி.1081 வரை நிலவியது” என்று புலவர் கா. கோவிந்தன் காலந்தோறும் தமிழகம் என்னும் நூலில் குறிப்பிட்டு உள்ளார்.

சோழமன்னன் முதற்குலோத்துங்கன் காலத்தில் பாண்டிய நாட்டினைக் கைப்பற்றினாலும் பாண்டியர்கள் தமக்குச் சிற்றரசர்களாக திறை செலுத்துமாறு சோழமன்னன் உத்தரவிட்டிருந்தான். அதன்

பிறகு இரண்டாம் இராசாதிராசன் காலம் வரை சோழர் பாண்டியர் உறவு குறித்து அறியமுடியவில்லை. இரண்டாம் இராசாதிராசன் ஆட்சிக் காலத்தில் பாண்டிய நாட்டின் பராக்கிம பாண்டியனுக்கும் குலசேகரப் பாண்டியனுக்கும் அரசாளும் உரிமையில் பகை உண்டாயிற்று. பராக்கிரமபாண்டியன் இலங்கை வேந்தன் பராக்கிரமபாகுவின் துணையை நாடினான். இலங்கைப்படைத்துணை வருவதற்குள் குலசேகர பாண்டியன் மதுரையைக் கைப்பற்றி, பராக்கிரமபாண்டியனையும் அவன் சுற்றித்தினரையும் கொன்றுவிட்டான். காலம் கடந்து வந்த இலங்கைப் படை குலசேகரனை வென்று துரத்திவிட்டு, மலை நாட்டில் ஒளிந்து கொண்டிருந்த பராக்கிரமபாண்டியன் மகன் வீரபாண்டியனைப் பாண்டியர் அரியணையில் அமர்த்தியது. அதன் பிறகு குலசேகரபாண்டியன் பெரும் படை திரட்டிவந்து இலங்கைப்படையை வென்று வீரபாண்டியனைத் துரத்திவிட்டுத் தானே அரியணையில் அமர்ந்தான். எனினும் புதுப்படை வரவினால் பலம் பெற்ற இலங்கைப்படை குலசேகரனை வென்று துரத்திவிட்டு வீரபாண்டியனை அரசனாக்கியது. குலசேகரபாண்டியன் இலங்கைப்படையைத் தனித்து வெல்ல முடியாது என்று முடிவு செய்து இராசாதிராசனின் துணையை நாடி வீரபாண்டியனைத் தோற்கடித்து குலசேகரபாண்டியனை மன்னனாக்கினான். இலங்கை மன்னன் தன்னைத் தோற்கடித்த சோழனையும் பாண்டியனையும் வெல்வதற்குத் தக்க சமயத்தை எதிர்பார்த்தான். அப்பொழுது இராசதிராசசோழன் ஈழத்தின் அரசுரிமை காரணமாக பராக்கிரமபாகுவோடு பகை கொண்டு, தம் துணை நாடிய சீவல்லபன் என்னும் மன்னனுக்குத் துணையாக சோழர் படைகளைத் தந்து இலங்கை புகுந்து வெற்றி கொண்டனர். இலங்கை மன்னன் பராக்கிரமபாகு பகையை மறந்து குலசேகரப்பாண்டிய மன்னனோடு மண உறவு ஏற்படுத்தி நட்பு கொண்டனர். குலசேகரப் பாண்டியன் சோழர்கள் செய்த உதவியை மறந்து நன்றி கெட்டவனாக சோழர்படையையும் படைத்தலைவர்களையும் நாட்டை விட்டு விரட்ட, சோழமன்னன் இராசதிராசசோழன் சினம் கொண்டு பாண்டிய நாட்டினைத் தாக்கி, குலசேகரபாண்டியனைத் துரத்திவிட்டு வீரபாண்டியனை அரியணையில் அமர்த்தினான்.

குலசேகரபாண்டியன் மகன் விக்கிரமபாண்டியன் இலங்கைப் படை ஆற்றிலினும் சோழா் படை ஆற்றலே பெரிது என்றுணா்ந்து. சோழா் துணையின்றி பாண்டியா் அரியணை பெறுதல் அரிது என்று மூன்றாம் குலோத்துங்கசோழமன்னனிடம் அடைக்கலமானான். வீரபாண்டியமன்னனும் சோழா்கள் செய்த உதவியை மறந்து இலங்கை மன்னனுக்கு நண்பனாக மூன்றாம் குலோத்துங்கசோழன் பாண்டிய நாடுபுகுந்து வீரபாண்டியன் படையையும் அவனுக்குத் துணையாகிய இலங்கையா் படையையும் அழித்து விக்கிரமபாண்டியனுக்கு பாண்டிய நாட்டு அரசுரிமையை அளித்தான். நாடிழந்த வீரபாண்டியன் சேர மன்னனின் உதவியை நாட இதனை அறிந்த மூன்றாம் குலோத்துங்க சோழன் இருவரையும் தோற்கடித்தான். சேரநாட்டு மன்னன் தம் பிழை உணா்ந்து சோழமன்னனிடம் அடைக்கலமாக மன்னன் யாவற்றையும் மறந்து வீரபாண்டியனுக்கும் பாண்டியநாட்டின் ஒரு பகுதியை உரிமையாக்கினான்.

விக்கிரமபாண்டியன் மறைவிற்குப் பிறகு ஆட்சிக்கு வந்த சடையவா்மன் குலசேகரபாண்டியன், சோழா் செய்த நன்றியை மறந்து மூன்றாம் குலோத்துங்கசோழமன்னனுக்கு எதிராக முறையற்ற செயல்களில் ஈடுபட்டான். அக்குலசேகர பாண்டியன் மீது சோழமன்னன் போா் தொடுத்து அவனை விரட்டியடித்து, அரண்மனையை அழித்து அவ்விடத்திலேயே ‘சோழபாண்டியன்’ என்னும் பட்டமும் சூட்டிக் கொண்டான்.

பாண்டிய நாட்டு மன்னனாக கி.பி.1216ல் மாறவா்மன் முடிசூட்டிய பிறகு சோழா்களைப் பழி வாங்க துடித்துக் கொண்டிருந்தான். மூன்றாம் குலோத்துங்கசோழன் இறந்த பிறகு மூன்றாம் இராசராசன் பட்டத்துக்கு வந்தான். சோழநாட்டின் மீது பாண்டியன் தாக்குதல் நடத்தி தஞ்சையும் உறையூரும் தரைமட்டமாகிட அழித்து பழையாறை நகரிலுள்ள அரண்மனையில் வீராபிடேகம் செய்து கொண்டான். மூன்றாம் இராசராசனுக்கு திறைசெலுத்தும் உரிமையை பாண்டியமன்னன் வழங்கினான். திறை செலுத்த மறுத்த சோழமன்னனைத் தாக்கி விரட்டி அடித்தான். மூன்றாம் இராசராசன் தன் நண்பனாகிய குந்தள நாட்டு அரசனிடம் படைத்துணை பெறுவதற்குச் செல்லும் வழியில் காடவா் குலத்தின் மன்னனாகிய கோப்பெருஞ்சிங்கன் மூன்றாம் இராசராசனைக்

கைப்பற்றிச் சேந்தமங்கலம் சிறையில் அடைத்தான். அதனை அறிந்த போகள நாட்டு மன்னன் வீரநரசிம்மன் படையுடன் வந்து கோப்பெருஞ்சிங்கனை வென்று. இராசராசனைச் சிறை மீட்டு, உரிய சோழ நாட்டினை அளித்து ஆட்சி புரிமாறு செய்தான்.

குறிப்புகள்

மூன்றாம் இராசேந்திரன் ஆட்சியின் இறுதியில் முதலாம் சடையவர்மசுந்தரபாண்டியன் கி.பி.1257இல் சோழநாட்டின் மீது படையெடுத்து சோழமன்னனை வென்று, பாண்டியருக்குத் திறை செலுத்தும் சிற்றரசனாக்கி விட்டான். இவ்வகையில் பாண்டியர் சோழர் தொடர்பு நல்லுறவு என்னும் நற்பாதையில் தொடராது போர் என்னும் வல்லுறவிலேயும் தொடர்ந்து மன்னராட்சியில் நிகழும் குழப்பங்களையும் அரசுரிமைப்போரினையும் எடுத்துரைப்பதாகவே இருந்துள்ளதை வரலாற்று மூலங்கள் குறிப்பிட்டுள்ளன.

## 10.5 பாண்டியர் வீழ்ச்சியில் இசுலாமியர் எழுச்சி

பாண்டியரின் வீழ்ச்சி வரலாற்றில் அழிக்க முடியாத துயர நிகழ்வாகும். பாண்டியநாட்டில் தோன்றிய அரசுரிமைப்போராட்டங்களும் அவற்றில் மாலிக்காபூர் தலையிட்டு செய்த அட்டூழியங்களும் பாண்டியரின் வீழ்ச்சிக்கு முக்கியக் காரணங்களாகின.

“பாண்டியரது வீழ்ச்சி பற்றியும் அதன் காரணங்கள் பற்றியும் அமீர்குசுரு, வாசப், பர்னி, இபின்பதூதா, பெரி'டா ஆகிய சமகால வரலாற்று ஆசிரியர்களும் டாக்டர் ராய், எலியட்,ஸ்மித், எஸ்.கே ஐயங்கார், சதாசிவபண்டாரத்தார், நீலகண்டசாஸ்திரி, கே. கே.பிள்ளை, ரா.சு.காளிதாசு ஆகிய இக்காலவரலாற்றாசிரியர்களும் ஆய்வு நடத்தியுள்ளனர்” என டாக்டர்.ஆ.இராமகிருட்டினன் தம் ‘தமிழகவரலாறும் தமிழர் பண்பாடும்’ என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்

குலசேகரபாண்டியனுக்குச் சுந்தரபாண்டியன், வீரபாண்டியன் என்னும் இரு மகன்கள் இருந்தனர். பட்டத்தரசிக்குப் பிறந்த சுந்தரபாண்டியனுக்கு முடி சூட்டாது முறைதவறிபிறந்த வீரபாண்டியனுக்கு முடி சூட்டினான். இதனால் சினம் கொண்ட சுந்தரபாண்டியன் தன் தந்தை குலசேகரபாண்டியனைக் கொன்று விட்டு கி.பி.1310 இல் அரியணை ஏறினான். இச்செய்தி முகமதிய

ஆசிரியர் வாசப்பின் செய்திக்குறிப்பில் காணப்படுகின்றது. தந்தையைக் கொலை செய்த சுந்தரபாண்டியனைப் பழி வாங்க துணிந்தான். வீரபாண்டியன் இருவருக்கும் நடைபெற்ற போரில் இரு படைகளும் தோற்றன. அவனுக்குரிய படையும் பெரும் பொருளும் சுந்தரபாண்டியன் உடைமையாயின. அந்நிலையில் வீரபாண்டியன் உடன்பிறந்ததவன் மகன் ஒருவன் வீரபாண்டியனுக்குத் துணைவந்தான். அவனால் சிறையிலிருந்து விடுவிக்கப்பெற்ற வீரபாண்டியன், பெரும்படையோடு சென்று சுந்தரபாண்டியனைத் துரத்தினான். அத்தாக்குதல் பொறுக்க இயலாது சுந்தரபாண்டியன் டெல்லி சுல்தான் அலாவுதீனால் அனுப்பப்பட்டு ஹொய்சள நாட்டை வென்று, அதன் தலைநகரில் வீற்றிருந்த மாலிக்காபூரிடம் அடைக்கலம் புகுந்தான். வீரபாண்டியன் மாலிக்காபூருக்கு எதிராக ஹொய்சள அரசனுக்கும் படைத்துணை அனுப்பினான். மாலிக்காபூர் மதுரை மீது போர் தொடுத்துப் புறப்பட்டான். வெறி கொண்டு தாக்கிய முகம்மதியப் படையைத் தடுத்து நிறுத்த எவருமின்றி வீரபாண்டியன், சுந்தரபாண்டியன் இருவரையும் விரட்டி பல இன்னல்களை விளைவித்தான். பொன்னையும் பொருளையும் அளவற்ற அணிகலன்களையும் கொள்ளையிட்டுச்சென்றான். மாலிக்காபூரின் படையெடுப்பு குறித்து.

“இப்படையெடுப்பு தாக்குதல் நோக்கம் கொண்டு அமைந்தது, கஜினிமுகமதுவின் செயல் போன்று கொள்ளையிடும் நோக்கம் கொண்ட இதை வெற்றிகரமான படையெடுப்பு என்று கூற முடியாது. ஏனெனில் நிலையான விளைவுகள் ஏதும் இதனால் ஏற்படவில்லை” என்பர் நீலகண்டசாஸ்திரி என டாக்டர்.ஆ.இராமகிருட்டினன் குறிப்பிட்டுள்ளார்.

அலாவுதீன் அடிமையாகிய மாலிக்காபூர் தலைமையில் தென்னகப் படையெடுப்பு கி.பி.1307 இல் தொடங்கியது. அது தேவகிரியையும் யாதவஅரசையும் கொள்ளையிட்டதோடு கி.பி.1311இல் பாண்டிய நாட்டின் மீது படையெடுப்பு நடத்தி பெரும்பொருளைக் கொள்ளையிட்டுச் சென்றான். அலாவுதீன்கில்ஜி இறந்ததும் மாலிக்காபூர் மக்களைச் சிறையில் அடைத்துவிட்டு அரியணை ஏறினான். அவன் 35 நாட்களில் கொல்லப்பட்டான். அலாவுதீன் மகன் முபாரக்ஷா அடுத்த டெல்லி சுல்தான் ஆனான்.

மாலிக்காபூருக்குப் பின் இசுலாமியர் தமிழ்நாட்டினுள் நுழையத் தொடங்கினர். அல்லாவுதீன் உடான்ஜி, குத்புதீன், சியாகதீன், அடில்'ா பக்ருதீன், முபாரக்ஷா, அல்லாவுதீன், சிக்கந்தர்ஷா போன்ற பலர் தமிழ் நாட்டில் நுழைந்தனர். வீரபாண்டியன் ஆட்சியில் வடக்கிருந்து வந்த ஜலாலுதீன் அசன்'ா மதுரையைக் கைப்பற்றி இசுலாமியர் ஆட்சியைத் தொடங்கிவிட்டான். இவ்வாறு பாண்டிய நாட்டில் இசுலாமியர் ஆட்சி கி.பி.1330 முதல் 1378 வரை சுமார் 50 ஆண்டுகள் நடைபெற்றது எனலாம். அதே சமயத்தில் முஸ்லீம் ஆதிக்கத்திலிருந்த தென்னத்தை விடுவிக்கவும் மக்களின் வாழ்க்கையை பழைய மரபுகளின் படி மீண்டும் நெறிப்படுத்தவும் கி.பி.1329இல் ஓர் இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது. ஹொய்சளமன்னன் மூன்றாம் வல்லாளனும், காபாயநாயக்கனும் ஒன்றிணைந்து இசுலாமியர் ஆதிக்கத்திலிருந்த தமிழகத்தை விடுவிக்கும் முயற்சியில் இறங்கினர். அவர்கள் தொண்டை மண்டலத்தைத் தாக்கி வெற்றி கண்டனர். இத்தாக்குதலில் மதுரையை ஆண்ட சுல்தான் ஜலாலுதீன் அசன்'ா கொல்லப்பட்டான். அவனை அடுத்து அலாவுதீன் உதாஜி மதுரை சுல்தானாகினான். ஆனால் அச்சுல்தானும் வீரவல்லாளானால் தோற்கடிக்கப்பட்டான். மதுரையில் அடுத்த சுல்தானாக 'கியாசுதீன்' பொறுப்பேற்றான். அவன் இந்துக்களின் எழுச்சியை முற்றிலுமாக ஒழிக்கவும் திட்டமிட்டு ஹொய்சளர் மீது திடீர்த்தாக்குதல்கள் நடத்தினான். எதிர்பாராத இத்தாக்குதலுக்கு வீரவல்லாளனால் ஈடு கொடுக்க முடியவில்லை' சிதறி ஓடிய படைகளுடன் புறமுதுகிட்டு ஒடிய வல்லாளன் விரட்டிப் பிடிக்கப் பெற்று, சுல்தானிடம் ஒப்படைக்கப்பெற்றான். வல்லாளனைக் கொன்று உடலை மதில்சுவரில் தொங்கவிடுமாறு கட்டளையிட்டு அதற்கேற்ப நிகழ்ந்ததாக இபின்பதூதா குறிப்பிட்டுள்ளார்.

இசுலாமியர்களின் சார்பாளர் ஆட்சி கி.பி.1378 வரை மதுரையில் நடைபெற்றது. கி.பி.1362இல் விசயநகரப் பேரரசனான குமாரகம்பணன் மதுரையைத் தாக்கி அங்கு ஆட்சி புரிந்த முஸ்லீம் சார்பாளன் முபாரக்'ானவத் தோற்கடித்தான். எனினும் கி.பி.1378 வரை மதுரையில் ஆட்சி புரிந்த இசுலாமியர் ஆட்சியில் இரண்டாம் புக்கன் செய்த தாக்குதல் முடிவிற்கு வந்து. இக்காலத்தில் குமாரகம்பணனின் மனைவி கங்காதேவி எழுதிய 'மதுராவிசயம்' என்னும் நூல்

தமிழகத்தின் நிலையை எடுத்துரைப்பதாகும். பழைய மரபுகளைக் காப்பதற்குரிய புதிய இயக்கங்கள் இசுலாமியர்களின் கலாச்சாரப் பின்னணி மாற்றத்தினை வேரொடு எடுத்தெறிய தோன்றியதாக அந்நூல் விவரித்துள்ளது குறிப்பிடத்தக்க காலச்சான்றாகவும் உள்ளது.

## 10.6 தொகுப்புரை

பாண்டிய மன்னர்கள் முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன் முதல் சடையவர்மன் சுந்தரபாண்டியன் சடையவர்மன் வீரபாண்டியன் மாறவர்மன் குலசேகரபாண்டியன் போன்ற மன்னர்களால் எழுச்சி பெற்ற பாண்டியப்பேரரசு இசுலாமியர்கள் படையெடுப்பினால் வீழ்ச்சி கண்டது .பாண்டியர்களின் ஒற்றுமையின்மையே அவர்களின் வீழ்ச்சிக்குக் காரணமாயிற்று போன்ற செய்திகளையும் அவர்கள் செய்த போர்களையும் அறியமுடிகின்றது .

## 10.7 மாதிரிவினா

1. சோண்டு கொண்டருளிய சுந்தரபாண்டியன் யார் ?

முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன்

2. எவருக்கு கரிகாற்சோழன் பரிசளித்த பதினாறுகால் மண்டபத்தைப் பாண்டியமன்னன் இடிக்காது விட்டான் ?

உருத்திரங்கண்ணனாருக்குப் பரிசளித்த பதினாறுகால் மண்டபம்

3. புத்தரின் பல் சின்னத்தை எம்மன்னன் இலங்கையிலிருந்து கொணர்ந்தான் ?

மாறவர்மன் குலசேகர பாண்டியன்

4. யாருடைய படையெடுப்பினால் பாண்டிய நாடு சீர் குலைந்தது ?

மாலிக்காபூர்

5. குமாரகம்பணனின் மனைவி கங்காதேவி எழுதிய நூல் எது ?

மதுரா விசயம்



## 10.8 மேலும் படித்து அறிக

டாக்டர்.ஆ.இராமகிருட்டினன்

தமிழகவரலாறும் தமிழர் பண்பாடும்

சர்வோதய இலக்கியப்பண்ணை

32-1 மேலவெளிவீதி

மதுரை -625001

பதிப்பு-2012

# பிரிவு – 4

## இந்திய விடுதலை – தமிழகத்தின் பங்கு

**கூறு-11:**



## மார்க்கோ போலோவின் குறிப்புகள் - மதுரை நாயக்கர் வரலாறு - பாளையப்பட்டு ஆட்சி முறை

11. பாட அமைப்பு

11.1 அறிமுகம்

11.2 நோக்கம்

11.3 இந்திய விடுதலையும் தமிழகத்தின்பங்கும்

கூறு-11:

11.1 மார்க்கோபோலோவின் குறிப்புகள்

11.2 மதுரை நாயக்கர் வரலாறு

11.2.1 விஜயநகரப்பேரரசு

11.2.2 மதுரை நாயக்கமன்னர் வரலாறு

11.2.3 திருமலைநாயக்கமன்னர் வரலாறு

11.2.4 திருமலைநாயக்கமன்னருக்குப் பின் வந்த மன்னர்கன்

11.2.5 இராணி மங்கம்மாள்

11.2.6 விசயரங்க சொக்கநாதன்

11.2.7 மீனாட்சி

11.3 பாளையப்பட்டு ஆட்சிமுறை

11.4 தொகுப்புரை

11.5 மாதிரி வினாக்கள்

11.6 பயிற்சி வினா

11.7 மேலும் அறிக



## 4.1 அறிமுகம்

தமிழக வரலாற்றில் மாற்றங்கள் பல நிகழ்ந்த காலக்கட்டமாக இந்திய விடுதலையும்தமிழகத்தின்பங்கும் என்னும் பகுதி அமைகின்றது. பிற்காலத்தமிழக வரலாற்றில் முஸ்லீம் மன்னர்களின் ஆதிக்கத்திலிருந்து தமிழகத்தை மீட்ட பேரரசாக விசயநகரம் பேரரசும் நாயக்கர்கள் ஆட்சியும் இருந்துள்ளன. விசயநகரப் பேரரசின் ஆட்சியும் நாயக்க மன்னர்களின் சிறப்புகளும், மராட்டியர் தமிழகத்தை ஆட்சி செய்த முறையும் தமிழகம் இந்திய அளவிலான ஆட்சிப்பரப்பினைப் பெற்றதற்குரிய காலமாகத் திகழ்ந்துள்ளது. பலவகையான கலாச்சாரப் பண்பாட்டு மாற்றங்களைத் தமிழகம் ஏற்றுக்கொண்டு தன்னைத் தகவமைத்தும் எதிர்த்தும் தள்ளாடிய தமிழகம் தன்னை தன்னிலைப்பாடு கொண்டு நிலைபெற்று வளர்வதற்கும் உரிய காலமாகவும் இருந்துள்ளது. ஆங்கிலேயர்கள் இந்தியாவைக் கவர்ந்து கொண்டு ஆட்டிப் படைத்த நிலையில் பூலித்தேவனும், கட்டபொம்மனும், மருதுபாண்டியரும் இந்திய விடுதலைப் போராட்டத்தின் துவக்கப் புள்ளிகளாக இயங்கி வரலாற்றின் அழிக்கமுடியா புள்ளிகளாக ஆக்கியுள்ளனர். தமிழகமும், தமிழக சுதந்திரப்போராட்டவீரர்களும் செய்த போராட்டமும். வேதராண்ய உப்பு சத்தியாகிரகப் போராட்டமும் தமிழகக் கலைஞர்கள் கவிஞர்கள் போராடிய போராட்டமும் தமிழக வரலாற்றில் சுதந்திரப் பங்கின் வீரியத்தையும் விவேகத்தையும் எடுத்துக்காட்டுவன. தமிழகம் பெற்றுள்ள நன்மை தீமைகளோடு, பெண்ணிய இயக்கம் குறித்த சிந்தனைகளையும் அறியமுடியும்.

## 4.2 நோக்கம்

1. பிற்காலத் தமிழக வரலாற்றினை அறிதல்
2. விடுதலையுணர்வினையும் விடுதலைப்போராட்டவீரர்களின் நிகழ்வினையும் அறிதல்.

3. ஆங்கிலேயர் ஆட்சியால் தமிழகம் பெற்ற நன்மை தீமைகளைத் தெரிந்து கொள்ளல்.

4. பெண்ணிய இயக்கம் குறித்து அறிதல்.



## 4.3 இந்திய விடுதலையும் தமிழகத்தின் பங்கும்

தென்னாட்டில் மைசூரில் ஆட்சி புரிந்த சுல்தானை 1799இல் அடியோடு முறியடித்து, வடக்கே மராட்டியரை 1818இல் மற்றும் தோல்வியுறச் செய்த ஆங்கிலேயக் கம்பெனியார் இந்தியாவில் எதிர்க்க எவருமின்றித் தம் ஆதிக்கத்தை நிலைநாட்டினர். ஆங்கிலேயர் ஆட்சி தொடங்கிய பிறகு தமிழ்நாட்டிற்கு என்று தனி வரலாறு இல்லை. பல்வேறு மொழி, கலாச்சாரம், நாகரிகம், பண்பாட்டு ஆகியவற்றில் வேறுபட்டு நின்ற பரந்த இந்தியநாட்டை இசுலாமியர் தம் ஆட்சி அதிகாரத்தின் மூலம் ஒன்றுபடுத்த முயன்றனர் எனினும் தமிழக எல்லையில் அவர்கள் நினைத்ததை ஆங்கிலேயர்கள் நிறைவேற்றிக் கொண்டார்கள். ஆங்கிலேயர் ஆட்சி தொடங்கியதிலிருந்து இந்தியா ஒன்றாக, தமிழக வரலாறு எனத் தனியாகும் நிலை இல்லையாகி விட்டது. பதினெட்டாம் நூற்றாண்டுத் தொடக்க முதல் கம்பெனி ஆட்சி இருந்து வந்தது, பிறகு 1858இல் ஆங்கில அரசாங்கமே இந்நாட்டு ஆட்சியை ஏற்று ஆட்சி புரிய அதன் ஆட்சியும் தொடர்ந்து 1947 வரை நடைபெற்றது. 1947இல் இந்தியா விடுதலை அடைந்தது. தமிழகமும் விடுதலை அடைந்தது.

ஆங்கிலேயர் ஆட்சித் தொடக்கத்திலேயே தமிழ்நாடு வீறு கொண்டு எதிர்த்து நின்றது. வீரபாண்டிய கட்டபொம்மன், மருதுசகோதரர்கள், பூலித்தேவன் போன்ற வீரர்கள் பலரும் ஆங்கிலேயர்களுக்கு எதிர்ப்புக் கொடி காட்டினர். பாளையக்காரர்களும் பிற மறவர்களும் ஆங்கில ஆதிக்கத்தினை எதிர்த்துப் போராடினார். இவ்வகையில் காங்கிரஸ் இயக்கமும் மகாத்மா காந்தியடிகளின் வரவும் தமிழகத்தில் பல இளைஞர்களை விடுதலைக்குப் போராடத் தூண்டியது. வ.உ.சிதம்பரனர், வ.வே.க.ஐயர், சுப்பிரமணிய சிவா, சீனிவாச அய்யங்கார், இராசகோபாலச்சாரியார், சத்தியமூர்த்தி, திரு.வி.கல்யாணசுந்தரனார், ஈ.வே. இராமசாமி நாயக்கர், முத்துரங்க முதலியார், மகாகவி சுப்ரமணிய பாரதியார், திருப்பூர்குமரன் போன்ற பலரும் போராடினார். உயிரையும் துறந்தனர். வேதாரண்யத்தில்

உப்புசத்தியாகிரகமும் ஆகஸ்டு போராட்டம் எனப்பலப் போராட்டங்களிலும் தமிழர்கள் பங்கேற்று சுதந்திர இந்தியாவைப் பெற்றனர்.

## 11.1 மார்க்கோபோலோவின் குறிப்புகள்

குறிப்புகள்

இத்தாலி நாட்டு வழிப்போக்கனான மார்க்கோபோலோ பாண்டிய நாட்டில் சுற்றுப்பயணம் செய்து தான் எழுதிய நூலில் அதைப்பற்றிய குறிப்புகளைக் கொடுத்துள்ளான். பாண்டிய நாடு இந்தியாவிலேயே மிகச் சிறந்த நாடு என்றும் அது பண்பும் மாண்பும் உடைய நாடாக விளங்கியுள்ளதைக் குறிப்பிட்டுள்ளளார். அவர் பயணம் செய்த காலத்தில் ஐந்து பாண்டியர்கள் பாண்டிய நாட்டினை அரசாண்ட குறிப்பும் உள்ளது. அப்பாண்டிய மன்னர்களுள் ஒருவன் சொண்டர்பாண்டிடாவர் (சுந்தர பாண்டியன்) என்றும் கூறியுள்ளார்.

பாண்டிய நாடு முத்துக்களுக்குச் சிறந்தநாடு. தாமிரவருணியில் கூடல் முகத்தில், இருக்கும் காயல்பட்டினம் மிகப்பெரிய நகரமாக விளங்கியுள்ளதாகவும் அங்கு ஹார்மோஸ், கிரீஸ், ஏடன், அரேபியா ஆகிய நாடுகளிலிருந்து குதிரைகளையும் வேறு பல பண்டங்களையும் ஏற்றிக் கொண்டு வந்த மரக்கலங்கள் அனைத்து வாணிபம் செய்து செல்லுகின்றன. அங்கு வாணிபம் செழித்து ஓங்கியிருந்தது என்றும் பாண்டிய மன்னனிடம் அளவு கடந்த பொன்னும் மணியும் குவிந்து கிடந்தன என்றும் அம்மமன்னன் அயல்நாட்டு வணிகரிடம் இரக்கம் (கண்ணோட்டம்) கொண்டவனாக விளங்கியதையும் குறிப்பிட்டு உள்ளனர்.

பாண்டிய மன்னனுக்கு ஐந்நூறு மனைவியர் இருந்தனர் என்றும் குடிமக்கள் ஆடை மேலாக இன்றியே உலவியதாகவும் கூறியுள்ளார். உடன்கட்டை எறும் வழக்கம் இருந்ததாகவும் சகுனங்களிலும் சோதிடத்திலும் மக்களுக்கு நம்பிக்கை இருந்துள்ளது என்றும் கூறியுள்ளார். சகுனங்களிலும் சோதிடத்திலும் மக்கள் நம்பிக்கை கொண்டிருந்துள்ளனர். கோவில்களில் தேவரடியார்கள் தொண்டு புரிந்து வந்துள்ளனர் என்றும் மார்க்கோபோலோ தம் பயணக்குறிப்பில் குறிப்பிட்டுள்ளவை வரலாற்றுச்சான்றுகளாக பாண்டியநாட்டின் பெருமைகளையும் சிறுமைகளையும் சுட்டிக்காட்டி உள்ளன.

## 11.2 மதுரை நாயக்கர் வரலாறு

### 11.2.1 விஜயநகரப் பேரரசு

குறிப்புகள்

வடக்கிலிருந்து இசுலாமியர்கள் தமிழகத்தைத் தாக்கிப்பெரும் பொருளையும் தமிழக நிலப்பரப்பினையும் கைக்கொண்ட நிலையில் அவர்களை விரட்டியடிக்கும் முயற்சியும் நிகழ்ந்தேறிபது அவர்களைத் தடுப்பதற்கு விசயநகர வேந்தரும் மராட்டியரும் முயன்று தமிழகத்தை ஆட்சி புரியத் தொடங்கினார்கள். வடக்கே இசுலாமியர் தம் பலம் ஓங்கியிருந்த நிலையில் தெற்கே, தமிழ்நாட்டிற்கு வந்து மராட்டியர் செஞ்சிக்கோட்டை, தஞ்சாவூர், மதுரை ஆகிய மூன்று இடங்களையும் கைப்பற்றிக் கொண்டு கோட்டை கொத்தளங்கள் அமைத்துக் கொண்டு வாழ்ந்தனர். அப்பொழுதே விசயநகரப் பேரரசும் தோன்றியது.

டெல்லி சுல்தானின் நம்பிக்கைக்கு உரியவர்களாக இருந்த ஹரிஹரன், புக்கன் ஆகியோர் சுல்தானின் நலன்களைக் கவனித்துக் கொள்ளவும், கம்பிலியில் தோன்றிய கலசங்களை அடக்கவும் சென்றனர். கம்பிலியில் இருந்து கொண்டு பல இடங்களைக் கைப்பற்றிய அவர்கள் ‘இந்துப்பண்பாட்டை முஸ்லீம் தாக்குதலிலிருந்து காக்கும் பொறுப்பினையும் ஏற்றுக் கொண்டு, தன்னாட்சி பெற்றதாக அறிவித்து துங்கபத்திரை ஆற்றிக்கரையில் கி.பி.1336இல் விசயநகரை நிறுவினர். இப்பேரரசே இஸ்லாமியர் தாக்குதலிலிருந்து இந்து சமயப் பண்பாட்டையும் மரபுகளையும் 300 ஆண்டு காலம் காத்தனர். விசயநகரப் பேரரசினை முறையே சங்கம மரபு, சாளுவ மரபு, துளுவ மரபு, ஆரவீடு மரபு ஆகிய நான்கு மரபுகள் ஆட்சி புரிந்ததாகக் கூறுவர். புக்கன் காலத்தில் தென்னிந்தயாவின் பெரும் பகுதி இம்மன்னன் ஆட்சியை ஏற்றுக்கொண்டன. புக்கனுடைய மகன் குமாரகம்பணன் மதுரையிலிருந்து சுல்தான் ஆட்சியை ஒழிந்தான். இம்மன்னன் காலம் ‘விசயநகரவரலாற்றின் ஒளிமயமான பகுதி என்று அழைக்கப்படுகிறது. விசயநகரப் பேரரசில் கிரு‘ணதேவரயருடைய ஆட்சியில் தன் மதுரையில் நாயக்கச் சார்பாளர் அமர்த்தப்பட்டனர்.

*Self-Instructional Material*

### 11.2.2 மதுரை நாயக்க மன்னர்கள் வரலாறு

தமிழகத்தில் நாயக்கர்கள் ஆட்சி கி.பி. 1529 முதல் 1736 வரை நிலவியதாக வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. விசுவநாத நாயக்க மன்னன் முதல் அரசி மீனாட்சி வரை 13 பேர் இக்காலத்தில் ஆட்சி புரிந்ததாகக் கூறப்படுகின்றது.

நாயக்கர்கள் கம்பளத்தார்கள், தொட்டியர், தொல்லவார், சில்லவார், தொக்லவார், கம்மவார், பலிஜா எனப் பல்வேறு உட்பிரிவுகள் கொண்ட ஆந்திரப்பகுதி மக்கள் என்பது குறிப்பிடப்படுகின்றனர். கிருஷ்ணதேவராயருடைய ஆட்சிக்காலத்தில் மதுரையை ஆட்சி புரிந்த பாண்டியமன்னன் விஜயநகருக்குத் திறை செலுத்தி வந்தான். அவனைச் சோழ அரசன் தாக்கி மதுரையைக் கைப்பற்றவே அவனுக்கு உதவ தன் படைத்தலைவராகிய நாகமநாயக்கனை அனுப்பினார் நாகமன் மதுரையைக் கைப்பற்றி தன்னை மதுரை மன்னனான பிரகடனம் செய்து கொண்டார். இந்நிலையில் நாகமனை வென்று வர நாகமனின் மகன் விஸ்நாத நாயக்கரின் தலைமையில் ஒரு படையை அனுப்பினார் கிருஷ்ணதேவராயர். விசுவநாத நாயக்கர் கிருஷ்ணதேவராயருக்கு மிக நெருக்கமானவர். மகன் தந்தையை வென்று சிறைப்பிடித்து கொண்டு போய் கிருஷ்ணதேவராயரிடம் ஒப்படைத்தார். அப்பொழுது மன்னர் நாகமனிடம் தன்னை மன்னனாகப் பிரகடனப்படுத்தி கொண்டு, துரோகம் செய்ததற்குக் காரணம் கேட்டபொழுது, நாகமன் தன் மகனுக்கு ஒரு நாட்டைக் கொடுக்க வேண்டும் என்று கூறியதாகவும் விசுவநாதனிடம் ‘உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டபொழுது தன் தந்தையின் உயிரினைக் கேட்டதாகவும் சொல்லப்படுகிறது. கிரு‘ணதேவராயர் விசுவநாத நாயக்கார மதுரையின் சுதந்திர மன்னனாக பிரகடனம் செய்ததாகவும் வரலாறு தெரிவிக்கின்றது கி.பி.1529இல் விசுவநாதநாயக்கர் மதுரை மன்னனாக முடிசூட்டிக் கொண்டார்.



விசுவநாத நாயக்கனின் அமைச்சர் அரியநாத முதலியார்தான் தென்னகத்தை முழுக்க படையெடுத்துச் சென்று நாயக்கர் சாம்ராஜ்ஜியத்தை நிறுவினார். ஆரியநாத முதலியார் தான் தென்னகத்தை 72 பாளையப்பட்டுகளாகப் பிரித்து அவற்றுக்கு

பாளையக்காரர்களை நியமித்தார். “விசுவநாதநாயக்கமன்னர் ஆட்சியில் திருச்சியிலுள்ள தெப்பக்குளமும், மதுரைமீனாட்சி அம்மன் ஆயிரங்கால் மண்டபமும் தோன்றின. மதுரை மீனாட்சி அம்மன் கோவிலிற்கும் திருச்சி தாயுமானவர்ககோவிலுக்கும் திருப்பணி செய்தான். திருவரங்கப் பெருமாள் கோவிலுக்கு முந்நூறாயிரம் பொன் செலவிட்டான் எனக் ‘கோயில் ஒழுகு’ என்னும் நூலானது குறிப்பிட்டுள்ளது” என டாக்டர்.இராமகிருட்டினன் கூறியுள்ளார்.

நாயக்கர் வரலாற்றில் முக்கியமன்னர்களாக திருமலை நாயக்க மன்னனும், இராணிமங்கம்மாளும் வரலாற்றில் பக்கங்களில் அழிக்க முடியாதவர்கள்.

### 11.2.3 திருமலை நாயக்க மன்னன்

நாயக்கர் காலம் ‘மனித மனத்தின் உயர்வுக்காலம் எனச் சிறப்பிக்கப்படும் அறவிற்கு கூறப்பெற்றுள்ளது இதற்கு அடித்தனமாக இருந்து செயலாற்றியவர் திருமலை நாயக்க மன்னர். கி.பி.1623 முதல் 1659 வரை திருமலை நாயக்கர் மன்னர் ஆட்சி புரிந்துள்ளார். ‘திருமலை சவுரி நாயினு அய்யனுகாரு’ என்னும் பெயர் கொண்டவர். திண்டுக்கல், திருவெல்வேலி, திருவனந்தபுரத்தின் ஒரு பகுதி, திருச்சி, மதுரை, இராமநாதபுரம், கோவை, சேலம், சிவகங்கை, புதுக்கோட்டை ஆகிய பகுதிகள் நாயக்கமன்னர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தன. திருமலை நாயக்கமன்னர் காலத்தில் நிகழ்ந்த போர்களாக மைசூர்ப்போர், மூக்கறுப்புப்போர், திருவாங்கூர் படையெடுப்பு, சேதுபதியுடனான போர், விசயநகரப் பேரரசுடன் போர் என நிகழ்ந்துள்ளன.

மைசூர் மன்னன் சாமராஜ உடையான் மதுரை மீது 1623இல் போர் தொடுத்த பொழுது நிகழ்ந்த போராகும். மைசூர் மன்னன் விசயநகரப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு நலிவடைந்த சீரங்க மன்னனுக்கு வேலூரைமீட்க முயற்சித்த பொழுது, திருமலை நாயக்கமன்னர் பீஜப்பூர் சுல்தானுக்கு உதவி செய்தார். தென்னிந்திய இந்து மன்னர்களை எதிர்த்து நின்ற பீஜப்பூர் சுல்தானுடன் ஒத்துழைத்த திருமலையைப் பழி வாங்கும் இம்மைசூர்ப் படையெடுப்பின் நோக்கமாகும். மைசூர்ப்படை இரு முறை மதுரை மீது போர் தொடுத்தது. கி.பி.1623இல் முதல் முறையாகப் படையெடுத்து வந்த

பொழுது திண்டுக்கல் வரை தடையின்றி விரைந்து முன்னேறி வந்த படையை கன்னிவாடிப் பாளைய மன்னனால் இடைமறிக்கப்பட்டுத் தோற்கடிக்கப்பட்டது. மைசூர் வரை விரட்டி அடிக்கப்பட்டது.

குறிப்புகள்

மைசூர்ப்படை கி.பி.1636இல் மீண்டும் போர் தொடுத்த பொழுது போர் தொடுத்தோரின் மேலுதட்டையும் மூக்கையும் சேர்த்து அறுக்கும் கருவி ஒன்றின் துணை கொண்டு மூக்கும் உதடும் அறுத்து எறியப்பட்டன. எதிர்ப்பட்ட ஊர்கள் தீக்கொளுத்தப்பட்டன. அரிந்த மூக்கின் எண்ணிக்கைக்கு ஏற்ப படைவீரர்கள் மைசூர் மன்னனால் பரிசளிக்கப்பட்டனர். இப்போர் 'மூக்கறுப்புப்போர்' என வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக அழைக்கப்பெற்றது. நாயக்கர் படை சேதுபதியின் தலைமையில் மைசூர்ப்படையை மைசூர் வரை விரட்டியடித்தது. பகைவர்களின் மூக்குகள் அரியப்பட்டன. மைசூர் மன்னனின் (கந்தீவரவன்) மூக்கையும் அரிந்து நாயக்கர் படை பெருமிதத்தோடு திரும்பியதாக வரலாற்றுச் சான்றுகள் தெரிவிக்கின்றன. திருமலைநாயக்க மன்னர் தம் எல்லையை விரிவுபடுத்தும் நோக்கில் கி.பி.1635இல் திருவிதாங்கூர் படையெடுப்பின் நிகழ்த்தினர்.

இருபடைகளும் 'கணியா குளம்' என்னும் இடத்தில் போரிட்டன. திருவிதாங்கூர்ப் படைக்குத் தலைமை தாங்கிய இரவிக்குட்டிப்பிள்ளை போரில் இறந்துபட்டமையால் அவன் படைகள் சரணடைந்தன. திருவிதாங்கூர் மன்னன் திருமலைநாயக்கமன்னருக்குத் திறை செலுத்தும் மன்னனாகினான். இராமநாதபுரம் சேதுபதி மன்னன் மீது போர் தொடுத்தான். போர்ச்சுகீசியருடன் நட்புறவு செய்த போருதவிக்குக் கைம்மாறாக மாதாக் கோவில்கள் கட்டவும் மதம் மாற விரும்பும் மக்களைக் கிறிஸ்த்தவராக்கவும் உரிமை பெற்றனர். டச்சுக்காரர்களை வெறுத்தான். கிறிஸ்த்தவப்பாதிரிமார்களிடம் மிக்க பரிவு கொண்டான். பெருங்கொடையாளனாக விளங்கிய திருமலைநாயக்கமன்னன். கோயில் திருப்பணிகளிலும் அரண்மனை கட்டுவதிலும் ஏரிகளை உருவாக்குவதிலும் பெரும் பங்கு கொண்டான்.

விஜயநகரப்பேரரசின் மன்னனான சீரங்களை எதிர்ப்பதற்குத் திருமலைநாயக்கமன்னர் பீஜப்பூர் சுல்தானுடன் செய்து கொண்ட உடன்படிக்கை ‘இந்து அரசுக்குத் தோண்டப்பட்ட புகை குழி’ என்று வரலாற்று ஆசிரியர்கள் விமர்ச்சிக்கிறார்கள்.

### 11.2.4 திருமலை நாயக்கருக்குப் பின் வந்த மன்னர்கள்

திருமலை நாயக்க மன்னரின் ஆட்சிக்குப் பிறகு அவன் மகன் ஒரு சில மாதங்களே ஆட்சி புரிந்தான். அவன் மகன் முதலாம் சொக்கநாத நாயக்கன் (கி.பி.1659-1682 வரை) ஆட்சி அதிகாரத்தில் இருந்தான். சொக்கநாத நாயக்கன் மதுரையை விட்டு திருச்சிராப்பள்ளியைத் தலைநகரமாக மாற்றிக் கொண்டான். கி.பி.1665இல் தஞ்சாவூரைக் கைப்பற்றினான். சொக்கநாத மன்னன் பல இன்னல்களுக்கு ஆளாகும் படி நேர்ந்தது. முஸ்லீம்களும் மராட்டியரும் திருச்சிராப்பள்ளியின் மீது படையெடுத்தனர். சொக்கநாதன் இராமநாதபுரம், தஞ்சாவூர், மைசூர் ஆகிய தேசங்களுடன் போரிட வேண்டியிருந்தது ‘ருஸ்தும்கான்’ என்னும் மூஸ்லீம் நாடோடி ஒருவன் கி.பி. 1687இல் திருச்சிராப்பள்ளியைக் கைப்பற்றி நாயக்கமன்னரின் அரியணையில் இரண்டான்டுகள் அமர்ந்து ஆட்சி செய்தான். எனினும் சொக்கநாதன் தன் ஆட்சியை மீண்டும் பிடித்தான். அவன் இறுதிக்கால ஆட்சியில் மைசூர்ப்படைகள் வந்து திருச்சிராப்பள்ளியை முற்றுகையிட அம்மன்னன் செஞ்சி, தஞ்சாவூர் மராட்டிய மன்னர்களின் துணையைப் பெற்று விரட்டி அடித்தான். சொக்கநாத மன்னனின் இறுதி நாட்கள் சோகமும் துயரமுமாக மனமுடைந்த நிலையில் கி.பி.1682 இல் உயிர் துறந்தான்.

சொக்கநாதன் இறப்பிற்குப் பிறகு அவனுடைய மகன் ரங்ககிருஷ்ண முத்துவீரப்பன் (நான்காம் வீரப்பன்) கி.பி.1682இல் பட்டமேற்றான். அவன் அரசி இராணி மங்கம்மாள் வயிற்றில் பிறந்தவன். சொக்கநாத நாயக்க மன்னனின் வலிமையற்ற ஆட்சியினால் நாட்டின் சில பகுதிகளை மைசூர் மன்னனும் தஞ்சை மன்னன் சாம்பாஜியும் பறித்துக் கொண்டனர். மீதியுள்ள எஞ்சிய பகுதியே வீரப்பன் கைக்கு வந்து சேர்ந்தது. இம்மன்னன் முடி சூட்டிக் கொண்டபொழுது மதுரை நகரமே மைசூரின் வசமாகி இருந்தது. சாம்பாஜியின் படையெடுப்புகள் பலவற்றில் சிக்கித் திணறிக் கொண்டிருந்த மைசூர்



குறிப்புகள்

*Self-Instructional Material*

மன்னன் இறுதியில் மதுரையைக் கைவிட்டு விட்டு ஓடும் நிலை ஏற்பட மைசூர் தொல்லைகளிலிருந்து வீரப்பனும் விடுப்பட்டான். வீரப்பன் மதுரைநகரின் உரிமையும் பெருமையையும் மீட்டுக் காத்தான். டில்லி பாது'ா உலா அனுப்பிய செருப்பினைத் தன் காலில் செலுத்தும் இட்டு இறுமாந்திருந்தவன். செருப்பினைத் தன் காலில் செலுத்தும் மன்னர்களுக்கு அனுப்பி அச்செருப்பினை வணங்கித் திறை செலுத்தும் நிலை 'முத்து வீரப்ப மன்னனால் நின்றது. இத்தகைய வீரனாகிய இம்மன்னன் நீதியும் நேர்மையும் ரங்ககிரு'ண முத்து வீரப்பன் இறந்தபொழுது அவன் மனைவி கருவுற்றிருந்தான். ஆண் குழந்தை ஒன்றைப் பெற்றுக் கொடுத்துவிட்டுத் தீக்குளித்து உயிர் துறந்தாள். பிறந்த மூன்றாம் மாதத்திலேயே அக்குழந்தை விசயரங்க சொக்கநாதன் என்ற பெயரில் அரியணை ஏற்றுவிக்கப்பட்டது. இராணிமங்கம்மாள் தன் பேரனின் பிரதிநிதியாக ஆட்சிப் பொறுப்பினை மேற்கொண்டாள். கி.பி.1689 முதல் கி.பி.1706 ஆம் ஆண்டு வரை ஆட்சி செலுத்தியதாக வரலாறு குறிப்பிடுகின்றது. தமிழக வரலாற்றில் அரியணை ஏறிய முதல் பெண்ணாக இராணிமங்கம்மாள் விளங்கினாள்.

### 11.2.5 இராணி மங்கம்மாள்

இராணி மங்கம்மாள் கி.பி.1689 முதல் கி.பி.1706 ஆம் ஆண்டு வரை தன் பேரன் பொருட்டு ஆட்சி பொறுப்பேற்று சிறந்த ஆட்சியை வழங்கியிருப்பதாக வரலாறு குறிப்பிடுகின்றது. இவருடைய ஆட்சிக் காலத்தில் டெல்லியில் ஔரங்கசீப் ஆட்சி நடைபெற்றது. தென்னாட்டில் போரில்லாது காத்த நிலையில் செல்வம் பெருகியது. தென்னகப் படையெடுப்பை முழு வீச்சில் மேற்கொண்டிருந்த டெல்லி ஔரங்கசிப்பிற்கு திறை செலுத்த இசைந்து பெரும் பரிசில்களைக் கொடுத்து அனுப்பினான். தஞ்சைமன்னன் கைப்பற்றியிருந்த மதுரை தேசத்தில் பகுதிகளை டெல்லி பாதுஷா சேனாதிபதி சுல்பிகர் அலிகான் உதவியுடன் மீட்டான். மராட்டியர்களுக்கும் பரிசில்கள் கொடுத்து தன் பக்கமே வைத்திருந்தான். கேரள மன்னன் இரவிவர்மன் மேல் மங்கம்மாள் படையெடுத்து கி.பி.1697இல்) வெற்றியைப் பெற்றான். அவளுடைய படைத்தலைவன் தளவாய் நரசிம்மன் அவனிடமிருந்து அளவற்ற பொன்னையும் பொருளையும் பெரிய பீரங்கிகளையும் கவர்ந்து வந்தான். இராணி மங்கம்மாள் கோவில்கள்

கட்டவில்லை. சாலைகள் பலவற்றை உருவாக்கினாள். அவள் போட்ட சாலைகளே சாத்தூர் சிவகாசி, கோவில்பட்டி முதலிய இன்றைய முக்கிய நரகங்கள் உருவாக போட்ட சாலைகளாகும். இன்றைக்கும் கிராமக்கள் 'மங்கம்மாள் சாலை' என்றேஅழைக்கின்றனர். அவ்வாறே மக்கள் தங்குவதற்கென்று 'மங்கம்மாள் சத்திரம்' பலவற்றை கட்டியுள்ளார். மங்கம்மாள் அரசியல் திறன் மிக்கவராகவும் நுண்ணறிவு உடையவராக விளங்கியுள்ளார்.

குறிப்புகள்

"மங்கம்மாளது ஆற்றலும் இராசதந்திரமும் நாயக்கர் ஆட்சிக்கு நீண்ட ஆயுட்காலத்தைத் தந்தன. புயலும் கொந்தளிப்பும் மிகுந்த அரசியல் சூழலில் கவனம் மிகுந்த இவளது ஆட்சிமுறை அவளது பெருமையைப் பல மடங்கு உயர்த்துகின்றது" என டாக்டர் ஆ.இராமகிருட்டினன் தம் தமிழகவரலாறும் தமிழர்பண்பாடும்' என்னும் நூலில் குறிப்பிட்டு உள்ளார்

### 11.2.6 விசயரங்க சொக்கநாதன்

இராணி மங்கம்மாள் கி.பி.1706இல் இறந்தபிறகு அவள் பேரன் விசயரங்க சொக்கநாதன் அதே ஆண்டு முடி சூடிக்கொண்டான். அவன் ஆட்சி முழுவதும் துன்பங்களும் தொல்லைகளும் அதிகரிக்க மக்கள் ஆங்காங்குக் கிளர்ச்சியில் இறங்கினர்' இம்மன்னன் கோவில் குளங்களுக்கு யாத்திரை போவதையே தொழிலாகக் கொண்டிருந்தான். இம்மன்னனின் அமைச்சர்களான நரசப்பையனும் வேங்கடராகவாசாரியனும் அரசாங்க வருவாய் அனைத்தையும் கொள்ளை கொண்டனர். கி.பி.1732ல் அம்மன்னன் இறந்தான்.

### 11.2.7 மீனாட்சி

மங்கம்மாளின் பேரன் விஜயரங்கசொக்கநாதர் மறைந்த பிறகு அவன் மனைவி மீனாட்சி கி.பி.1732இல் தன் உறவினரான விஜயகுமாரன் என்னும் சிறுவனைத் தத்தெடுத்து அவனை ஆட்சிப் பொறுப்பில் இருத்தி, தானே ஆட்சியை நடத்தினாள். தத்தெடுத்த மகனின் தந்தை பங்காரு திருமலை நாயக்கனும் தளவாய் வேங்கடாசாரியனும் மீனாட்சியை அரியணையிலிருந்து இறக்குவதற்குப்பல சூழ்ச்சிகள் செய்தனர். ஆற்காடு நவாப்பின் மகன் சப்தர் அலிக்குப் பெரும் தொகை கொடுத்து தன் பக்கம்

இழுத்தான். ஆற்காடு நாவிப்பின் மருமகன் சாந்தாசாகிப் சமாதானம் செய்வதாகக் கூறி மீனாட்சியிடமிருந்து ஒரு கோடியினைப் பெற்று. அதற்கு குரானின் மேல் சத்தியம் செய்து கொடுத்து, திருச்சிராப்பள்ளியை விட்டுவிட்டு மதுரையை நோக்கிச் சென்றான். அதற்குள் பங்காரு நாயக்கன் மீனாட்சியுடன் சாமாதனமாகச் செல்வதாகக் கூறி ஒப்பந்தம் செய்து கொண்டான். சந்தாசாகப்பி எண்ணம் நிறைவேறாமல் போக ஆற்காடு திரும்பினான். பெரும் படை திரட்டி திருச்சிராப்பள்ளியை மீண்டும் தாக்கினான். மீனாட்சியிடம் வஞ்சகமாகப் பேசி அவளுக்குத் தன்னாட்சி வழங்குவதாகக் கூற அவளும் சந்தாசாகிபுவினிடம் அதன் ஆட்சி உரிமை முழுவதையும் ஒப்படைத்தான். திண்டுகல்லில் ஆட்சி புரிந்து கொண்டிருந்த பங்காரு திருமலை நாயக்கன் மீது மீனாட்சியின் உடன் பிறந்தவர்களான கோவிந்தையன், இராமனையன் தலைமையில் தாக்குதல் நடந்த, தாக்குப்பிடிக்கா இயலாது சிவகங்கைக்கு ஒடி ஒளிந்தான். சந்தாசாகிபு மதுரை தேசம் முழுவதையும் தனக்குரியதாக்கிக் கொண்டு மீனாட்சிக்கும் கொடுத்த வாக்கினை மீறி அவனைச் சிறையிலடைக்க அவள் நஞ்சுண்டு இறந்தாள். பங்காருதிருமலை நவாபுஅன்வாருதீன் கைகளால் கொலையுண்டு இறந்தான். அவன் மகனான விசயகுமாரன் மதுரையை ஆளும் வாய்ப்பினை இழந்து, சிவகங்கைச் சீமையிலே அடைக்கலம் புகுந்தான். மதுரை நாயக்கர்களின் பரம்பரையும் அவனோடு மறைந்து (கி.பி.1736இல்) போயிற்று.

## 11.3 பாளையப்பட்டு ஆட்சிமுறை

பாளையப்பட்டு ஆட்சிமுறை கிருஷ்ண தேவராயனால் நியமிக்கப்பட்டு மதுரையில் முதல் நாயக்க மன்னனாக ஆட்சி புரிந்த விசுவநாத நாயக்க மன்னன் கி.பி.1529-1564) தன்னுடைய தளவாய் அரியநாதனின் அறிவுரைப்படி உருவாக்கிய முறையே ஆகும்.

மூஸ்லீம் ஆட்சியைப்பரப்பத் தென்னகச்சுல்தான்கள் எடுத்த முயற்சிகளானும், இந்து சமயப் பண்பாட்டையும் சமுதாய மரபுகளையும் சீரமைக்க விசயநகர ஆட்சியாளர்கள் எடுத்த தற்காப்பு நடவடிக்கைகாளலும் நர்டு போர்க்களமாக மாறி நின்றது. அமைதிக் காலம் , போர்க்காலம் ஆகிய இரண்டு சூழலுக்கும் பயன்படும்.

ஆட்சி முறை ஒன்றின் பயனாகத் தோற்றுவிக்கப்பட்ட ஆட்சிமுறையே பாளையப்பட்டு ஆட்சிமுறையாகும். என டாக்டர் ஆ. .இராமகிருட்டினன் தம் தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும் என்றும் நூலில் குறிப்பிட்டு உள்ளார்.



பாண்டியர் ஆட்சிக்காலத்தில் இசுலாமியர் தாக்குதல் காரணமாகவோ அல்லது தங்கள் கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலம் தேடியோ வடநாட்டிலிருந்து வந்து குடியேறிய உள்ளூர்த்தலைவர்கள், பாண்டியர்களுக்குத் திறை செலுத்தும் குறுநிலத் தலைவர்களாகவும் அவர்களின் நம்பிக்கைக்கு உரியவர்களாகவும் இருந்தனர். அத்தகைய தலைவர்களிடம் நம்பிக்கை வைத்து பெருமதிப்பு அளித்தால், அப்புதியவர்களின் ஆர்வமும் உழைப்பும் ஆட்சிக்கு எதிராகப் பயன்பாடமல் உழவு, தொழில் போன்ற ஆக்கப் பணிகளிலும் செல்லும். தேவைப்படும் பொழுது அவர்களின் படைபலத்தையெல்லாம் ஒருமுகப்படுத்தி நாட்டுப் பாதுகாப்பிற்குப் பயன்படுத்த முடியுமென்று எண்ணி அமைக்கப்பட்ட பாளையங்கள் 72 என வரலாற்றுச் சான்றுகள் தெரிவிக்கின்றன.

பாளையத்தலைவன் பாளையக்காரன் என அழைக்கப்பெற்றான். பாளையமும் தந்தை வழிமகன் என்ற உரிமையுடையது என்பதால் அப்பாளையங்களை வளப்படுத்துவதில் ஆர்வம் அதிகரித்தது. நீதி, நிர்வாகம், காவல் ஆகிய மூன்று துறைகளிலும் பாளையக்காரர்களுக்கு முழு உரிமை அளிக்கப்பட்டது. பாளையத்திற்கு அவர்களே பன்னராயிருந்து வருவாயில் மூன்றில் ஒரு பங்கை அரசுக்குத் திறையாகத் தரவேண்டும். மற்றொருபங்கினைத் தேவைப்படும் காலங்களில் மத்திய அரசிற்குத் தருவதற்கென ஒருபடையை நிறுவிப் பேணி வருதல் வேண்டும் என்பதே பாளையப்பட்டு ஆட்சிமுறையாகும்.

பாளையப்பட்டு ஆட்சிமுறையில் பல்வேறு துறைகளையும் நடத்திச் செல்வதற்குத் துறைத்தலைவர்கள் இருந்தனர். அவர்களுக்குக் கீழே பல்வேறு நிலைகளில் பணிபுரிய பணியாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். தமக்குக் கீழே பணிபுரிய திறமுடையவரை நியமிக்கவும், தவறு கண்டவிடத்து நீக்கவும் துறைத்தலைவர்களுக்கு

முழு அதிகாரம் அளிக்கப்பட்டது அவர்கள் முறையாக மாத ஊழியம் பெற்றனர் என்பது வரலாற்றுக் குறிப்புகளாகும். பாளையங்களின் அதிகாரவரம்புகள் நிதித்துறை, நீதித்துறை. இராணுவம் ஆகிய மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டிருந்தன.



நிதித்துறையில் குடிமக்களிடமிருந்து வரி வசூலிக்கும் முழுப்பொறுப்பும் பாளையக்காரர்களிடம் விடப்பட்டிருந்தது. பாளையக்காரர்கள் தாங்கள் வசூலித்த வரியில் மூன்றில் ஒரு பங்கை மதுரைநாயக்கர் ஆண்ட மையஅரசிற்கும் மற்றொரு பங்கைத் தம்மிடம் உள்ள இராணுவத்திற்கும், இன்னொரு பங்கை தம்முடைய சொந்த நிர்வாகச் செலவிற்கும் பகிர்ந்து அளிக்குமாறு நாயக்க அரசால் நெறிப்படுத்தப்பட்டிருந்தனர்.

நீதித்துறையில் பாளையப்பகுதிக்குள் கொண்டு வரப்படும் அனைத்து வழக்குகளுக்கும் நீதி வழங்கும் தலைமை நீதிமன்றமாகப் பாளையக்காரர்கள் விளங்கினர். பாளையக்காரர்களின் நீதி வழங்கும் ‘உள் விவகாரங்களில்’ நாயக்கமன்னர்கள் தலையிடுவது இல்லை. பாளையக்காரர்கள் தாங்கள் வசூல் செய்யும் வரியில் மூன்றில் ஒரு பங்கை இராணுவத்திற்குச் செலவிடும் உரிமை பெற்றிருந்தனர். இதற்கு ஈடாக மைய அரசு வெளியார் தாக்குதலுக்கு உள்ளாகும் பொழுது படை தந்து உதவ வேண்டும் எனப் பாளையக்காரர்கள் நெறிப்படுத்தப்பட்டுள்ளனர். ஆபத்துக்காலங்களில் படையுதவி அளித்தவர்களுக்குக் கப்பத்தொகையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. பாளையக்காரர்களின் விசுவாசமாக இருக்க அளிக்கப்பட்ட ஊக்குவிப்பு ஆகும். இவ்வகையில் பாளையப்பட்டு ஆட்சி முறை செம்மையாக முறையாக விளங்கினும் அதிலும் சில குறைகள் மைய அரசினைச் சார்ந்து செயல்படும் நிலையில் காலமறிந்து செயல்படுதல் இல்லாது போயிற்று. பாளையக்காரர்களுக்கான சுதந்திர உரிமை, வரி வசூலிப்பு உரிமை போன்றன மன்னனுக்குப் பலவீனமான ஒன்றாகவே விளங்கியது.



## 11.4 தொகுப்புரை

தமிழக வரலாற்றில் உலகப் பயணிகளின் இளவரசர் என்றழைக்கப்பட்ட சிறப்பினைப் பெற்ற மார்க்கோபோலோ பாண்டிய நாட்டில் மேற்கொண்ட சுற்றுலா பயணத்தில் அந்நாட்டின் சிறப்புகளைக்

குறிப்பிட்டுள்ளார் . மதுரை நாயக்கர் வரலாற்றில் விசயநகரப்பேரரசு மதுரை நாயக்க மன்னர்களில் சிறந்த ஆட்சியை வழங்கிய திருமலை நாயக்கமன்னன் திருமலை நாயக்கருக்குப் பின் ஆட்சி செய்த மன்னர்கள் இராணி மங்கம்மாள் விசயரங்கசொக்கநாதன் மீனாட்சி போன்றோரின் ஆட்சிநிகழ்வுகளும் குறிப்பிடப்பெற்றுள்ளன. பாளையப்பட்டு ஆட்சிமுறையில் பாளையங்கள் தன்னாட்சி கொண்டு ஆண்ட ஆட்சியில் நிறைகளும் குறைகளும் இக்கூறில் அறிவதற்கு உரியன .

## 11.5 மாதிரி வினாக்கள்

1.உலகப்பயணிகளின் இளவரசர் என்றழைக்கப்பட்டவர் யார் ?

மார்க்கோபோலோ

2.மூக்கறுப்புப்போர் எம்மன்னன் காலத்தில் நிகழ்ந்தது ?

திருமலை நாயக்கமன்னன் காலத்தில் நிகழ்ந்தது .

3.மங்கம்மாள் சாலையை அமைத்தவர் யார் ?

இராணி மங்கம்மாள்

4.மீனாட்சி எந்த மன்னனோடு ஒப்பந்தம் செய்து கொண்டார் ?

சாந்தா சாகிபு

5. விசுவாத நாயக்க மன்னன் உருவாகிய ஆட்சிமுறை எது ? எவர் அறிவுரையால் உருவாகியது ?

   விசுவநாத நாயக்கமன்னன் தன் தளவாய் அரியநாதன் அறிவுரைப்படி பாளையப்பட்டு ஆட்சிமுறையை உருவாக்கினார்

## 11.6 பயிற்சி வினா

**1.நாயக்கமன்னர்களைப் பற்றி விளக்குக**

**2.பாளையப்பட்டு ஆட்சிமுறை யாது ? விவரி**

குறிப்புகள்

## கூறு-12

### மராட்டியர் ஆட்சியும் தமிழகமும் - பூலித்தேவன் கட்டபொம்மன் - மருதுபாண்டியர் ஆகியோரின் விடுதலைப்போர்

**12 பாடஅமைப்பு**


**12.1 அறிமுகம்**

**12.2 நோக்கம்**

**12.3 மராட்டியர் ஆட்சியும் தமிழகமும்**

**12.4 பூலித்தேவன்**

**12.5 கட்டபொம்மன்**

**12.6 மருதுபாண்டியர் ஆகியோரின் விடுதலைப்போர்**

**12.7 தொகுப்புரை**

**12.8 மாதிரி வினாக்கள்**

**12.9 பயிற்சி வினா**

**12.10 மேலும் அறிக**


### 12.1 அறிமுகம்

தமிழகத்தில் ஆட்சி மாற்றங்கள் பல்வேறு விளைவுகளைத் தந்துள்ளன . பெரும் மாற்றத்தினைத் தராத மராட்டியர் ஆட்சி கி.பி 1676 இல் ஏற்பட்டது .நாயக்கர்கள் சார்பாக சிவாஜியின் மாற்றாந்தாய் மகன் வேங்காஜியின் மூலம் மராட்டியர் ஆட்சி தொடங்கியது .ஒன்பது மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் தஞ்சை சில பயன்களைப் பெற்றது .மதுரைநாயக்க மன்னர்களின் பாளையப்பட்டு ஆட்சிமுறையின் கீழ் ஆங்கிலேயர்களை எதிர்த்த

*Self -Instructional Material*

பூலித்தேவன் வீரபாண்டியக் கட்டபொம்மன் மருதுசகோதரர்கள் தங்கள் வீரமிக்க போர்களால் மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஊட்டி தம் உயிரையும் துறந்தார்கள் . இந்திய விடுதலைக்கு முன்பாக தமிழகத்தின் முதன்மை விடுதலை வீரர்களாக அறிமுகப்படுத்துகின்றது இக்கூறு .



## 12.2 நோக்கம்

1.தமிழக வரலாற்றில் வடக்கிலிருந்து வந்து ஆட்சி புரிந்தவர்களை அறிதல் .

6. மராட்டியர் மன்னர்களைத் தெரிந்து கொள்ளல் .
7. பாளையப்பட்டு வீரர்களை அறிதல் . விடுதலை உணர்ச்சியை உணர்தல் .

## 12.3 மராட்டியர் ஆட்சியும் தமிழகமும்

தமிழகத்தில் மராட்டியர் ஆட்சி கி.பி.1676இல் தொடங்கியது. மராட்டியப் பேரரசை விரிவுபடுத்தும் நோக்கத்துடன் மராட்டிய சிவாஜி தென்னகப் படையெடுப்பை மேற்கொண்டான். அடில்'ாவிடம் கப்பம் கட்டும் வேங்கோஜியை விடுவிடுப்பதே இப்படையெடுப்பின் நோக்கம் எனக் கூறப்படுகின்றது. கருநாடகத்தை நோக்கிப் படையெடுத்த சிவாஜி ஸ்ரீசைலம், திருப்பதி, காஞ்சி, செஞ்சி, சிதம்பரம் ஆகியவற்றைக் கைப்பற்றினான். இவை பேரரசுடன் இணைக்கப்பட்டு சிவாஜியினுடைய மகன் சந்தாஜியின் ஆளுகைக்கு வந்தது.

தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்கள்

| | | |
|---|---|---|
| 1.வேங்கோஜி | - | கி.பி 1676-1688 |
| 2.ஷாஜி | - | கி.பி.1684-1712 |
| 3.சரபோஜி 1 | - | கி.பி.1712-1728 |
| 4.துக்கோஜி | - | கி.பி.1728 –1736 |

5.பிரதாப்சிங் - கி.பி.1739 –1763

6.துல்ஜாஜி - கி.பி0.1763 – 1787

7.அமார்சிங் - கி.பி1787 – 1798



8.சரபோஜி 2 - கி.பி.1798 – 1833

9.சிவாஜி –கி.பி 1833 – 1856

கி.பி.1676 முதல் 1856 வரை தமிழகத்தின் வளமிக்க பகுதியாகிய தஞ்சை மராட்டியர் ஆட்சிக்கு உட்பட்டிருத்தது. தஞ்சை நாயக்கருக்கும் மதுரை நாயக்கருக்கும் கி.பி.1673இல் ஏற்பட்ட மோதலில் தஞ்சையை ஆண்ட நாயக்கர் அரசு அகற்றப்பட்டுத் தஞ்சையில் மதுரை நாயக்கரின் சார்பாளரின ஆட்சி நிறுவப்பட்டது. ஆனால் சார்பாளராக இருந்த அழகிரி விரைவில் தன்னாட்சியை நிறுவியதால், மதுரை நாயக்கர்கள் அவனைத் தண்டிக்கும் நோக்கத்துடன் பீஜப்பூர் சுல்தானின் படைத்தலைவனாக விளங்கிய வேங்கோஜியை சிவாஜியின் (மாற்றாந்தாய் மகன்) தஞ்சையில் போர் தொடுக்கச் செய்து பிறகு அவனே தஞ்சையில் தன் ஆட்சியை நிறுவினான். வேங்கோஜி பான்ஸ்லே சிவாஜியின் தந்தைக்குத் துர்க்காபாயின் வயிற்றில் பிறந்தவன் பீஜப்பூர் சுல்தான் அடில்‘ாவினிடம் தொண்டு பூண்டு தன் சகோதரன் சிவாஜியையும் ஜெய்சிங்கன் என்பவனையும் எதிர்த்துப் போரிட்டான். மிக்க நேர்மையுடனும் அன்புடனும் ஆட்சி புரிந்தாலும் சிவாஜியுடன் உடன்படிக்கை செய்தவற்குப் பெருந்தொகையைக் கொடுக்க வேண்டியதாக இருந்தது. அதற்காக மக்கள் மீது வரிச்சுமையினை உண்டாக்கினான். அதன் பிறகு வேங்கோஜி இறக்க அவன் மகன் பட்டம் சூட்டிக்கொண்டான்.

.ஷாஜீயின் ஆட்சிக்காலம் போர் மிகுந்த காலமாகவே .இருந்துள்ளது. இவர் காலத்தில் கிறிஸ்த்தவர் மீது தனிவரி விதிக்கப்பட்டது என்று வரலாற்றுக்குறிப்பு தெரிவித்துள்ளது. இம்மன்னன் குழந்தையின்றி இறந்ததால் அம்மன்னனின் தம்பி முதலாம் சரபோஜி தஞ்சை மன்னனாகப் பொறுப்பேற்றான். அப்பொழுது இராமநாதபுரத்தில் கிழவன் சேதுபதி மறைந்த பிறகு அரசரிமைப் போட்டி முதலாம் சரபோஜி மன்னனால் தீர்க்கப்பட்டதாக

அறிய முடிகின்றது. இவருடைய ஆட்சி ஐந்தாகப் பகுக்கப்பட்டது. இதனால் சிவகங்கை அரசு தோன்றக் காரணமாக. இம்மன்னன் விளங்கியதாக வரலாறு குறிப்பிடுகின்றது. முதலாம் சரபோஜி மன்னனுக்கு வாரிசு இன்மையால் அம்மன்னனின் தம்பி துக்கோஜி தஞ்சைக்கு மன்னனாகி சில ஆண்டுகளில் இறந்தான். மீண்டும் தஞ்சையில் வாரிசுமைப் போர் ஏற்பட்டது. பிரெஞ்சுக் கம்பெனியாரும் சந்தாசாகரிப்பும் தஞ்சையைத் தனக்குரியதாக்கிக் கொள்ள பெருமுயற்சி செய்தனர். கி.பி.1729 இல் திறமையும் அரசியல் நுட்பமும் கொண்ட பிரதாப்சிங் கி.பி.1739 1763) தஞ்சைக்கு மன்னனாக, மாநில ஆட்சியாளர்களின் தாக்குதல் நிகழ்ந்தது. இம்மன்னனின் அட்சிக்காலத்தை,'மாறுபட்ட வரலாற்றின் மதிப்புமிக்க காலம்' என்பர் வரலாற்று ஆய்வாளர்கள்.

பிரதாப்சிங் என்னும் மன்னனுக்குப் பிறகு துல்ஜாஜி ஆட்சிக்கு வந்தான். கருநாடக நவாபாகிய ஹைதர் அலி தஞ்சையை முற்றுகையிட்ட பொழுது ஆங்கிலேய அரசினர் துல்ஜாஜிக்குத் துணையாக போர் செய்து தஞ்சையைக் காத்தனர். அதற்கு நன்றியாக துல்ஜாஜி உரிமையை ஆங்கிலேயருக்குக் கொடுத்து விட்டுதான் கைப்பாவையாக முடிசூட்டிக்கொண்டான். துல்ஜாஜியின் ஏற்புமகன் இரண்டாம் சரபோஜி அரசனாக்கப்பட்டபொழுது ஆட்சிமுறையில் பயிற்சி இல்லாததால் தன்னை விடுவிக்குமாறு ஆங்கிலேயருக்குக் கடிதம் எழுத, ஆங்கிலேய அரசும்ஓய்வு அளித்து ஓய்வூதியம் அளிக்க முடிவு செய்ததது,. ஆங்கிலேயர் ஆட்சிக்கு உட்பட்டிருந்த சென்னை மாநிலத்துடன் தஞ்சை இணைக்கப்பெற்றது. இரண்டாம் சரபோஜியின் ஒரே மகனான சிவாஜியும் வாரிசின்றி தஞ்சையை ஆங்கிலேயர்கள் முழுயைாக ஆங்கில அரசுடன் இணைத்துக்கொள்ள டல்ஹௌசி பிரபு உறுதுணையாக விளங்கினார். மராட்டிய அரசிற்கும் முடிவுகட்டினார். கி.பி.1856 முதல் தஞ்சை ஆங்கில அரசிற்கு உட்பட்டு தன் அதிகாரத்தை முற்றிலும் இழந்தது.

மராட்டியர் ஆட்சியில் தமிழகத்தில் ஆட்சியாளர்களுக்கும் மக்களுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்படவில்லை. அதிகாரிகளின் அதிகாரமும் கெடுபிடியும் எல்லைகளைக் கடந்துப் போயிருந்தன. போர்த்தொல்லை, வரிக்கொடுமை அதிகாரப் போக்கு. மன்னர்களின் அந்தபுரக்கேளிக்கைகள் போன்றவற்றால் மன்னர்களே தரம் தாழ்ந்து



குறிப்புகள்

அடிமைகளாக மாறும் அவல நிலை உண்டாயிற்று. தஞ்சை மராட்டிய மன்னர்களில் இரண்டாம் சரபோஜி மட்டுமே தஞ்சைசரசுவதி மகாலினை உருவாக்கிப் பலதுறை ஆய்வுக்கூடமாகச் செயல்படுத்தினார். பலதுறை சார்ந்த ஆவணங்களும் ஆய்வு நூல்களும், ஏட்டுச்சுவடிகளும் திரட்டி வைக்கப்பெற்றுள்ள ஒரு சிறந்த நூலகமாகவும் விளங்குகின்றது.

## 12.4 பூலித்தேவன்

மதுரை நாயக்கமன்னர்களின் பாளையப்பட்டு அதிகாரவம்சத்தில் வந்தவர். காத்தப்பப்பூலித்தேவர் நெற்கட்டான்செவ்வல் பாளையம் என்னும் பாளையத்திற்கு உட்பட்ட சித்திரபுத்திரத்தேவருக்கும் சிவஞான நாச்சியாருக்கும் பிறந்தவர். காத்தப்பப்பூலித்தேவர். இவர் புலித்தேவர் என்றும் அழைக்கப்பெற்றவர். புலிகளை வேட்டையாடி அதன் நகங்களையும் தோலினையும் அணிவதில் விருப்பம் கொண்டவர் என்பதால் புலித்தேவர் என்றழைக்கப்பட்டார்.

வீரமும் விவேசமும் தமிழ் இலக்கண இலக்கியப் புலமையும் கொண்ட காத்தப்பப்பூலித்தேவருக்கு கி.பி.1726இப் பட்டம் கூட்டி அரசனாக்கினார்கள். அவர் இலட்சுமி நாச்சியாரைத் திருமணம் செய்து ஒரு பெண் குழந்தையையும் இரு ஆண் குழந்தைகளையும் வாரிசாகக் கொண்டிருந்தார். பாளையத்திலிருந்து வரும் வருமானத்தை அதன் நிர்வாகத்திற்கும் மக்களுக்கும் பயன்படுத்தி எஞ்சியதை கோயில் திருப்பணிக்காகவும் செலவழித்தார். இவர் ஆட்சிக்காலம் பாண்டியராட்சியின் முடிவுக்காலமாகவும் நாயக்கராட்சியின் சரிவு காலமாகவும் இருந்ததால் ஆற்காடு நவாப்பின் அத்து மீறல்களும் ஆங்கிலேயரின் வருகையும் தமிழகவரலாற்றில் பல்வேறு மாற்றங்களைத் தோற்றுவித்தகாலமாகும். பெரிய அளவில் நிகழும் ஆட்சி மாற்றங்களால் சிறிய பாளையக்காரர்களுக்கு ஆபத்து என்று உணர்ந்து அனைவரையும் ஒன்று கூட்டி அரசியல் மாற்றங்கள் குறித்து தீவிரமாக விவாதித்து, ஒற்றுமையின் தேவையை வலியுறுத்தினார். பூலித்தேவர் திட்டப்படி பாளையக்காரர்கள் நாயக்கராட்சிக்குத் திறை செலுத்துவதை நிறுத்தினர். அவர்கள் ஆதிக்கத்திற்குச் சென்றது. ஆற்காடு நவாபு ஆங்கிலேயரிடம் வரி

வசூலிக்கும் பொறுப்பினை ஒப்படைத்ததாக அன்றிலிருந்து இந்திய மன்னர்கள் ஆங்கிலேயர்களோடு நேரடியாகப் போர்புரியும் நிலை உருவாகியது. பாளையக்காரர்கள் திறை செலுத்த மறுத்ததால் கர்னல்ஹெரான் தலைமையில் கும்பினிப் படை மற்றும் ஆற்காடு நவாப்பின் சகோதரன் மாபூஸ்கான் தலைமையில் நவாப் படைகளும் கி.பி.1755ஆம் ஆண்டு பாளையக்காரர்களைத் தாக்குவதற்கும் புறப்பட்டன. போர் என்றவுடன் பாளையக்காரர்களின் ஒற்றுமையும் குலைந்தது.

மாபூஸ்கானும் கர்னல்ஹெரானும் பூலித்தேவரின் கோட்டையை முற்றுகை இட்டனர். ஆங்கிலேயரிடம் வெடிமருந்துகளும் துப்பாகிகளும் பீரங்கிகளும் இருந்தன. ஆயினும் பூலித்தேவன் கோட்டையைத் தாக்கி சிறு விரிசலையும் உண்டாக்கமுடியவில்லை. அதற்குமாறாக போர்க்கருவிகளும் உணவுகளும் குறைந்து போக பூலித்தேவன் கோட்டையை விட்டு வெளியே வந்து. ஆங்கிலப் படைகளைக் கொன்று குவித்து வென்றார். எனினும் ஆங்கிலப்படைகள் எப்பொழுது வேண்டுமானாலும் தாக்கலாம் என்பதால் பாளையக்காரர்களை ஒன்று திரட்ட முனைந்தார். அவர்களோ சுயநலத்தோடு ஒதுங்கிவிட்டனர். ஆற்காடு நவாபும் ஆங்கிலேயர்களும் பாளையக்காரர்களுக்கு பதவி ஆசையை ஊட்டி தங்கள் பக்கம் இழுத்துக்கொண்டனர். ‘சுதேசிப்படை’ என்னும் படையை உருவாக்கி யூகப்கான் என்பவனைத் தலைமையாக்கினர். யூசுப்கான் ‘ மருதநாயகம்’ என்னும் தமிழன் மதம் மாறி அப்பெயரினைக் கொண்டான். பதவி ஆசைக்காக சுதேசிப்படைகளோடு யூசுப்கான் பூலித்தேவனோடு கடுமையாக போரிட்டான். ஆங்கிலேயர்களுக்கு எதிராகக் குரல் கொடுத்த முதல் மாவீரனாக “பூலித்தேவன்” வரலாற்றுப்பக்கங்களில் குறிப்பிடப்படுகின்றான். கி.பி.1755 முதல் கி.பி.1767 ஆம் ஆண்டு வரை பூலித்தேவன் பல போர்களைச் சந்திக்க நேர்ந்தது. பனிரெண்டு ஆண்டுகள் தொடர்ந்த போரில் கி.பி.1761ஆம் ஆண்டு கான்சாகிபுடன் இறுதியாக நடந்த போரில் பூலித்தேவன் படைகள் யூகப்கானிடம் தோற்றன. இங்கிலிருந்து பீரங்கிகள் கொண்டு பூலித்தேவன் கோட்டையை உடைத்தனர். கோட்டைக்குள் ஆங்கிலேயர் படை நுழைய பூலித்தேவர் கடலாடிக்குத் தந்திரமாகத் தப்பிச்சென்றார்.

கோட்டையை விட்டு வெளியேநின்றாலும் இரகசியாகவே படைகளைத் திரட்டினார். பிறகு மீண்டும் கோட்டையைக் கைப்பற்றிச் சீர்படுத்தினார். இதனைக் கண்டு ஆங்கிலேயர்கள் வெகுண்டு நெற்கட்டான் செவ்வல்பாளையத்தின் பூலித்தேவரை ஒரு பெரும்படையுடன் வந்துதாக்கினார். பீரங்கிக்கு முன்னர் வாளும் வேலும் தோற்றன. மன்னர் போரின் பொழுது பெய்த மழையால் தப்பிச்சென்று வாழ்ந்தார். ஆங்கிலேயர் அவரைத் தீவிரமாகத் தேடினர்.ஆரணிக்கோட்டையின் தலைவன் தலைநாராயணன் என்பவனின் மாளிகைக்கும் பூலித்தேவரை வரவழைத்து கைது செய்து பிறகு தூக்கியிலிடப்பட்டதாக வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

அனந்த நாராயணன் மாளிகையில் கைது செய்து பாளையங்கோட்டைக்குப் பூலித்தேவனை அழைத்துச் செல்லும் பொழுது பூலித்தேவன் சங்கரன் கோவில் இறைவனை வழிபட்டதாகவும் அப்பொழுது பெரிய புகை மண்டலமும் சோதியும் தோன்றி, கைவிலங்குகள் அறுந்து விழ சோதியில் கலந்தார் என்றும் சிவத்துடன் ஐக்கியமானதால் 'பூலிசிவஞானம்' ஆனார் என்றும் நாட்டுப்புறப்பாடல்கள் கூறுகின்றன. இது கதையா அன்றி உண்மையா என்று உணரமுடியவில்லை. ஆங்கிலேயர்கள் மக்களின் புரட்சியைக் கட்டுப்படுத்த முடியாது என்பதால் உருவாக்கிய கட்டுக்கதையாகவும் இருக்கலாம் என்பதும் கூறப்படுகிறது.

## 12.5 வீரபாண்டியக் கட்டபொம்மன்

பாளையக்காராகள் மரபில் பாஞ்சலங்குறிச்சி என்னும் பகுதிக்கு வீரபாண்டியக் கட்டபொம்மன் ஆட்சி புரிந்தான். இவன் கி.பி. 1790 முதல் 1799வரை ஆட்சி புரிந்த காலத்தில் ஆங்கிலேயர்களுக்கு வரிகொடுக்க மறுத்தான். ஆற்காடு நவாபும் ஆங்கிலேயர்களும் வரிபெறும் உரிமையை மாறிமாறிப் பெற்றாலும் ஆங்கிலேயர்கள் அவ்வுரிமையைத் தாங்களே எடுத்துக்கொண்டதோடு மன்னர்கள் யாவரையும் பொம்மைகளாக்கித் தாங்களே ஆட்சி புரியும் ஆதிக்கத்தை அதிகரித்துக் கொண்டடே சென்றனர். எதிர்த்த மன்னர்களைக் கொன்றொழிக்கவும் செய்தனர். கி.பி.1797 ஆம் ஆண்டு ஆங்கிலேயர்க் கிழக்கு இந்தியக்கம்பெனிக்குச் செலுத்த வேண்டிய

வரியினைச் செலுத்த மறுத்தான். இராமநாதபுரத்தில் கிழக்கிந்தியக் கம்பெனியுடன் முரண்பாடு கொண்டிருந்த அனைவரையும் ஒன்று திரட்டித் தனக்குக் துணையாகச் சேர்த்துக்கொண்டான். கிழக்கிந்தியக் கம்பெனிக்கு திறை செலுத்திக் கொண்டிருந்த எட்டையபுரம் பாளையத்தின் மேல் பாய்ந்து அடிக்கடித் துன்புறுத்தினான்.

இராமநாதபுரத்து கலெக்டர் ஜாக்சன் என்பவன் தன்னை வந்து சந்திக்குமாறு கட்டபொம்மனுக்கு ஆணையிட்டான். அந்த ஆணைக்குக் கட்டுப்பட்டு ஜாக்சனுடைய சந்திப்பு கிடைக்கவில்லை. தொடர்ந்து சில கலகங்களும் கிழக்கிந்தியக்கம்பெனிக்கு பக்கமும் கட்டபொம்மன் பக்கமும் நிகழ்ந்தன. கிழக்கிந்தியக் கம்பெனியின் சேனைத் தலைவன் ‘கிளார்க்’ என்பவன் கொல்லப்பட்டு இறந்தான். கட்டபொம்மன் தன் தம்பி ஊமைத்துரையுடன் கிழக்கிந்தியக் கம்பெனியின் பிடியிலிருந்து தப்பியோடி இராமநாதபுரத்துப் பாளையக்காரர்கள் பலரையும் தனக்கு உடந்தையாக்கிக் கொண்டு, பெரும் படையையும் திரட்டினார். ஆங்கிலேய அரசு மேஜர் பானர்மேன் என்னும் படைத்தலைவனிடம் கட்டபொம்மனைத் தண்டிக்கும் பணியைத் தந்தது. அவர்கள் இருவருக்குமிடையே போர்கள் பல நிகழ்ந்தன. கட்டபொம்மனுக்கு உதவிய சுந்தரபாண்டிய நாயக்கனும் தானாபதிப்பிள்ளையும் தூக்கிலிடப்பட்டனர். கட்டபொம்மன் காட்டில் ஒளிந்து தப்பித்துக் கொண்டான். புதுக்கோட்டை மன்னன் விசயரகுநாத தொண்டைமான் கட்டபொம்மனுக்குக் முதலில் அடைக்கலம் கொடுத்துப் பிறகு அவனைக் கம்பெனியிடம் காட்டிக் கொடுத்து விட்டான். பானர்மேன் கட்டபொம்மன் மீது பல குற்றச்சாட்டுகளை வைத்தான்.

அக்குற்றச்சாட்டுகளைப் பெருமிதத்துடன் கட்டபொம்மன் ஒப்புக்கொள்ள, கயத்தாறு என்னுமிடத்தில் தூக்கிலிடப்பட்டான். கட்டபொம்மன் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்த்துக் குரல் கொடுத்து, நாட்டுரிமைக்காக நெஞ்சுரமும் நேர்மையும் கொ்ணடு போராடியதோடு தன் உயிரையும் செம்மாந்து கொடுத்த வீரன் என்பதால் வீரபாண்டியக்கட்டபொம்மனாக வரலாற்றில் பதிவு பெற்றான். ஆங்கிலேயருக்கு எதிரான எதிர்ப்புக்குரலை முதலில் முழக்கியவர்கள் மதுரை நாயக்கர்களும், நாயக்கர் உருவாக்கிய பாளையக்காரக் குறுநில மன்னர்களுமே என்பது வரலாற்று உண்மையாகும்.

## 12.6 மருது பாண்டியரும் விடுதலைப்போரும்

குறிப்புகள்

இந்திய விடுதலைப்போரில் தமிழத்தின் தொடக்ககால வீரர்களாக அறியப்படுகின்றவர்கள் சின்னமருது, பெரியமருது என அழைக்கப்பெற்ற மருது பாண்டியர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். கி.பி.1780 முதல் 1801 வரை சிவகங்கைச் சீமையை ஆட்சி செய்தவர்கள் மருது சகோதரர்கள் புரட்சிக்கோட்டையாக காளையார்கோவில் விளங்கியது. ஆங்கிலேயருக்கு எதிரான புரட்சியில் இணைந்து செயல்பட ஒரு கூட்டிணைப்பை உருவாக்கினர். அதற்கு ‘சிவகங்கைக் கூட்டிணைப்பு’ எனப் பெயரிடப்பட்டது கட்டபொம்மனின் திருநெல்வேலி கூட்டிணைப்பும் தாராபுரம், தேவதானம், கரூர், கன்னிவாடி. காங்கேயம், கொழுமம், சங்ககிரி, மணப்பாறை ஆகிய பாளையங்கள் உள்ளிடக்கிய கோபாலின் திண்டுக்கல் கூட்டினணைப்பும் மருது சகோதரர்களுக்குத் துணை நின்றன. கி.பி. 1799இல் மைசூர்ப் போருக்கு உதவியாகத் திரும்ப அழைக்கப்பட்ட காலத்தை மருது சகோதரர்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய இடங்களிலிருந்த காவல் நிலையங்களைப் படைக்கருவிகளையும் வெடி மருந்துகளையும் கைப்பற்றித் தாக்கினர். புரட்சிக்காரர்களின் இச்செயலைத் தண்டிக்கும் வகையில் கி.பி.1801 ஆம் ஆண்டு காளையார்கோவிலை ஆங்கிலேயர்கள் தாக்கினர். போரின் கடுமையான தாக்குதலால் மருதுபாண்டியர்கள் தப்பிச் சென்று திண்டுக்கல்லை அடைந்தனர். ஆனாலும் ஆங்கிலேயப் படைகள் தொடர்ந்து மருதுப்பாண்டியரை விரட்டிச் சென்று சிறை செய்தனர். மருதுபாண்டியரும் கோபாலன் உள்ளிட்ட எழுபத்து மூவர் தூக்கிலிடப்பட்டனர். திண்டுக்கல், சிவகங்கைக் கோட்டைகள் ‘போராட்ட வீரர்களின் குகை’ என அழைக்கப் பெற்ற அந்த இடங்கள் யாவும் உருத்தெரியாமல் சிதைக்கப்பட்டன. இதுவே தமிகத்தில் சுதந்திர இயக்கத்திற்கான போராட்ட படிநிலைகளாக உள்ளது. பாளையக்காரர்களின் கிளர்ச்சிகளின் முதன்மை வித்துக்களாக முதல் தேசிய எழுச்சியாக அமைவதாக வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிட்டு உள்ளனர்.

ஆங்கிலேயர்களை எதிர்த்த வீரர்களில் கொங்கு நாட்டில் கிளர்ச்சி புரிந்த வீரனாக 'தீர்த்தகிரி' என்னும் கொங்கு நாட்டு வீரன் குறிப்பிடப்படுகிறான்.

## 12.7 தொகுப்புரை

குறிப்புகள்

தமிழகத்தில் மராட்டியர்கள் ஆட்சி கி.பி 1676 இல் தொடங்கி வேங்கோஜி '.ஷாஜி முதல் சரபோஜி துக்கோஜி பிரதாப்சிங் துல்ஜாஜி அமார்சிங் இரண்டாம் சரபோஜி சிவாஜி போன்ற மன்னர்கள் தஞ்சையை ஆட்சி புரிந்த நிலையும் தஞ்சையில் நிலவிய அரசியல் குழப்பங்களையும் எடுத்துரைத்துள்ளது . மதுரை நாயக்க மன்னர்களின் பாளையப்பட்டு அதிகாரவம்சத்தில் வந்த காத்தப்பப்பூலித்தேவர் ஆங்கிலப்படைகளை எதிர்த்துக் குரல் கொடுத்து போராடி உயிர் நீத்த நிகழ்வும் பாஞ்சாலங்குறிச்சியை ஆண்ட வீரபாண்டியக்கட்டபொம்மன் ஆங்கிலேயர்களை எதிர்த்த வரலாறும் விளக்கப்பெற்றுள்ளன . சிவகங்கை சீமையை ஆட்சி செய்த சின்னமருது பெரியமருது என்றழைக்கப்பட்ட மருது சகோதரர்களின் விடுதலை உணர்ச்சியும் இக்கூற்றில் மாணவர்கள் அறிவதற்கு உரியதாகின்றன .

## 12.8 மாதிரி வினாக்கள்

1.தமிழகத்தை ஆண்ட முதல் மன்னன் யார் ?

வேஙகோஜி மன்னன் -(கி.பி 1676-1688 வரை )

5. கி.பி 1676 முதல் கி.பி 1856 வரை தஞ்சைப்பகுதி எவருடைய ஆட்சியின் கீழ் இருந்தது ?

   மராட்டிய மன்னாகளின் ஆட்சியில் இருந்தது .

6. தஞ்சை சரசுவதிமகாலினை உருவாக்கியவா் யாா் ?

   இரண்டாம் சரபோஜி

7. கட்டபொம்மன் எவரை எதிர்த்துப் போரிட்டார் ?

கலெக்டர் ஜாக்சன்

8. சின்னமருது பெரியமருது என்றழைக்கப்படுகின்றவர்கள் யார் ?

குறிப்புகள்

மருது சகோதரர்கள்

**12.9 பயிற்சி வினாக்கள்**

1.மராட்டிய மன்னர்களின் ஆட்சியனை விளக்குக

2.பாளையக்காரர்களின் ஆங்கிலேய எதிர்ப்பின் பின்னணி யாது

**12.10 மேலும் அறிக**

முனைவர்.ம.சா.அறிவுடைநம்பி

தஞ்சை மராட்டியமன்னர்கள் வளர்த்த நுண்கலைகள்

நியூசெஞ்சுரி புக்□வுஸ் பிரைவேட் லிமிடெட்

அம்பத்தூர் சென்னை பதிப்பு -2016

**கூறு-13**

**இந்திய விடுதலைப் போரும் தமிழ்நாடும் - வேதாரண்யம் உப்பு சத்தியாகிரகம் - தமிழகக் கலைஞர்கள் கவிஞர்கள் இந்திய விடுதலைப் போரில் பங்கு பெறலும் தூண்டலும்**

**13.பாடஅமைப்பு**

**13.1 அறிமுகம்**

**13.2 நோக்கம்**

**13.3 இந்திய விடுதலைப்போரும் தமிழ்நாடும்**

**13.4 வேதாரண்யம் உப்புச் சத்தியாகிரகம்**

**13.5 தமிழக கலைஞர்கள் கவிஞர்கள் இந்திய விடுதலைப்போரில் பங்கு பெறலும் தூண்டலும்**

**13.5.1 சுப்பிரமணிய சிவா**

**13.5.2 வ.உ.சிதம்பரம் பிள்ளை**

**13.5.3 சுப்ரமணிய பாரதியார்**

**13.6 தொகுப்பரை**

**13.7 மாதிரி வினாக்கள்**

**13.8 பயிற்சி வினா**

**13.9 மேலும் படித்து அறிக**

குறிப்புகள்

**13.1 அறிமுகம்**

இந்திய விடுதலைப் போரும் தமிழ்நாடும் என்றவகையில் தமிழகத்தை ஆண்ட ஆங்கிலேயர்களை விரட்டியடித்த தமிழக வீரர்களின் போராட்டங்களையும் அவ்வீரர்களில் சிறந்த சுப்பிரமணியசிவா வ.உ.சிதம்பரம்பிள்ளை சுப்பிரமணியபாரதியார் ஆகியோரைப் பற்றியும் அறியலாம் . மேலும் இக்கூறு ஒத்துழையாமை இயக்கம் தண்டியாத்திரை வெள்ளையனே வெளியேறு போன்ற போராட்டங்கள் குறித்தும் விவரிக்கின்றன .

**13.2 நோக்கம்**

1. **இந்திய விடுதலைப் போர் நிகழ்வுகளை அறிதல்.**
2. **தமிழக விடுதலை வீரர்களைத் தெரிதல்**
3. **மாணவர்கள் தேசிய உணர்வும் நாட்டுப்பற்றும் பெறுதல்**

**13.3 இந்திய விடுதலைப் போரும் தமிழ்நாடும்**

இந்திய விடுதலைப் போரில் தமிழ்நாடு என்ற அளவில் ஆங்கில ஆட்சியை எதிர்த்துப் போராட்டத்தை முன் வைத்து மக்களிடையே போராட்டத்தைத் தூண்டிய பங்களிப்பில் தமிழ்நாட்டின்

பங்களிப்பும் முதன்மையாகதே. இந்தியாவின் விடுதலைப் போராட்ட நிலைகளைப் பொதுமக்களில் போராட்ட நிலை மற்றும் அடிப்படையாகக் கொண்டு மூன்றாகப் பகுத்துக் கூறுவர் வரலாற்று ஆய்வர்கள்.

குறிப்புகள்

1. காங்கிரசிற்கு முந்தைய காலம்
2. காந்தியடிகளுக்கு முந்தைய காலம்
3. காந்தியடிகள் காலம்

என டாக்டர் ஆ.இராமகிருட்டினன் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாடு ஆங்கிலேயர் ஆட்சியினை ஏற்றுக் கொள்ள மறுத்து நிகழ்த்திய போராட்டங்களில் காங்கிரஸ் என்னும் இயக்கம் தோன்றுவதற்கு முன்னே நிகழ்ந்தவையே வீறு கொண்ட புரட்சிப் போராட்டங்களாகும். ஆங்கிலேயர்களுக்கு அச்சமும் பீதியும் உண்டாக்கியவை அவை. அவற்றில் மதுரை நாயக்கர்களும் பாளையக்காரர்களும் ஆங்கில அரசினை நடுநடுங்கச் செய்தவர்கள். கட்டபொம்மன், மருதுசகோதரர்கள். பூலித்தேவன் போன்ற வீரர்கள் பலரும் இவர்களுக்கு உற்ற துணையாக நின்றவர்களும் ஆங்கில ஆட்சி தலை எடுக்க முடியாமல் செய்தவர்கள்.

ஆற்காடு நவாப்பின் நேரடி ஆதிக்கத்தில் அடங்கிய பாளையங்கள் கி.பி.1790இல் ஆங்கிலேயர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. பாளையங்களின் அதிகாரங்களைப் பறித்துக்கொண்டு அவற்றை ஆங்கில நிர்வாகத்திற்குக் கட்டுப்பட்டவைகளாக ஆக்க வேண்டும் என்ற நீதித்துறை இயக்குநர்களின் ஆலோசனையை வெல்லஸ்லி பிரபு நிறைவேற்ற விரும்பிப் பாளையக்காரர்களைத் திறை செலுத்துமாறு கட்டளை இட்டார். இத்திறை வசூலிக்கும் பொறுப்பினை ஏற்றிருந்த மாவட்ட ஆட்சித்தலைவர் அடக்குமுறையை தவிர்த்து விட்டதால் பாளையக்காரர்களுக்கும் ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனிக்குமிடையே கசப்புணர்வும் போராட்டங்களும் வெடிக்க ஆரம்பித்தன. பாளையக்காரர்கள் ஒன்றிணைந்து ஆங்கிலேயரை எதிர்க்கத் தொடங்கினர். ஆங்கிலேயர்களை பூலித்தேவன்,

கட்டபொம்மன், மருதுசகோதரர்கள், தீரன்சின்னமலை போன்றோர் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றனர்.

கி.பி.1806 ஆம் ஆண்டு ஆங்கிலேய அரசு ஆயுதப்படைகளில் செய்த சீர்த்திருத்தங்கள் வடநாட்டுப் படைவீரர்களின் சமய உணர்ச்சியைக் கிளர்ந்து எழுச் செய்தன்.

1. படைவீரர்கள் ஐரோப்பியரது தலைப்பாகை போன்ற புதிய தலைப்பாகையை அணிந்து கொள்ள வேண்டும்.
2. மீசை தாடி வைத்துக் கொள்ளக் கூடாது.
3. சாதி சமய வேறுபாடுகளைச் சுட்டும் நெற்றிப்பொட்டு, காதணி போன்றவற்றை இடக்கூடாது.

போன்ற விதிகள் ஆங்கிலேயர்கள் தங்களைக் கிறிஸ்த்தவ சமயத்திற்கு மாற்ற எடுத்த மறைமுக முயற்சி என்பதை தமிழக வீரர்கள் புரிந்து கொண்டனர். ஊதிய உயர்வின்மை, பதவி உயர்வு தரப்படாமை, ஆங்கிலேய அதிகாரிகளின் கெடுபிடி, தவறு கண்டவிடத்துத் தரப்பட்ட தண்டனையின் கொடூரம் போன்றவற்றால் மனக்கசப்படைந்து வீரர்கள் வெல்லஸ்ஸி பிரபுவின் ‘ஆக்கிரமிப்புக் கொள்கை’யால் தீவிரமடைந்து இந்திய அரசமரபினர் படைவீரர்களுடன் தொடர்பு கொண்டு பெரும் கிளர்ச்சியாக மாறியது. வேலூர்க் கோட்டைக்குள் இப்புரட்சி நிகழ்ந்தமையால் வேலூர்ப்புரட்சி என அழைக்கப்பெற்றது. வேலூர்க்கோட்டையைக் கைப்பற்றுவது என்னும் நோக்குடன் கி.பி.1806இல் ஜீலை 10 ஆம் நாள் புரட்சியில் இறங்கிய படைவீரர்கள் ஐரோப்பியர்கள் மிகுதியாக இருந்த படைப்பிரிவினையும் ஐரோப்பிய அதிகாரிகளின் குடியிருப்புகளையும் கடுமையாகத் தாக்கினர். எனினும் இப்புரட்சி மிக விரைவில் ஒடுக்கப்பட்டு, இருபக்கமும் வீரர்கள் கணிசமாக இருந்தனர். வேலூர்க்கோட்டையில் சிறை வைக்கப்பட்டிருந்த திப்பு சுல்தானின் மக்கள் இக்கிளர்ச்சியைத் தூண்டியதாகக் கருதியதால் அவர்களைக் கல்கத்தாவிற்கு அனுப்பினர். இப்போராட்டத்திற்கும் கலகத்திற்கும் காரணமாக இருந்த சென்னை ஆளுநர் பதவிலிருந்து நீக்கப்பட்டார். தமிழகத்தில் தோன்றிய இப்புரட்சியே பெரும் புரட்சியாக அதன் நீட்சி வட இந்தியாவில் கி.பி.1853இல் ‘சிப்பாய்கலகம்’ என்னும்

பெயரில் வெடித்தது. இக்காலத்தில் அரசியல் சமய, பொருளாதாரக் கொந்தளிப்புகளும் தோன்றின. இக்கிளர்ச்சியிலும் இருபக்கமும் பலர் கொல்லப்பட்டனர். இவ்வகையில் தமிழகத்தில் காங்கிரஸ் இயக்கம் தோன்றுவதற்கு முன்பாக எழுந்த போராட்டங்களாகும்.

குறிப்புகள்

இந்திய நாட்டில் வாழும் மக்கள் நலனுக்கென்று 1852இல் 'பிரிட்டிஷ் இந்தியக் கழகம்' என்னும் சபை தொடங்கப்பெற்றது. அதில் ஆங்கிலேயர்கள் பெரும் பங்கு கொண்டு உழைத்தனர். இந்தியர்களும் அதில் இருந்தனர். அக்கழகமே 'இந்திய நே'னல் காங்கிரஸ்' என்னும் பெயரில் வருமாறு 1947இல் வெள்ளையர்கள் ஆட்சியை விரட்டும் அளவிற்கு வளர்ச்சி பெற்றது. 'இந்தியன் நேஷனல் காங்கிரஸ்' என மாறிய பிறகும் அதில் ஆங்கிலேயர்கள் பங்கு கொண்டே இருந்தனர். 28.12.1885இல் இந்திய தேசிய காங்கிரஸ் தொடங்கப்பெற்றது. அதில் 72 உறுப்பினர்கள் இருந்தனர். இந்த இயக்கம் பல சமூகப் பணிகளில் பெரிதும் ஊக்கம் காட்டியது.

"தேய்ந்திருந்த இந்தியாவின் நிலையை மேம்படுத்தும் நோக்கம் கொண்டிருந்தமையால் இவ்வியக்கம் "நேர்மையான முறையீடுகளை அடக்கமாக அரசியலாரிடம் விண்ணப்பித்து நின்றது" என டாக்டர் ஆ.கிருட்டினன் கூறியுள்ளார். கி.பி.1906இல் காங்கிரஸ் மாநாடு திலகரின் தலைமையில் கூடி 'சுயராஜ்யம் நமது பிறப்புரிமை' என அறிவித்த பின்னர் விடுதலை இயக்கம் தீவிரம் அடைந்தது. இத்தீவிரம் கி.பி.1907இல் சூரத்தில் நடைபெற்ற மாநாட்டின் பொழுது தீவிரவாதிகள், மிதவாதிகள் எனப் பிளவுபெற்று நின்றது. தீவிரவாதப்பிரிவில் வ.உ.சிதம்பரனார், சுப்பிரமணியபாரதியார் போன்றோர் இருந்தனர்.

விடுதலைப்போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பலரையும் ஒன்றிணைத்து 'சத்தியாகிரகம்' என்னும் கோட்பாட்டின் கீழ் அனைவரையும் ஒன்றிணைத்தவர் காந்தியடிகள். கி.பி.1919இல் காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கி மக்களின் ஆதரவோடு வளர்ச்சி அடைந்தது. கி.பி.1920இல் காந்தியடிகள் தமிழகத்திற்கு வருகை புரிந்தார். இவ்வருகை விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தமிழர்களை ஊக்குவித்தது. ஒத்துழையாமை இயக்கத்தில் தீவிரம் காட்டியவர்களுள் சத்திய

மூர்த்தி, இராஜாஜி, பெரியார் ஈ.வே.ராமசாமி போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். கி.பி.1885இல் தொடங்கப் பெற்ற இந்தியதேசிய காங்கிரஸ் கி.பி.1887, 1894, 1898, 1903, 1914, 1927 ஆகிய ஆண்டுகளில் சென்னையில் மாநாடுகளைக் கூட்டியது. கி.பி.1927இல் நிகழ்ந்த மாநாட்டில் நாட்டின் முழுவிடுதலையே காங்கிரசின் குறிக்கோள் என அறிவிக்கப்பட்டது. கி.பி.1927க்கு முன் கி.பி.1926இல் காஞ்சியில் நடந்த மாநாட்டில் தமிழ்நாடு காங்கிரஸ் வகுப்புவாதப் பிரதிநிதித்துவத்திற்காகப் போராடி,ஈரோடு இராமசாமி நாயக்கர் காங்கிரஸை விட்டு வெளியேறினார். அவர் 'நீதிக்கட்சி' என்னும் பிராமணரல்லாத மந்திரிசபை, ஆங்கிலேயர் ஆணைகளுக்குக் கட்டுப்பட்டு அடங்கிச் செயலாற்றி வந்தது. அது பிராமணரல்லாதோருக்கு உதவ வேண்டுமென வகுப்புவாதப் பிரதிநித்துவ முறையில் அரசாங்க உத்தியோகங்களைப் பகிர்ந்து அளித்ததன்றி, கல்வி பயில தாழ்ந்த வகுப்பினருக்குப் பல வசதிகளைக் குறிப்பாக 'இலவசக்கல்வி' பெற வழிவகை செய்தது.

கி.பி.1930இல் வரி செலுத்த மறுக்கும் சட்டமறுப்பு இயக்கத்தைக் காந்தியடிகள் தொடங்கிய பொழுது தஞ்சை உழவர்கள் அரசுக்கு வரி செலுத்த மறுப்புத் தெரிவித்தார். இந்த ஆண்டில் உப்புச் சத்தியாகிரகம் காந்தியடிகள் தலைமையில் 'தண்டியாத்திரை' என்னும் பெயரில் நிகழ்ந்தது. தமிழகத்தில் இராஜாஜியின் தலைமையில் வேதாராண்யத்தில் சத்தியாகிரக இயக்கம் தீவிரமாக நடைபெற்றது.

கி.பி.1942இல் இந்தியதேசியகாங்கிரஸ் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தைத் தொடங்கியது. இந்த இயக்கத்தில் தீவிரம் காட்டியவர்களில் சத்தியமூர்த்தி, காமராஜ் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இந்த இயக்கத்தை உடனே தடுக்க அரசு முடிவு செய்தது. 'காங்கிரஸ் ஒரு சட்ட விரோதமான இயக்கம்' என அறிவிக்கப்பட்டு அதன் தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர். இந்தியா முழுவதும் போராட்டங்கள் வெடித்தன. நந்திக்கம்பிகளை அறுப்பதும், புகைவண்டித் தடங்களைச் சேதப்படுத்துவம் போன்ற வன்முறைச் செயல்கள் தலைவிரித்தாடின. அதனால் இரண்டாம் உலகப் போரால் வலுவிழந்து கிடந்த



குறிப்புகள்

ஆங்கிலேய அரசு 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15இல் இந்தியா விடுதலை பெற்றதாக அறிவித்தது.

இந்திய விடுதலைப் போராட்டத்தோடு இயைந்து தமிழகமும் பல போராட்டங்களை நிகழ்த்தி, தம் சுவடுகளைப் பதித்து உள்ளதை வரலாற்றுக் குறிப்புகள் மூலமாக அறியமுடியும்.

## 13.4 வேதாரண்யம் உப்புச் சத்தியாகிரகம்

இந்திய தேசிய காங்கிரஸ் டிசம்பர் 31, 1929இல் லாகூரின் ராவி நதிக்கரையில் இந்தியாவில் முவர்ணக்கொடியை ஏற்றியது. இந்திய தேசிய காங்கிரஸ், காந்தி மற்றும் ஜவஹர்லால் நேருவால் வழிகாட்டப் பெற்று 1930இல் விடுதலைப் பிரகடனத்தை வெளியிட்டது. இதில் மக்களின் மீதான வரிகளைத் தடுத்து நிறுத்தத் தயாரவதை உள்ளடக்கியிருந்தது. காந்தியின் திட்டமானது அறவழியில் ஆங்கிலேயரின் உப்புச்சட்டத்தைக் குறி வைத்து எதிர்ப்பதாக இருந்தது. கி.பி. 1882இல் உப்புச்சட்டம் ஆங்கிலேயருக்கு உப்பின் சேகரிப்பிற்கும் உற்பத்திகளும் ஒட்டுமொத்த உரிமையைக்கொடுத்து அதன் விற்பனையை அரசு உப்புக் கிடங்குகளிலும், உப்பு வரி விதிப்பதிலும் வரையறுத்தது. உப்புச்சட்டத்தை மீறுவதும் குற்றச் செயலானது. காந்தி 'உப்புச் சத்தியாகிரகம்' ஒன்றினை முன்னெடுத்தச் செல்வதற்கு ஒவ்வொரு இந்திய குடிமகனும் காற்று, நீருக்கு அடுத்தபடியாக உப்பினைப் பயன்படுத்தும் முக்கியத்துவத்தை அறிந்திருந்தார். அரசு வருமானத்தில் 8.2மூ உப்பினால் கிடைக்கிறது என்பதால் மக்களின் அன்றாடப் பயன்பாட்டிற்குத் தேவையான ஒன்று என்பதால் காந்தியடிகள் உப்புச் சத்தியாகிரகத்தை போராட்டக்களமாக்க முடிவெடுத்தார். இந்து, முஸ்லீம் ஒற்றுமைக்கும் இது காரணியாக அமையும் என எண்ணிய காந்தியடிகளின் எண்ணத்தின் வலுவினை ஜவ□ர்லால் நேரு உள்ளிட்ட தலைவர்கள் பிற்காலத்தில் உணாந்து கொண்டனா். காந்தியடிகள் அறவழியிலான இப்போராட்த்திற்குத் துணையாக நடைப்பயணம் மேற்கொள்ள தம் கிராம மக்களைப் பயன்படுத்திக்கொண்டார். 4 மாவட்டங்கள், மற்றும் 48 கிராமங்கள் வழியே கடந்துசென்று தண்டியினை அடைவது என்பது திட்டமிடப்பட்டது. காந்தி சாரணியர்களை ஒவ்வொரு கிராமத்திற்கும்

நடைப்பயணத்திற்கு முன்பே அனுப்பினார். மாலையில் பயணம் நிற்குமிடம் கடந்த காலத்தொடர்புகள் எனப் பலவற்றையும் திட்டமிட்டு காந்தியடிகள் அறப்போரினைத் தொடங்கினார். கி.பி 1930 இல் மார்ச் 2 இல் காந்தி அரசப்பிரதிநிதியாகிய இர்வின் பிரபுவிற்கு அனுப்பிய கடிதமொன்றில் நிலவரி அந்நியத்துணி மீது சுங்கவரி, இராணுவ செலவினங்களைக் குறைப்பது ஆகியவற்றோடு 'உப்புவரி' முக்கியமானதாக இருந்தது. ஒவ்வொரு கிராமத்தைக் கடந்து செல்லும் பொழுதும் காந்தியடிகள் உரையாற்றுவதும். மக்கள் மத்தளம் மற்றும் கைத்தாளமிட்டு வரவேற்பதும், புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதும் என நிகழ்வுகள் நிகழ்ந்துக் கொண்டேயிருந்தன. காந்தியடிகள் இதனை 'ஏழைமனிதனின் போர்' என்றார். இறுதியில் காந்தி கையளவு உப்பை எடுத்து உயர்த்திப் பிடித்து 'இத்துடன் நான் ஆங்கிலேய ஆட்சியின் அடித்தளத்தை அசைக்கின்றேன். கடல்நீரைக் கொதிக்க வைத்து சட்டத்தை மீறி உப்பெடுத்தார். தம்முடைய ஆயிரக்கணக்கான தொண்டர்களிடம் அதே போல் உப்பினை எடுக்குமாறு பரிந்துரைத்தார். இது பேரியக்கமாகக் கிளர்ந்தெழுந்தது. இதில் பெண்கள் அனைவரும் பெருந்திரளாகப் பங்கேற்றனர். இல்லங்களில் உப்பினைக் காய்ச்சிப் பயன்படுத்தித் தயாரித்து விற்கவும் செய்தனர். உப்பிற்கான சட்டத்தினை உடைத்து எதிர்த்ததாகக் கூறினார். உப்புச்சத்தியாகிரகம் ஏழைகள், பெண்கள் யாவரையும் சுதந்திரப்போராட்டத்தில் பங்கேற்பதற்கு மூலக்காரணியாகவும் விளங்கிற்று என்பதற்கு எவ்வித மறுப்பும் இல்லை. தமிழகத்திலும் அந்த இயக்கம் பெருந்தீயெனப் பரவியது. 'கத்தியின்றி' இரத்தமின்றி யுத்தமென்று வருகுது. சத்தியத்தின் நித்தியத்தை நம்பும் யாரும் சேருவீர்' என நாமக்கல் கவிஞர் அவர்களின் பாடலோடு பெருமுழக்கமிட்டு, இராஜாஜி அவர்களின் தலைமையில் 1930இல் மார்ச் 2ல் புறப்பட்டது. பெரும் தொண்டர் கூட்டம் ஒன்று திரள, திருச்சிராப்பள்ளியிலிருந்து புறப்பட்டுச் வேதாரண்யத்தில் சென்று, உப்புக் காய்ச்சியது. தடையை மீறி உப்புக் காய்ச்சிய பலரும் அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டனர். மீண்டும் சுதந்திரப்போரின் பேரிகை ஓங்கி முழங்கிற்று.

## 13.5 தமிழகக்கலைஞர்கள், கவிஞர்கள்இந்திய விடுதலைப் போரில் பங்கு பெறலும் தூண்டலும்



இந்தியச் சுதந்திர வேள்விக்குத் தீக்கு தங்கள் வாழ்க்கையையும் உயிரையும் நெய்யாகச் சொரிந்தவர்கள் பலர். தமிழகத்திலும் குடும்பத்தையும் உறவையும் உயிரையும் துச்சமாக எண்ணிப் போராடியவர்களின் எண்ணிக்கை எண்ணிக்கையறியா. மதுரைப்பாளையத்து மன்னர்கள் தொடங்கி கலைஞர்களும் கவிஞர்களும் ஆங்கிலேயஏகாதிபத்தியத்தை அடக்கி ஒடுக்கும் முயற்சியில் தீவிரமாகச் செயல்பட்டனர். அதனாலேயே அவர்கள் புரட்சியாளர்கள்,தீவிரவாதிகள் எனக் கொல்லப்பட்டனர். வருங்காலச் சுதந்திர இந்தியாவைத் தன் கண்களில் கனவாய்க் கமந்து நனவாக்கியவர்களின் ஒவ்வொரு துளியும் பாடும் பாடல் 'வந்தேமாதரம் வந்தேமாதரம்' என்பது .தமிழ் மக்கள் அறிந்தும் அறியாத பெயர்களின் பட்டியல் அதிகமெனினும் அப்பெயர்களையாவது அறிவதே சுதந்திரக் காற்றினைச் சுவாசிக்கும் நமக்கு நன்றிக்கடனாகும்.

மன்னர் பூலித்தேவன், மன்னர் அழகுமுத்துகோன், வீரபாண்டிய கட்டபொம்மன், மருதுபாண்டியன், வேலுநாச்சியார், முத்து வடுகநாதர், தீரன்சின்ன மலை போன்ற மன்னர்களோடு கலைஞர்களும் கவிஞர்களும் தங்கள் போராட்டக்குரலை ஓங்கி முழக்கியுள்ளனர். சுப்பிரமணியசிவா, வ.உ. சிதம்பரம்பிள்ளை, ப.ஜீவானந்தம், வ.வே.சுப்பிரமணிய அய்யர், மகாகவிசுப்ரமணிய பாரதி, சுத்தானந்த பாரதி, எஸ்.எஸ்.விஸ்வநாத தாஸ், நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை, கணபதி தீட்சிதர் சுப்பிரமணிய அய்யர், ம.பொ.சிவஞானம், திரு.வி.கல்யாண சுந்தரனார், ராஜாஜி, கல்கி.ரா.கிருஷ்ணமூர்த்தி போன்றவர்கள் தமிழகத்தின் விடுதலைப்போராட்டத்தில் தங்கள் எழுத்தாலும் பேச்சாலும் கவிதையாலும் பாடலாலும் மக்களிடையே விடுதலை உணர்ச்சியைத் தூண்டியவர்கள்.

### 13.5.1. சுப்பிரமணிய சிவா

சுப்பிரமணிய சிவா வ.உ. சிதம்பரணாருடனும், சுப்பிரமணிய பாரதியாருடனும்: இணைந்து விடுதலைப்போராட்டத்தில் ஈடுபட்டார். இவர் தான் ஒருவராகவே பல்வேறு இடங்களுக்கு நடந்து பயணம் செய்து பிரச்சாரம் செய்து விடுதலை உணர்ச்சியைத் தூண்டினர்.

பாரதியும் தன் ‘சுதேசகீதங்களால்’ அவ்வுணர்ச்சியை மேலும் தூண்டிவிட்டார். விளக்கின் ஒளி போல விடுதலை உணர்ச்சியானது அவாகளிடமிருந்து மக்களிடையே பரவியது. அந்த ஒளி மகாத்மா காந்தியால் ஒளிப்பிழம்பாக மாறியது.. ‘ஞானபானு’‘பிரபஞ்சமித்தரன்’ போன்ற பத்திரிகைகள் நடத்தி அதன் மூலம் உணர்ச்சி மிகு கட்டுரைகளை எழுதினார். 1920இல் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிற்குப் பிரதிநிதியாகச் சென்றார். இருமுறை சிறை சென்றார். இரண்டாம் முறை சிறை சென்றபொழுது தொழுநோய் தாக்குண்டு, பாரத மாதாவிற்குக் கோயில் எழுப்பும் பணியில் தீவிரமடைத்து நிதி திரட்டும் பணியில் ஈடுபட்டார். ஆனால் அவர் எண்ணம் ஈடேறு முன் நோய் காரணமாக சுப்பிரமணிய சிவா 1925இல் 41 வயதில் இறந்து போனார்.

குறிப்புகள்

### 13.5.2 வ.உ.சிதம்பரம்பிள்ளை

‘கப்பலோட்டிய தமிழன்’ எனச் சிறப்பிக்கப் பெறும் வ.உ. சிதம்பரனார் கி.பி.1906 இல் சுதேசி நீராவிக்கப்பல் போக்குவரத்துக் கம்பெனியைத் தொடங்கியவர். இவர் வள்ளியப்பன் உலக நாதன், சிதம்பரம்பிள்ளை.அவர் இயக்கிய முதல் சுதேசி நீராவிக்கப்பல் தூத்துக்குடிக்கும் கொழும்புவிற்கும் இடையே கடல்வழிப் போக்குவரத்தை மேற்கொண்டது. சட்டம் பயின்று பலருக்கும் இலவசமாக வாதாடினார். திருச்சிராப்பள்ளியில் வழக்கறிஞராகப் பணியாற்றிய வ.உ.சிதம்பரனார் மீது காவல்துறையினர் கோபம் கொண்டதால் தந்தையின் விருப்பப்படி தூத்துக்குடிக்குச் சென்று அங்கும் சிறந்த வழக்கறிஞராகச் செயல்பட்டார். சென்னைக்குச் செல்லும் பொழுதெல்லாம் மகாகவிசுப்ரமணியபாரதியரைச் சந்தித்து தேசிய உணர்ச்சிமிக்க சுதந்திரப்பாடல்களைக் கேட்பதும் பேசுவதும் வழக்கமாகக் கொண்டிருந்தார். ராமகிரு‘ண மடத்தின் துறவியான ‘சசிமகராஜ்’ என்பவரைச் சந்தித்த பிறகு வ.உ.சிதம்பரனார். ‘தூத்துக்குடி கைத்தொழில் சங்கம்,‘சுதேசிய பண்டகசாலை, வேளாண் சங்கம் ‘சுதேசி பிரச்சார சபை, தா்மசங்க நெசவுசாலை’ போன்றவற்றை ஏற்படுத்தினார். அதன் பிறகே சுதேசிக்கப்பல் நிறுவனத்தைப் பங்குதாரா்கள் மூலம் துவக்கி, கப்பலினை ‘ஷாலேன் ஸ்டீமா்ஸ் கம்பெனியிடமிருந்து வாடகைக்குப் பெற்று வணிகம் செய்ய முயற்சித்தார். ஆங்கிலேயா்கள் தங்கள் நிறுவனத்திற்குப் போட்டியாக

குறிப்புகள்

வ.உ.சிதம்பரனார் செயல்படும்நிலையில் ‘ஷாலேன் ஸ்மேர்ஸ்’ கம்பெனியிடம வாடகைக்குக் கப்பல் தரக் கூடாது என்று மிரட்டியது. வ.உ.சிதம்பரனார் இலங்கை சென்று கப்பலை வாடகைக்குக் கொணர்ந்தார். ‘சொந்த கப்பல்’ பெறும் முயற்சியில் கல்கத்தா, மும்பை போன்ற பல இடங்களுக்குச் சென்று பங்குதாரர்களைச் சேர்த்து ‘எஸ்.எஸ். காலியோ’ என்னும் கப்பலுடன் திரும்பினார். மக்கள் பயணம் செய்ததோடு தங்கள் சரக்குகளையும் சுதேசிக்கப்பலில் அனுப்பினார். பிரிட்டிஷ் கப்பல் நிறுவனம் இலவசமாக கப்பலைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதித்தது. வ.உ.சிதம்பரனார் பொதுமக்களிடம் இலவசமாக கப்பலைப் பயன்படுத்த வேண்டாம் என்று கூறியதன் போரில் எவரும்செல்லவில்லை. வ.உ.சிதம்பரனாருக்கு ஆங்கிலேயர்கள் கையூட்டு தர முயற்சித்தனர். வ.உ. சிதம்பரனார் சுதேசிக்கப்பலோடு இணைந்து விடுதலை உணர்ச்சியையும், தொழிலாளர் போராட்டத்தையும் ஆதரித்தார். நூற்பாலையின் வேலைநிறுத்தத்திற்கு வ.உ.சிதம்பரனாரின் பேச்சும் உறுதுணையும் 1908 ஆம் ஆண்டு தொழிலாளர்களுக்கு வேரைநேரக் குறைப்பும், ஞாயிற்றுக்கிழமை வாரவிடுமுறையாகவும், கூலியை உயர்த்தவும் செய்தது. மக்களிடையே வ.உ.சிதம்பரனாருக்கு மதிப்பும் மரியாதையும் அதிகரித்தது கண்டும். சுதேசிக்கப்பல் மீதான எரிச்சலும் ஆங்கிலேயர்கள் வ.உ.சிதம்பரனாரைச் சிறை செய்ய முயன்றனர். வங்கச் சுதந்திரப் போராட்ட வீரரான பிபின் சந்திரபால் 1905ஆம் ஆண்டு மார்ச் 9ஆம் நாள் விடுதலை பெற்றதற்கு பெருவிழா கொண்டாட வ.உ.சிதம்பரனார் திட்டமிட்டார். ஆங்கில அரசு அவரைக் கைது செய்ய முடிவு செய்து தூத்துக்குடியில் மக்கள் கொதித்தெழுவார்கள் என்பதால் திருநெல்வேலிக்கு வரவழைத்தனர். சுப்பிரமணிய சிவாவுடன் சென்ற வ.உ.சியிடம் பொதுக்கூட்டங்களில் கலந்து கொள்ளக்கூடாது. சொற்பொழிவாற்றக்கூடாது என்றனர். மறுத்த இருவரையும் 1908 ஆம் ஆண்டு மார்ச் 12ம் நாள் கைது செய்தனர். உடனே மக்கள் கிளரிந்தெழுந்து ஆர்ப்பாட்டம் செய்தனர். மார்ச் 14ஆம் நாள் முதல் மார்ச் 19ஆம் நாள் வரை தொழிலாளர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். காவல்துறையினர் துப்பாக்கிச்சூடு நிகழ்த்தினர். இந்நிகழ்வு ‘திருநெல்வேலி எழுச்சி’ என வரலாற்றுப் பக்கங்களில் எழுதப்பெற்றது. வ.உ.சிதம்பரனாருக்கு எதிராக ஆங்கில

*Self -Instructional Material*

அரசு தொடுத்த வழக்கு இரு மாதங்கள் நிகழ்ந்து. இந்தியா முழுவதும் கவனித்த வழக்கில் வ.உ.சிதம்பரனாருக்கு 2ஆம் ஆண்டு தீவாந்திரத்தண்டனை வழங்கியது. எவருக்கும் வழங்காத கொடூரதண்டனை வ.உ.சிதம்பரனாருக்கு 20ஆண்டும்,சுப்ரமணிய சிவாவிற்கு ஆதரவு அளித்ததற்காக 20 ஆண்டும் என 40 ஆண்டுகள் தண்டனை வழங்கப்பெற்றது. மேல்முறையீடு செய்து தண்டனைக் காலம் குறைந்து, குறைந்து ஆறு ஆண்டு கடுங்காவல் தண்டனையாயிற்று. சிறைத்தண்டனை காரணமாக சுதேசிக்கப்பல் கம்பெனி மூடப்பெற்றது. தண்டனைக் காலம் முடிந்து சென்னையில் வசித்தார். வணிகம் அவருக்கு ஒத்து வராததால் வழக்கறிஞராகப் பணியாற்றினர். பிறகு கோவில்பட்டி, தூத்துக்குடிக்கும் வந்து பணியாற்றினர். காங்கிரஸ் கட்சியில் இணைந்தாலும் தீவிரமாக செயல்படாது திலகரின் சீடராகவே இருந்து தமிழ் இலக்கியங்கள் குறித்து விவாதிப்பதும் நூல்கள் எழுதுவதுமாக செயல்பட்டார். 1936ஆம் ஆண்டு மறைந்தார். எனினும் வ.உ.சிதம்பரனாரின் ஆங்கிலேயர்களை எதிர்த்த துணிவும் வீரமும் தமிழக விடுதலைப்போராட்ட வீரர்களுக்கு உற்சாகம் தரக்கூடியதாகவும் இருந்தது.

### 13.5.3 மகாகவி சுப்ரமணிய பாரதியார்

**“ஆடுவோமே பள்ளுப்பாடுவோமோ**

**ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம்”**

எனப்பாடிய பாரதியாரின் விடுதலைப் போராட்ட உணர்ச்சி அக்கினிக் குஞ்சாகக் கிளர்ந்தெழுந்து வளர்ந்து பரவிய ஒன்று. பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்ததோடு நாட்டுத்திறத்தாலே தமிழக மக்களின் நெஞ்சிலே உரமும் திறமும் ஊட்டி, அச்சமில்லை அச்சமில்லை எனப் பெருங்குரலெடுத்துப் போராடியவர். சுதேசமித்திரன், இந்தியா, விஜயா, சக்ரவர்த்தினி போன்ற பத்திரிகைகளில் வீறு கொண்டு எழுதியதால் ஆங்கிலேய அரசு பாரதியின் மீது தன் அடக்கு முறையைச் செலுத்தியது ஆங்கிலேய அரசு பாரதியினைக் கைது செய்யும் நோக்கமும் இருக்க பாரதியோ புதுச்சேரியில் தஞ்சமடைந்தார். எட்டயப்புரத்துக் கவிஞன்

**“என்று தணியும் இந்தச் சுதந்திரதாகம்**

**என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்”**

குறிப்புகள்

என அடிமைத்தளையை அகற்ற நாட்டு மக்களுக்கு அறை கூவல் விடுத்து தம் பாட்டுத் திறத்தாலே ஒன்றிணைந்த விடுதலை உணர்ச்சியைத் தூண்டினார். மகாத்மாகாந்தியை மகாகவி பாரதியார் சந்தித்த பொழுது ‘இவரைப் பத்திரமாய்ப் பார்த்துக் கொள்ளுங்கள் ‘என்னும் கூற்றிற்கேற்ப தமிழகத்தின் பொக்கி‘மாய், ஆங்கிலேயருக்கு நடுக்கத்தை உருவாக்கிய வீரமனிதர். உணர்ச்சிக்கவிஞர் எழுச்சிக்கவிஞர். இந்தியாவின் சுதந்திரத்தை பாரதமாதாவைத் திரௌபதியின் வடிவில் கண்டு ‘பாஞ்சாலி சபதம்’ பாடியவர். இதில் கௌரவர்கள் ஆங்கிலேயர்கள், பாரதமாதா திரௌபதி, இந்திய விடுதலை வீரர்கள் பாண்டவர்கள் என்ற கோணத்தில் சுதந்திர உணர்ச்சியைக் காவியமாக்கி தன் வலிமையைச் சேர்த்தவர். பாருக்குள்ளே நல்ல நாடு எங்கள் பாரதநாடு எனப் பாரதத்தின் பெருமையைத் தம் கவித்திறத்தால் உரமூட்டி மக்களுக்கு எழுச்சியூட்டிய புரட்சியாளர். தம் எழுத்தாலும், கவித்திறத்தாலும் பாரதிக்கு நிகர் பாரதியே, மண்ணில் யார் எதிர்த்தாலும் மக்களைச் சீருயர்த்தும் பணியில் பாரதிக்கு நிகர் பாரதியே.

## 13.6 தொகுப்புரை

இந்திய விடுதலைப்போரும் தமிழகமும் என்ற நிலையில் காங்கிரஸிற்கு முந்தைய காலமாகிய நாயக்கர்கள் பாளையக்காரர்களின் ஆங்கிலேய எதிர்ப்புப்போரும் காந்தியடிகளுக்கு முந்தைய காலமாகிய வேலூர் சிப்பாய்க் கலகமும் காந்தியடிகள் காலத்து நிகழ்ந்த ஒத்துழையாமை இயக்கமும் உப்புச்சத்தியாகிரகமும் வெள்ளையனே வெளியேறு இயக்கம் போன்ற இயக்கங்களின் அஹிம்சை வழிப்போராட்டங்களையும் அறியமுடிவதோடு தமிழகத்தில் நிகழ்ந்த உப்புச்சத்தியாகிரகம் குறித்தும் கூறப்பெற்றுள்ளது . இந்திய விடுதலைப்போரில் அயராது போராடிய கலைஞர்கள் கவிஞர்களாகிய சுப்பிரமணியசிவா வ.உ.சிதம்பரம்பிள்ளை சுப்பிரமணியபாரதி ஆகியோரின் எழுச்சிமிகு

சுதந்திர உணர்ச்சியும் அவை மக்களிடையே ஏற்படுத்திய தாக்கமும் தூண்டுதலும் குறிப்பிடத்தக்கன .





## 13.7 மாதிரி வினாக்கள்

1. இந்திய விடுதலைப்போராட்டக் காலங்களை எவ்வகையாகப் பிரிப்பர் ? அவை எவை ?

1.காங்கிரஸிற்கு முந்தைய காலம்

2.காந்தியடிகளுக்கு முந்தைய காலம்

3.காந்தியடிகள் காலம்

2. எவருடைய ஆக்கிரமிப்புக்கொள்கையால் வேலூர் புரட்சி ஏற்பட்டது ?

வெல்லஸ்ஸி பிரபுவின் ஆக்கிரமிப்புக் கொள்கையால் வேலூர் புரட்சி ஏற்பட்டது .

3.சுயராஜ்யம் நமது பிறப்புரிமை ’எனக்கூறியவர் யார் ?

பாலகங்காதரதிலகர்

4., ஈ.வெ.ராமசாமி நாயக்கர் தோற்றுவித்த கட்சியின் பெயர் என்ன ?

நீதிக்கட்சி

5 .தண்டி யாத்திரை எதனை மையமிட்டது ?

உப்புச்சத்தியாகிரகமே தண்டியாத்திரை

## 13.8 பயிற்சி வினா

1. காந்தியின் அஹிம்சைப் போராட்டங்களைப் பற்றி விளக்குக
2. விடுதலைப் போராட்டக்கலைஞர்கள் இருவரைப் பற்றி எழுதுக

## கூறு – 14

### ஆங்கிலேயராட்சியால் தமிழகத்துக்குக் கிடைத்த நன்மைகள் தீமைகள் - பெண்ணிய இயக்கம்



14. பாட அமைப்பு


14.1. அறிமுகம்

14.2 நோக்கம்

14.3 ஆங்கிலேயராட்சியால் தமிழகத்திற்கு கிடைத்த நன்மைகள் தீமைகள்

14.3.1 ஆட்சிமுறை

14.3.2 நிர்வாகத் துறை

14.3.3 செய்தித்துறை

14.3.4 கல்வித்துறை

14.3.5 தமிழ் மொழி வளர்ச்சி

14.3.6 ஆங்கிலேயராட்சியில் கிடைத்த தீமைகள்

14.4 பெண்ணிய இயக்கம்

14.5 தொகுப்புரை

14.6 மாதிரி வினாக்கள்

14.7 பயிற்சி வினா

14.8 மேலும் அறிக




### 14.1 அறிமுகம்

தமிழக வரலாற்றில் பல புதிய மாற்றங்களும் ஏற்றங்களும் வீழ்ச்சிகளும் போராட்டங்களும் நன்மைகளும் தீமைகளும் நிறைந்த காலமாக விளங்கியது 18ஆம் 19ஆம் நூற்றாண்டுக் காலம் எனலாம். நாயக்கர் மராட்டியர் ஆகியோரின் வீழ்ச்சிக்குப் பின் இந்தியா, போர்ச்சுகீசியர், டச்சுக்காரர், ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர் ஆகியோரின் வாணிகச் சந்தையாகவும் அரசியல் போரட்டக்களமாகவும் ஆகியது. தமிழகத்திலும் கடல் சார்ந்து துறைமுகப் பட்டினங்களில் போர்ச்சுகீசியர் கோவாவையும் புதுச்சேரியைப் (பாண்டிச்சேரி) பிரெஞ்சுக்காரர்களும் நாகப்பட்டினத்தை டச்சுக்காரர்களும் சென்னையை ஆங்கிலேயர்களும் கைப்பற்றிக் கொண்டனர்.

ஆங்கிலேயர்கள் கி.பி.1638 இல் சென்னையில் செயின்ட் ஜார்ஜ் கோட்டையை உருவாக்கி, வணிகத்தை விரிவுப்படுத்தினர். ஆங்கிலேயக் கிழகிந்தியக் கம்பெனி உள்நாட்டு அரசியல் தலையிட்டு மெல்ல, மெல்ல இந்தியாவையும் இந்தியாவின் அனைத்துப் பகுதிகளையும் தன்வசப்படுத்தியது. கர்நாடகம், வங்காளம் ஆகிய இடங்களில் ஆங்கிலேயருக்கு உள்நாட்டு அரசியல் சாதகமாக, கி.பி.17ஆம் நூற்றாண்டின் இறுதிக்குள் சென்னை, கல்கத்தா, பம்பாய் போன்ற இடங்களைக் கைப்பற்றினர்.

ஆங்கிலேயர்கள் தமிழக மண்ணில் குறுநிலமன்னர்களாக விளங்கிய பல்வேறு பகுதியிலிருந்த அவர்களுக்கிடையே நடுவராகவும், உதவியாளராகவும் இருந்து அரசியலில் தலையிட்டு நிகழ்ந்த அரசியல் போர்களைத் தங்களுக்கு் சாதமாக்கிக் கொண்ட 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே தமிழகத்தின் ஆட்சிப்பொறுப்பு முழுவதையும் எடுத்துக்கொண்டு இந்திய விடுதலை வரை தன் ஆட்சியையும் அதிகாரத்தையும் தொடர்ந்தது.

## 14.2 நோக்கம்

1. வாணிகம் செய்ய வந்தோர் ஆட்சியாளராக, அதிகாரத்தைப் பெற்ற நிலையை அறிதல்.
2. ஆங்கிலேயர்களுக்கு எதிராக நிகழ்ந்த கிளர்ச்சிகளை அறிதல்.

குறிப்புகள்

3. ஆங்கிலேயர்கள் தமிழகத்திற்குச் செய்த நன்மை தீமைகள் குறித்து அறிதல்.
4. தமிழகம் சமயம், பண்பாடு, கல்வி போன்ற பலவற்றில் சந்தித்த மாற்றங்கள் குறித்து தெளிதல்.
5. தமிழ் மொழியின் தாக்கமும் வளர்ச்சியும் பற்றி உணர்தல்.
6. தமிழகத்தின் இந்தியாவின் மீதான நாட்டுப்பற்று மொழிப்பற்று மாணவர்களுக்கு அதிகரித்தல்.

## 14.3 ஆங்கிலேயராட்சியில் தமிழகம் பெற்ற நன்மைகளும் தீமைகளும்

### 14.3.1 ஆட்சிமுறை

இந்திய ஆட்சிமுறையில் ஏற்பட்ட சீர்திருத்தங்களும் மாற்றங்களும் தமிழகத்திற்கும் உரியது என்றவகையில் கி.பி.1882ஆம் ஆண்டு மே மாதம் ரிப்பன் பிரபு கொண்டு வந்த சட்டம் நகரசபைகளை உருவாக்கி, மக்களாட்சி முறைக்கு வழிவகுத்தது. இதன் மூலம் மக்கள் பல நன்மைகளைப் பெற்றனர். கல்வி, போக்குவரத்து, குடிநீர், உடல்நலம் போன்ற வசதிகளை மக்கள் பெறுவதற்கு செயல்திட்டங்களும் நடைமுறைப்படுத்தலும் நிகழ்ந்தன. கி.பி.1935இல் கொண்டு வரப்பெற்ற ‘இந்திய அரசியல் சட்டம்’ சட்டசபை, மேல்சபை ஆகியவற்றை உருவாக்கி, ஆட்சித்துறை, தேர்தல்முறை போன்றன குறித்த அறிவையும், பயிற்சியினையும் ஆங்கிலேயர்கள் இந்தியர்களுக்கு அளித்தனர். ‘பட்ஜெட்’ எனப்படும் வரவு செலவுத்திட்டமுறை கி.பி.1860இல் ஏற்படுத்தப்பட்டது. இதனால் மாநில அரசுகளுக்கும் வருவாய்க்கேற்ப செலவு செய்யும் நெறிமுறையும் ஏற்படுத்தப்பட்டன.

### 14.3.2 நிர்வாகத்துறை

நிர்வாகத் துறையில் பல மாற்றங்களையும் நன்மைகளையும் ஆங்கிலேயர்களின் ஆட்சி செய்துள்ளது. சென்னை மாநிலத்திற்கென, தனி வருவாய்த்துறைக்கழகம் நிறுவப்பெற்று அத்துறையில் காணப்பட்ட சீர்கேடுகள் அகற்றப்பட்டன.

மன்னா்கள், பாளையக்காரா்கள் போன்றவா்களால் விதிக்கப்பட்ட வரி விதிப்பு முறைகள் யாவும் சீா் செய்யப்பெற்று, குடிமக்கள் அரசிற்கு நேரடியாக வரி கட்டும் முறையினை உருவாக்கித் தந்தனா்.

இந்திய ராணுவப் படைகள் சீரமைக்கப்பட்டு மூன்று இராணுவ கமாண்டுகளையும் ஒன்பது டிவிசன்களையும் (பிரிவுகளையும்) உட்கொண்ட புதிய நிா்வாக அமைப்பினை ஆங்கிலேய அரசாங்கம் கி.பி.1904இல் ஏற்படுத்தியது. கங்கைக் கால்வாய், ஆக்ரா கால்வாய், சீனாப் கால்வாய் போன்ற நீா்ப்பாசனத்திட்டங்கள் உருவாக்கப் பெற்று தரிசுநிலங்கள் விளைநிலங்களாக மாற வழி வகை செய்யப் பெற்றன. இந்தியாவில் புகைவண்டிப் போக்குவரத்து வசதி, டல்ெளசி பிரபுவால் 36,000 நீளப்புகை வண்டிப்பாதைகள் உருவாக்கப்பெற்று விரிவுப்படுத்தப்பட்டன. கூட்டுறவுச்சங்கங்கள் உருவாக்கப்பெற்றன. தொழிலாளா்கள் வேலைநேரத்தைக் குறைக்கவும் பெண்கள், சிறுவா்கள் ஆகியோரின் வேலை நேரத்தை வரையறுக்கவும் தொழிலாளா் நலச் சட்டங்களை கி.பி.1881, கி.பி1891 ஆம் ஆண்டுகளில் இயற்றப்பெற்று நடைமுறைப்படுத்தப்பட்டன. தொழில் கூடங்களும் காற்றோட்டம, குடிநீா், சுகாதாரவசதியுடையதாக இருத்தல் வேண்டும் என்னும் தொழிற்சாலை அமைக்கும் உரிமையாளா்களுக்கு அந்தந்த பகுதி நகராட்சி, ஊராட்சி அலுவலா்கள் ஒப்புதல் வழங்க வேண்டும் எனச் சட்டங்கள் உருவாகின.

கி.பி.1801 இல் சென்னையில் தலைமை நீதிமன்றம் நிறுவப்பட்டது. கி.பி.1814இல் நீதிச்சீராமைப்புக்குழு ஒன்று நிறுவப்பட்டு இந்திய நாடு முழுவதிலும் ஒரே வகையான நீதி வழங்குவதற்கு ஏற்ப நீதித்துறை உருவாக்கப்பெற்றது. இந்திய சிவில் நடைமுறைச் சட்டங்களும், இந்தியக்குற்றச்சட்டங்களும்என இரு பிரிவாகப் பிரிக்கப்பெற்று ஊரவை மன்றங்கள் முதல் உயா்நீதி மன்றங்கள் வரை நீதிக்குரிய நீதிமன்றங்களுக்குரிய படிநிலைகள் கட்டமைக்குப் பெற்றன. சட்டம் அனைவருக்கும் பொது என பொதுமக்கள் அனைவரும் புரிந்துக் கொள்ளும் வகையில் சட்டங்களும் நீதித்துறையும் செயல்படுவதற்கேற்ற அனைத்து உள்கட்டமைப்புகளும் செயல்படுத்தப்பட்டன.

குறிப்புகள்

*Self-Instructional Material*

## 14.3.3 செய்தித்துறை



கி.பி.1711இல் ஆங்கிலப் பாதிரியார் அமைத்த அச்சுப்பொறியும் அச்சுக் கூடமும் இந்தியாவிற்கு ஆங்கிலேயர்கள் செய்த சிறந்த நன்மையாகும். பல பத்திரிகைகள் பொதுமக்களுக்கு செய்திப் பசியையும் அறிவுப்பசியையும் தீர்த்தன. கி.பி.1820இல் சென்னை அரசு பதிவேடும் அரசின் செய்திகளைச் சுமந்து ஆங்கிலச் செய்தித்தாள்களும் கி.பி.1880இல் தமிழில் 'சுதேசமித்திரன்' போன்ற தமிழ்ச் செய்தித்தாள்களும் தொடங்கப்பெற்றன. இந்திய விடுதலை இயக்கத்தை எழுச்சியூட்டி, போராட்டக்களங்களை, ஆங்கிலேயருடைய ஆதிக்க மேலாண்மையை எதிர்ப்பதற்கு செய்தித்தாள்களின் தோற்றுவிப்பு இந்தியர்களுக்கு நன்மையாகவும், ஆங்கிலேயருக்குத் தீமையாகவும் விளங்கின.

## 14.3.4 கல்வித்துறை

ஆங்கிலேயர்கள் கல்வித்துறையில் பல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தது. மெக்காலே கல்வித்திட்டத்தின் மூலமே. 'திண்ணைப்பள்ளி' என்ற நிலையில் செயல்பட்ட கல்வியை, வகுப்பறை என்னும் வரையறைக்குள் அடைத்து, கல்வியைப் பொதுவுடைமை ஆக்கிய சிறப்பு ஆங்கிலேயருக்கு உரிபது எனலாம். கி.பி.1910இல் ஆங்கிலேய அரசால் உருவாக்கப்பெற்ற கல்வித்துறை இந்திய எல்லைக்குள் அடைப்பட்டுக்கிடந்த மக்களுக்கு விடுதலை உணர்வை அளித்ததோடு விடுதலை உணர்ச்சியையும் கிளர்ந்தெழச் செய்தது.

கி.பி.1857இல் சென்னையில் பல்கலைக்கழகத்தை உருவாக்கினர். சென்னைஅரசினர் உயர்நிலைப்பள்ளி மாநிலக்கல்லூரியாக உருமாற்றம் பெற்றது. 'கல்வி அனைவருக்கும் பொது' என்னும் நிலையைக் கொணர்ந்த ஆங்கிலக்கல்வி இந்தியர்களுக்குப் புதிய பாதையையும் விழிப்புணர்வையும் தந்ததில் மாற்றுக்கருத்து இல்லை. அறியாமை இருளில் இருந்தோர் அறிவு எனும் பாதையில் நடப்பதற்கு ஆங்கிலேயர் அமைத்துக் கொடுத்த 'கல்வி' என்னும் ஊன்றுகோல் ஆங்கிலேயருக்கே சவுக்கடியாக மாறும் வல்லமையையும் இந்தியர்கள் பெற்றனர்.

கி.பி.1854இல் 'ஆங்கிலக்கல்வித்திட்டம்' ஒன்று உருவாக்கப்பெற்று தாய்மொழிப்பயிற்சிப்பள்ளிகள் திறக்கவும்,கல்விவாய்ப்பைப் பெருக்கவும், மாகாண அரசாங்கத்தில் கல்வித்துறை ஒன்று அமைக்கவும் சென்னையிலும் கல்கத்தாவிலும் பம்பாயிலும் பல்கலைக்கழகங்கள் தொடங்கவும். சாதி மத வேறுபாடின்றி எல்லாப் பள்ளிகளுக்கும் அரசாங்கத்தின் பொருள் உதவி வழங்கவும் அத்திட்டத்தில் வழிகள் வகுக்கப்பட்டன. பள்ளிகளில் கீழ் வகுப்புகளில் தமிழும் மேல் வகுப்புகளில் ஆங்கிலமும் பயிற்சி மொழியாக்கப்பட்டன. சென்னையில் 'கல்வித்துறை' தொடங்கப்பெற்று 'இயக்குநர்' ஒருவரும் அமைக்கப்பெற்றார். முதல் இயக்குநராக சர்கர்பத்நாட் என்பவர் செயல்பட்டார். இந்திய அரசாங்கத்தின் 1857ஆம் ஆண்டில் ஓ ஓ ஏஐஐ ஆம் சட்டப்பிரிவின் கீழ்ச் 'செனெட்' என்னும் ஆட்சிக்குழு அதன் நிர்வாகத்தை நடத்திவந்தது. அதில் மருத்துவம், கட்டடப்பொறியியல் கலைகள், சட்டம் போன்ற பிரிவுகளில் பயிற்சியும், பி.ஏ. பட்டமும் அளிக்கப்பட்டன. ஆங்கில, இலக்கியம், விஞ்ஞானம், வரலாறு, பொருளாதரம், உளவியல், ஒழுக்கவியல் ஆகிய துறைகளில் பேராசிரியர்கள் அமர்த்தப்பட்டனர். பொறியியல் கல்லூரி 1834 ஆம் ஆண்டிலும் மருத்துவக் கல்லூரி 1835 ஆம் ஆண்டிலும் ஓவியக்கலைப் பள்ளி 1850ஆம் ஆண்டிலும், சென்னை கிறிஸ்த்தவக் கல்லூரி 1837ஆம் ஆண்டிலும் பச்சையப்பன் கல்லூரி 1841 ஆம் ஆண்டிலும் தொடங்கப்பெற்றன. தமிழகத்தில் தொடக்கக்கல்விப்பள்ளிகள் அமைப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டு செயல்பட்டவர்கள் கிறித்தவப் பாதிரியார்கள். அவர்களுக்குச் சென்னை அரசாங்கமும் பொருளுதவி வழங்கிற்று. பெண்களுக்கெனத் தனிக் கல்விக் கூடங்களை நிறுவியவர்களும் கிறிஸ்த்தவப் பாதிரிகளே ஆவார். சென்னை அரசாங்கம் 1866ஆம் ஆண்டு பெண்கள் பள்ளிகளைத் திறக்கத் தொடங்கிறது. இவ்வகையில் ஆங்கிலேயர்கள் இந்தியர்களின் கல்விக் கண்ணைத் திறப்பதில் பெரும் பங்கு ஆற்றியுள்ளனர் என்பது மறுக்கமுடியாத வரலாற்று உண்மையாகும்.

### 14.3.5 தமிழ்மொழி வளர்ச்சி

ஆங்கிலேயர் ஆட்சியில் அச்சு இயந்திரங்கள் வரவினால் தமிழ் இலக்கியமும் மொழியும் ஏற்றம் பெற்றன. ஆங்கில மொழிப்

பயிற்சியும் பெற்ற நிலையில் பல புதுமைகள் ஏற்பட்டன. உரைநடை புதிய வடிவில் உருவாயிற்று. இராமலிங்கஅடிகளார், ஆறுமுகநாவலர். தியாகராசச்செட்டியார் முதலியோர் உரைநடையைத்தொடங்கி வைத்தனர். உரைநடையானது சிறு சிறு சொற்றொடர்களால் அமைந்ததோடு ஒரு தொடருக்கும் அடுத்த தொடருக்கும் இடையே இடைவெளி அமைப்பதும் முற்றுப்புள்ளி, காற்புள்ளி, அரைப்புள்ளி, முக்காற்புள்ளி, மேற்கோற்புள்ளிகள் ஆகியவற்றை அமைப்பதும் பழக்கத்திற்கு வந்தன. பல பத்திகளாகவும் பிரிக்கப்பெற்றன.

வேதநாயகம் பிள்ளை எழுதிய பிரதாபமுதலியார் சரித்திரம், இராஜம் ஐயரின் கமலாம்பாள் சரித்திரமும் பிற்கால நாவல் வளர்ச்சிக்கு அடித்தளமிட்டன. பல புதிய நூல்களும் இலக்கிய வகைகளும் தோன்றின. H.A கிருஷ்ணப்பிள்ளை என்னும் கிறிஸ்த்தவப் புலவர் கிறிஸ்த்தவ சமயக் காவியம் ஒன்றைப் பாடினார். இக்காவியம் ஜான்பன்யன் என்னும் ஆங்கில ஆசிரியர் எழுதிய வாழ்க்கைப் பயணியின் போக்கு (Pilgrim’s progress) என்னும் நூலினைத் தழுவி இயற்றினார். அதற்கு ‘இரட்சணிய யாத்திரிகம்’ எனப் பெயரிடப்பட்டது.

‘கால்டுவெல்’ என்னும் கிறிஸ்த்தவப்பாதிரிகள் அயர்லாந்து நாட்டிலிருந்து இந்தியாவிற்குச் சமயப் பணி ஆற்ற வந்தார். திராவிட மொழிகளின் மீது கொண்ட ஈடுபாடு காரணமாக அம்மொழிகளைப் பற்றி ஆராய்ந்து அவற்றிற்கு இடையே மொழிக்கூறுகளை ஒப்பிட்டு ‘ஒப்பிலக்கணம்’ என்னும் நூலைத் தந்தார். வின்ஸ்லோ என்னும் அறிஞரும் தமிழ் - ஆங்கில அகராதியை உருவாக்கியுள்ளார். ‘போப்பையர்’ அயலக அறிஞரும் தமிழ் மொழிக்கு அரும்பணி ஆற்றியுள்ளனர். அவர் திருக்குறள், நாலடியார், திருவாசகம் ஆகிய நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து உள்ளார். தம் கல்லறையில் ‘தாம் ஒரு தமிழ் மாணவன்’ என்னும் செய்தியைப் பொறிக்கும் படி செய்தவர். அவர் தமிழில் மாணவர்களுக்கு இலக்கணமும். ஐ.சி.எஸ் பயிற்சி பெற்று வந்த ஆங்கில மாணவர்களுக்கு தமிழ்ப் பாடப்புத்தங்களும் இயற்றி உள்ளார். இவர்களோடு அயல்நாட்டிலிருந்து புதிய தமிழகத்திற்கு வந்து தமிழ்பணி ஆற்றியவர்களில் எல்லீஸ்துரை, வீரமாமுனிவர், இரேனியஸ் ஐயர் போன்றோர் குறிப்பிடத் தகுந்தவர்கள்.

### 14.3.6 ஆங்கிலேயராட்சியில் கிடைத்த தீமைகள்

ஆங்கிலேயராட்சியில் உள்நாட்டு வாணிகமும் தொழிலும் நலிவுற்றன. சமயப்பூசல்களையும் சமூகப் பூசல்களையும் வளர்த்தெடுத்து இந்தியா வளத்தினை ஆங்கிலேயர்கள் சுரண்டி சென்றனர். சமய இனபேதமும், மொழிபேதமும், ஆதிக்கநிலையும் இந்தியாவில் மாறுபட்ட சூழலை ஆங்கிலேயர் ஆட்சி உருவாக்கி வந்தன. உணவுப்பயிர்களும் இங்கிலாந்திற்கும் ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கும் தேவையானவை உற்பத்தி செய்யப்பெற்று ஏற்றுமதி செய்யப்பெற்றன. பருத்தி, நிலக்கடலை, புகையிலை போன்ற வாணிகப் பண்டங்கள் உற்பத்தி பெற்று நெல், கேழ்வரகு, கம்பு போன்ற தானிய உற்பத்திகள் குறைந்து விளைநிலங்கள் தரிசு நிலங்களாயின. மன்னர்கள் ஆட்சியில் உருவாக்கப்பெற்ற ஏரிகள், பாசனங்கள், கால்வாய்கள்யாவும் கொண்டு பர்மா முதலிய நாடுகளிலிருந்து அரிசி இறக்குமதியாக வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

இரயில் பாதை வளர்ச்சிக்கும், கப்பல் கட்டுமானத்திற்கும் தேக்குமரங்கள், கருங்காலிமரங்கள், நூக்கமரங்கள் பல வெட்டிச் சாய்க்கப்பட்டன. காடுகள் பல அழிந்தன. புதிய காடுகளும் உருவாக்கம்பெறவில்லை. தமிழகத்தில் 1876-78ஆம் ஆண்டுகளில் மாபெரும் பஞ்சம் தோன்றி மக்களின் உயிரைக் குடித்தன. சென்னையிலும் வடஆற்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் ‘கஞ்சத் தொட்டிகள்’ பல நடத்தப்பெற்றன.

கிராமங்களில் வரி கொடுக்கமுடியாதவர்களை வரி தண்டும் அதிகாரிகள் சித்திரவதை செய்தனர். ‘தொழுக்கட்டை’ என்பது ஒரு பலகையில் தலையும் கைகளும் மட்டும் நுழையுமாறு தொளைகள் செய்து அதில் வரி கொடுக்காதவரை மாட்டிவைத்துவிடுவர் இதற்கு ‘தொழுக்கட்டை மாட்டுதல்’ என்பது பொருள். ‘அண்ணாந்தாள்’ என்பது தண்டனை விதிக்கப்பட்டவர் குனிந்து நிற்க, அவர்களுடைய கைகளும் கால்களும் சேர்த்துக் கட்டப்பெற்றிருக்கும். முதுகின் மேல் பாறாங்கல் ஒன்று ஏற்றப்படும். இக்கோலத்தில் அவர்கள் வேகும் வெயிலில் நிறுத்தப்படுவர். தண்டனை அளிப்பதில் ‘கசையடிகள்’ தருவதும் உண்டு.

பஞ்சத்திலும் வறுமையிலும் வாடிய தமிழர்கள் பலர் அயல்நாடு சென்று, தென்னாப்பிரிக்கா, இலங்கை, பிஜி முதலான கிழக்கிந்தியக் தீவுகளுக்கும் தொழில் செய்து பிழைக்கச் சென்றார்கள். அங்கிருக்கும் தேயிலை, இரப்பர், சுரங்கங்கள் போன்றவற்றில் கூலிகளாகச் சேர்ந்தனர். ஆங்கிலேயரின் அடிமைகளாக வாழ்ந்த இந்தியர் வாழ்வாதாரம் சிதைந்த நிலையில் பொருள் தேடிச் சென்ற இடத்திலும் அடிமைகளாக ஆயினர். தென்னாப்பிரிக்க அரசாங்கம் அடிமைகள் என்றும் காட்டுமிராண்டிகள் என்றும், ஆசிய நாட்டுமக்கள் இந்தியாவில் அநாகரிக்குடிகள்' என்றும் பதிவு செய்தன.

ஆங்கிலேயர் ஆட்சியில் பொருளாதாரச் சுரண்டல்களும் மிகுதியாக நிகழ்ந்தன. ஆங்கிலேயர் கிழக்கு இந்தியக் கம்பெனி இந்தியாவில் ஈட்டிய செல்வத்தை,'எந்த உருவத்திலாவது இங்கிலாந்தை அடையச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டு கி.பி.1757 முதல் 1780வரை கிட்டத்தட்ட 23 ஆண்டுகளில் வங்காளம் இழந்த தொகை மட்டும் ரூ.60 கோடியாகும். இப்பொருள் விரயத்தினால் நாட்டில் வறுமை ஏற்பட்டது. ஆங்கிலேயர்கள் மூலதனத்தை அழித்து வணிகத்தையும் தொழிலையும் கடுமையாக சிதைந்து அழியும் படிச் செய்தனர். கி.பி.1656இல் கிழக்கிந்தியக் கம்பெனி சுங்கவரி விலக்கை அரசிடமிருந்து பெற்று, கூடுதல் விலைக்கு விற்றது. இது ஆங்கிலேயருக்கும் இந்தியருக்குமிடையே ' நியாயமற்ற வணிகப் போட்டியை' உருவாக்கி, உள்நாட்டு வணிகத்தை அழித்தது.

தேசிய விடுதலை இயக்கத்தின் ஒன்றிணைவு மக்களிடையே ஆங்கிலேயர்களை மிரட்டி அடிக்கும் எண்ணத்தைச் சிதைக்கும் முறையில் பிரித்தரளும் சூழ்ச்சியைச் செய்தனர். 'ஆங்கில அரசு முஸ்லீம்களுக்குத் தனிப்பிரதித்துவம் தர முடிவு செய்தது. முஸ்லீம்களின் நிலையை எண்ணிக்கையைக் கொண்டு அளவிடாமல் பேரரசுக்கு அச்சமூகம் ஆற்றியுள்ள 1909இல் முஸ்லீம்களுக்கெனத் தனித் தேர்தல் தொகுதிகளை உருவாக்குகிறது. முஸ்லீம்களுக்குத் தரப்பட்ட இத்தனிச்சலுகை இந்து முஸ்லீம் வேற்றுமைத் தீயை நெய்விட்டு வளர்த்தது"என டாக்டர் ஆ. கிருட்டினன் தம் தமிழக வரலாறும் தமிழர்பண்பாட்டும் என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

ஆங்கிலேயர் ஆட்சியில் முறையற்ற ஆட்சி அதிகாரத்தின் கீழ் பல்வேறு உயிர் இழப்புகளும், அதிகாரத்தின் கொடுமைகளும் நிகழ்ந்து மக்கள் பல இன்னல்களை அடைந்தனர். நிர்வாகத்துறை சார்ந்த சீரமைப்புகள் இருந்தாலும் மக்கள் அமைதியற்று வாழும் அவலநிலை இருந்தது. ஆங்கிலேயர்கள் ஆட்சியினால் ஒரு குறிப்பிட்ட வட்டத்தில் வாழ்ந்த இந்தியர்கள் தம் எல்லையை விட்டு உலக அளவில் வாழ்வதற்கான சூழல் உருவாக்கப்பெற்றாலும் இந்திய, தமிழக மக்களின் வாழ்வியல் கவலையும் கேள்விக்குறியாகவும் மாறில அவலம் நிகழ்ந்திருப்பதும் வரலாற்றுப் பதிவாகும்.

## 14.4 பெண்ணிய இயக்கம்

பெண்ணியஇயக்கம் மேலைநாட்டின் வரவு என்றாலும் பெண்ணியச் சிந்தனைகள் தொன்மை நிலை சார்ந்தே அறிவதற்கு உரியன.

பெண்ணியச் சிந்தனையின் தடம் இன்று நேற்று தோன்றியது அன்று. புராணங்களிலேயே அதன் வித்து உள்ளது. இதற்குச் சான்றாக சிவன் பார்வதிக்குத் தன் உடம்பில் பாதியைக் கொடுத்த நிலையைக் சுட்டலாம். அர்த்தநாரீஸ்வரர் உருவம் ஒரு பாதி பெண்ணாகவும் ஒரு பாதி ஆணாகவும் இருக்கும் உருவமாகும். இத்தன்மை ஆணும் பெண்ணும் சமம். ஆண் பெண்ணுக்குச் சமஉரிமையை கொடுக்க வேண்டும் என்பதைக் குறிக்கும் குறியீட்டுப் பொருண்மையாகும் என்று தத்துவவாதிகள் சுட்டுவர்" என முனைவர். சே. சாரதம்மாள் 'பெண்ணிய உளப்பகுப்பாய்வும் பெண் எழுத்தும்' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

ஆண், பெண் என்னும் இணை உயிரி அல்லது எதிர் உயிரியாகி முரண்பாடு கொண்டு இருக்கும் பொழுது போராட்டம் என்பது நிகழ்ந்து கொண்டே உள்ளன. அங்கு ஆண்களின் மேலாண்மை பெண்ணை அடிமைநிலைக்குத் தள்ளி அவர்களின் வாழ்வியல் போராட்டங்களும் சமூகப்பிரச்சினைகளும் சமூகமறுப்புகளும் பெண்ணியச்சிந்தனைகள் தோன்றவும் பெண்ணியஇயக்கங்கள் தோன்றவும் காரணமாகின. ஆணிற்குக் கிடைக்கும் இச்சமுதாயம் தரும் அனைத்து உரிமைகளும் பெண்களுக்கும் கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில்

'பெண்ணியம்' என்னும் இயக்கம் செயல்பட்டுக் கொண்டு வருகின்றது. உலகில் பல்வேறு நாடுகளில் சமுதாய இயக்கமாக பகுத்தறிவு இலக்கமாக நீட்சி பெற்று பேரியக்கமாக மாறியது. இவை இலக்கியப் படைப்புகளின் வழி வெளிப்படுகின்ற பொழுது இலக்கிய இயக்கமாகவும் பரிணமிக்கின்றது.

"பெண்கள் பாலினப் பாகுபட்டால் அனுபவிக்கும் பொருளாதாரத் துன்பங்களை எதிர்த்து மேற்கொள்ளும் இயக்கம் பெண்ணிய இயக்கம் என்று குறிப்பிடுவர்" என முனைவர் செ. சாரதம்பாள் குறிப்பிட்டுள்ளார். பெண்ணிய இயக்கம் பண்பாட்டுக்கட்டமைப்பு, தாய்வழிச் சமூகம், தந்தைவழிக்சமூகம், பாலியல் அரசியல், பாலின வேறுபாடு, அதிகாரம், விடுதலை போன்ற பல்வேறு கருத்தாக்கங்களை பெண்ணை முன்னிலைப்படுத்திக் கொண்டு செல்கிறது.

பெண்ணியஇயக்கம் என்பது இந்தியவிடுதலைக் காலக்கட்டத்தில் நாட்டு விடுதலையைச் சார்ந்த நிலையில் விடுதலைப் போராட்டத்திற்காக பெண்கள் தங்களை முன்னிலைப் படுத்திக் கொண்ட வரலாறு பெண் விடுதலையையும் உள்ளீடாகக் கொண்டது. 'பெண்ணடிமைத் தீருமட்டும் பேசுந்திருநாட்டில் மண்ணடிமை தீருதல் முயற்கொம்பே' எனப் பாரதிதாசன் கூறியுள்ளதன் பொருளுண்மை பெண்ணியச் சுதந்திரத்தைச் சார்ந்ததே. இந்தியச் சுதந்திரப் போராட்டத்தில் சிவகங்கை இராணி வேலுநாச்சியார், ராணி சென்னம்மா, ராணிலெட்சுமிபாய், ஜல்காரிபாய், ராணி அவந்திபாய், சரோஜினி நாயுடு, ருக்மணி லட்சுமிபதி, கஸ்தூரிபாய் காந்தி, அன்னிபெசண்ட், நிவேதிதாதேவி, விஜயலெட்சுமி பண்டிட், சுதேசகிருபளானி, போன்றவர்களோடு தமிழகத்தில் போராடிய பெண்கள் வ.உ.சிதம்பரனாரின் மனைவி மீனாட்சியம்மாள், ஈ,வே.ராமசாமியின் துணைவி நாகம்மாள், சகோதரி கண்ணம்மாள், சீனிவாசவரதனின் துணைவியார் பத்மாசனி அம்மாள், போன்றோரும் செயல்பட்டு உள்ளனர்.

காங்கிரஸ் உதவியால் மதுரையில் 'சகோதரிகள் சங்கம்' என்னும் ஒன்றை பத்மாசனிஅம்மாளும், தாயம்மாளும், சுப்புலட்சுமி அம்மாள், திருமதி.ஜோசப், திருமதி சுந்தரம் அய்யங்கார் போன்றோர்

ஒன்றிணைந்து முப்பது பெண்கள் ஒரு நாளில் இரண்டு மணிநேரம் நூல் நூற்கும் பணியைச் செய்தனர். இவர்களுடன் தாயாளும்மாள், சீதையம்மாள், முனியம்மாள், டாக்டர்பிச்சைமுத்துஅம்மாள் போன்றோரும் விடுதலைப்போராட்டநிகழ்வுகளை விவாதிப்பதும் பெண்களுக்கு நூல் நூற்கும் பயிற்சியும் அளித்து விடுதலை உணர்ச்சியைப் பிறருக்கும் ஊட்டி வளர்த்தனர். 'நீல் சிலை சத்தியாக்கிரகம்' என்னும் போராட்டத்திற்குத் தமிழகத்திலிருந்து பல பெண்கள் வந்து கலந்து கொண்டனர். இதில் அங்காச்சி அம்மாள், கடலூர் அஞ்சலையம்மாள். அவர் மகள் அம்மாசிகண்ணு அம்மாள் போன்றோர் தம் போராட்டக்குரலையும் புரட்சியையும், தமிழகத்தில் ஓங்கி ஒலிக்கச் செய்தவர்கள்.

சைமன்குழு என்னும் எதிர்ப்பிலும் தமிழகத்தில் பல பெண்கள் கலந்து கொண்டனர். அன்னிபெசன்ட் அம்மையார் தொடங்கிய அந்நிகழ்வில் 1927 ஆம் ஆண்டு சென்னையில் பெண்களை ஒன்று திரட்டி, அதற்காக சொற்பொழிவும் திகழ்த்தினார். சென்னையைச் சேர்ந்த இந்தியப்பெண்கள் அமைப்பும், யாமினி பூர்ண திலகம்மா, திருச்சி மாசிலாமணி, திருமதி. ருக்மணி லட்சுமிபதி போன்ற பலர் குறிப்பிடத்தகுந்தவர்கள். சட்டமறுப்பு இயக்கத்தில் சென்னையில் மட்டும் பிப்ரவரிமாதம் 1933வரை சிறைக்குச் சென்ற பெண்களின் எண்ணிக்கை 633 ஆகும். உப்புச்சத்தியகிரகத்திலும் பெண்கள் பலர் பங்கேற்றனர். துர்காபாய் அம்மாள் மற்றும் சில பெண்கள் ஒன்றிணைந்து சென்னை சாந்தோம் கடற்கரையில் உப்பினைக் காய்ச்சினார்.

மேலும் அந்நியத்துணிஎதிர்ப்பு, மதுபானஎதிரிப்பு போன்றவற்றிலும் பெண்கள் தீவிரமாக ஈடுபட்டுப் போராடியுள்ளனர். இதில் அம்புஜம்மாள், ஞானம்மாள். பி.லீலாவதி, லலிதாபிரபு போன்றோர் ஈடுபட்டு பலவித துன்பங்களையும் அனுபவித்தனர். பெண்கள் விடுதலைக்காகப் போராடிய பொழுது பெண்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே தான் இருந்தது. டாக்டர் பிச்சைமுத்து அம்மாள், கமலாதேவி சட்டோபாத்யாயா, முத்துலெட்சுமி ரெட்டி, கமலாபாய், கிருஷ்ணாபாய், தாயம்மாள், சீதாலெட்சுமி அம்மாள், சித்து பாக்கியலட்சுமி,கொண்டலட்சுமி அம்மாள். கே.டி.கமலா, ஞானம்மாள் போன்றோர் போராட்டத்தில்

தீவிரமாக செயல்பட்டவர்கள். பெண்கள் மற்றொரு வகையில் விடுதலையுணர்ச்சி ஊட்டும் பாடல்களைப் பாடியும் மக்களிடையே எழுச்சியை ஊட்டினார்கள். கோதைநாயகி,கே.பி.சுந்தரம்பாள், டி.கே. பட்டம்மாள், எஸ்.ஆர். ரமாமணிபாய், மதுரை எம். கண்ணம்மாள், எம்.ஆர். கமலவேணி போன்றோர் அவ்வகையில் பாடல்களைப் பாடி அதனால் பல தடைகளையும் துன்பங்களையும் அனுபவித்தனர்.

தமிழகப்பெண்கள் வெளிநாட்டிலும் சுதந்திரத்திற்காகப் போராடியுள்ளனர். வடஆற்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த கோவிந்தம்மாள் என்ற வீராங்கனை நேதாஜி சுபாஷ்சந்திர போஸின் இந்திய ராணுவத்திற்குத் தேவையான நிதியினைக் கொடுத்துள்ளார். ஆறு பவுன் வளையலையும் ரப்பர் தோட்டத்தையும் கொடுத்ததோடு அந்த ராணுவத்தில் முதல் நூறுபேரில் ஒருவராக தேர்ந்தெடுக்கப்பட்டு ‘ஜான்சிராணி’ ரெஜிமெண்டின் சிப்பாயாக சேர்ந்துக் கொண்டார். லட்சுமி சுவாமிநாதன் என்பவர் தம் மருத்துவப் பணியைத் துறந்து ஜான்சிராணி படையில் தலைமைப்பொறுப்பை ஏற்று 1500 பெண்கள் வரை சேர்த்தார். ஜானசி ஆதி நாகப்பன் இப்படையின் துணைத்தளபதியாய் இருந்தார்.

பெண்ணிய இயக்கம் என்பது பெண்ணிய விடுதலையையும் ஆணிய மேலாதிக்கத்தையும் எதிர்ப்பது என்பது ஒரு புறமிருந்தாலும் நாட்டு விடுதலை என்னும் பொழுது பெண்கள் குறைந்த பங்கேற்பாளராக இருப்பினும் ஆண்களுக்கு ஈடாக பங்கேற்று உள்ளனர் என்பதை முழுமையான பெண்ணிய விடுதலையின் ஊற்றுக்கண்ணாக விளங்குவது. தமிழக மக்கள் நாட்டு விடுதலையில் பங்கேற்பதன் மூலம் பெண்களுக்கான விடுதலையையும் முன்னெடுத்துச் சென்றுள்ளனர்.

கல்வி, வேலைவாய்ப்பு, சமஉரிமை எனப் பன்முகப் போராட்டங்களின் வேராக அதனைக் கண்டு போராடிய நிலையில் பாரதியின் பாஞ்சாலி சபதமும் பாரதமாதவை பாஞ்சாலியாக உருவகப்படுத்தி நாட்டுவிடுதலையையும் பெண்ணிய உரிமையையும் ஒனறிணைத்துப் பாடியுள்ளதும் பெண்ணிய இயக்கமாகும். இந்திய, தமிழகத்தின் பெண்ணிய இயக்கம் மேலைநாட்டு தீவிரவாத, மிதவாதம், பெண்ணியத் தாக்கங்களின் பிரதிபலிப்பு அல்ல,

நாட்டுவிடுதலையின் போராட்டங்களின் முன்னெடுப்பே பெண்ணிய இயக்கமாகும். இந்திய, தமிழகப் பெண்களின் பெண்ணிய இயக்கம் அவர்கள் மண்ணோடு சார்ந்த ஒழுக்குமுறைகளின் மீட்டெடுப்பே என்பதால் பெண்ணிய இயக்கம் அவர்கள் வாழுமிடத்தின் ஒன்றிணைவிலேயே முளை பெற்று வளர்த்து எடுக்கப்படுகின்றது. தமிழகத்தில் பெரியாரின் பெண்ணியச் சிந்தனைகளே விடுதலைப் போராட்டப் பெண்கள் இயக்கத்திற்கு அடுத்த படிநிலையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பெண்ணியச் சிந்தனை இயக்கமாகும். இச்சிந்தனையின் வளர்நிலையிலேயே இலக்கியம் சார்ந்த மொழிநிலையில் தற்காலப் பெண்ணியச் கவிஞர்களும், பெண்ணிய எழுத்தாளர்களும் உரக்கப்பேசி பெண்ணிய இலக்கிய இயக்கமாகக் கொண்டு சென்றுள்ளனர். கருத்துக்களில் பரவும் விஷக்கிருமிகளை அழிப்பதற்கு எதிர்வினை ஆற்றும் கருத்துக்களே தேவை என்பதால் ஆண்களின் மேலாதிக்கக் கருத்துப் பரவலைத் தடுத்து நிற்கும் பெண்ணிய இலக்கிய இயக்கம் இயங்கிக் கொண்டிருப்பது பெண் உரிமையின் அடிநாதமாகும்.

## 14.5 தொகுப்புரை

கிபி 18ஆம் 19ஆம் நூற்றாண்டு தமிழக வரலாற்றில்

பல மாற்றங்கள் நிகழ்ந்த காலமாகும் . நாயக்கர் மராட்டியர் ஆகியோரின் வீழ்ச்சிக்குப் பிறகு இந்தியா வெளிநாட்டினரின் ஆளுகைக்கு உட்பட்டது . தமிழகத்தைத் தங்கள் வணிக மையமாக்கி தமிழகத்தில் நிலவிய ஒற்றுமையின்மை காரணமாக ஆட்சி அதிகாரத்தையும் கைப்பற்றினர் .ஆங்கிலேயர் தங்கள் அதிகார நிலையினால் தமிழகத்தின் பொருள் வளங்களைச் சுரண்டி எடுத்துச்சென்றனர் . ஆட்சிமுறை நிர்வாகத்துறை செய்தித்துறை கல்வித்துறை போன்றவற்றில் தமிழர்களுக்கு நன்மைகள் விளைந்தநிலையிலும் தீமைகளும் அதிகரித்தன .சமய சமூகப்பூசல்கள் தமிழகத்தைச் சீர் குலைத்தன .எனினும் கிறிஸ்த்தவர்கள் தங்கள் சமயப்பரப்புரைக்காக தமிழ்மொழியினைக் கற்கவேண்டிய தேவை ஏற்பட்டதால் தமிழ் மொழியினைக் கற்று

குறிப்புகள்

வளர்ச்சியினைத் தந்துள்ளனர் . ஜி.யு.போப் கால்டுவெல் எல்லீஸ் துரைபோன்ற அறிஞர்கள் குறிப்பிடத்தக்கவர்கள் . தமிழகத்தின் வரலாற்றில் பெண்களும் பெண்ணிய இயக்கமும் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை மேற்கத்தியப் பெண்ணியப் பார்வையில் கூறாது தமிழக விடுதலைப் போராட்டப் பெண்களின் இயக்கம் சார்ந்து கூறப்பெற்றுள்ளது .

## 14.6 மாதிரி வினாக்கள்

**1**.இந்திய அரசியல் சட்டம் ஆங்கிலேயர் ஆட்சியில் எந்த ஆண்டு உருவாகியது ?

கி.பி.1935 இல் உருவாகியது .

2.புகைவண்டிப்பாதையினை உருவாக்கிய ஆங்கிலேயர் யார்?

டல்ஹௌசிப்பிரபுவால் 36000 நீளப்பாதை உருவாக்கப்பெற்றது .

3.கி.பி 1854இல் ஆங்கிலேயர்கள் நடைமுறைப்படுத்திய திட்டம் எது ?

ஆங்கிலக் கல்வித்திட்டம்

8. ‘திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் ’ என்னும் நூலை எழுதியவர் யார் ?

கால்டுவெல்

9. இந்திய சுதந்திரப்போராட்டத்தில் பங்கேற்ற பெண்கள் இருவரைக் குறிப்பிடுக .

இராணி மங்கம்மாள் ருக்மணி லட்சுமிபதி

## 14.7 பயிற்சி வினாக்கள்

1. விடுதலைப்போராட்டக் காலத்தில் தமிழகத்தின் நிலையை விவரி ?
2. பெண்ணியப் போராட்டங்களைத் தமிழக விடுதலைப் போராட்டம் சார்ந்து எழுதுக .

குறிப்புகள்

## மாதிரிவினாத்தாள்

**தாள் : 10713 - தமிழகவரலாறு**

**காலம்: 3 மணி**
**மதிப்பெண்- 75**

### பகுதி-அ

**(அ) அனைத்துவினாக்களும் ஓரிருவரிகளில் விடையளி:**

**(10 x 2=20 மதிப்பெண்கள்)**

1. தமிழகத்தைஅறியஉதவும் சான்றுகளைக் குறிப்பிடுக .

2.குகை வட்டங்கள் என்றால் என்ன ?

.3. முச்சங்கங்கள் -விளக்குக

4. இருண்டகாலம் என்றழைக்கப்படும் காலம் எது ? ஏன் ?

5. மகேந்திரப்பல்லவமன்னன் கலைஈடுபாட்டிற்குச் சான்றுதருக .

6. கங்கைகொண்டசோழன் யார் ? ஏன் ?

7. குடவோலைமுறைகுறித்துவிளக்குக

8.மூக்கறுப்புப்போர் - பின்னணியாது ?

9.ராணிமங்கம்மாளின் ஆட்சியினைவிவரி

10.விடுதலைக் கவிஞர் பாரதியைப் பற்றி கூறுக

## பகுதி-ஆ

**(ஆ) அனைத்துவினாக்களுக்கும் ஒருபக்கஅளவில் விடையளி:**

**(5x5=25 மதிப்பெண்கள்)**



11 (அ) தமிழகவரலாற்றுச் சான்றுகள் இரண்டினைப் பற்றிஎழுதுக .

அல்லது

(ஆ) சிந்துசமவெளிநாகரிகம் என்றால் என்ன ?

12. (அ) சங்ககாலக் கல்விமுறை -விவரி

அல்லது

(ஆ) களப்பிரர் ஆண்டகாலத்தின் பின்னணியாது ?

13. (அ) பல்லவமன்னர்களில் ஒருவரைப் பற்றிவிளக்குக

அல்லது

(ஆ) இராசராசசோழனின் தனிச்சிறப்புகள் யாவை ?

14. (அ) பிறகாலப்பாண்டியரின் எழுச்சி–விளக்குக

அல்லது

(ஆ) மராட்டியர் ஆட்சியினைப் பற்றிஎழுதுக.

15. (அ) வேலூர் சிப்பாய் கலகத்தின் காரணம் யாது ?

அல்லது

(ஆ)வேதாரண்யம் உப்புச்சத்தியாகிரகப்போராட்டத்தைவிளக்குக

**பகுதி - இ**

**(இ) ஏதேனும் மூன்றுவினாக்களுக்குமகட்டுரைவடிவில் விடையளி**

**(3x10=30 மதிப்பெண்கள்)**

16.சங்ககாலம் அரசியலும் வாழ்க்கைமுறையும் குறித்துக் கட்டுரைக்க

17. பல்லவர் காலஆட்சிமுறையும் சிறப்பியல்புகளும் - விவரிக்க

18. பிற்காலச்சோழமன்னர்களின் எழுச்சியும் தாக்கமும் பற்றிவிளக்குக

19. தமிழர்களின் பண்பாட்டுஅடையாளமாகவிளங்கும் கலைகளைக் காலஅடிப்படையில் விளக்குக

20. தமிழகவரலாற்றில் நிகழ்ந்தமுக்கிய போர்களைவிவரிக்க

**குறிப்புகள்**